# ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி-23 எண்-7.8.9

ஜனவரி முதல் மார்ச் வரை

1935

JL
R65 ௩211, N12
N35.23.7-9
158955

ஸம்புடம் 23] JANUARY 1935 [ஸஞ்சிகை 7

461

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1935
MADRAS

பவஸு



மார்கழிமீ

PUBLISHED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha,

MADRAS.

ஸ்ரீ:

# விஷய ஸூசிகை.


1. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 547

2. மோக்ஷ ஸ்வரூபம்:—[ஸ்ரீ. உப. K. ராஜகோபாசாரியர் B. A., B. L. வக்கீல் கூடலூர்] ... 559

3. மாத்ரு பித்ரு பக்தி: —[மஹா மஹோபாத்யாய—ஸாரஸ்வத ஸார்வபௌம ஸாம்ராஜ்ஞ தட்டை, ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசாரியர்] ... 564

4. க்ரந்த விமர்சம்:— ... 570

5. கடிதங்கள்:— ... 572

6. ஸநாதன தர்ம ஸம்ரக்ஷண ஸங்கம்:— ... 573

7. மதுரை ஸ்ரீ வைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய ஸபா:— ... 574

8. ஸம்பாதகீயம்:— ... 575

9. பரிகர விஜயம்:— ... 99

10. ஸ்ரீ பஞ்சஸ்தவம். ... 61

11. திவ்ய ஸூரி சரிதம்:— [வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 07


---

## ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி— ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடன் கூடியது] ... ... ... ரூ 0—8—0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யாநத்துடனும் கூடியது] ... ... ... ரூ. 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு
மாம்பலம், தேனாம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.



ஸ்ரீ:

ஸ்ரீயெ நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

# வேதாந்த தீபிகை


ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 23] பவ ஹூ மார்கழிமீ [ஸஞ்சிகை 7


ஸ்ரீ:

## மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

(தொடர்ச்சி ஸம் 23 ஸஞ் 6, 539 பக்கம்.)

71. உத்ஸர்க்க விதி:—“த்வாஷ்ட்ரம் பாத்நீவதம் ஆலபேத” (த்வஷ்டா என்னும் தேவதையோடு கூடிய பத்நீவாந் என்கிற தேவதைக்குக் கொடுக்க வேண்டிய பசுவை உபாகரணம் பண்ணு) என்று சொல்லி, “பர்யக்நிக்ருதம் பாத்நீவதம் உத்ஸ்ருஜந்தி” (பர்யக்நி கரணம் என்னும் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட பத்நீவாந் தேவதையின் பசுவை விட்டுவிடுகிறார்கள்) என்று ஒரு வாக்யம் சொல்லப்படுகிறது. இங்கே புதிதாக யாகம் விதிக்கப்படுகிறதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ஆம். பர்யக்நி க்ருதம் என்கிற சொல்லாலே ஸம்ஸ்காரத்தை அடைந்த பசுவான த்ரவியமும், பாத்நீவதம் என்னும் சொல்லாலே தேவதையும் தோன்றுகிறபடியால் இங்கே யாகம் விதிக்கப்படுகிறது. இப்படிப் பொருள் கொண்டால், இரண்டு சொற்களுக்கும் கோரகமன்றோடு ஒன்றுக்கு ஸம்பந்தம் ஏற்படும். விட்டுவிடுவதை விதிப்பதானல்

...மூன்றுவதோடு ஸம்பந்தம் சொலலவேண்டும். மூன்று ... ங்கியிருக்கிறது.

ஸித்தாந்தம்:—இங்கே தேவதைகளுக்கு கொடுப்பதற்காக உபாகரணம் பண்ணபபடும் பசு நினைவு வருகிறது. அதை அநுவாதம் செய்து, பர்யக்நி க்ருதம் என்னும் சொல்லோடு சேரும் "உத்ஸ்ருஜந்தி" என்கிற ஆக்யாதத்தாலே பர்யக்நி கரணம் என்கிற குணம் விதிக்கப்படுகிறது.

(2) இங்கே ஒரு கேள்வி—அக்நீஷோமீய பசுயாகத்தைப்போல் இதைச் செய்யவேண்டியது. அதில் பர்யக்நி கரணத்தைச் சொல்லியிருக்கிறதே, அது தானகச் செய்யப்படுமே, இந்த விதிக்குப் ப்ரயோஜநமில்லையே-என்று. பதில்–ப்ரயோஜநமுண்டு, பர்யக்நி கரணத்துக்கு மேற்பட்ட அங்கங்கள் வேண்டாமென்று சொல்லுவதுதான் ப்ரயோஜநம்.

(3) மறுபடியும் கேள்வி—நீர் சொன்னபடியானல் இதைப் பரிஸங்க்யா விதி என்று சொல்லவேண்டும். அதில் மூன்று குற்றங்கள் உண்டு. (1) விதிவாக்யத்தில் சொன்னதை விட்டுவிடுவது. அந்த வாக்யம் பர்யக்நி கரணத்தைச் செய்யச்சொல்லுகிறது. அந்தப் பொருள் போய்விடுகிறது. (2) சொல்லாத பொருளை எடுத்துக்கொள்ளுகிறது. மேல் அங்கங்கள் செய்யவேண்டாம் என்று சொல்லவில்லை. அது எடுத்துக்கொள்ளப்படுகிறது. (3) ஏற்பட்டதைத் தள்ளி விடுவது. அக்நீஷோமீய பசு யாகத்தின்போல் செய்யவேண்டியவைகளைத் தள்ளி விடுவது. இப்படி மூன்று குற்றங்கள் உண்டு-என்று. பதில்—பர்யக்நி கரணத்துக்கு மேற்பட்ட அங்கங்களைச் செய்யவேண்டாம் என்று சொன்னல், பரிஸங்க்யா விதியாகும். அப்படிச் சொல்லவிலலை. அப்படியானல், அவைகள் எப்படிச் செய்யப்படாமல் போகும் என்றால், பதில்—அக்நீஷோமீய யாகத்தைப்போல் இந்த யாகத்தைச் செய்யவேண்டியது என்று அநுமாநத்தால் ஏற்படவேணும். இதற்குக் கொஞ்சம் காலம் செல்லும். இங்கே விதிக்கப்படுவது சீக்கிரம் மனதில் படுகிறது. ஆகையால் அநுமாநத்தால் அங்கங்கள் வருவதற்குமுன் விதிக்கப்படுவதை அறிகிறோம். வேறு அங்கங்களைத் தேடவேண்டியதில்லை. இந்த வழியாய் மேல் அங்கங்கள் செய்யப்படுகிறதில்லை.

(4) இன்னமொரு கேள்வி—நீர் சொல்லுகிற நியாயப்படி பர்யக்நி கரணத்துக்கு முன்னால் செய்யவேண்டிய அங்கங்களும் இல்லாமல் போகலாமே-என்று. பதில்—பர்யக்நி கரணம் விதிக்கப்படுகிறது. அது புதியது அது எவ்விதமாய் இருக்குமென்று யோசிக்கும்போது, அக்நீஷோமீய யாகத்தில் சொல்லப்பட்ட பர்யக்நி கரணம் அதற்குமுன் செய்யப்பட்ட அங்கங்களுடன் நினைவுக்கு வருகிறது. அப்படிப்பட்டதுதான் விதிக்கப்படுகிறதென்று அந்த அங்கங்களுடன் பர்யக்நி கரணத்தைச் செய்கிறோம். இப்படி முன் அங்கங்களுக்கு இடம் உண்டாகிறது.



(5) ஆகையால், 'உத்ஸ்ருஜந்தி' (விட்டு விடுகிறார்கள்) என்கிற சொல்லில் தாதுவால் மேல் அங்கங்களை விடுவதை அநுவாதம் செய்து ஆக்யாதத்தாலே பர்யக்நி கரணம் என்பதும் விதிக்கப்படுகிறது. (அதி-8)

72. கீழ் பாராவில் சொன்ன விஷயத்தில் சாஸ்த்ர தீபிகையில் பூர்வ பக்ஷமும் ஸித்தாந்தமும் வேறு விதமாய்ச் சொல்லியிருக்கிறது. அவை யாவன:—

பூர்வபக்ஷம்:—பாத்நீவதம் என்கிற சொல்லாலே முன்சொன்ன யாகத்தின் நினைவு வராது. அதில் தேவதை பத்நீவானன த்வஷ்டா, வெறும் பத்நீவாந் அன்று. மேலும் அந்த யாகத்துக்காக விதிகள் வேண்டிய குணம் ஒன்றுமில்லை. ஆகையால் குணவிதி யன்று.

ஸித்தாந்தம் :—குணவிதிதான். பத்நீவாந் என்கிற சொல்லானது முன் சொன்ன யாகத்தின் நினைவை உண்டுபண்ணக்கூடும். யாகத்தைச் சொல்லுகிற வாக்யத்தில் "த்வாஷ்ட்ரம் பாத்நீவதம்" என்னும் சொற்கள் தனித்தனியே தத்தித ப்ரத்யயத்தை த்வஷ்டா, பத்நீவாந் என்கிற சொற்களில் சேர்த்து உண்டாயிருக்கின்றன. அக்நீஷோமீயம் என்கிற சொல்லில் போல அக்நி – ஸோம என்கிற சொற்களை முதலில் ஒரு சொல்லாகச் சேர்த்து, அப்புறம் தேவதையைச் சொல்லுகிற தத்தித ப்ரத்யயத்தைச் சேர்க்கவில்லை. அப்படிச் செய்திருந்தால் இரண்டுபேரும் சேர்ந்தே தேவதையாகும். இரண்டு தேவதைகளையும் தனியாகச் சொன்னதினலே அவர்களில் ஒருவரை இஷ்டப்படி தேவதையாக எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லக்கூடாது. ஒரே வாக்யத்தால் ஒரே தடவையில் அவர்கள் விதிக்கப் பட்டிருப்பதாலே டித்தனுக்கும் டபித்தனுக்கும் தாயாரென்று முதலில் சொல்லி, பிறகு அவளை டித்தன் தாயார் என்று சொல்லக்கூடும். அதுபோல த்வஷ்டாவையும் பத்நீவானையும் தேவதைகளாக உடைய பசு என்று முதலில் சொல்லி, பிறகு அந்தப் பசுவை பத்நீவானைத் தேவதையாக உடையது என்று சொல்லலாம். ஆகையால் பாத்நீவதம் என்னும் சொல்லால் முன் சொன்ன யாகத்தின் நினைவு வரலாம். ஆகையால் வேறு கர்மம் விதிக்கப்படுகிறதென்று சொல்லுவது ஸரியன்று. முன்சொன்ன யாகத்தை அநுவாதம்பண்ணி, பர்யக்நி கரணம் வரையில் உள்ள அங்கங்கள் விதிக்கப்படுகின்றன. (சா. 169-170)

73. தேசாதி ஸம்பந்த விதி:—தர்சயாகத்தையும் பூர்ணமாஸ யாகத்தையும் விதிக்கிற இடத்தில் சில வாக்யங்கள் இருக்கின்றன—"ஸமே

யஜேத, பௌர்ணமாஸ்யாம் யஜேத, யாவஜ்ஜீவம் தர்சபூர்ணமாஸாப்யாம் யஜேத" என்று, இவைகளின் பொருள்—மேடுபள்ளமில்லாத இடத்தில் யாகத்தைச் செய் என்றும், பௌர்ணமி திதியில் யாகத்தைச் செய் என்றும், உயிரோடிருக்கிறவரையில் தர்சபூர்ணமாஸம் என்கிற யாகங்களைச் செய் என்றும். இவைகளில் முதல் வாக்யம் இடத்தையும இரண்டாவது வாக்யம் காலத்தையும், மூன்றாவது வாக்யம் நிமித்தத்தையும் சொல்லுகின்றன. நிமித்தம் என்றால் ஒரு வேலையைச் செய்வதற்குக் காரணம். உதாரணம்—கிரஹணம் வந்தால் ச்ராத்தம் செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறது. கிரஹணம் நிமித்தம். இந்த வாக்யங்கள் கர்மங்களை விதிக்கின்றனவா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இடம், காலம், நிமித்தம் இவைகள் செய்யக்கூடியவைகள் அல்ல. (உபாதேயங்கள் அல்ல) ஆகையால் அவைகளை விதிக்கக் கூடாது. (விதேயங்கள் அல்ல). இவைகளால் கர்மங்கள் விதிக்கப்படுகின்றன. முன்னாலே தர்சமும் பூர்ணமாஸமும் விதிக்கப்பட்டன. அவைகளை மறுபடியும் விதிக்கக் கூடாது. அப்யாஸம் என்கிற காரணத்தாலே இவைகள் வேறு கர்மங்கள்.

ஸித்தாந்தம்:—இடம் முதலானவைகளை விதிக்க முடியாதென்பது உண்மையே. ஆனபோதிலும், விதிக்கப்பட்ட கர்மங்களோடு அவைகளுக்கு ஸம்பந்தத்தை விதிக்கலாம். இந்த ஸம்பந்தம் கர்மத்தைப்போல் விதிக்கப்படவில்லை. ஆகையால் விதிக்கத் தகுந்ததுதான். இப்படியே பலனையும் ஸம்ஸ்காரத்தையும் விதிக்கக் கூடாதபோதிலும், விதித்த கர்மங்களுடன் அவைகளுக்கு ஸம்பந்தத்தை விதிக்கக்கூடும்.

விதி என்பது செய்யப்படாத வேலையைச் செய்யும்படி ஏவுகிறது. இது வாக்யத்தின் வேலை. ஏவப்படுகிறவன் மனிதன். உபாதானம் என்பது செய்யப்படாததைச் செய்வது. இது மனிதன் வேலை. செய்யப்படுவது கர்மம். (பா-3. அதி-13)

74. ஸ்துதி:—அமாவாஸ்யையிலும் பௌர்ணமியிலும் அக்னிதேவதைக்குப் புரோடாசத்தைக் கொடுப்பதான யாகம் விதிக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் "யதாக்நேயோऽஷ்டாகபாலோऽமாவாஸ்யாயாம் பவதி" என்று அமாவாஸ்யையில் மறுபடியும் அதே யாகம் விதிக்கப்படுகிறது. இது வேறு காமமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ஒரு வித்தியாஸமும் இல்லாமல் விதியை மறுபடியும் சொல்லுவது அப்யாஸம். அது இங்கே இருப்பதால் வேறு கர்மம் விதிக்கப்படுகிறது. ஆகையால் அமாவாஸ்யையில் அக்னிதேவதையின் யாகத்தை இரண்டு தடவை செய்யவேண்டியது.



ஸித்தாந்தம்:—இது சரியன்று. முன் விதியின் நினைவு வந்து, இந்த விதியும் அந்த விதிதான் என்று தோன்றுகிறது. ஆகையால் இந்த வாக்யம் அநுவாதம். மேலே விதிக்கப்போகிற இந்திர அக்னி யாகத்தை ஸ்தோத்ரம் பண்ணுவது அதற்கு ப்ரயோஜநம். அக்னி தேவதை யாகம் அமாவாஸ்யையில் செய்யப்படுகிறது. ஆனால் வெறும் அக்னி தேவதையால் அது நல்லதாகிறதில்லை. இந்திரனுடன் சேர்ந்த அக்னிதான் நல்லது. ஆகையால் இந்திர அக்னி யாகம் செய்யவேண்டியது என்று ஸ்தோத்ரம் செய்யப்படுகிறது. (பாத 3—அதி 14).

75. யாவஜ்ஜீவமக்நிஹோத்ரம் ஜுஹோதி (உயிரோடிருக்கிறவரையில் அக்னி ஹோத்ரம் என்கிற ஹோமத்தைச் செய்) "அக்நிஹோத்ரம் ஜுஹுயாத் ஸ்வர்க்ககாம:" (ஸ்வர்க்கத்தை ஆசைப்பட்டவன் அக்னி ஹோத்ரத்தைச் செய்யவேண்டியது.) என்று இரண்டு வாக்யங்கள் இருக்கின்றன. இதில் முதல் வாக்யத்தில் என்ன விதிக்கப்படுகிறது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—யாவஜ்ஜீவம் என்கிற சொல் உயிரோடிருக்கும் வரையிலுள்ள காலத்தைச் சொல்லுகிறது. காலத்தின் ஸம்பந்தம் இரண்டாவது வாக்யத்தில் விதிக்கப்பட்ட அக்னிஹோத்ரத்துக்கு ஏற்படவில்லை. அதை ஜுஹோதி என்று அநுவாதம் செய்து, அதற்குக் காலத்தின் ஸம்பந்தம் விதிக்கப்படுகிறது. அப்போது ஆசையில்லாதபோதிலும் ஒவ்வொரு நாளும் அக்னிஹோத்ரத்தைச் செய்யவேண்டியதாக இந்த வாக்யம் சொல்லாது. ஆகையால் இரண்டாவது வாக்யத்தில் பலனுக்காக விதித்த ஹோமம் தான் இருக்கும். அதைப் பலதடவை செய்யவேண்டியது. இரண்டாவது வாக்யத்தில் ஒரு தடவை அதைச் செய்யவே வேண்டியதென்று ஏற்பட்டது. அதை அடிக்கடி செய்யாவிட்டால், யாவஜ்ஜீவம் என்கிற காலவிதி வீணாய்ப் போய்விடும். ஆகையால் பலனுக்காகச் செய்யும் அக்னிஹோத்ரத்தை அடிக்கடி செய்வதற்காகிய காலமாகிய தர்மம் விதிக்கப்படுகிறது.

ஸித்தாந்தம்:—இது ஸரியன்று. யாவஜ்ஜீவம் என்கிற சொல்லுக்கு உயிரோடிருப்பது முழுவதும் என்றுதான் பொருள். அது காலத்தைச் சொல்லவில்லை. சொல்வதானால் லக்ஷணையாலேதான் சொல்லவேணும். ஜீவநம் (உயிரோடிருப்பது) கர்மத்தின் தர்மமன்று. அது மனிதனின் தர்மம். மனிதன் கர்மமாகிய ஜீவநத்தை நிமித்தமாகவைத்து, அக்னி

ஹோத்ரத்தின் ப்ரயோகம் (செய்யப்படுவது) விதிக்கப்படுகிறது. இங்கே கர்மபேதமிருப்பதாகச் சொல்லமுடியாது. அதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது ஒன்றுமில்லையே. அப்யாஸம் என்கிற காரணமிருக்கிறதே என்றால், பதில்—அப்யாஸம் என்பது வித்தியாஸம் இல்லாமல் ஒன்றையே மறுபடியும் சொல்லுவது. "அக்நிஹோத்ரம் ஜுஹோதி" என்று மறுபடியும் சொன்னாலும் நிமித்தத்துடன் இங்கே சேர்ந்திருப்பதால், அப்யாஸமில்லை. ஆகையால் ப்ரயோகபேதம் ஏற்படுகிறது. இதற்கு நிமித்தம் உயிரோடிருப்பது. நிமித்தம் இருந்தால் அதினால் ஏற்படும் கர்மத்தை விடக்கூடாதாகையால், அது நித்யம் என்றும் ஏற்படுகிறது. உயிரோடு இடைவிடாமல் இருப்பதால் அக்நி ஹோத்ரத்தையும் இடைவிடாமல் செய்ய வேண்டாமா? என்று கேட்கக்கூடாது. ஸாயங்காலத்திலும் காலைவேளையிலும் என்று காலம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பலனுக்காக ப்ரயோகம் வேறு, நித்யப்ரயோகம் வேறு. (பா—)—அதி 1)

(76) ஸர்வ சாகாப்ரத்யய நியாயம்:—வேதத்தின் அநேக சாகைகளில் தர்சம், பூர்ணமாஸங்கள் என்னும் கர்மங்கள் சொல்லப்படுகின்றன. அவைகள் பல கர்மங்களா? அல்லது ஒரு கர்மமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—சாகைகள் வேறானதால் கர்மங்கள் வேறு. வேறு என்பதற்குக் காரணங்களாகச் சொல்லப்பட்டவைகள் இங்கே யிருக்கின்றன. (1)காடகம் என்றும் காண்டவம் என்றும் பெயர்கள்வேறு. (ஸம்ஜ்ஞை) (2) தர்மங்களும் வேறு. சிலர் பூமியில் வைத்துக் கொண்டு சாப்பிடுகிறார்கள். மற்றவர்கள் அப்படிச் செய்கிறதில்லை. (3) ஒரு சாகையில் சொல்லப்படும் மந்திரங்களும் கர்மங்களும் மற்ற சாகைகளிலும் சொல்லப்படுகின்றன. இப்படியே வேறு பாட்டுக்குக் காரணமான சக்திக்குறைவு முதலானவைகளையும் சொல்லலாம். மனிதன் ஆயுஸ்ஸு கொஞ்சமாயிருக்கிறது. எல்லா சாகைகளையும் படித்து கர்மங்களைச் செய்ய முடியாது. ஆகையால் ஒவ்வொரு சாகையில் சொல்லப்படுவது வெவ்வேறுதான.

ஸித்தாந்தம்:—ரூபம் முதலானவைகளில் பேதமில்லாதபடியால் கர்மங்கள் ஒன்றுதான். அக்நி என்கிற தேவதையும், எட்டுக்கபாலங்களில் பாகம் பண்ணப்பட்ட புரோடாசம் என்கிற த்ரவ்யமும் இந்த கர்மத்துக்கு உருவம். இது ஒரு சாகையில் எப்படி இருக்கிறதோ, அப்படியே மற்ற சாகைகளிலும் காணப்படுகிறது. அதைச் செய்பவன் வேலையும் ஒரே விதமாயிருக்கிறது. தர்சம் என்றும் பூர்ணமாஸம் என்றும் பெயர்களும் ஒன்று. ஸ்வர்க்கம் என்னும் பலத்துடன் ஸம்பந்தமும் ஒன்று. ஆகையால் கர்மம் ஒன்றுதான்.

பூர்வபக்ஷத்தில் சொன்ன ஹேதுக்கள் வேறுவிதமாயும் பொருந்தும். காடகம் முதலான பெயர்கள் கர்மங்களின் பெயரல்ல. பெயராயிருந்தால்



"காடகேந யஜேத" என்று இருக்கும். "காடகமதீதே" என்று ப்ரயோகமிருப்பதால் அது புஸ்தகத்தின் பெயர் என்று அறியலாம். பூமியில் சாப்பிடுவது முதலானவை அத்யயநத்தின் (வேதம் படிப்பதின்) தர்மம். ஒன்றையே எல்லா சாகைகளிலும் சொல்லுவது படிக்கிறவர்கள் வெவ்வேறானதால் குற்றமன்று. ஆயுஸ்ஸு கொஞ்சமாயிருந்தாலும் வேறு சாகையில் சொல்லுவதைச் சேர்த்து கொண்டு கர்மங்களைச் செய்யலாம். (பா—4 அதி—9)

விதிவாக்யமானது கர்மத்தை மாத்திரம் விதிக்கிறது. கர்மம் வேறு என்று சொல்லுகிறதில்லை. அது விதியை மறுபடியும் சொல்லுவதால் ஏற்படவேண்டியது. அதுவும் வேதத்தைப் படிக்கிறவர்கள் வேறாயிருப்பதால் ப்ரயோஜநமுள்ளது. கர்மம் வேறாக இருக்கவேண்டியதில்லை (சா-180—181)

77. (1) மந்திரங்களுக்கு லக்ஷணம் (அடையாளம்) சொல்லமுடியாது. எதைச் சொன்னாலும் சில மந்த்ரங்கள் விட்டுப் போய் விடும். ஆகையால் பெரியோர்கள். "இது மந்த்ரம்" என்று சொல்லுவது தான் அதற்கு லக்ஷணம். வேதத்தில் இரண்டே பாகங்கள் இருக்கின்றன. ஆகையால் மந்த்ரமல்லாதது ப்ராஹ்மணம். (பா—1—அ 7, 8)

II அக்நிதேவதையின் யாகத்தைச் சேர்ந்ததாய் ஒரு மந்த்ரமிருக்கிறது. "அக்நயே ஜுஷ்டம் நிர்வபாமி" (அக்நி தேவதை ஸந்தோஷப்படுவதற்காக உன்னைத் தனியாக எடுக்கிறேன்) என்று. இது நெல்லைப்பார்த்து நிர்வாபம் என்னும் வேலையைச் செய்யும் போது சொல்லப்படுகிறது. ஸூர்ய தேவதையின் யாகத்தைச் செய்யும் போது "அக்நயே" என்கிறசொல்லையெடுத்து விட்டு அதற்குப் பதிலாக "ஸூர்யாய" என்கிற சொல்லைச் சேர்க்கவேண்டியது. இப்படிச் சேர்க்கவேண்டியதற்கு ஊஹம் என்று பெயர். யாகத்தின் தீக்ஷையின் கடைசியில் "அதீக்ஷிஷ்டாயம் ப்ராஹ்மண:" (இந்த பிராமணன் தீக்ஷைசெய்து கொண்டான்) என்று மந்திரம் படிக்கப்படுகிறது. அப்போது அவன் பெயரையும், அவர்கள் முன்னோர்கள் மூன்று தலைமுறைவரையில் பெயர்களையும் சேர்த்துச் சொல்லுகிறது. இவைகளுக்கு நாமம் என்று பெயர். "ஆர்ஷேயம் வ்ருணீத" ... என்றும் சொல்லுகிறது. இதற்கு ப்ரவரம் என்று பெயர். இப்படிச் சேர்க்கப்பட்ட ஊஹமும் பெயர்களும் ப்ரவரங்களும் மந்திரங்கள் அன்று. வேதத்தைப் படிக்கும் போது அவைகளைப் படிக்கிறதில்லை. மேலும், இவைகளை யஜ்ஞம் அறிந்த பெரியோர்கள் மந்திரம் என்று சொல்லவில்லை. இதுதானே மந்திரத்தின் லக்ஷணம். (பா—1—அ—9)

III மந்திரங்களில் அர்த்தப்படிச் சொற்களைப் பாதங்களாகச் சேர்க்கப்பட்டது ருக். அதையே கானம் செய்தால் (பாடினால்) ஸாமம். இந்த இரண்டு மல்லாதது யஜுஸ்ஸு. (பாதம்-1-அதி-10, 11, 12)

IV "ப்ரோக்ஷணீராஸாதய" (ப்ரோக்ஷணியை கொண்டு வந்து வை) "இந்த்ர ஆகச்ச" (இந்திரனே வாரும்) என்று பிறர்க்குத் தெரியும்படி சொல்லுகிற மந்திரங்களுக்கு நிகதம் என்று பெயர். அது எந்த வகுப்பில் சேர்ந்தது?

பூர்வபக்ஷம்:—அவைகள் ஒன்றிலும் சேரவில்லை. பாதங்களாகச் சொற்களைச் சேர்க்காததால் ருக் அன்று. கானம் பண்ணப்படாததால் ஸாமமன்று. சொற்களை யொன்றோடொன்று சேர்த்துப் படிக்கப்படுவதால் யஜுஸ்ஸு என்று சொல்லலாம். ஆனால் யஜுஸ்ஸை உபாம்சுவாக (ஒருவருக்கும் கேட்காதபடி) சொல்லவேண்டியது. நிகதத்தைப் பிறர் தெரிந்து கொள்ளுவதற்காக இரைந்து (உச்சை:) சொல்லவேணும். இப்படி தர்மங்கள் வேறாக இருப்பதால் யஜுஸ்ஸில் சேரவில்லை.

ஸித்தாந்தம்:—ஒருவன் சொல்லுகிறான்—"வெளியில் பிராமணர்கள் சாப்பிடட்டும், உள்ளே ஸந்யாஸிகள் சாப்பிடட்டும்" என்று. ஸந்யாஸிகள் பிராமணர்களாயிருந்த போதிலும், அவர்களுக்கு மரியாதை செய்வதற்காக அவர்களைப் பிரித்து வேறு இடம் சொல்லுகிறது. அப்படியே நிகதங்களும் யஜுஸ்ஸாக இருக்கும் போதே பிறர்க்குத் தெரிவதற்காக இரைந்து சொல்லும்படி விதி ஏற்பட்டது. ஆகையால் மந்திரங்கள் மூன்று விதம் தான். (பா-1-அதி-13)

(2) இங்கே ஒரு கேள்வி—யஜுஸ்ஸாயிருப்பது ஒரு தர்மம். இரைந்து சொல்லுவது வேறொரு தர்மம். நிகதத்தில் இரண்டும் சேருமா? யஜுஸ்ஸாயிருந்தால் உபாம்சுவாக அன்றோ அதைச் சொல்லவேண்டியது—என்று. பதில்—நிகதம் யஜஸ்ஸு தான். உபாம்சுவாகச் சொல்லுவது என்கிற தர்மம் வருகிறதில்லை. ஏனென்றால், பிறர்க்கு ஒன்றைத் தெரியப்படுத்தும் வேலைக்கு விரோதமாயிருப்பதால். ஆகையால் இரைந்துசொல்லுவது தானே வரும். அதை விதிக்க வேண்டியதில்லை.

(3) மறுபடியும் கேள்வி—"உபாம்சு யஜுஷா" என்று வசனமிருக்கிறதே. இதுசுருதி பிறர்களைக் கூப்பிட்டுச் சொல்லுவது என்பது லிங்கம் என்கிற ப்ரமாணத்தாலே ஏற்படுகிறது. லிங்கம் பலக்குறைவுள்ளது. அது சுருதியால் ஏற்பட்டதை எப்படி ரத்து செய்யும்—என்று. பதில்—பிறர்க்குத் தெரியப்படுத்துவது என்னும் வேலை முக்கியமானது. அது பலக்குறைவுள்ள ப்ரமாணத்தால் வருவதானாலும், ஸ்வரூபத்தாலே பல



முள்ளது. உபாம்சுவாகச் சொல்லுவதற்குப் ப்ரமாணம் பலமாயிருந்தாலும் ஸ்வரூபத்தாலே பலக்குறைவுள்ளது. ஏனென்றால் அது அங்கம். ஆகையால் அது தள்ளப்படலாம். ப்ரமாணங்களாலே ஏற்படுகிறவைகளைக் கொண்டு தான் பிரமாணங்களின் பலமும் பலக்குறைவும் வருகிறது. (பாரா - 26)

(4) மேலும், "உபாம்சு யஜுஷா" என்பது என்ன விதி? முன்னால் ஏற்படாததை விதிக்கிறது என்று சொல்லுவதைக் காட்டிலும் நியம விதி என்று சொல்லுவது லகுவானது. நிகதம் தவிர மற்ற யஜுஸ்ஸை உபாம்சுவாகவும் சொல்லக்கூடும். இரைந்தும் சொல்லக்கூடும். உபாம்சுவாகவே சொல்லவேண்டியதென்று விதிக்கிறது. நிகதத்துக்கு இரைந்து சொல்லுவதே ஏற்பட்டிருக்கிறது. அங்கே உபாம்சுவாகச் சொல்லுவதற்கு இடமே இல்லை. இங்கே இந்த வசநத்துக்கு வேலை இல்லை. (சா - 115-116)

79. யஜுஸ்ஸான மந்திரங்களில் சொற்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருப்பதால் எது ஒரு வாக்யம் என்று தெரியவேண்டும். இது முடியுமா? அல்லது அது முடியாதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:-முடியாது. "தேவஸ்யத்வா ஸவிது: ப்ரஸவே, அச்விநோ பாஹுப்யாம், பூஷ்ணோ ஹஸ்தாப்யாம், அக்னயே ஜுஷ்டம் நிர்வபாமி" என்கிற விடத்தில், வெவ்வேறு வாக்யங்கள் என்று சொல்லவேணும். ஏனென்றால, ஒரே வாக்யம் என்றே முடிவுசெய்வதற்குக் காரணம் காணப்படவில்லை. அர்த்தம் ஒன்றாயிருந்தால், வாக்யம் ஒன்று என்று சொல்லலாமேயென்றால், சொல்லக்கூடாது. ஒரே பதத்தில் ஒரே அர்த்தம் இருக்கிறது. அது ஒரு வாக்யமன்று. பதங்களின் கூட்டம் வாக்யம். என்றால் இங்கே பதங்களின் அநேகக் கூட்டங்கள் இருப்பதால் வாக்ய பேதம் சொல்லவேணும்.

ஸித்தாந்தம்:-எதைப் பிரித்தால் அர்த்தம் குறைந்து அந்தக் குறையைத்தீர்க்க வேறு சொற்களைத் தேடவேண்டுமோ? பிரிக்காவிட்டால் ஒரே அர்த்தத்தைச் சொல்லுமோ, அது ஒரு வாக்யம். இந்த லக்ஷணத்தைக்கொண்டு யஜுஸ்ஸில், ஒரு வாக்யம் என்று தெரிந்துகொள்ளலாம். சொன்ன லக்ஷணத்தில் "தேடப்படவேண்டுமோ" என்பது வரையிலுள்ள பாகம் மாத்திரம் போதாது. "ஸ்யோநம் தே ஸதநம் க்ருணோமி, க்ருதஸ்ய தாரயா ஸுசேவம் கல்பயாமி, தஸ்மின் ஸீதாம்ருதே ப்ரதிதிஷ்ட, வ்ரீஹீணாம் மேத ஸுமநஸ்யமாந:" (நெல்லினுடைய சாரமாகிய புரோடாசமே!

உனக்கு நல்ல இருப்பிடத்தைச் செய்கிறேன். நெய்யினுடைய தாரையால் நன்றாக அதில் இருக்கும்படி செய்கிறேன். நல்ல மனதுடன் அதில் உட்காரு, ஸ்திரமாயிரு) என்கிற இடத்தில் தஸ்மிந் முதலான சொற்களைப் பிரித்தால், தஸ்மிந் (அதில்) என்கிற சொல் எதைச் சொல்லுகிறதென்று தெரிவதற்கு, அதற்கு முன்னிருக்கும் பதங்களின் கூட்டத்தைத் தேட வேண்டியது. ஆனபோதிலும் முன் இருப்பதுடன் சேர்ந்து அது ஒரு வாக்யம் அன்று. இதைக் காட்டுவதற்காக ஒரே அர்த்தத்தைச் சொல்லுமோ" என்று லக்ஷணத்தில் சேர்த்திருக்கிறது. அங்கே ஒரே அர்த்தம் சொல்லப்படவில்லை. முதல் பாகத்தால் புரோடாசத்துக்கு இருப்பிடம் செய்யப்படுகிறது. இரண்டாவது பாகத்தால் அது இருப்பிடத்தில் வைக்கப்படுகிறது. இரண்டு பாகங்களும் வெவ்வேறு வாக்யங்கள் என்று எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம். "பிரிக்காவிட்டால் ஒரே அர்த்தத்தைச் சொல்லுமோ" என்பது மாத்திரம் லக்ஷணமாகாது. "ஹிமா வாம் விஹஜது, பூஷா வாம் விமஜது" (பகன் என்பவர் உங்களைப் பிரிக்கட்டும், பூஷன் என்பவர் உங்களைப் பிரிக்கட்டும்) என்னுமிடத்தில் தாம்பத்தைப் பிரிப்பதாகிய வேலை ஒன்று. ஆகையால் இது ஒரு வாக்யமாய் விடும். இதை எல்லாரும் இரண்டு வாக்யமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் லக்ஷணவாக்யத்தின் முன்பாகமும் வேண்டியதுதான். சொன்ன லக்ஷணமானது பூர்வபக்ஷத்தில் சொன்ன வாக்யத்தில் பொருந்திருக்கிறது. "தேவஸ்ய த்வா ஸவிது: ப்ரஸவே" என்பதைப் பிரித்தால் "தேவஸ்ய த்வா" முதலான சொற்களின் கூட்டம் எதைச் செய்யவேண்டியதென்று தேடுகிறது. எல்லாம் சேர்ந்து நிர்வாபம் என்கிற ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிறது. (பா-1-அ-தி-14)

79. "இஷே த்வா ஊர்ஜே த்வா" (எல்லாராலும் ஆசைப்படுகிற அந்நத்துக்காக ஏ பலாச மரத்தின் கிளையே! உன்னை அறுக்கிறேன். ரஸத்துக்காக உன்னைத் துடைத்துச் சுத்திசெய்கிறேன்.) என்பவைகள் ஒரே மந்திரமா? இரண்டு மந்திரங்களா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ஒரே மந்திரம். மந்திரங்களுக்குப் ப்ரயோஜநம் அதிருஷ்டமென்பது. இரண்டு அத்ருஷ்டத்தைக் கல்பிப்பதைக் காட்டிலும் ஒரே அத்ருஷ்டத்தை கற்பிப்பது லகுவானது. இங்கே செய்யவேண்டிய வேலையை நினைவூட்டும் சொற்கள் இல்லை. இருந்தால் வேலைகள் இரண்டாயிருப்பதால் மந்திரங்களும் இரண்டு என்று சொல்லலாம்.

ஸித்தாந்தம்:—பலாச மரத்தின் கிளையை அறுப்பதிலும், அதைத் துடைப்பதிலும் மந்திரங்களுக்கு வேலை என்று சொல்லியிருப்பதால், அதை அநுஸரித்து "சிநத்மி" (அறுக்கிறேன்) என்னும் சொல்லை வைத்துக்



கொள்ளவேண்டியது. செய்யவேண்டிய வேலையை அது நினைவுக்குக் கொண்டுவரும். அர்த்தம் வேறாயிருப்பதால், வாக்யங்கள் வேறு, மந்திரங்களும் வேறு. (பா-1-அதி-5)

80. ஜ்யோதிஷ்டோமயாகத்தில் உபஸத் என்னும் ஒரு கர்மம் செய்யப்படுகிறது. அதில் ஹோம மந்திரம் "யா தே அக்நே அயாசயா தநூர்வர்ஷிஷ்டா கஹ்வரேஷ்டா உக்ரம் வசோ அபாவதீம் த்வேஷம் வசோ அபாவதீம் ஸ்வாஹா, யா தே அக்நே ரஜாசயா, யா தே அக்நே ஹராசயா" என்று சொல்லப்படுகிறது. இதில் ஸ்வாஹா வரையில் உள்ளது முதல் மந்திரம். அதற்கு வேண்டிய சொற்கள் இருக்கிறபடியால் வேறொன்றையும் தேடவில்லை. இரண்டாவது மூன்றாவது மந்திரங்களுக்கு வேண்டிய சொற்கள் இல்லை. எந்தச் சொற்களைச் சேர்த்துக்கொள்ளலாம். முதல் மந்திரத்திலிருக்கும் சொற்களையா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—முதல் மந்திரத்திலுள்ள "தநூர்வர்ஷிஷ்டா" முதலான சொற்களைச் சேர்க்கக்கூடாது அது அந்த மந்திரத்தைச் சேர்ந்தவைகள். ஆகையால் வேறு சொற்களைச் சேர்க்கவேண்டியது.

ஸித்தாந்தம்:—வேதத்தில் சொல்லும் மந்திரங்களுக்கு வேண்டிய சொற்கள் வேதத்தில் சொன்ன சொற்களாகவே இருக்கவேண்டும். ஆகையால் "தநூர்வர்ஷிஷ்டா" முதலான சொற்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். அவைகள் முதல் மந்திரத்தைச் சேர்ந்தவைகள் என்பது உண்மையே. ஆனபோதிலும் அவைகள் மனதில் நிற்கின்றன. வேறு இடங்களிலிருந்து கொண்டுவரப்படும் வேறு சொற்களைக் காட்டிலும் இவைகள் கிட்ட இருக்கின்றன. இப்படிக் கிட்ட இருக்கும் சொற்களைச் சேர்ப்பதற்கு அநுஷங்கம் என்று பெயர். (1-பாதம்-அதி-16)

81. ஜ்யோதிஷ்டோமத்தில் தீக்ஷையைச் சொல்லுமிடத்தில் மந்திரங்கள் சொல்லப்படுகின்றன—"சித்பதிஸ்த்வா புநாது, வாக்பதிஸ்த்வா புநாது, தேவஸ்த்வா ஸவிதா புநாது, அச்சித்ரேண பவித்ரேண வஸோ: ஸூர்யஸ்ய ரச்மிபி:" என்று. அவைகளில் மூன்றாவது மந்திரத்தைச் சேர்ந்தன "அச்சித்ரேண" முதலான சொற்கள். அவைகளை முதலிரண்டு மந்திரங்களில் சேர்க்கவேண்டுமா? சேர்க்கவேண்டாமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—சேர்க்கவேண்டியதில்லை. ஏனென்றால், இந்த இரண்டு மந்திரங்களில் குறைவு ஒன்றுமில்லை. இருந்தாலன்றோ சொற்களைத் தேடவேண்டியது.

ஸித்தாந்தம்:—அந்த மந்திரங்கள் ஒன்றையும் தேடவேண்டாம். ஆன போதிலும் "வஷட்காரேண ரச்மிபி:" என்னும் சொற்கள் ஒருவேலைக்குச் சாதனங்களைச் சொல்லுகின்றன. அவைகள் தங்களால் செய்யப்படும் வேலையைத் தேடுகின்றன. அந்த வேலையை 'வஷட்கார' என்கிற சொல் சொல்லுகிறது. அது மூன்று மந்திரங்களிலும் இருக்கிறது. அந்த வேலையோடு ஸம்பந்தமானது எப்படி வேலையின் வழியாய் மூன்றுவது மந்திரத்தில், ஒருசொல்லையும் வேண்டாதபோதிலும் இருக்கிறதோ, அப்படியே மற்ற மந்திரங்களிலும் இருப்பதற்குத் தகுந்தது. ஆகையால் அநுஷங்கம் செய்யவேண்டியது. (பா - 1 - அதி - 17)

82. அக்நீஷோமீய பசு யாகம் சொல்லுமிடத்தில் மந்திரங்கள் சொல்லப்படுகின்றன—: "ஸம் தே ப்ராணோ வாதேந கச்சதாம், ஸமங்காநி யஜத்ரை:, ஸம் யஜ்ஞபதிராசிஷா" என்று, இங்கே மூன்றுவது மந்திரத்தில் 'கச்சதாம்' என்கிற சொல்லை முதல் மந்திரத்திலிருந்து சேர்க்கவேண்டுமா? வேண்டாமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:— சேர்க்கலாம். மூன்றுவது மந்திரத்திலிருக்கும் ஸம் என்னும் உபஸர்க்கம் ஒருவேலையைச் சொல்லுகிற பதத்தைத் தேடுகிறது. முதல் மந்திரத்திலுள்ள 'கச்சதாம்' என்கிற சொல் ஏகவசநம் (ஒருமை) இங்கேயும் "யஜ்ஞபதி" என்னும் சொல் ஏகவசநம். இரண்டும் சேரலாம். இந்த 'கச்சதாம்' என்கிற சொல் மனதில் நிற்கிறது. ஆகையால் கிட்ட இருக்கிறது. அதைச் சேர்க்கவேண்டியது.

ஸித்தாந்தம்:—நடு மந்திரத்திலுள்ள 'அங்காநி' என்னும் சொல் பஹு வசநம் (பன்மை) அத்துடன் 'கச்சதாம்' என்பது சேரமுடியாது. நடுவில் அந்தச் சொல் இருப்பதால் மனதில் 'கச்சதாம்' என்கிற சொல் நிற்கவில்லை. ஆகையால் அநுஷங்கமில்லை. இரண்டாவது மூன்றுவது மந்திரங்களில் அவைகளுக்குத் தகுந்த சொல்லைச் சேர்த்துகொள்ளலாம். இல்லாத சொல்லைச் சேர்த்துக்கொள்ளுவதற்கு அத்யாஹாரம் என்று பெயர். (பாதம்-1-அதி-18)

இரண்டாவது அத்யாயம்—முற்றிற்று.

ஸ்ரீ:

# மோக்ஷ ஸ்வரூபம்.

[ஸ்ரீ உ. K. ராஜகோபாலாசாரியர், B. A B. L. வக்கீல், கூடலூர்]

இதற்கு முன் ஒரு ஸஞ்சிகையில் மோக்ஷ ஸ்வரூபத்தைப்பற்றி நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தப்படி குறிப்புகள் எழுதியிருந்ததில் வைகுண்டமென்று ஒரு தேச விசேஷமும் அதில் நித்ய ஸூரிகள் என்பவர்கள் ஆநந்தாநுபவம் பண்ணிக்கொண்டிருப்பதாகவும், எழுதியிருந்தோம். அக்கூட்டத்தில் ஏகதேசரான, முக்தர்கள் (பந்தம் விடுபட்ட ஜீவாத்மாக்கள்) கூடியிருந்து அநுபவிக்கிறார்கள்.

இதைத்தான் ஸாயுஜ்யம் என்று சொல்வார்கள்: அதாவது 'ஸயுக்' கினுடைய பாவம். நம தேசிகன் 'ஸவ்ருக்ஷாக்ஷத்தை அநுபவிக்கிறதாகிற போக்ய தசையிலே ப்ரஹ்மமும் முக்தனும் போக்தாக்களாய் அந்வயிக்கையாலே முக்தனை 'ஸயுக்' என்கிறது" என்று வ்யாக்யாநம் செய்திருக்கிறார்.

"ஸார்ஷ்ட்யம் ஸாயுஜ்யம் ஸலோகதாம் ஜயதி" என்று சாகடாயநரும் சொன்னது. இதை ஏகபாவத்தைக் குறிப்பதாகச் சொல்லுகிற அத்வைதிகள் பேத ச்ருதிகளை கவனித்தாரில்லை. "மம ஸாதர்ம்ய மாகதா:" என்னும் கீதா வசநத்தையும் மறந்துவிட்டவர்களே.

இவ்விடத்தில் ஈச்வரனுக்கும் முக்தனுக்கும் அநுபவ தசையில் உள்ள ஸாமரஸ்யம் ஸூத்ரகாரர் "போகமாத்ர ஸாம்யலிங்காச்ச" என்று அறுதியிட்டிருக்கிறார். ஆநந்தத்திலும் த்யாநத்திலும் ஈச்வரதுல்யன், என்பது ஸித்தாந்தம். ஆனால் முக்தனுக்கு ஈச்வரனைவிட விசேஷ ஆநந்தத்திற்கு ஒரு ஹேது உண்டு அது என்னவென்னில், முக்தனுக்கு, ஆநந்த மஹோததியாகிய ஷாட்குண்ய பரிபூர்ணனான பகவானைப் பரிபூர்ண ப்ரஹ்மமாக அநுபவிக்க ப்ராப்தமான ஒரு விசேஷமே. வேதத்தில் ஹிரண்ய ச்மச்ரு, ஹிரண்யகேச: என்று வர்ணித்திருக்கும் பகவானை அவனுடைய க்ருபையால் ஸாக்ஷாத்கரித்த ஆழ்வார்கள் உத்க்ருஷ்டமான ஸௌந்தர்ய லாவண்யமுள்ள மூர்த்தியாக யோக தசையில கண்டு நமக்குக் கண்டபடியே ஈடுபாட்டை அருளிச்செய்திருக்கிறார்கள். இப் பரதகண்டத்தில் மற்றுமுள்ள பகவத் பக்தர்களான சைதந்யன், க்ருஷ்ணம்ருதம் பாடிய லீலா சுகர் முதலானவர்களும் இச் சௌந்தர்யத்திலே ஈடுபட்டு பகவத் பக்திக்கு ஆளானார்கள் என்று நாமும் அவர் சரித்திரங்களைப் படிக்கிறோம்.

திருவாய்மொழியின் ஏற்றமும் பகவானுடைய ஸௌந்தர்ய லாவண்யாதிகளிலே, பரக்கப் பேசுவதாலேயே நீலமேக ச்யாமளனை பெருமாளை நம்போலியர்கள் மாநஸாநுபவம் பண்ண ஆழ்வார் பகவானை "கருநாயிரு"பென்று வர்ணித்திருக்கிறார். இந்த த்ருஷ்டாந்தத்தை ஒருவாறு பரக்கப் பேசுவது இங்கே ப்ராப்தம். அந்தகாரம் அதாவது இருட்டு, ஸூர்யனுடைய தேஜஸ்ஸுக்கு நேர் எதிர் தட்டு எவ்வளவு மறைத்தாலும் ஸூர்ய தேஜஸ்ஸு, ஒவ்வொரு ஸூக்ஷ்ம பாகங்களிலிருந்தும் கோடிக்கணக்கான ஜ்யோதிஸ் கிரணங்களால் அந்த அந்தகாரத்தைப் பேதித்து அந்த அந்தகாரத்தையே ஒவ்வொரு அம்சத்தாலும் தேஜோமயமாக்கி தீப்தமாய் ஜ்யோதிஸ் வர்ஷங்களாக்கி நீலமேகச் சாயையை நமக்குப் புலப்படுத்தும். அதுபோல் அதுதான் பகவானுடைய நீலமேக ஸ்வரூபமென்று அருளிச் செய்து நிரூபித்திருக்கிறார். கோடிக்கணக்கான ஸூர்யனும் அதுபோல் கணக்கான மன்மதனும் ரூபமெடுத்து அவைவியாய் ஒவ்வொரு ஏகதேச பாகங்களிலிருந்தும் ப்ரகாசித்தால் "அம்மா மூர்த்தி"யைச் சார்ந்த கண்கள் ஆர அவைகளை நிவ்ருக்தி[illegible] "[illegible]ச்யந்தி" என்கிற ந்யாயத்தால் முக்தர்கள் அநுபவி[illegible] வேண்டி வருமோ! இந்த ஸௌந்தர்ய[illegible] பிரான், முதல் பாசுரத்தில் 'அமர[illegible]' [illegible] 'தன்னைத் திவ்ய புருஷர்களுக்கு [illegible] ஔதார்யத்தை யுடையவனாயிருந்த எம்பெருமான்' என்று வ்யாக்யானம் செய்திருக்கிறார். இந்த ஆதிபத்ய சப்தத்தை ஏன இப்படி வ்யாக்யானம் செய்திருக்கிறார்? என்பதைப்பற்றி மற்றொரு இடத்தில் விசாரிப்போம்.

இந்த ஸௌந்தர்யம் பகவானுடைய சின்ஹம். இதைத்தான் 'Aesthetic beauty' என்று ஆங்கிலேய பாஷையில் சொல்லுகிறது. மலைபருவிகளையும் சுத்தமான வநங்களையும் விசேஷ கட்டட அமைப்புகளையும் நாம் கண்டு வியக்கிறோம், அல்லவா? நாம் வியப்புறும் இக்காட்சிகள் எல்லாம் பகவத் தர்சந ஸௌந்தர்யத்தின் லவலேசம் என்று உணரப்பெற்றால் அந்த பகவத் தர்சனத்தினுடைய காந்தி விசேஷத்தை ஒருவாறு கணிசிக்கலாம். கவிகளும், காமுகர்களும் மாம்ஸ க்ரந்திகளான ஸ்த்ரீ சரீரங்களையும் அவற்றின் ரூபலாவண்யங்களையும் அறிந்தறிந்து தேறுமல் வாசாமகோசரமென்று அறுதியிடுகிறார்களல்லவா? ஆகையால் நாம் முன் சொன்னபடி பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்திலிருந்து முக்தர்களின் சக்ஷுஸ்ஸுக்கள் எங்ஙனே நிவ்ருத்தி யடையும்? இதுவரையில் முக்தனுடைய ஆநந்தத்துக்கு ஒரு ஏற்றம் சொன்னோம். தாழ்வு ஏதேனும் உண்டோ? என்னும் ப்ரஸ்தாவம் ப்ரஸக்தமாகிறது. பகவானுக்கும் முக்தனுக்கும் உள்ள வ்யத்யாஸம், ஜகத் வ்யாபார வர்ஜம் என்பது மாத்ரமே. இதிலும்,



பலத்தில் தாரதம்ய மில்லை என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன், க்ருஷி பண்ண பிதாவும் நிர்வ்யாபாரனை புத்ரர்களு க்ருஷி பண்ணி புஜிக்குமாப் போலே ஜகத் வ்யாபாரத்தால் வரும் ரஸம், வ்யாபரிக்கிற ஈச்வரனுக்கும், பார்த்திருக்கும் முக்தனுக்கும் துல்யம் என்று அருளிச்செய்திருக்கிறார்.

மோக்ஷம் என்னும் பதத்திற்கு விடுதல், அதாவது பந்தம் நீங்குதல் என்பது அர்த்தம். இதைத்தான் ஆழ்வார் திருவிருத்தத்தில் முதல் பாசுரத்தில்,

"பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு
மழுக்குடம்பும் இந்நின்றநீர்மை—இனி யாம் உறாமை"

என்று அருளிச்செய்திருக்கிறார். அதாவது, தேஹாத்ம ப்ரமமும் அதனால் உண்டாகிய தோஷத்தோடு கூடிய நடவடிக்கையும், தந் மூலமான ப்ராக்ருதி ஸம்பந்த அநிஷ்டமும், இவைகளின் ஆத்யந்திக நிவ்ருத்தி அடையவேணுமென்ற ப்ரார்த்தனை. இவ்விஷயத்தில் நாம் ஜ்ஞாபித்துக் கொள்ளவேண்டிய சில அம்சங்களுண்டு. அதாவது ஜீவாத்மாவானவன் ஸ்வபாவத்தாலேயே அபஹதபாபத்வாதி ஷாட்குண்ய பரிபூர்ணன் என்பதும், அவனுக்கு பகவதபசாரம், விதி உல்லங்கநம் இவை முதலிய க்ரியைகளாலே கர்ம வச்யத்வத்தினால் ஜந்மாந்தரங்கள் பக்வாந் நியமநத்தாலே ஏற்படுகின்றனவென்றும், உபாயாநுஷ்டாநத்தினால் பகவத் க்ருபையை ஸம்பாதித்து, க்ருபாநிதியான அவனுடைய க்ருபை யடியாக நமது பாபங்களுடையவும், அவித்யா கர்ம வாஸனை, ருசி முதலியவைகளுடையவும் நிவ்ருத்தியை ஸாதித்துக்கொள்ளலாமென்றும், நம் ஸம்ப்ரதாயம் உபதேசிக்கின்றது. இதையே ஸூத்ரகாரர் "ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேந ஶப்தாத்" என்று கூறியிருக்கிறார். அதாவது பரமாத்மாவை அடைந்தால் ஜீவன் அதாவது ஜீவாத்மா தனக்கு அஸாதாரணமான அபஹத பாப்மத்வம் முதலிய ஸ்வபாவங்களோடு தன் ப்ரகாசத்தை தானே அடைகிறான்" என்று சொல்லியிருக்கிறது. அதாவது "பாபக்ஷயம் வந்து அவித்யா கர்மவாஸனையாகிற அநிஷ்ட நிவ்ருத்தி வந்தால், இஷ்டப்ராப்தியான ஆனந்தாநுபவமான மோக்ஷம் தானே வரும்" என்று சொன்னதாயிற்று. இந்தப் பொருளையேதான் ஆழ்வாரும், 8-வது தசகம் 6, 7, பாசுரங்களில் "அதுவே வீடு வீடு வீடாமே" என்று அநுக்ரஹித்திருக்கிறார். இப்பாசுரங்களின் நோக்கு, ப்ரத்யகாத்ம ஸாக்ஷாத்காரமாகிற கைவல்யத்தைச் சொன்னதாகிலும், அது விசேஷ்யபூத திவ்யாத்மஸ்வரூப (பரிசுத்தாத்ம ஸ்வரூப) ஸாக்ஷாத்காரத்தின் விசேஷணமாக ஸம்பவிக்கையாலே, இவ்வாத்மஸ்வரூப அவித்யாபாவத்தையே மோக்ஷமாக அத்யவஸித்தபடி.

இது எங்ஙனே பொருந்தும்? கைவல்யமும் புநராவ்ருத்தியில்லாத வைகுண்ட ப்ராப்தியும் பிந்நங்களல்லவா? இந்த சங்கைக்குப் பரிஹாரம். "கேவலார்த்தி" அதாவது 'ஜிஜ்ஞாஸு' என்று கீதாசாரியன் விபாகிக்க கேவலாத்ம ஸ்வரூப யோகநிஷ்டன் ஒருவன். அவனுக்குக் கைவல்யம் வந்த பிறகும் புநராவ்ருத்தி தொடர்ந்தே நிற்கும். மற்றொருவன் உபாயாநுஷ்டாநம் செய்தவன். அதாவது, பக்தி ப்ரபத்தி யோகநிஷ்டன். இவர்களுக்கும் ஆத்ம தர்சநம் அவச்யமென்று ஸூத்ரகாரர் நியமித்திருக்கிறார். இவனை ப்ரத்யேகமாக விவரித்தபடியால், கீதாசாரியன் திருவுள்ளமும் அதுவே என்று கொள்ளவேண்டும். ஆழ்வார், மேல் பாசுரங்களில், ப்ரத்யகாத்ம ஸ்வரூப ஆவிர்பாவமே மோக்ஷமென சொல்லக்கூடுமோவெனில், கேவலாத்ம யோகிக்கும், விஷயநிவ்ருத்தி ருசி, வாஸனையும் ஒருக்கால் வந்தாலும், அந்திமஸ்மரணம் வரமாட்டாதென்றும், தேஹம் படைத்தவர்களுக்கும் பகவானோடொத்த பகவத் ஸமாநாகார ஆத்மாநுஸந்தாநம் ஒருக்காலும் கூடாது (அதாவது கிடைக்காது) என்றும் திருவுள்ளத்தை அருளிச்செய்திருக்கிறார். தமக்குக் கிடைத்த ஆத்ம ஸாக்ஷாத்காரமோ, பகவத்க்ருபையாலே தமக்கு மாத்திரம் கிடைத்ததென்று அருளிச்செய்திருக்கிறார். பின்னே, பக்தி, ப்ரபத்தி, உபாயாநுஷ்டாநம் செய்தவர்களுக்கு அவனே பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் கொடுக்கும் முன்பு அதற்கு பூர்வாங்கமாக ஆத்ம ஸாக்ஷாத்காரம் செய்விக்கிறானென்று கொள்ளவேண்டும். பெரிய பலன் அதற்கு அந்தர்கதமான சின்ன பலன்களை அவயவங்களாகக் கொள்ளத் தட்டில்லை ஆத்ம ஸாக்ஷாத்காரம் வந்தால், தனக்கும் பரமாத்மாவுக்குமுள்ள ஆதேய ஆதாரத்வ, விதேய நியந்த்ருத்வ, சேஷசேஷித்வ ஸம்பந்த ஜ்ஞாந ஜந்யமான ரஸத்தை அந்த ஆவிர்பாவமே காட்டிக் கொடுக்கும். ப்ராக்ருதம் நம்முடைய இச்சாநுகுணமாக நம் அவயவங்கள் ப்ரவர்த்திக்கிறது போல் பகவதிச்சாநுகுணமாக ஜீவன் ப்ரவர்த்திக்கும் என்பதை நாம் வறுப்புறுத்தவேண்டியது அவச்யமில்லை. ஒருவன் தனக்குத்தானே செய்துகொள்ளும் நன்மையைப்போல், பகவதிச்சாநுகுணமாக தன் சேஷியினுடைய விநியோகார்ஹமாக ஜீவனுக்கு நடக்க என்ன தட்டுண்டு? இவ்விஷயத்தில் சில லௌகிக த்ருஷ்டாந்தங்களும் கூற ஸங்கதமாகிறது. மாதா தன் சிசுவுக்கு எந்த நிமித்தங்கொண்டு அந்நபாநாதிகளைக் கொடுக்கிறாள்? குழந்தையின் ப்ரீதிக்காகவா? தன் ப்ரீதிக்காகவா? அதுபோலே வத்ஸனுக்காக த்ரவ்யத்தை மாதாபிதாக்கள் செலவழிப்பதும் தவிர, அதன் ஸுகாஸுகங்களையும் தம்முடையதாக பாவிக்க என்ன காரணம்? "பகவான் ஜீவனுக்கு 'அஸாதாரண' துணை, சார்பு, அவிநாபூதன், ஜீவிதம்" என்று உணர்ந்த பிறகு, அவனுக் குகப்பைத் தேடாமல் நிற்கவொட்டுமோ?



இதற்கு முன்பு ஜகத் வ்யாபாரம் தவிர, மற்ற வ்யாபாரங்களில் முக்தனுடைய ஜ்ஞாநமும், ஆநந்தமும் ஈச்வர துல்யமென்று சொன்னோம். இந்த ஆநந்தத்தை வேதமே சொல்ல முடியாமல் ஒரு ராஜாதிராஜனுடைய ஆனந்தத்தை நூறாய்ப் பெருக்கினால், தேவதைகளுடைய ஆனந்தமென்றும், தேவதைகளின் ஆனந்தத்தை நூறாய்ப் பெருக்கினால் மற்றொருவனுடைய ஆனந்தமென்றும், அதை நூறாய்ப் பெருக்கினால் சதுர்முகனுடைய ஆனந்தமென்றும் கணக்கிட்டு, அதில் அதிகம் சதம் சதமாய் பெருக்கினால் பகவதாநந்தமென்றும் தைத்திரீய உபநிஷத் உத்கோஷிக்கிறது. இதையேதான் திருவாய்மொழியில் "அந்தமில்லாப் பேரின்ப" மென்று அருளிச்செய்திருக்கிறார். முக்த நித்யனுடைய ஆனந்தம் ஸ்ருஷ்டி ஜகத் வ்யாபாராதிகளில ரஸமற்றதோவென்றால் பகவதானந்த துல்யமான ரஸமுண்டு. அது எப்படியென்னில் அதை ஒரு த்ருஷ்டாந்தத்தால் நிரூபிப்போம்:— ஒரு ப்ரபு ஓர் புதிய ரதத்தை வாங்கினால் அதில் ஏறி சவாரி செய்யவும் மற்றும் அதைத் தன்னுடையதாகவே கொண்டாடவும், அவனுடைய புத்ர பௌத்ரர்களும் பரிஜநங்களும் அதன் உபயோகத்தை அநுபவிக்க நாம் காணவில்லையா? ரதத்தை ஓட்டுகிறவனும், ப்ரஸக்தி வருங்காலத்தில "என் வண்டி நூறு மைல ஓடும், என் வண்டி அழகானது" என்று ப்ரஸ்தாவிக்கக் கேட்டில்லைய? அதுபோலவே வைகுண்டத்திலுள்ள உத்யாநவனங்களிலும், ஆராமங்களிலும், திவ்ய மணி மண்டபங்களிலும் ஆனந்தாநுபவம் பண்ணுகிற நித்யமுக்தர்கள் ஆனந்தாநுபவம் பண்ணுவது அவர்கள் உண்டாக்கியா? ஏற்கனவே ஏற்பட்ட வைபவத்தில் அந்வயிப்பதாலல்லவா? இதற்கு அடி, அஸூயை முதலான துர்க்குண வாஸனை யில்லாமையே. இதற்குக் காரணம், ஹேய ப்ரத்யநீக குண முக்தத்வம் இவனுக்கு பகவத்க்ருபையால் மோக்ஷ தசையில் வருவதே.

நித்யர்களுக்கும் முக்தர்களுக்கும் ஆனந்தாநுபவம் எப்படி? என்கிற விவரம் நாம் விமர்சிக்க இடமுண்டோ! அது எல்லை இல்லாததாயும் சற்றேனும் துக்க லேசமில்லாததாயும், ஆழ்வார் அருளிச்செய்தபடி ஒழியா இன்பமாயும் இருக்கின்றதென்று மாத்திரம் அறிகிறோம். இதை இன்னம் கொஞ்சம் விவரிப்போம். வேதத்தில் ஜலபந், க்ரீடந், என்று ப்ரஸ்தாவித்திருப்பதாலும் ஆழ்வார் அருளிய வைகுண்ட ப்ரதேசத்தில் அங்குள்ள நித்யர்கள் 'பாதங்கள் கழுவினர்' என்றும், நலவரவு தாம் தாம் திக்குக்களில உபசரித்தனர்' என்றும், காணப்படுகிறது. ஆகவே, இவர்கள் ஒரு விக்ரஹ வேஷத்தை பரிக்ரஹித்திருக்கிறார்களென்றும், அதனால் நமக்குள்ள இந்த்ரியங்களாலும் அவர்களும் ஒருவாறு நம்மைப்போல் ரஸாநுபவம் செய்கிறார்களென்றும், ஊஹிக்க இடமுண்டு. ஆயினும் நம் ஐம்புலன்கள் நுகரும் தூர்தசைகளுக்கு, அவர்களின் அநுபவம் விலக்காயிருக்கிறதாக

வும் கேவலம் ஸுகரூபமான ரஸமாயும் இருத்தல் வேண்டும். இதன் நிர்வாஹம் எப்படி? என்று பராமர்சிக்கும் காலத்தில் அநேக ஸூக்ஷ்மங்களையும் நாம் நமக்கு ஜ்ஞாபித்துக்கொள்ளவேண்டும். அந்த விபூதியின் பெயரே வைகுண்டம். அதாவது துக்க சூன்யமல்லவா? சில உணர்வு உணர்ச்சிகளில் நம்போலியர்களானாலும், அவர்களுடைய தேஹ தத்வம் நம்போல் ப்ரக்ருதியால் சமைந்ததன்று. லோகமே அப்ராக்ருதம். சரீரமும் அப்ராக்ருதம். ஐம்பொறிகளல்ல. பத்து ஐம்பொறிகளால் அமைந்திருக்கக்கூடும். நாம் நினைக்கக்கூடாத அர்த்தங்களையும், காமங்களையும் அவ்வேறுபட்ட பொறிகள் அநுக்ரஹிக்கலாம். நம்போலும் சில அம்சங்கள் அவருக்குண்டென்பது மாத்திரம் மேற்கூறிய அத்தாக்ஷிகளால் நாம் அறிந்திருக்கிறோம். உதாஹரணமாக, அங்குள்ள விக்ரஹங்கள் சதுர்பாஹுக்கள் உடையனவைகளாய் பகவத் சாஸ்த்ரத்திலும், மற்ற இடங்களிலும் நாம் காண்கிறோம். ஆகையாலும் அங்குள்ள வ்ருத்தாந்தங்கள் என்றும் அறிய அசக்யமாய் இருந்தபோதிலும், நம்மாழ்வாருடைய யோக ஸாக்ஷாத்காரத்தால் சிற்சில அம்சங்களில் ஊஹிக்க நிலமுண்டு. அங்கிருக்கிறவர்களில் ஏகதேசிகள் பகவத் குணாநுபவ ஜநித நிரதிய ப்ரீதியாலே அப்ராக்ருதகதராய் ஸ்வ அவசரீய ஒரு ப்ரவ்ருத்தி செய்கைக்கும் ஈடன்றி மௌன சீலராய் பகவத் ஸௌந்தர்ய குணாநுபவம் ஆழ்ந்த கடலில் அவகாஹித்து அவ்வம்ருதம் மாறாமல் ஆழி விடாய்க்காமல் அதிலேயே மக்நராய் இருப்பர் சிலருண்டென்று தெரிகிறது. வேறு சிலர் துணிவு உள்ளவர்களாய், நிரதிசய பஹுப்ரகார ப்ரீதி காரித ஸர்வபரிசர்ய கைங்கர்யங்களில் ப்ரவ்ருத்தித்து இருப்பார் என்றும் ஆழ்வார் திவ்ய ஸூக்தியில் 10-ம் பத்து 9-வது பாசுரத்தில் 'அமரர்' 'முநிவர்' என்ற விபாகத்தால் தெரிகிறது.

## மாத்ரு பித்ரு பக்தி.

(மஹா மஹோபாத்யாய:—ஸாரஸ்வத ஸார்வஜ்ஞ :
தட்டை, ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியர்)

மஹநீயர்கள் விஷயத்தில் உண்டாகும் ப்ரீதியானது பக்தி யென்று வழங்கப்படுகிறது. வித்யை, ஜ்ஞாநம், சீலம், ஆசாரம், அநுஷ்டாநம் முதலியவைகளால் மஹநீயர்கள் பலர். இவர்களுடைய மஹநீயத்வம் ஸோபாதிகம். நிருபாதிகமான மஹநீயத்வத்திற்கு ஆஸ்பதமாக இருப்பவர்கள் மூவர்களே! அவர்களாவன:— மாதா, பிதா, ஆசார்யர்கள். இந்த கர்மபூமியில் பிறப்பு வாய்ந்திருக்கிற எல்லா மனிதர்களாலும் ஸம்ஸாரத்திற்குக் காரணமாக இருக்கிற வினைகளை அறுத்து அழிவற்ற ஸுகத்தைப் பெறுவதற்கு பக்தியொன்றே இன்றியமையாத ஸாதநம். பக்தர்களின் யோக்



யதைக்குத் தக்க வண்ணம். பக்தியானது விஷய பேதத்தால் பற்பல பயன்களை அளிக்கிறது. மாதா, பிதா, ஆசார்யன் திறத்தில் செய்யப்படும் பக்தியோவென்றால், இம்மையில் நிகரில்லாத ஸுகத்தையும், புகழ்ச்சியையும் அளிப்பதுடன், மறுமையிலும் நிச்ரேயஸ்ஸென்று வழங்கப்படுகிற மோக்ஷ ஸுகத்தைத் தவறாமல் கொடுக்கிறது. மாத்ரு, பித்ரு சப்தங்கள், சாகடாயந வியாகரணத்திலுள்ள "நப்த்ரு, நேஷ்ட்ரு, த்வஷ்ட்ரு, ஹோத்ரு, போத்ரு, ப்ராத்ரு, ஜாமாத்ரு மாத்ரு பித்ரு, துஹித்ரு," என்கிற ஸூத்ரத்தினால் பூஜார்த்தகமான 'மாந' தாதுவின்மீதும், ரக்ஷணார்த்தகமான 'பா' தாதுவின்மீதும் 'த்ருச்' ப்ரத்யயாந்தங்களாக நிஷ்பந்நங்களாகின்றன. 'மாநயதி' (பூஜிக்கிறான்.) என்பதனால் மாதா. 'பாதி' (ரக்ஷிக்கிறான்) என்பதனால் பிதா. "வம்சோத்தாரகனை நல்ல புதல்வனை அடைவதற்காக பரமபுருஷனையும் தேவதைகளையும், ப்ருஹ்மவித்துக்களான ப்ராஹ்மணர்களையும் பூஜிக்கிறாள். பர்த்தாவையும் பரதேவதைபோல் பாவித்து ஆராதிக்கிறாள்" என்பதனால் 'மாதா' என்று வ்யவஹரிக்கப்படுகிறார்கள். 'பாதி' (ரக்ஷிக்கிறான்). புத்திரனுக்குத் தக்க காலங்களில் செய்யவேண்டிய வைதிக ஸம்ஸ்காரங்களைச் செய்தும், வித்யாப்யாஸ காலம் நேர்ந்தவுடன் புத்ரனுக்கு வித்யாரம்பம் செய்வித்தும், தக்க ஆசாரியர்களிடத்திலிருந்து வித்யையைக் கற்கும்படி செய்வித்தும், ஹிதாஹிதங்களையும், நன்மை தீமைகளையும் துலக்கி அறிந்துகொள்ளும்படியான அறிவை ஊட்டியும், நல்வழியில் நடத்தியும், தீ வழியில் நடாமலிருக்கும்படி செய்வித்தும், புத்ரனைப் பாதுகாப்பதினால் 'பிதா' என்று சொல்லப்படுகிறான். பிதா மாதா இருவர்களுக்கும் புத்ர ரக்ஷணத்தில் ஸமமாக ஊக்கமுள்ளவர்களாக இருந்தபோதிலும், பிதாவை விட மாதாவே அதிகப் பொறுப்புள்ளவள். இதை கணிசித்தே ச்ருதியானது "மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ" என்று பிதாவுக்கு முன் மாதாவைக் கூறுகிறது.

"மாதா புத்ரஸ்ய ஹ்ருதயாம்ஸி கஷ்டான்யபஹந்தி யத: ॥ தஸ்யா ஸுஶுஶ்ரூஷா நித்யாவஹிதா யாவதீ, தாவதாயு: ஶுஶ்ரூஷா ஸுஶ்ரூ ஷணாத் மாதா"

இந்த வசநங்கள் மாதாவின் கௌரவத்தைத் துலக்கிக் காட்டுகின்றன. இவ்வண்ணமே

"மாதா ஸஹஸ்ரம் பித்ரூந் ப்ரகுர்யாத் யஸ்யா ஜாதஸ்ய ஸவவஸ:"

என்று பிதாவுக்கும் ப்ரஸித்தமாக கௌரவம் கூறப்பட்டிருக்கிறது. மேலும், பிதா புத்ரோத்பாதகனே ஆகிய புத்ரனுடைய போஷணம் முதலிய கார்

டங்களில் விசேஷ கவனமுள்ளவனாக இருப்பதில்லை. மாதாவோ புத்ரனை பத்துமாத காலம் கற்பத்தில் தாங்கி ஸஹிக்கமுடியாத ப்ரஸவவேதனையைப் பொறுத்து ஈன்று நாளொருவண்ணம் பொழுதொரு மேனியாகக் குழந்தையை வளர்ப்பதில் மிக்க கவலையுள்ளவளாக இருந்து குழந்தையை பசிப்பிணிகளைத் தானாகவே அறிந்து முறையே அவர்களுக்குத் தக்க வண்ணம் ஆகாரத்தை ஊட்டியும், மருந்தை பலாத்காரத்தால் உட்கொள்ளும்படி செய்வித்தும், பசியைப் போக்கியும், ஆரோக்யத்தைத் தேடியும், குழந்தையின் ஸுகமே தன் ஸுகமென்றும், அதன் துக்கமே தன் துக்கமென்றும், பாராட்டி குழந்தைகளின் அசுத்தியைக் கவனியாமல் பால்யதசையில் நன்கு போஷித்து, யௌவநப் பருவத்திலும், அவனுடைய பருஷ பாஷணங்களைப் பொறுத்தும், அவனை விட்டகல இசையாமல் அந்தப் புதல்வனுடைய ப்ரீதியையே வேண்டியிருப்பார்கள். இக்காரணத்தால் பிதாவை விட மாதா, புத்ரனால் கௌரவிக்கத் தக்கவள்.

“பிதுஶ்ஶதகுணம் மாதா கௌரவேணாதிரிச்யதே”

என்று அபியுக்தர்கள் கூறியிருக்கிறார்கள். “பிதாவை விட மாதா கௌரவத்தினால் நூறு மடங்கு மேற்பட்டிருக்கிறாள்” என்று இந்த வசனத்தின் பொருள். மேலும், புத்ரன் தவறி நடந்தால் பிதா அவனைக் கோபித்து சிக்ஷிப்பான். தாயோ பொறுமையுள்ளவளாக இருந்துகொண்டு புத்ரன் ஆயிரம் குற்றங்கள் செய்திருந்தபோதிலும், வாத்ஸல்யத்தினால் அவைகளைப் பொறுத்து இன்சொற்களால் புத்ரன் மனது நோகாமல் ஹிதோபதேசம் செய்வாள். கெஞ்சிக் கேட்டுக்கொள்வாள். தன்னை புதல்வன் அலக்ஷ்யம் செய்தாலும் கவனிக்கமாட்டாள். புதல்வனுடைய ஸுகமே தன் ஸுகமென்று பாராட்டுவாள்.

“மாதா ஹி ஹிதாநி புத்ரஸ்ய ப்ரியாண்யேவ பஶ்யதி, பிதா து
ஹிதம் பஶ்யதி, உபயம் பூர்வத்ர புத்ரஸ்ய ஜ்ஞாயதாம்”

என்று அபியுக்தர்கள் கூறியிருக்கிறார்கள். ஈஷணாத்ரயத்தையும் வர்ஜித்து இல்லறத்தை விட்டு துறவறம் பூண்டு ப்ரஹ்ம நிஷ்டர்களாக இருக்கிற ஸந்யாஸிகள் கூட தானருகிலிருக்கும் தருணத்தில் மாதாவின் நிர்யாணம் நேர்ந்தால் தண்ட கமண்டுகளை தூர வைத்துவிட்டு மாதாவின் உத்தர க்ரியைகளைச் செய்து அக்நி ப்ரதாநம் செய்தே தீரவேண்டும் என்று சாஸ்த்ரங்கள் கோஷிக்கின்றன. மாத்ரு பக்தியாலும் பித்ரு பக்தியாலும் அடையப்படாதது ஒன்றுமில்லை. பகவத் ப்ரஸாதத்தை விட மாத்ரு ப்ரஸாதம் ச்லாகிக்கத் தக்கது. நிகரில்லாதது. ஐஹிகம், ஆமுஷ்மிகம் இவ்விரண்டும் ஸித்திக்கிறது. இவர்கள் ப்ரத்யக்ஷ தெய்வங்கள். இவர்க



ளிடம் பக்தியில்லாதவனுக்கு தீர்த்தாடநங்கள், தேவாலயங்களில் பகவத் வந்தநங்கள், தேவதாராதநங்கள், ஆசாரங்கள், அநுஷ்டாநங்கள் இவைகளனைத்தும் பயன்படா. உண்மையான மாத்ரு பித்ரு பக்தியுள்ளவனுக்கு கீழ்க் கூறப்பட்ட தீர்த்தாடநம் முதலியவைகளில் ஒன்றும் வேண்டாம்.

இந்த விஷயத்தில் தர்மவ்யாதருடைய அநுஷ்டாநம் ப்ரதானமான ப்ரமாணம். ஸ்ரீ மஹாபாரதத்தில் வந பர்வத்தில் இருநூற்று பதினேழாவது அத்யாயத்தில் இதைக் காணலாம்.

கௌசிகனென்கிற ஒரு ப்ராஹ்மணன் பதிவ்ரதையான ஒரு ப்ராஹ்மணஸ்த்ரீயினால் ஏவப்பட்டவனாகி தர்மவ்யாதரிடம் ஸர்வகர்மங்களையும் கேட்டறியவேணுமென்கிற எண்ணங் கொண்டவனாக அவரை வந்து நாடினான். தர்மவ்யாதர் மிதிலாநகரியி லிருப்பவர். ஜாதியில் வேடன். மானிறைச்சிகளையும், எருமை இறைச்சிகளையும் விற்று ஜீவிப்பது அவர் தொழில். அவர், “தன்னிடம் தர்மங்களைக் கேட்பதற்காக பதிவ்ரதையினால் தூண்டப்பட்டு ப்ராஹ்மணன் வந்திருக்கிறார்.” என்பதை ஜ்ஞாநத்ருஷ்டியினாலறிந்து தூரத்தில் ஒதுங்கி ஏகாந்தத்தில் இருக்கிற ப்ராஹ்மணனை அணுகி “ப்ராஹ்மணோத்தமரே, உமக்கு நல்வரவா? நான் வேடன். உமக்கு மங்களம். எனக்குக் கட்டளை இடும். நீர் இந்த இடத்திற்கு வந்த கார்யம் என்னால், உம்மால் சொல்லப்படாமலேயே அறியப்பட்டிருக்கிறது. “அந்தப் பதிவ்ரதை என்னிடம் உம்மை அனுப்பினாளா” என்று தர்மவ்யாதர் சொல்ல, ப்ராஹ்மணன் ஆச்சர்யத்தை யடைந்து மனதினால் புகழ்ந்து வணக்கத்துடன், அந்த தர்மவ்யாதரைப் பார்த்து எனக்கு ஸூக்ஷ்ம தர்மங்களை உபதேசிக்கவேணுமென்று ப்ரார்த்தித்தான். அவர் கௌசிக ப்ராஹ்மணனை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று அர்க்யபாத்ய ஆசமநீயங்களால் நன்கு பூஜித்தார். ப்ராஹ்மணன் பாக தீர்த்தத்தையும் ஆசமநீயத்தையும் பெற்றுக்கொண்டான். பிறகு ப்ராஹ்மணன் தர்மவ்யாதரைப் பார்த்து “உம்முடைய ஜ்ஞாநமெங்கே? இந்த கோரமான மாம்ஸ விக்ரயமான தொழில் எங்கே? எனக்கு மிக்க விருத்தமாகத் தோன்றுகிறது. உம் மனதுக்கே இந்தத் தொழில் செய்வது யுக்தமென்று தோன்றியிருக்கின்றதா?” என்று கேட்க, தர்மவ்யாதர்— “தகப்பன் பாட்டன் பாரம்பரையாகச் செய்யப்பட்டு வருவதும் சிறப்புற்றதுமான இந்தத் தொழில் என்குலத்திற்குத் தக்கது. ஸ்வதர்மத்தை நிலைபெற்றிருக்கிற என்னைப்பற்றி நீர் வ்யஸநப்படவேண்டாம். நான் உலகத்தைப் படைத்த கடவுளால் ஏற்படுத்தப்பட்ட புராதநமான ஸ்வதர்மத்தை நன்கு அநுஷ்டித்துக்கொண்டு வயது முதிர்ந்தவர்களான தாய் தந்தையர்களை ஆராதிக்கிறேன். உண்மை பேசுகிறேன். அஸூயைப் படுகிறதில்லை. சக்திக்குத் தக்கபடி கொடுக்கிறேன். நான் ஒன்றையும் இகழ்கிறதில்லை. முற்காலத்தில் செய்த வினை

யானது செய்தவனைப் பின்தொடர்கிறது" என்று சொன்னார். பிறகு கௌசிகன் தர்மவ்யாதரை ஆசார்யராக வரித்து அவரிடத்தினின்று எல்லா தர்மங்களையும், மோக்ஷ தர்மத்துடன் ஸம்சயமற நன்கு கேட்டறிந்தான். ஆச்சர்யக் கடலில் மூழ்கினவனான கௌசிகன் தர்மவ்யாதரை நோக்கி "இவ்விதமான ஜ்ஞானம், தூய்மை, பொறுமை, விநயம், ஆஸ்திக்ய புத்தி எல்லாம் யாது காரணத்தால் உமக்கு உண்டாயிற்று" என்று வினவ, தர்மவ்யாதர் "ப்ராஹ்மணோத்தமரே, ஜ்ஞானம், கடினம், விநயம் முதலிய குணங்கள் எதனால் எனக்கு ஸித்திக்கிறதோ! அந்த வஸ்துவை நீர் என் க்ருஹத்தினுள்ளே புகுந்து நேரில் காண்பீராக' என்று சொல்லி உள்ளே அழைத்துச் சென்றார்.

"தத்ர ஸிதாம்பரயுதௌ பிதராவஸ்ய பூஜிதௌ, க்ருதாஹாரௌ து ஸம்துஷ்டாவுபவிஷ்டௌ வராஸநே || தஸ்ய வ்யாதஸ்ய பிதரௌ ஸ்ரக்தாமஸம்யுக்தௌ, யதாவ்யாதஸ்தௌ த்ருஷ்ட்வா பாதேஷு ஶிரஸாऽபதத் ||"

அவ்விடம் போனவுடன் வெள்ளை வஸ்த்ரம் உடுத்தியவர்களும், நன்றாக பூஜிக்கப்பட்டவர்களும், போஜநம் செய்தவர்களும், ஸந்தோஷத்துடன் கூடியவர்களும், சிறந்த ஆஸநத்தில் வீற்றிருப்பவர்களுமான தர்மவ்யாதருடைய தாய் தந்தையர்களைக் கௌசிகன் கண்டான். அவர்களைக் கண்டவுடன் அவர்களுடைய சரணங்களில் தர்மவ்யாதர் முடியினால் வணங்கினார்.

"உத்திஷ்டோத்திஷ்ட தர்மஜ்ஞ தர்மஸ்த்வாமபிரக்ஷது, ப்ரீதௌ ஸ்வஸ்தவ ஶௌசேந தீர்கமாயுரவாப்நுயா: || ஸத்புத்ரேண த்வயா புத்ர நித்யம் காலே ஸுபூஜிதௌ || ஸ்வர்கே சைவ வஸாமோऽத்ர தேவலோகம் கதாவிவ || ந தே தைவதம் கிஞ்சித் தைவதேஷ்வபி வர்த்ததே || பிது: பிதாமஹா யே ச ததைவ ப்ரபிதாமஹா: || பிதாமஹ ஸததம் ப்ரத்ய நந்தநாம் ச பூஜயா || மநஸா கர்மணா வாசா ஶுஶ்ரூஷா நைவ ஹீயதே || ஜாதரூபேண ராமேண யதா வ்ருத்தௌ ஸம்பூஜிதௌ || ததா த்வயா க்ருதம் ஸர்வம் தத்விஶிஷ்டம் ச புத்ரக ||"

"தர்மங்களை அறிந்தவனே! எழுந்திரு! எழுந்திரு!! தர்மம் உன்னை நேரிலிருந்து பாதுகாக்கட்டும். உன்னுடைய சுத்தியினால் நாங்களிருவரும் ப்ரீதியடைந்தோம். நீண்ட ஆயுளைப் பெறுவாயாக! ஸத்புத்ரனான உன்னால் தினந்தோறும் காலத்தில் நன்றாக பூஜிக்கப்பட்டு வருகிறோம். தேவலோகத்தில் வஸிப்பதுபோல் இங்கு ஸுகமாக வாஸம் செய்கிறோம். உனக்கு தேவதைகளுக்குள் எங்களிருவர்களைத் தவிர்த்து வேறு தேவதையில்லை. உன் சுச்ரூஷையினால் ப்ரீதியை யடைந்தோம். பரசுராமன் வயது முதிர்ந்த தாய் தந்தைகளை எவ்வாறு பூஜித்தாரோ! அவ்வாறு உன்னால் பூஜிக்கப்படுகிறோம். அதைவிட மேலாகவும் பூஜிக்கப்படுகிறோம்" என்று மாதா பிதாக்கள் தர்மவ்யாதரை ஆசீர்வதித்துப் புகழ்ந்தார்கள். இந்த விஷயங்களைக் கண்ணுற்ற கௌசிகன் வியப்புள்ளவனாகி மாத்ரு பித்ரு பக்தியின் பெருமையை அறிந்து மனம் மகிழ்ந்து தர்மவ்யாதரைப் பார்த்து, "மஹானுபாவரே, உம்முடைய பக்தியே பக்தி. எல்லா ச்ரேயஸ்ஸுக்களையும் இவர்கள் அனுக்ரஹத்தாலன்றோ அடைந்து விளங்குகிறீர்! நீர் மாதா பிதா இருவர்களையும் எவ்விதமான எண்ணத்துடன் எவ்வாறு பூஜிக்கிறீர்? என்று வினவ, தர்மவ்யாதர் மாதா பிதா இருவர்கள் விஷயத்தில் தன்னுடைய அபிஸந்தியையும், தான செய்யும் சுச்ரூஷையும் சுருக்கமாகச் சொல்லலானார்.



"பிதா மாதா ச பரமம் நௌ மம தைவதம் பரம் || யதேவ தேப்ய: கர்தவ்யம் ததேதாப்யாம் கரோம்யஹம் || த்ரயஸ்த்ரிம்ஶத்யதா தேவா ஸர்வே ஶக்ரபுரோகமா: || ஸம்பூஜ்யா: ஸர்வலோகஸ்ய ததா வ்ருத்தாவிமௌ || உபஹாராநாஹரந்தோ தேவதாநாம் யதா த்விஜா: || குர்வந்தி ததைதயோ: கரோம்யஹமதந்த்ரித: || ஏதௌ மே பரமம் ப்ரஹ்மந் பிதா மாதா ச தைவதம் || ஏதௌ புஷ்பை: பலை ரத்நைஸ் தோஷயாமி ஸதா த்விஜ | யஜ்ஞா வேதாஶ்ச ஸர்வே மே ஏதௌ த்விஜ || ஏததர்த்தம் மம ப்ராணா பார்யா புத்ரா: ஸுஹ்ருஜ்ஜநா: || ஸபுத்ரதார: ஶுஶ்ரூஷாம் நித்யமேவ கரோம்யஹம் || ஸ்வயம் ச ஸ்நாபயாம்யேதௌ ததா பாதௌ ப்ரக்ஷாலயே || ஆஹாரம் ப்ரயச்சாமி ஸ்வயம் ச த்விஜஸத்தம ||"

"பகவானே! இந்த தாய் தந்தையர்களே எனக்குப் பரதேவதை. தேவதைகளுக்குச் செய்யவேண்டியதை நான் இவர்களுக்குச் செய்கிறேன். இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்கள் எல்லா உலகத்தாரங்களால் எவ்வாறு பூஜிக்கப்படுகிறார்களோ! அவ்வாறாகவே வயது தாய் தந்தையர்கள் என்னால் பூஜிக்கப்படுகிறார்கள். ப்ராஹ்மணர்கள் உபஹாரத்தைக் கொண்டு தேவர்களை அணுகி ஆராதிக்கிற மாதிரி நான் சோம்பலில்லாதவனாய் மாதா பிதாக்களை ஆராதிக்கிறேன். பிதா, மாதா, அக்னி, ஆத்மா குரு இந்த ஐவர்களும் ச்ரேயஸ்ஸை அடைவதில் கோருகின்ற புருஷனுக்கு குருக்கள்" என்று தாய் தந்தையர்களின் மஹிமையையும் அவர்களிடம் தான் வழிபடுகிற விதத்தையும் கூறினார்.

ஸ்ரீ:

# க்ரந்த விமர்சம்.

(1) **ப்ரமாணத்திரட்டு:**—இது திவான் பஹதூர் ஸ்ரீ உப வே. வி. கே. ராமாநுஜாசாரிய ஸ்வாமியால் எழுதப்பட்டு வரும் புஸ்தகங்களுள் ஒன்று. ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள 'ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்' என்னும் க்ரந்தத்தில் அநேக மஹர்ஷிவாக்யங்களும் ஆழ்வார் ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளும் ப்ரமாணங்களாகக் காட்டப்பட்டிருக்கின்றன. அந்த ப்ரமாண வாக்யங்களையெல்லாம் ஒன்று சேர்த்து அவைகளுக்கு ஓர் உரையை எழுதி அதனுடன் அவைகளின் ஆகரங்களையும் இந்த க்ரந்தத்தில் எடுத்துக் காண்பித்திருக்கிறார். தவிர, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள அரும்பதங்களும் எளிதான தமிழ்நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. நாம் பராமர்சித்துப் பார்த்த வரை, இந்த க்ரந்தத்தில் எழுதப்பட்டுள்ள தமிழ் உரை முழுவதும், பூர்வாசார்யர்களால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள வ்யாக்யானத்தை அநுஸரித்தே எழுதப்பட்டிருக்கின்றது என்பது தெரியவருகின்றது. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் ஸேவிக்கும் ஆஸ்திகர்களெல்லாருக்கும் இந்த க்ரந்தம் மிகவும் ப்ரயோஜநமுள்ளதாக இருக்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை. இந்த க்ரந்தத்தில் மற்றுமொரு விசேஷித்த ஆகாரம் உண்டு. உரை எழுதப்பட்டுள்ள ப்ரமாண வாக்யங்களெல்லாவற்றுடைய ப்ரதீகங்களையும் எடுத்து அவைகளுக்கு, ஸம்ஸ்க்ருத வாக்யங்களுக்கும் தமிழ் வாக்யங்களுக்கும் வெவ்வேறாக, ஒரு அநுபந்தம் அகாராதியாக எழுதப்பட்டிருக்கின்றது. இக்காலத்திய வித்யார்த்திகளுக்கு இது பெரியதொரு உபகாரமே. இதன் விலை ரூ. 1—0—0

(2) **திருவாய் மொழி:**—இந்த க்ரந்தம் ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச் செய்திருக்கும் 'திருவாய் மொழி' என்னும் ப்ரபந்தத்திற்கு எழுதப்பட்டுள்ள ஒரு தமிழ் உரை. இதுவும் ஸ்ரீ உப வே. ராமாநுஜாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்டதே. திருவாய் மொழிக்குப் பூர்வாசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கும் அநேக வ்யாக்யானங்கள் உண்டு. ஆனால், அவையெல்லாவற்றிலும் ஸம்ஸ்க்ருத பதங்களும் ஸம்ஸ்க்ருத வாக்யங்களும் ஏராளமாய் இருக்கிறபடியால், ஸம்ஸ்க்ருதத்தில் மிதமான ஜ்ஞானமுடையவர்களுக்கு அவை அவ்வளவாக உபகாரங்களாக இருக்கமாட்டா. இதைக் கணிசித்து ஸ்ரீ ராமாநுஜாசார்ய ஸ்வாமி இந்த உரையை எழுத ஆரம்பித்திருக்கிறார். இப்பொழுது முதற் பத்து அச்சுப்பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது; சிஷ்டமான பத்துக்களும் ஒன்றின் பின் ஒன்றாக வெளிவரும்.

ஸம்ஸ்க்ருத பதங்களும் வாக்யங்களும் விலக்கப்பட்டிருப்பதுடன் கூட இந்த உரையில் மற்றுமொரு விசேஷித்த அம்சமும் காணப்படுகின்றது. ஒவ்வொரு திருவாய்மொழியின் ஆரம்பத்திலும் அந்தந்தத் திருவாய் மொழியின் அர்த்தமும், பூர்வாபர ஸங்கதியும், ஒவ்வொரு பாட்டுக்கு முன் அதற்கு அவதாரிகையும், பதவுரையின் முடிவில் அந்தந்தப் பாட்டின் கருத்தும் விசேஷார்த்தங்களும் இவையெல்லாம் ஸங்க்ரஹித்து எழுதப்பட்டிருக்கின்றன. ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள "த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளி" என்னும் க்ரந்தத்தின் ச்லோகங்களும் அந்தந்தத் திருவாய்



மொழியின் முடிவில் ஸங்க்ரஹிக்கப்பட்டு, அதற்குத் தமிழில் அர்த்தமும் எழுதப்பட்டிருக்கின்றது. ஸ்ரீமதுரகவிகள் அருளிச் செய்திருக்கும் "கண்ணிநுண் சிறுத்தாம்பு"ம் ஒரு சிறிய உரையுடன், ஒரு அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. மிகவும் உபகாரகமான வேறுசில அநுபந்தங்களும் மேல்வரப் போகும் ஸஞ்சிகைகளில் ப்ரசுரிக்கப்படுமாம் இதன் விலை ரூ. 1—0—0. இந்த புஸ்தகம் கிடைக்குமிடம்:—"ஸ்ரீ உ. என். ராஜகோபாலாசார்யர் பி. ஏ., பி. எல், அட்வோகேட், கங்காதரபுரம், ஸ்வாமிமலை போஸ்ட், கும்பகோணம்."

(3) **ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சதகம்:**—இது, மஹா மஹோபாத்யாய ஸாரஸ்வத ஸாரஜ்ஞ தட்டை ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விஷயமாய் ஸம்ஸ்க்ருத பாஷையில் பத்ய ரூபமாகச் செய்யப்பட்ட ஸ்தோத்ரம். க்ரந்தத்தின் பெயர் விளக்கும் ப்ரகாரம், இது நூறு ச்லோகங்கள் கொண்டுள்ளது. இது, எழுதப்பட்டவுடன், ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில், ஸ்ரீ அழகிய சிங்கர்களின் முன்னிலையில் படிக்கப்பட்டு, ஸ்ரீ அழகிய சிங்கர்களால் மிகவும் ஆதரிக்கப்பட்டதென்று நாம் அறிகின்றோம். இந்த ஸ்தோத்ரத்திலுள்ள பதரசனை அர்த்த புஷ்டி புதிய புதிய உல்லேகங்கள் இவையெல்லாம், இது ஒரு கவிரத்நத்தின் க்ருதி என்பதை நன்கு விளக்குகின்றன இது, மதராஸ் மயிலாப்பூர் ஸ்ரீ பாலமனோரமா முத்ராக்ஷர சாலையில் அச்சுப் பதிப்பிக்கப்பட்டு, க்ரந்த கர்த்தாவினால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

(4) **அபிநவ ஆசௌச ஸங்க்ரஹம்:**—இது, ஸ்ரீ முநித்ரய ஸித்தாந்த ஸ்தாபநாசார்ய துரந்தரர்களுள் ஒருவரான ஸ்ரீமத் பாதுகா ஸேவக ராமாநுஜ முநீந்த்ர மஹா தேசிகர்களால் பூர்வாச்ரமத்தில் அநுக்ரஹிக்கப்பட்ட க்ரந்தம். பூர்வாச்ரமத்தில் அந்த ஸ்வாமி ஸத்ய வ்ரதக்ஷேத்ரத்திற்கு ஸமீபத்திலுள்ள வேளிய நல்லூர் என்னும் ஸ்ரீ க்ராமத்தில் ப்ரஸித்த வித்வானாக எழுந்தருளி இருந்ததாகவும், இந்த க்ரந்தத்தைத் தவிர்த்து வேறு சில வேதாந்த க்ரந்தங்களையும் அந்த ஸ்வாமி செய்தருளி இருப்பதாகவும் தெரியவருகிறது.

ஆசௌச க்ரந்தங்கள் அநேகங்கள் இருக்கையிலும் இந்த க்ரந்தத்திற்கு ஏற்றமொன்று உண்டு. அது என்னவென்றால், ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் க்ரந்தங்களில் சொல்லப்படாமல் விடுபட்டுப் போன அநேக அம்சங்கள் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன வென்பதும், பழைய க்ரந்தங்களில் சரியானபடி தெளிவாகவும் நிஷ்க்ருஷ்டமாகவும் சொல்லப்படாமல் கேவலம் ஸ்தூலமாக மாத்ரம் சொல்லப்பட்டுள்ள அநேக விஷயங்கள் இதில் பரிஷ்கரிக்கப் பட்டிருக்கின்றன என்பதுமே. இந்த க்ரந்தத்தைப் படித்துப் பார்க்குமவர்கள் இதை விஸ்த்ருதமாக அறியலாம். இது, முதலில் ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதப்பட்டிருந்தது. இப்பொழுது, இந்த க்ரந்த கர்த்தாவின் பௌத்ரரான ஸாஹித்ய வ்யாகரண வேதாந்த சிரோமணி ஸ்ரீ, உ. வே. ஸ்ரீநிவாஸ தாதாசார்ய ஸ்வாமியால் தமிழில் மொழிபெயர்க்க பெற்று மூலத்துடனும் ஒரு அநுபந்தத்துடனும் அச்சுப்பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் புஸ்தகத்தை அபேக்ஷிப்பவர்கள், "வி. ஆர். எஸ். தாதாசார்யர், ஆசிரியர், ஸம்ஸ்க்ருத காலேஜ், திருவாதி, தஞ்சாவூர் ஜில்லா" என்னும் விலாஸத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| இதன் விலை:— | ஸம்ஸ்க்ருத மூலம் மாத்ரம் | ரூ. 0—6—0 |
| | தமிழ் மொழிபெயர்ப்பு மாத்ரம் | ரூ. 0—4—0 |
| | இரண்டும் சேர்ந்து | ரூ. 0—8—0 |

ஸ்ரீ:

# கடிதங்கள்

## பம்பாய் பநஸவாடி ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்.

பம்பாய் பனஸவாடியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் ப்ரஹ்ம உத்ஸவம் இவ்வருஷம் நவம்பர்மீ 4 தேதிமுதல் ஆரம்பித்து 14தேதி வரையில் வெகு விமர்சையாக நடையெற்றது. ஸ்ரீ ஜகத்குரு ப்ரதிவாதி பயங்கரம் அநந்தாசாரியர் ஸ்வாமிகள் ஒரு வாரம் முன்னமே விஜயம் செய்திருந்தார்கள். உத்ஸவங்கள் காலையில் 9 மணிக்குப் புறப்பாடும்; 11 மனிக்கு ஸந்நிதிக்குத்திரும்பினவுடன் திருமஞ்சனம் முதலானவைகளும் ராத்ரி 8 மணிக்குப் புறப்பாடும், 10மணிக்கு மண்டகப்படி சாத்துமுறைகளும் எவரும் ஆச்சர்யப் படும்படி வெகு அழகாக நடந்து வந்தன. உத்ஸவங்கள் ஸ்வாமியின் ஆஜ்ஞையினுல், காலத்தில் நடைபெற்றது பெரிதும் பாராட்டத்தக்கது. முன் வருஷங்களைப் போலல்லாமல் ஸ்வாமிகள் கோயில் செலவில் நான்கு புதிய வாஹநங்கள் செய்திருந்தார்கள். பெருமான் அந்த வாஹநங்களில் எழுந்தருளி ஸேவை ஸாதித்தது, இதுவரையில் கண்டிராத வடநாட்டு ஜனங்களுக்கு பெருமகிழ்ச்சியை அளித்தது. ஸிம்ஹம், யாளி, யானை, குதிரை வாஹநங்களில் வெகு அழகான உத்ஸவங்கள் நடைபெற்றது. மூன்ருவது உற்ஸவம் ராத்ரி கருடஸேவையும் 6வது உத்ஸ்வ அந்நகூடமும், ஏழாவது உத்ஸவம் யானை வாகநத்தில் ஸ்வாமி 'சௌபாதிக்கு' எழுந்தருளி வாண வேடிக்கை நடந்ததை பம்பாய் வாஸிகள் யாவரும் மறக்கமாட்டார்களென்பது திண்ணம். யானை வாகந உற்ஸவம் அருளாளன் கண்டருள்வது போலவே இவ்வட இந்தியாவில் இதுதான் முதல் முதல் நடந்தது. அன்றையதினம் அநேக ஆயிரக்கணக்கான ஜநங்கள் சௌபாதில் ஸமுத்ரக்கரையில் கூடியிருந்தார்கள். வாண வேடிக்கை ஸ்வல்பமாக இருந்த போதிலும்,இந்நகர வாஸிகளுக்கு பெரு வியப்பை உண்டாக்கியது. மற்றும் ஒன்பதாவதுதினம் தீர்த்தவாரியன்று ராத்ரி பெருமாள் பூப்பல்லக்கில் ஊர்வலம் வந்தது யாவராலும் கொண்டாடப்பட்டது. பூப்பல்லக்குக் காக்ஷி இதுவரையில் பம்பாயில் யாரும் கண்டதில்லையானபடியால் இது எல்லாவற்றிலும் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

உற்ஸவங்கள் பூர்த்தியான 10வது தினம் ஜகத்குரு ஸ்வாமிகள் வந்திருந்த, கோஷ்டி வேதபாராயணக்காரர்களுக்குச் சம்மானம் அளித்து சிறப்பு செய்தார்கள். மற்றும் உற்ஸ்வத்தில் நிகழ்ந்த ததியாராதநங்களும் ஜநங்களுக்குச் செய்த உபகாரங்களும் அளவிடற் பாலதல்ல.

ஜகத் குருஸ்வாமிகள் எழுந்தருளியிருந்த வைபவத்தால் இவ்வருஷம் நடந்த ப்ரஹ்ம உற்ஸவம் மிகவும் சிறப்புற்றதென்று யாவரும் ஒருமிடாகக் கூறுவது சாலப் பொருந்தும்.

இப்படியே ஸவாமிகள் ப்ரதி வருஷம் இங்கெழுந்தருளி இங்குள்ளார்களையும் வாழ்விக்கும்படி செய்து எல்லாம் வல்ல ஸர்வேச்வரன் செய்யவேண்டுமென்பது ப்ரார்த்தனையாகும்.

பும்பாய் — ஸி. பி. ராஜகோபாலாசார்யர்.



## தஞ்சை ஜில்லா ப்ராம்ஹணர் ஸநாதன தர்ம ஸம்ரக்ஷண ஸங்கம்

நாளது கலி 5036பவஹு தனுர்மீ 11; 16உகளுக்குச் சரியான 30—12—34 ஞாயிறு 31—12—34 திங்கள் தினங்களில் தஞ்சை கோட்டை மேலவீதி ஸ்ரீ காமாக்ஷியம்மன் கோவிலுக்கு வடபுறமுள்ள ஸ்ரீநவநீதகிருஷ்ண ஸ்வாமி கோவிலில் ஷை வார்ஷிக மகோத்ஸவங்கள் நடைபெற்றன. திவான் பகதூர் ப்ரம்மஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் B. A. B. L., அக்ராசனம் வஹித்தார்.

### கார்யக்ரமம்.

30—12—34 ஞாயிறு காலை 8 முதல் 8-11 பகவத்ஸ்தோத்ரம் வகையரா. அக்ராஸநாதிபதி வரவேற்றல்.

„ 8—11 முதல் 9 அக்ராஸநாதிபதியவர்களின் முகவுரை.

„ 9 முதல் 11 தர்மசாஸ்த்ரக்ஞர்களின் பரிஷத்தும் உபன்யாசங்களும்.

„ மாலை 2 முதல் 2-11 ஸங்கத்தின் வரலாறு வாசித்தல்.

„ 2-11 முதல் 1 வ்யாஸங்கள் வாசித்தலும் ஸமூஹ க்ஷேமத்திற்கான ஆலொசனைகளை செய்தலும்.

31—12—34 திங்கள் காலை 8 முதல் 11 தர்மசாஸ்த்ரக்ஞ பரிஷத்தும் உபந்யாசங்களும்.

„ மாலை 2-30 முதல் 4 வ்யாஸங்கள் வாசித்தலும் ஸமூஹ க்ஷேமத்திற்கான ஆலோசனைகளை செய்தலும்,

„ 4 முதல் 4-30 குழந்தைகள் ஸம்பாஷணை கோலாட்டம் வகையரா.

„ 4-30 முதல் 5-30 ஸம்பாஷணை :—மஹாகவி காளிதாஸருடைய 'சாகுந்தளம் 4-வது அங்கம் துர்வாஸரிஷி சாபம் முதல் சகுந்தலையை பதிகிரஹத்திற்கு அனுப்பும்வரையில்' குழந்தைகள் ஸம்ஸக்ருதத்தில்.

„ 5-30 குழந்தைகளுக்கு பரிசளித்தல். அக்ராஸநாதிபதி முடிவுரை.

இரவு 8-30 பகவத் பஜனை.

தஞ்சாவூர், 2—1—35

தி. கோதண்டராமய்யங்கார், அத்யக்ஷர்.
க. வே. லக்ஷ்மணசாஸ்திரிகள், கார்யதரிசி.

## (8)

## மதுரை ஸ்ரீ வைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய ஸபா.

---

### மூன்றாவது ஆண்டுவிழா.

இச்சபையின் ஆண்டுவிழா, சென்ற வருஷத்தைக்காட்டிலும் இவ்வருஷம் வெகு விமரிசையாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

7—12—34 மாலை 4-30 மணிக்கு மார்வாடி சத்திரத்திலிருந்து பல பிருதுகளுடன் ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் மடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ராமாநுஜ தர்சந ஸ்தாபநாசார்யராகிய ஸ்ரீமதித்யாதி அனந்தாசார்யஸ்வாமி, ஊர்வலமாய், சேதுபதி ஹைஸ்கூலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலம் பல தெருக்களின்வழியாகச் சென்றது.

மாலை 6மணிக்கு ஸ்ரீஸ்வாமிகள் தலைமையில் ஸபை ஆண்டுவிழா ஆரம்பமாயிற்று. தமிழிலும், ஸமஸ்கிருதத்திலும் ஸ்வாகதபத்திரிகை ஷை சபையின் சார்பாக வாசித்துக் கொடுத்தார்கள். ஸ்ரீஸ்வாமிகள் முன்னுரையாக அரியதோர் உபந்யாஸம் செய்தார்கள். பின்னர் காரியதரிசி சென்ற ஆண்டின் அறிக்கையை வாசித்து முடித்தார். பின்பு, 8, 9உ களில் நோட்டீஸில் கண்டபடி யாவரும் உபந்யாஸஞ் செய்தார்கள். கடைசி நாளாகிய 9உ மாலை ஸ்ரீ அனந்தாசார்யஸ்வாமி முடிவுரை கூறினார்கள். பின்னர் எல்லோருக்கும், ஸபைநிரந்தர அக்கிராஸநர் வந்தனோபசாரங் கூறினர். பின்னர் எல்லோருக்கும் தாம்பூலம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் விஜயஞ் செய்து, உபந்யாஸங்களைக் கேட்டு ஆனந்தித்துச் சென்றனர்.

ஒரு நண்பர்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: |

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

# ஸம்பாதகரின் குறிப்புகள்

---

**ஸ்ரீ பரிகர விஜயம்**

இதற்கு முன் ஒரு ஸஞ்சிகையில், "ஸ்ரீ பரிகர விஜயம்" என்னும் க்ரந்தத்தை மறுபடியும் முன் விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்து ப்ரசுரம் செய்ய ஸம்விதாநம் செய்யப் பட்டிருக்கின்றதென்றும், ஆனால், இதற்கு முன் அதை வ்யாக்யாநம் செய்து வந்த புத்தங்கோட்டகம் ஸ்ரீ உ.வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, சில அஸௌகர்யங்களால் அதை மேல் கொண்டு செய்துவருவதற்கு அசக்தராக இருக்கிறபடியால் வேறு ஒரு பண்டிதரின் ஸஹாயத்தைக் கொண்டு அதைப் பூர்த்தி செய்விப்பதாக உத்தேசிக்கப் பட்டிருக்கிறதென்றும் விஜ்ஞாபித்துக்கொண்டிருந்தோம். இப்பொழுது, வேறு தகுந்த பண்டிதரொருவரும் அகப்படாததால், மறுபடியும் புத்தங்கோட்டகம் ஸ்வாமியை ப்ரார்த்திக்கும்படி ஸம்பவித்தது. அந்த ஸ்வாமியும், தமது அஸௌகர்யத்தை அநாதரித்து, க்ருபையுடன் முன்போலவே அநுக்ரஹிப்பதாகத் திருவுள்ளம் பற்றி இருக்கிறார். ஸாத்யப்படும் பக்ஷத்தில் ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் பதினாறு பக்கங்கள் வீதம் ப்ரசுரம்செய்து சீக்ரத்திலேயே க்ரந்தம் முடிக்கப்படும்.

* * * *

மதராஸைச் சேர்ந்திருக்கும் மாம்பலம் என்னும் ஸ்தலத்தில் "ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை" என்னும் பெயருடன் ஒரு ஸபை ஏற்படுத்தப்

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, மாம்பலம்

பட்டிருக்கின்றது என்பதைக் கேட்டு நாம் ஆநந்திக்கிறோம். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம், ஏதோ ஒரு வகுப்பினர்களுக்கு மாத்ரம் ச்ரேயஸ்கரமென்றும் அவர்களால் மாத்ரம் அது கொண்டாடப் படத்தகுந்ததென்றும் ஒரு தவறுதலான எண்ணம் மஹாஜநங்களின் மநஸ்ஸில் உண்டு. அந்த ஸித்தாந்தம் அப்படிப்பட்டதன்று. 'ஸ்ரீமந் நாராயணன் ஜகத்திற்கெல்லாம் பிதா. லக்ஷ்மீ தேவி, ஜகத்திற்கெல்லாம் மாதா. அவர்களுடைய திருவடிகளைத் தொழும் ஸகல ஜந்துக்களுக்கும் அவர்கள் சாச்வதமான ச்ரேயஸ்ஸைச் செய்கிறார்கள்' என்பதே அந்த ஸித்தாந்தத்தின் கொள்கை. அவர்களை ஆச்ரயிக்குமவர்கள், எந்த ஜாதியில் பிறந்திருந்தாலும், எவ்விதமான பூர்வாசாரத்தை உடைத்தாயிருந்தாலும், அவர்கள் அந்த மாதாபிதாக்களால் தமது ப்ரஜைகளாக அங்கீகரிக்கப்பட்டு, உத்தமமான பர கதியை அடைவிக்கப்படுகிறார்கள் என்றன்றோ அந்த ஸித்தாந்தம் உத்கோஷிக்கின்றது?

"ஸஹைவ நித்யஸூரிபி: ஸ்வீகரோஷி"

[கருடாழ்வான் முதலான நித்ய ஸூரிகளுக்கு ஸமமாகவே நீ உன் பக்தர்களை அங்கீகரிக்கிறாய்] என்று நமது பூர்வாசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஸித்தாந்தம் நாடெங்கும் பரவுதல் வேண்டும் என்பதே நமது ப்ரார்த்தனை.

இந்த ஸபையின் உத்பத்திக்குப் பூர்வாங்கம்போல அந்த ஸ்தலத்தில் பாகவத கோஷ்டி ஒன்று. ஒரு மாஸ காலமாக நடைபெற்று வருகின்றது. மார்கழி மாஸம் என்னும் வ்யாஜத்தை அவலம்பித்து, அவ்விடத்தில் வஸித்துவரும் புதுக்கோட்டை ஸ்ரீ.உ.வே.ஆர் ரங்கஸ்வாமி ஐயங்கார் என்னும் ஒரு ஆஸ்திகரும் மற்றும் சிலரும், ஸ்ரீரங்கம் ஸ்ரீ.உ.வே.சடகோபாசார்யர் என்னும் ப்ரஸித்தி பெற்றுள்ள ஒரு பாகவத ஸ்வாமியைக் கொண்டு, ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை விஷயமாக ஒரு உபந்யாஸ பரம்பரையை நடத்திவருகிறார்கள். அவர்களுடைய ஸாத்விக மநோபாவமும் அந்தப் பாகவத ஸ்வாமியின் அநுக்ரஹ விசேஷமும் இந்த ஸபையின் உத்பத்திக்கு ஹேதுவாகி இருத்தல் வேண்டுமென்று நாம் நினைக்கிறோம்.

இந்த ஸபை மேன்மேல் அபிவ்ருத்தமாய்

"ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்"



என்கிறபடி ஸ்ரீராமாநுஜனால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை எங்கும் பரவும்படி ஸ்ரீ சரண்யன் அநுக்ரஹிக்க வேண்டும்.

* * *

நமது பாலர்களுக்கு நாம் இப்பொழுது செய்வித்து வரும் வித்யாப்யாஸமானது அவர்களுக்கு ஒரு ப்ரகாரத்திலும் நன்மையைச் செய்விக்கமாட்டாது என்பதே அநேக நிரூபகர்களின் அபிப்ராயம். ஒரு மஹாந் பின்வருமாறு எழுதுகிறார்.

"In all sound systems of education national culture—the traditions of national life and thought-must harmonise entirely w th the school and university teaching. The fault of the present educational system in India is that, instead of harmonising with and supplementing national culture, it is completely antagonistic to and destructive of it"

[மஹா ஜனங்களுக்கு நன்மையை விளைவிக்கும் வித்யா போதக முறைகளெல்லாம், அந்தந்தத் தேசத்திற்கு அஸாதாரணமான நடை உடை பாவனைகள், அவைகளின் நாகரிகம், பூர்வகாலங்களில் நடைபெற்றனவாக அந்தந்த தேச இதிஹாஸ புராணங்களில் எழுதப்பட்டுள்ள பூர்வ சரித்ரங்கள், இவை யெல்லாவற்றுக்கும் ஒத்திருத்தல் வேண்டும். இப்பொழுது இந்த இந்தியா தேசத்தில் அநுஷ்டிக்கப்பட்டு வரும் வித்யா போதக முறையோவென்றால், அந்த தேசத்திற்கு ஸஹஜமான நடை உடை பாவனைகளுக்கு ஒத்திராமல் இருப்பது மாத்ரமின்றிக்கே அவைகளுக்கு அத்யந்தம் விருத்தங்களாகவும் அவைகளை அடியுடன் மாற்றழிக்கும் நோக்கமுள்ளவைகளாகவும் இருக்கின்றன]. இது முழுவதும் உண்மையே. நமது பாலர்களுக்குச் செய்யப்படும் ப்ரவசநம் முழுவதும் தேசாந்தர மநுஷ்யர்கள் அதீநமாகவே இருக்கின்றது. பெரிய பாடசாலைகளில் பெரும்பாலும் அவர்களே முக்யங்களான பாடங்களின் ப்ரவசநத்தைச் செய்து வருகிறார்கள். மற்றைப் பாடங்களையும் அவர்கள், தங்களிடம் சிக்ஷைபெற்று தங்களுடைய நடை உடை பாவனைகளைப் பெற்றிருக்கும் ஹிந்துக்கள் வசமே ஒப்புவித்து வருகிறார்கள். பாடங்களாகக் கற்பிக்கப்பட்டு வரும் காவ்ய நாடகாதிகளும் பெரும்பாலும் அவர்களுடைய தேச ஸம்பந்தங்களாகவும் அவர்களால் எழுதப்பட்டவைகளாகவும் இருக்கின்றன. பாடங்களிலும்

அவர்களுடைய பாஷைக்கே பெரிய ப்ராதாந்யம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இம்மாதிரியான ஸாமக்ரிகளைக் கொண்டு நிஷ்பத்தி செய்யப்படும் வித்யாப்யாஸம் எவ்விதத்தில் தேசத்திற்கு ஒத்ததாக இருக்கக்கூடும்? வித்யாப்யாஸத்தை முடித்துக்கொண்டு வெளி வரும் நமது சிறுவர்கள் நமது ஆசாரங்களையும் கொள்கைகளையும் வெறுப்பதும், தமக்கில்லாத நடை உடை முதலியவைகளை ஏறிட்டுக்கொள்வதும் ஒரு ஆச்சர்யமாகுமோ?

"[illegible]'

[ஒருவன் குணசாலியாக இருப்பதும் குணஹீனனாக இருப்பதும் பெரும்பாலும் ஸம்ஸர்க்கத்தைக் காரணமாகக் கொண்டதன்றோ?] என்கிறபடி இம்மாதிரி விஷயங்களில் ஔத்பத்திகாகாரம் ப்ரயோஜகமாகமாட்டாது; ஸம்ஸர்க்கமே ப்ரயோஜகமாகும். சற்றேறக்குறைய நூறு வர்ஷகாலமாக இந்த நடவடிக்கை நடைபெற்று வந்துகொண்டிருக்கின்றது. அதன் பலமும் இப்பொழுது நன்றாக வெளிவந்து விட்டது. இன்னும் அதற்கு ப்ரதீகாரமொன்றையும் நாம் தேடினோமில்லை. நமது கர்மங்களை அநுஸரித்து நிற்கும் பகவத் ஸங்கல்பம் நம்மை இப்பொழுது இம்மாதிரியான ஸம்ஸர்க்கத்திற்குப் பாத்ரமாகச் செய்திருக்கின்றது. அப்படி இருந்தபோதிலும் விவேகிகளான நாம் நமக்கு எது தீங்கை விளைவிக்குமோ அதை விலக்கி, எது ச்ரேயஸ்கரமோ அதைக் கைக்கொள்ளவேண்டுவது அவச்யமில்லையா? பெரியோர்கள் இதற்கு அபேக்ஷிதமான மார்க்கத்தைத் தேடுதல் வேண்டும்.

---

ஸ்ரீ பாஷ்யம்:—ச்ருத ப்ரகாசிகையுடன் தமிழ் மொழி பெயர்ப்பு. ஸ்ரீராமாநுஜருடைய ஸ்ரீபாஷ்யம், ச்ருத ப்ரகாசிகையுடன் மஹாமஹோபாத்யாய தட்டை ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யரால் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்று அச்சுப்பதிப்பிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது, அதன் முதல் பாகமாக, ஜிஜ்ஞாஸாதிகரணம் முழுவதும் வெளிவந்திருக்கிறது. அதன் விலை ரூ 7—8—0. அபேக்ஷிப்பவர்கள் "ஸ்ரீரங்கம் தெற்கு ராயபுரம் எக்ஸ்டேன்ஷன் ஸ்ரீ. ஆர். எ. பங்காரஸ்வாமி நாயுடு" என்னும் விலாஸத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.



[illegible]—[illegible]

[illegible] ॥

[illegible],—

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥ இதி ।

ஹாரீத ஸ்ம்ருதௌ,—

---

தனக்கு செய்துகொள்வது கூடாது. பின் எப்படி என்றால் குருவினிடம் போய்தான் செய்துகொள்ளவேண்டும். என்று சில பெயர்கள் சொல்லுகிறார்கள்.

வாஸ்தவமான அர்த்தம் யாதென்றால்:—சங்கம் சக்ரங்களால் அடையாளம் பண்ணிக்கொள்ளும்போது 'சுடும்' என்ற பயத்தால் எவனொருவன் மண் சேற்றி (ஜலம் கலந்த மண்ணி)னால் சித்ரம்போல் கோடாக அடையாளம் பண்ணிக்கொள்ளுகிறானோ; எவனொருவன் காய்ச்சப்பட்ட இரும்பு லோகத்தினால் செய்த சங்க சக்ரத்தினால் அடையாளம் செய்துகொள்ளுகிறானோ; (கீழ் சொன்ன) இந்த இரண்டு பேர்களும் பஹிஷ்கரிக்கத்தகுந்தவர்கள். ஸ்வர்ணம், வெள்ளி, வெண்கலம், தாம்ரம் இதுகளினால் செய்யப்பட்டதும் காய்ச்சப்பட்டதுமான சங்கம் சக்ரம் முதலானதுகளால் அடையாளம் பண்ணிக்கொள்ளவேண்டியது என்று அபிப்ராயம்.

அதனாலேயே பாத்மபுராணத்தில் சங்கம் சக்ரம் இவை இரண்டையும் தங்கத்தினால் செய்து வைக்கவேண்டியது. அல்லது வெள்ளியினாலேயாவது, தாம்ரத்தினாலாவது, வெணகலத்தினாலாவது செய்துவைக்கவேண்டும்.

ஆசார்யனை அடையாமல் தானே அடையாளம் செய்துகொள்ளும் புருஷன், "தக்ஷிணையைக் கொடுத்தும், அங்க உபாங்கங்களோடு கூடி அடையாளம் பண்ணிக்கொண்டாலும், அடையாளம் பண்ணப்பட்டவனாக ஆகமாட்டான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஹாரீத ஸ்ம்ருதியில்:—

காமஸம்ஜ்ஞா மாத்ராணாம் ந ஸ்யாத் பாரத்ரிகம் ஃபலம் | இதி ||
போதாயநே:—

நாங்கயேத் தேஹதேஹம் தேஹவ்ருத்தாம் காமகாரத: |
நாதிகாரம் லபந்தே ஹி ச்ரௌதஸ்மார்த்தேஷு கர்மஸு ||

இதம் காமகாரத இத்யுக்தே: ஸ்வாபிப்ராயவிஷயமேவேதி ஸ்பஷ்டம் |
கோபிலஸ்ம்ருதௌ—

ச்ரௌதஸ்மார்த்தக்ரியோ விப்ரோ நாங்கயேத்தேஹமங்கநை: |
அபி விஷ்ணோஸ்ஸம்பந்தயை: தப்தைர்வா பதிதோ பவேத் |
அஜ்ஞாநாத்யதிவா லோபாத் காமதோ வா ஸமுத்வஹேத் |
யச்சக்ரகுலஹந்தாரம் த்ருஷ்ட்வா, ஸவாஸா ஜலமாவிசேத் ||

---

'ஆசையினால் அடையாளம் பண்ணிக்கொண்ட தேஹத்தையுடையோர்களுக்கு ஆமுஷ்மிகமான சுப பலம் ஒன்றும் உண்டாகாது' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

போதாயந க்ரந்தத்தில்:—

தன் தேஹத்தை ஆசையினால், சங்க சக்ராதிகளால் அடையாளப் பண்ணிக்கக் கூடாது. அப்படி பண்ணிக்கொண்டால் அவர்களை ச்ரௌத ஸ்மார்த்த கர்மங்களைச் செய்கிறதற்கு தகுந்தவர்களாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

இந்த வசநமானது 'காமகாரத:' என்று சொல்லியிருப்பதால் ஆசையினால் (ஏதோ ப்ரயோஜநத்தை உத்தேசித்து) பண்ணிக்கொள்கிறவன் விஷயத்துக்காக வந்தது என்று ஸ்பஷ்டமாக தெரிகிறது.

கோபில ஸம்ருதியில்:—

வேதத்திலும் ஸம்ருதிகளிலும் சொல்லப்பட்ட தர்ம காரியங்களைச் செய்யும் பிராமணன் விஷ்ணுவினுடைய ஸம்பந்தமுள்ளவைகளான அக்னியினால் காய்ச்சப்பட்ட சக்ரம் முதலிய ஆயுதங்களினாலும்கூட அடையாளம் செய்து கொள்ளகூடாது. அப்படிச்செய்து கொண்டவன் பதிதனாகி விடுவான். எவன் அக்ஞானத்தினாலாவது அல்லது லோபத்தினாலாவது ஆசையினாலாவது சக்ராயுததை தரிக்கிறானோ; அப்பேர்ப்பட்ட குலத்தைக் கெடுத்தவனை கண்டால உடனே அப்பொழுது தரிக்கப்பட்ட வஸ்த்ரத்துடன் கூட ஸ்நாநம் பண்ண வேண்டும்.



புஜாக்ரே ஸலிலேநைவ லிகேச்சக்ராயுதம் நர: |
வேதவிஜ்ஞாநவாந் வாபி ஸப்த வம்சாந் நிஹந்தி ஸ: |
சங்கம் சக்ரம் ச லிங்கம் ச யோ மூடோ தாரயேத்தநௌ |
பாஷண்ட ஸஹி விஜ்ஞேய: ஸர்வகர்மபஹிஷ்க்ருத: ||

அத்ர ப்ரதமச்லோகேந ச்ரௌதஸ்மார்த்தக்ரிய: அங்கநேநாங்கயேத் இதி ஸமபிவ்யாஹாராத் ச்ரௌதஸ்மார்த்தக்ரியாநிஷ்டாத்யோதக சிஹ்நாதி டம்பார்த்தம் ந தாரயேத் |

பகவச்சிஹ்நாந்யபி ச்ரௌதஸ்மார்த்தக்ரியாநிஷ்டாத்யோதநாய டம்பாய ந தாரயேதித்யர்த்த:

---

புஜங்களின் மேல் பாகத்தில் எவன் ஜலத்தினாலேயே சக்ராயுதத்தை எழுதுகிறானோ; அவன் வேதாத்யயநம் செய்தவனாய் அக்னி ஹோத்ரம் முதலிய காரியங்களைச் செய்கிறவனாய் இருந்தாலும் 7-தலை முறை தனது வம்சத்தை நாசம் பண்ணி விடுகிறான்.

சங்கம் சக்ரம் சிவலிங்கம் இவைகளை புத்தியில்லாவனான எந்த மனிதன் தன்னுடைய சரீரத்தில் தரித்துக் கொள்ளுகிறானோ அவன் பாஷண்டன் என்று அரியத் தகுந்தவன். அவன் எல்லாவைதிக கர்மங்களிலும் சேர்க்கக் கூடாதவன்.

இங்கு முதல் ச்லோகத்தினால் வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் சொல்லப்பட்ட தர்மங்களைச் செய்யுமவன் அடையாளங்களைச் செய்யக்கூடிய ஆயுதங்களினால் அடையாளத்தைப் பண்ணிக்கொள்ள கூடாது என்கிற வாக்யங்களினுடைய சேர்க்கையின் ஸ்வாரஸ்யத்தை கவனித்தால் தான் ஷ்டி தர்மங்களை அநுஷ்டிப்பதை பிறருக்குத் தெரிவித்து அதனால் பிறர்கள் தன்னை கொண்டாட வேணுமென்பதற்காக ஷ்டி தர்மாநுஷ்டாநத்தைத் தெரிவிக்க கூடியதான அடையாளங்களை டம்பார்த்தமாக தரிக்க கூடாது.

அவ்வடையாளங்கள் பகவானுடையதாக விருந்தாலும் தர்மாநுஷ்டாநத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதாகிற டம்பத்தை உத்தேசித்து அவைகளைத் தரிக்கக் கூடாது என்னும் அர்த்தம் ஏற்படுகிறது.'

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

2-வது ச்லோகத்திலிருக்கும் அக்ஞாந சப்தமானது இது மிகவும் அநுகூலமானது என்கிற அறிவினுடைய இல்லாமையைத் தெரிவிக்கிறது.

உலகத்தில் சில துஷ்டர்கள் சங்கம் சக்ரம் இவைகளைத் தரிப்பது ஆத்மாவுக்கு அநுகூலம் என்கிற எண்ணமில்லாவிட்டாலும் சிஷ்டர்களுடைய கோஷ்டியில் தாங்களும் கலந்து இருக்கவேண்டுமென்கிற எண்ணத்தினால் தாப ஸம்ஸ்காரம் முதலியவைகளைச் செய்துகொள்ளுகிறார்கள்.

"லோபாத்" என்கிற பதத்திற்கு வைஷ்ணவர்களுடைய பணத்தை திருடர்கள் அபஹரிக்கமாட்டார்கள் என்கிற உலக ப்ரஸித்தியைக் கேட்டு அதில் ஆசையினால் ஷை பணத்தை ரக்ஷிப்பதற்காக பகவானுடைய சின்னங்களை தரிக்கக் கூடாதென்று" அர்த்தம்.

'ராகத:' என்கிற பதத்தினால் ஜீவநத்திற்காக சங்க சக்ராதிகளைத் தரிக்கக்கூடாதென்று சொல்லப்படுகிறது. 3-வது ச்லோகத்தில் 'ஏவ' என்கிற சப்தத்தினால் சங்க சக்ரங்களை அக்நியினால் தபிக்கச் செய்தே தரிக்கவேண்டும். மற்றும் ஜலம் முதலியவற்றால் தரிக்கக்கூடாதென்று விதிக்கப்படுகிறது.

4-வது ச்லோகத்தில் சங்க சக்ர தாரணத்தை சிவலிங்கத்தோடு சேர்த்து தரிக்கக்கூடாதென்று சொல்லப்படுகிறது. ஆகையினால்தான் ஸ்ம்ருதியில் பிராமணன் தன்னுடைய தேகத்திலாவது பிறருடைய தேகத்திலாவது



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

மூன்றுவித தழும்புகளைச் செய்யக்கூடாதென்று நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. த்ரிகிணீ என்றால், மூன்று தழும்புகளை உடைய புருஷன் சொல்லப்படுகிறான்.

அல்லது த்ரிகிண என்கிற பதத்தினால் த்ரிமூர்த்திகளுடைய ஆயுதங்களின் சின்னங்கள் சொல்லப்படுகிறது.

இப்படி மூன்று தழும்புகளை தரிக்கக்கூடாதென்று சொல்லியிருப்பதால் மூன்று சின்னங்களை சேர்த்து தரிக்கக்கூடாதே ஒழிய சங்கம் சக்ரங்களை மட்டும் தரிப்பதை நிஷேதிப்பதில் இந்த வாக்யத்திற்கு தாத்பர்யமில்லை.

இங்கு சிலர் தாஸ்யத்திற்கு அடையாளங்களாவன: விரலில் காயம் செய்துகொள்வது (1), மார்பில் ஆயுதத்தினால் யஜமானனுடைய பெயரை எழுதுவது (2), நெருப்பினால் காய்ச்சப்பட்ட இரும்பு தங்கமயமான முத்திரையினால் ஷை நாமாக்ஷரங்களை எழுதிக்கொள்வது (3).

ஆக இந்த மூன்றும் நிஷேதிக்கப்படுகின்றன என்கிறார்கள்.

வேறே சிலர் த்ரிசூலத்தின் அடையாளம் நிஷேதிக்கப்படுகிறதென்கிறார்கள்.

ஷை ச்லோகத்திற்கு வ்யாக்யாநம் செய்தவர்களோவென்றால் இவ்விதமாக வ்யாக்யானம் செய்கிறார்கள். இங்கு த்விஜ என்கிற சப்தமானது பிரா

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]

---

மணாளேச் சொல்லுகிறது. மூன்று தழும்புகள் என்பதற்கு நாண்கயிரின் உறைச்சலால் உண்டான காயம் 1. சண்டை போடுவதற்காகவோ அல்லது சூதாடுவதற்காகவோ 2. எப்பொழுதும் உட்கார்ந்திருப்பதால் உண்டான காரியத்தின் தழும்புகள் 3. ஆக மூன்று தழும்புகள் என்று அர்த்தம் ஒன்று.

ப்ரம்மா விஷ்ணு ருத்ரன் இவர்களுடைய அடையாளங்கள் மூன்றை சேர்த்து ஒருவன் தரித்துக்கொள்ளும்படி செய்யக்கூடாதென்று வேதம் தானே சொல்லுகிறது.

ஸர்வதேவ மயோத்விஜ: என்று ஒருவனால் எழுதப்பட்டிருக்கும் வசநமானது மூல ஸ்ம்ருதிகளில் எங்கேயாவது காணப்படுமோனால் ஒருவனுடைய தேஹத்தில் கீழே சொல்லப்பட்ட மூன்று அடையாளங்களையும் சேர்த்து தரித்துக்கொள்ளக்கூடாதென்று வ்யாக்யாநம் செய்துகொள்ள வேண்டும்.

வாஸ்தவமான அர்த்தமோ வென்றால் இந்த வசநங்களும் (யதா ச்மசாநகம் காஷ்டம்) என்கிற வசநமும் வடதேசத்திய புஸ்தகங்களில் ஓரிடத்திலும் காணப்படவில்லை. இந்த தக்ஷிணதேசத்திலும் சிற்சில புஸ்தகங்களிலேயே காணப்படுகின்றன என்று ப்ராசீநர்கள் சொல்லுகிறார்கள்.

சில மஹா பாபிகள் புராணங்களிலும்கூட சில விருத்த வசனங்களைச் சேர்த்திருக்கிறார்கள். (துஷ்யது துர்ஜந:- கெட்ட மனிதனும் ஸந்தோஷிக்கட்டும்) என்கிற ந்யாயத்தினால் அந்த வசநங்களுக்கும் அர்த்தம் எழுதப்படுகிறது.



ததாஹ:—ப்ருஹந்நாரதீயே:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்காந்தே ஸூத ஸம்ஹிதாயாம்:—

[illegible]
[illegible]

மாநவே புராணே:—

[illegible]
[illegible]

---

அவைகளாவன:—ப்ரஹந்நாரதீய க்ரந்தத்தில்-எந்த மனிதன் அக்நியினால் தாபம் செய்யப்பட்ட சங்கம் முதலானவைகளுடைய அடையாளத்தோடு கூடிய சரீரத்தை உடையவனோ, அவன் ஸர்வ நரகங்களையும் அநுபவித்து கோடி ஜந்மங்கள் சண்டாளனாகவும் பிறக்கிறான்.

ஓ அரசனே! எந்த மனிதன் சக்ராயுதத்தினால் அடையாளம் பண்ணப்பட்ட தேஹத்தை உடையவனோ, அல்லது சிவலிங்கத்தினால் அடையாளம் பண்ணப்பட்ட தேஹத்தை உடையவனோ அவன் வேதத்திலும் ஸ்ம்ருதிகளிலும் சொல்லப்படுகிற கர்மங்களை அநுஷ்டிப்பதற்கு யோக்யனல்லவென்று அறிந்துகொள்ளத் தகுந்தவன்.

ஸ்காந்த புராணத்தில் ஸூதஸம்ஹிதையில் — மனிதன் தன்னுடைய தேகத்திலாவது பிறருடைய தேகத்திலாவது சக்ராயுதம் முதலியவைகளினால் அடையாளத்தைச் செய்யக்கூடாது. ஒருவன் அந்த அடையாளத்தைச் செய்வானானால் அவன் பதிதனாகிறான்; இதில் ஸம்சயமில்லை.

மாநவபுராணத்தில்—ஒருகாலத்திலும் சங்கம் சக்ரம் முதலிய ஆயுதங்களினால் தேகத்தை சுட்டுக்கொள்ளக் கூடாது. ப்ரமத்தினால் மார்பில் மனிதர்களுடைய பெயரினாலும் எழுதிக்கொள்ளக்கூடாது.

ஸெந்நா நிஹ்நவ நிஹ்நவபரோவரோஸ்ய தேஜஸ்வி
ஸ்ப்ருஷ்ட்வேத த்வயி விபஸ்சித ஈசிதாரம் ॥

யஸ்யா: கடாக்ஷண க்ஷண ஈச்வராணாம்
ஐச்வர்யமாஹுரிதி ஸர்வஜநீநஸித்தம் ।

---

இத்யாதியான திவ்யஸூக்திகள் அநுஸந்தேயங்கள்.

ஸுநிஹ்நவாபா:— 'நிஹ்நவ:' என்பதற்கு 'மறைக்குதல்' என்பது பொருள் 'நிஹ்நவபார:' என்பதற்கு 'மறைப்பதையே கார்யமாக உடைய' என்பது பொருள் அப்படி இராமலிருப்பது 'ஸுநிஹ்நவாபா:'. அதாவது, 'வெளியிடுவதையே கார்யமாக உடைய' என்று ஏற்பட்டது. இந்த அடையாளங்கள் அவனை ஈச்வரனென்று வெளியிடாமல் இருக்கமாட்டா என்பது குறிப்பு. இப்படிப்பட்ட அடையாளங்களுள் ஒன்று லக்ஷ்மிக்குப் பதியாக இருப்பது. அதைப்பற்றி அடுத்து வரும் ச்லோகம் பேசுகின்றது.

விபஸ்சித:—'விவிதம் பஸ்யந்தீதி விபஸ்சித:' என்பது இதன் நிர்வசநம் சித் அசித் ஈச்வரன் ஆக இம் மூன்று தத்வங்களையும் ஸ்வரூபத்தாலும் ஸ்வபாவத்தாலும் உள்ளபடி அறியும் ஸாமர்த்யமே விபச்சித்வம் என்று சொல்லப்படும். அதாவது ஸமீசீநமான ஜ்ஞாநமுள்ளவர்களென்று சொன்னதாயிற்று.

29. கீழ் சொல்லப்பட்டுள்ள அஸிந்ஹவ பரங்களான அடையாளங்களுள் மிக ப்ரதாநமான லக்ஷ்மீபதித்வம் இவ்விடத்திற் சொல்லப்படுகின்றது.

[பதவுரை] யஸ்யா: - எந்த லக்ஷ்மியினுடைய, க்ஷணக்ஷணம் - ஒவ்வொரு க்ஷணத்திலும் ஏற்படும், கடாக்ஷணம் - கடாக்ஷமானது, ஈச்வராணாம் - ஈச்வரர்களென்று வ்யவஹரிக்கப்படும் சேதநர்களெல்லாருக்கும் ஐச்வர்யம் ஆஹுரிதி - ஈச்வரர்களாயிருப்பதற்குக் காரணமென்று ஸர்வஜநீந ஸித்தம் - ஸர்வஜந ப்ரஸித்தமோ, தாம் - அப்படிப்பட்ட ச்ரியம் - லக்ஷ்மியை, த்வதுபஸம்ச்ரயணாத் - உன்னை ஆச்ரயித்திருக்கிறாள் என்னும் காரணத்தால், ஸ்ரீரிதி - ஸ்ரீ என்று, நிராஹு: - நிருக்தி காரர்கள் நிர்வசநம் செய்கிறார்கள். உதாரவாச: - கம்பீரமான வாக்கை உடைய பெரியோர்கள் [அதாவது, உண்மையை அறிந்து உள்ளபடி பேசும் திறமையுள்ளவர்கள்], த்வாம் - உன்னை, ச்ரிய: ச்ரியம் - ச்ரீக்கும் ச்ரீயென்று, உசந்தி - பேசுகிறார்கள்.

ஜகத்தில் ஒருவனுக்கு ஏற்படும் பெருமையெல்லாம் லக்ஷ்மீ கடாக்ஷத்தாலேயே ஏற்படுகின்றது என்பது எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அப்படிப்



தாம் ஸ்ரீரிதி த்வதுபஸம்ச்ரயணாந்நிராஹு:
த்வாம் ச ச்ரிய: ச்ரியமுதாரவாச உசந்தி ॥ உகூ

---

பட்ட லக்ஷ்மியின் பெருமை, நாராயணனுடன் அவளுக்கு ஏற்பட்டிருக்கும் ஸம்பந்தத்தாலேயே என்றால், நாராயணனுடைய பெருமை எப்படிப்பட்டதாய் இருத்தல் வேண்டும்? அவனுடைய பெருமை மற்றொன்றையும் சார்ந்ததன்று; ஆகையால் அவன் ஸர்வேச்வரன் என்பது ஸித்தம்.

ஈச்வராணாம் — 'ஈச்வரர்கள்' என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதைப் பார்க்கும்பொழுது, ஈச்வரர்களென்று உபசரித்து சொல்லப்படும் இந்த்ரன் முதலானவர்களும், ஈச்வரன் என்று முக்யமாகச் சொல்லப்படும் பரப்ரஹ்மமும், எல்லாரும் க்ரஹிக்கப்படவேண்டுமென்று தோன்றுகின்றது. எவ்வித ஸங்கோசமுமின்றிக்கே ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள 'ஈச்வர' என்னும் சப்தத்தைக் குறுக்கி பொருள் கொள்வது சரியன்று. ஆகையால், இந்த்ரன் முதலானவர்களுடைய ஐச்வர்யம் லக்ஷ்மீ கடாக்ஷாதீநமாயிருப்பதுபோல, பரப்ரஹ்மத்தின் ஐச்வர்யமும் அந்த லக்ஷ்மீ கடாக்ஷாதீநமென்பதே ஸ்ரீ கூரேசனுடைய அபிப்ராயமென்று சொல்லவேண்டும். இதுதான் தாத்பர்யம் என்பதை பட்டருடைய திவ்ய ஸூக்தி விளக்கும்.

"ஸகாம்ஹா லக்ஷ்மீ யதுபரி பரம் ப்ரஹ்ம தத்பூத்
அமீயத்வித்ரா நந்த ப்ரதமவாதிவிஷயா:"

[ஹே லக்ஷ்மி! உன்னுடைய கடாக்ஷங்கள் கணக்கற்றவைகளாக எதன்மீது விழுந்தனவோ, அது பரப்ரஹ்மமாயிற்று; இரண்டு மூன்று கடாக்ஷங்களை மாத்ரம் பெற்றவர்கள் அந்த ப்ரஹ்மத்திற்குக் கீழ்ப்பட்ட இந்த்ரன் முதலானவரானார்]. இவ்விதம் பொருள் கொள்ளில், நாராயணனுடைய ஸம்பந்தத்தால் லக்ஷ்மிக்குப் பெருமை என்று சொல்வது விரோதியாதோ? என்னில், விரோதியாது என்பதே ப்ரத்யுத்தரம். நாராயணனும் லக்ஷ்மியும் இருவரும் தம்பதிகளாகவே நமக்கு தைவதமன்றோ? அவர்களுடைய பெருமை பரஸ்பரம் ஸம்பந்தத்தைச் சார்ந்தது என்று சொல்வதில் விரோதமொன்றுமில்லை என்பதே நமது ஆசார்யர்களின் நிர்வாஹம்.

நிராஹு:—'ஸ்ரீ:' என்பதற்குச் சொல்லப்பட்டுள்ள நிர்வசநங்களுள் 'ஸ்ரயதே இதி ஸ்ரீ:' என்பது ஒன்று. அதாவது, பக்தர்களின் அநுக்ரஹத்தை உத்தேசித்து அவள் நாராயணனை ஆச்ரயித்திருக்கிறாள் என்பதாலேயே அவளுக்கு 'ஸ்ரீ:' என்று பெயர். இப்படி அவளுடைய பெயரே பகவத் ஸம்பந்தத்தைக் காரணமாக உடைத்தாயிருக்கையில், அவளுடைய பெருமை அவன் ஸம்பந்தத்தைக் காரணமாக உடைத்தாயிருக்கின்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

ச்ரிய: ச்ரீ:—ஸ்ரீமத் ராமாயணத்தில்

மாயா த்வயா கு3ணமயீ க்ரியதே யா நிஸ்ருஷ்டா
ஸா தே விபோ4 கிமிவ நாம ந நிர்மிமீதே |

---

"ச்ரிய: ஸ்ரீஸ்ச ப4வேத3 க்3ர்யா"

[பகவான், ச்ரீக்கும் ச்லாக்யமான ஸ்ரீயாகிறான்] என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ யாமுநாசார்யரும்,

"க: ஸ்ரீ: ச்ரிய:"

[யார் ஸ்ரீக்கும் ஸ்ரீ?] என்று பகவானைப்பற்றி ப்ரஸ்தாவித்து வருகையில் கேட்கிறார் இவர்களையே உதார வாக்குகள் என்று இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவர்கள் சொல்லும் வார்த்தையெல்லாம் முழுவதும் ஆப்த வாக்யங்கள் என்பது கருத்து.

30. 'நாராயணனே பரதத்வம், அவனுடைய ஸ்வரூபம் முதலியவை இப்படிப்பட்டவை' என்பதை விளக்கும் ச்ருதிகள், கீழ் குறித்திருக்கிறபடி பரச்சதங்களாக இருக்கையில், அத்வைதி முதலானவர்கள் அவைகளை ஏன் அறியாமல் அவைகளுக்கு விருத்தமாக வேறு ஸித்தாந்தங்களைச் செய்கிறார்கள்? என்னும் சங்கைக்கு ஒரு ஸமாதாநத்தைக் கூறுகிறார். உள்ளதை இராதது போலவும் இராததை உள்ளது போலவும் ப்ரமிப்பிக்கும் ப்ரக்ருதியின் ஸம்ஸர்க்கமே அம்மாதிரியான மோஹத்திற்குக் காரணமாம். கர்மங்களடியாக ஸத்வாதி குணங்கள் அதிகமாயும் குறைந்தும் நிற்கிறபடியால், இம்மாதிரியான மோஹம் சிலருக்கு ஸம்பவித்தும் மற்றும் சிலருக்கு ஸம்பவியாமலும் இருக்கின்றது.

[ப-ரை] ஹே விபோ4 - ஹே ஸர்வேச்வர! கு3ணமயீ - ஸத்வம் ரஜஸ் தமஸ் ஆகிய இம்மூன்று குணங்களால் நிறைந்துள்ள, யா மாயா - எந்த ப்ரக்ருதியானது, த்வயா - உன்னால், நிஸ்ருஷ்டா - 'ப்ரயோகிக்கப்பட்டதோ [அதாவது - தேஹ ரூபமாகவும் இந்த்ரிய ரூபமாகவும் ப்ராணிகளுடன் ஸம்பந்தம் செய்விக்கப்பட்டதோ], ஸா - அந்த ப்ரக்ருதி, தே - உனக்கு, கிமிவ நாம - எந்த லீலையை, ந நிர்மிமீதே - செய்யமாட்டாது? கில - இது ப்ரஸித்தமே. கேசித் - சில, குதர்க்கரஸிகா: - யுக்தியை மாத்ரம் ப்ரமாணமாக ஒத்துக்கொண்டிருக்கும் ஹேது வாதிகள், த்வயி - உன்னிடத்தில், ச்ருதௌ - வேதமானது, ஸத்யாம் ச - இருக்கையிலும் (அதாவது வேதங்களெல்லாம் உன்னையே பரதேவதையாக ப்ரதிபாதிக்கையிலும்), ஸ்வாக்ரஹ தார்ட்ய யோகாத் - (ஆக்ரஹத்தால்) தார்ட்யத்தை அடைந்திருக்கும் குதர்க்கத்தின் பலத்தால், தந்மஹிம்நா - அந்த ப்ரக்ருதியின் ப்ரபாவத்தால், ப3தி4ரா: - செவிடர்களாகவே இருக்கிறார்கள். [ச்ருதிகளின் உத்கோஷங்களெல்லாம் அவர்களிடம் வீணாகி விடுகின்றன.]



கேசித் குதர்க்கரஸிகா: ஸ்வாக்ரஹ தார்ட்ய யோகா3த்
ஸத்யாம் ச்ருதௌ ச ப3தி4ரா: த்வயி தந்மஹிம்நா || ௩௦

யஸ்ஸாவதா3த் கிமபி தத்த்வ ஸுக2ஜாதி
ஸ்வ த்ருஷ்டம் ஜக3த் ஸதேவ விஜாயதே நு: |

---

மாயா—ப்ரக்ருதியின் ஸம்ஸர்க்கம் விசித்ரங்களான தோற்றங்களை உண்டு பண்ணக் கூடியதாதலால், அதற்கு 'மாயா' என்னும் பெயர் ஏற்பட்டது. ஏதேது விசித்ர கார்யகரமோ, அதெல்லாம் 'மாயை' என்று சொல்லப்படுகின்றதன்றோ? அப்படிப்பட்ட விசித்ர லீலை ப்ரஸ்தாவிக்கப்படுகிறபடியால், 'மாயை' என்னும் சப்தத்தால் அந்த ப்ரக்ருதியே, இவ்விடத்தில் வ்யவஹரிக்கப்படுகின்றது என்று சொல்ல வேண்டும். ஸத்வம் ரஜஸ் தமஸ் இம்மூன்றும் ப்ரக்ருதியின் குணங்களாகையால், அந்த ப்ரக்ருதியை 'குணமயீ' என்று விசேஷிக்கிறார். ஸ்ரீ பகவத்கீதையில் காணப்படும்,

"தை3வீ ஹ்யேஷா கு3ணமயீ மம மாயா து3ரத்யயா ||"

என்னும் வாக்யம் இவ்விடத்தில் அநுஸந்தேயம். இதன் அர்த்தமாவது அஸவதிகாதிசயாநந்தமான பகவான் இருக்கும் காலத்தில், ஏன் ஜநங்கள் அபக்ருஷ்டமான விஷயங்களில் ப்ரவ்ருத்திக்கிறார்கள்? என்று கேட்டுக்கொண்டு, அதற்கு ஸமாதானமாக 'குணமயமான இந்த மாயையானது க்ரீடையில் ப்ரவ்ருத்தனான தேவனாலேயே நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறபடியால், அசேவரர்களான ஸர்வ பூதங்களாலும் அது தாண்டக் கூடியதன்று' என்று அநுக்ரஹிக்கப்பட்டிருக்கின்றது.

31. கீழ் ப்ரஸதாவிக்கப்பட்டுள்ள ஹேது வாதிகள் வாதிக்கும் ப்ரகாரமானது இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகின்றது. 'ப்ரஹ்மமே அவித்யையால் கபளிதமாய் மோஹத்தை அடைந்து ஜீவனாக ஸம்ஸரிக்கின்றது' என்பது அவர்களுட் சிலருடைய வாதம். ஸகல ஹேய ப்ரத்யநீகனாக இருக்கும் பகவானே, தனது ஸ்வரூபத்திற்கும் ஸ்வபாவத்திற்கும் அத்யந்தம் விஸஜாதீயமாக இருக்கும் வஸ்துவாக ஆவானோ? என்பதை அவர்கள் ஆலோசித்தாரில்லை.

[ப-ரை] ஹே நித்யநிர்மல - எப்போழுதும் சுத்தனாயிருக்குமவனே, ஹே நிரஞ்ஜந - ஹே கர்ம பரவசனாய் இராதவனே, ஹே நிர்விகார - ஹே மாறுதலற்றவனே, ஹே கல்யாணஸத்குணநிதே - சுபாவஹங்களாயும் ஸ்திரங்களாயுமுள்ள குணங்களுக்கெல்லாம் இருப்பிடமே, த்வம் - [இப்படியெல்லாம் இருக்கும்] நீ, ஸாவதாத் கிமபி தத்த்வ ஸுகஜாதிஷு - ஸ்தாவர ஜங்

த்வம் நித்ய நிர்மல நிரஞ்ஜந நிர்விகார
கல்யாணஸத்குணநிதே ஸ ஜகதீரிதோஸி ॥

த்வத்த்ருஷ்டிஜுஷ்டமிதமாவிரபூதசேஷம்
நோ சேத் கடாக்ஷயஸி நைவ பவேத் ப்ரவ்ருத்திஃ ।

---

துக்கள் புழுக்கள், பக்ஷிகள் யானை முதலிய ம்ருகங்கள் இன்னும் மற்றை ஜந்துக்கள் இவைகளுடைய சரீரங்களில், ஸதைவ - எப்பொழுதும் [ஒன்றின் பின் மற்றொன்றாக], விஜாயமாநோ யஃ - பலவகையாக ஸம்ஸரிக்கிறவன் எவனோ, ஸ ஏவ - அவனே, ஜகத் இதி - என்று, ரேதஃ - அந்த கௌதஸ்குதர்களால், ஈரிதஃ - சொல்லப்படுகிறாய்.

'நித்ய நிர்மலனும் நிரஞ்ஜனனும் நிர்விகாரனும் கல்யாணகுண நிதியுமிருக்கும் நீ, எப்பொழுதும் மலினனும் கர்ம பரவசனும் ஜ்ஞாநஸங்கோச விகாஸங்களுள்ளவனும் ஹேய குண ஸம்பந்தம் பெறுகிறவனும் இருக்கும் ஜீவனாக இருப்பது உபபந்நமாகுமோ?' என்பது இந்த ச்லோகத்திலுள்ள ஸம்புத்திகளின் தாத்பர்யம்.

32. ஆனால், ச்ருதிகளும் மற்றை சாஸ்த்ரங்களும் 'ஜகத் நீயே' என்று எப்படி சொல்லுகின்றன என்று கேட்டால், அது எப்படி என்பதை விளக்குகிறார். ஜகத் முழுவதும் பகவானால் தரிக்கப்பட்டு அவனால் நியமிக்கப்பட்டு அவனுக்குச் சேஷமாகவே இருக்கிறபடியால், அது அவனுக்கு சரீரமாகின்றது; அவன் அதற்கு ஆத்மாவாகிறான். சரீரத்தைச் சொல்லும் சப்தங்களெல்லாம் சரீரீ (ஆத்மா) ப்ரயந்தம் வாசகங்களாகுமாதலால், 'ஜகத்' என்னும் சப்தம் அதன் ஆத்மாவாகிற பகவானையும் குறிக்குமன்றோ? அந்தக் காரணத்தாலேயே 'ஜகத் நீயே' என்று சொல்லுகின்றனவே தவிர இரண்டுமொன்றே என்று ஸ்வரூபத்தின் ஐக்யத்தை அவை சொல்லவில்லை. இது தான் ஸமாதானம்.

[ப-ரை] இதம் - [ப்ரளய காலத்தில் பிரித்துச் சொல்லக்கூடாதபடி அவ்வளவு ஸூக்ஷ்ம தசையை அடைந்திருந்த] இதானது. த்வத்த்ருஷ்டிஜுஷ்டம் [ஸத்] - உன்னுடைய ஸங்கல்பத்திற்கு விஷயமானதாகக் கொண்டு, அசேஷம் - (இப்பொழுது சேதநாசேதநாத்மகமாகக் காணப்படும்) அசேஷமான ப்ரபஞ்சமாக, ஆவிரபூத் - ஆவிர்ப்பவித்தது. நோ கடாக்ஷயஸி சேத் - நீ அதைக் கடாக்ஷியாவிட்டால், ப்ரவ்ருத்திஃ - (இந்த ஆவிர்ப்பாவ ரூபமான) ப்ரவ்ருத்தியானது, நைவ பவேத் - ஒருகாலும் ஸம்பவித்திருக்கமாட்டாது. ஜகத் - ஜகத்தானது, ஸ்திதம் ச - ஸ்திதி பெற்றிருப்பதற்கும், தவ த்ருஷ்டிபாதம் - உன்னுடைய கடாக்ஷத்தை [கடாக்ஷ



ஸ்திதம் ச வாஞ்சதி ஜகத் தவ த்ருஷ்டிபாதம்
தேந ச்ருதௌ ஜல்பிஷே ஹி ஜகத் த்வமேவ ॥ ௩௨

ஏவம் விபோ இஹ ஸ்வரூபவதேவ
நாமாந்யபி ஸ்திரசரஸ்ய சராசரஸ்ய ।
த்வத்ஸ்வாத்ம்யநிஷ்டமுதிதம் ப்ரதிஷ்டிதம் தே
வாசீயஸாமயமஹோ த்வயி சோபதேஹஃ ॥ ௩௩

---

பூர்வக ஸங்கல்பத்தை), வாஞ்சதி - அபேக்ஷித்து நிற்கின்றது. தேந - அந்தக் காரணத்தாலேயே, ச்ருதௌ - வேதத்தில், த்வமேவ ஜகத் - நீயே ஜகத் என்று, ஜல்பிஷே ஹி - சொல்லப்படுகிறாயன்றோ?

"நாபேக்ஷஸே யதி ததா ஸம்பவநாநுபூதி
நாஸ்வாத் ப்ரஸூதே ஸதி தேவ குதஃ ப்ரவ்ருத்திஃ"

[ஹே ப்ரபோ! நீ கடாக்ஷியாவிட்டால், இந்த ப்ரபஞ்சத்திற்கு இருப்பு என்பதே அமையமாட்டாது. அப்படி இருக்கையில், அதற்கு ப்ரவ்ருத்தி என்பது அந்தக் கடாக்ஷமின்றி எப்படி ஸம்பவிக்கமாட்டும்] என்னும் ச்லோகமும் இந்த அர்த்தத்தையே உணர்த்துகின்றது.

33. இச் ச்லோகத்தில், ஜகத்தின் ஸ்திதி ப்ரவ்ருத்தி இவை முதலியனவையெல்லாம் பகவத் கடாக்ஷாதீநமென்றும், அந்தக் காரணத்தாலேயே 'ஜகத் முழுவதும் அவனே' என்னும் வ்யவஹாரம் உபபந்நமாகின்றது என்றும் சொல்லப்பட்டது. இப்பொழுது 'ஜகத்தின ஸ்வரூபம் பகவத் கடாக்ஷாதீநமாயிருப்பது போல, அதன் பெயரும் அவன் அதீநமே, அதாவது-அவன் அந்த ஜகத்தில் அநுப்ரவேசித்து அதற்கு பெயரையும் கொடுக்கிறான்' என்பது சொல்லப்படுகின்றது. அவனே ஸகல ஜகத்தாக இருப்பது போல, ஜகத்திலுள்ள பற்பல வஸ்துக்களைக் குறிக்கும் ஸகல சப்தங்களும் அவனுக்கும் வாசகமாகும் என்று சொன்னதாயிற்று. பகவான், ஜகத்திற்குக் கேவலம் நிமித்த காரணமாத்ரமன்று; உபாதான காரணமும் அவனே என்பது தாத்பர்யம். இப்படி இரண்டு காரணங்களாகவும் அவன் இருப்பதை அவனுடைய ஒரு விசேஷித்த ஐச்வர்யமாகப் பேசுகிறார்.

[ப-ரை] ஹே விபோ - ஹே பகவன்! அஸ்ய - இந்த, சராசரஸ்ய - ஜங்கம ஸ்தாவர வஸ்துக்களை நிறைந்துள்ள ப்ரபஞ்சத்தினுடைய, நாமாநி - பெயரும், ரூபவது - ஸ்வரூபம் போல, ஏவம் - இவ்விதமே, இஹ - இந்த விஷயத்தில், [அதாவது பகவானையும் ஜகத்தையும் ஒன்றுபோலப் பேசும் விஷயத்தில்], [illegible] - உன்

யே த்வத்கடாக்ஷலவலக்ஷ்யமிவ க்ஷணம் தே
ஐஶ்வர்யமீத்ருஶமனன்யலப்யமபவன் ஹி பும்பி: ।
யத்தேவ ஸம்ஜகடிரே வர [illegible] தத்வம்
தேஷாமபி ஶ்ருதிஷு தந்மஹிமத்வஸாம்யம் ॥ ௩௪

---

னுடைய அதீநமே [அதாவது - நீ அதற்கு ஆத்மாவாயும், அது உனக்குச் சரீரமாயும் இருப்பதனாலேயே அவை இரண்டும் ஒன்றுபோலப் பேசப்படுகிறது என்பது கருத்து]. தே - உன்னுடைய, ஈத்ருசம் - இப்படிப்பட்ட. இதம் ஐஶ்வர்யம் - இந்த ஐச்வர்யமானது, [அதாவது - நீ ஜகத்திற்கு நிமித்தகாரணமாகவும், உபாதானகாரணமாகவும் இருப்பது], ஶ்ருதிஷு - பஹுவான ச்ருதி வாக்யங்களில், உதிதம் - சொல்லப்பட்டிருக்கின்றது. அயம் - இதானது, [இந்த ஐச்வர்ய குணமானது], பாபீயஸாம் - பாபத்தால் நிறைந்துள்ளவர்களுக்கு த்வயி - உன் விஷயத்தில், மோஹஹேது: - ப்ரமத்திற்குக் காரணமாகின்றது. அஹோ - ஆச்சர்யம். [ச்ருதி வாக்யங்களில் பகவானுடைய இந்த ஐச்வர்யம், அவனுக்கும் ப்ரபஞ்சத்திற்குமுள்ள சரீரி சரீர பாவத்தைக் கொண்டு வ்யக்தமாய் விவரிக்கப்பட்டிருக்க, சிலர் ப்ரமத்திற்கு ஹேதுவிராமலிருக்குமிடத்தில் ப்ரமத்தை அடைந்தவர்களாய், 'ஜகத்தும் பகவானும், குடமும் மண்ணும் போல, அபிந்ந த்ரவ்யங்களே' என்று சொல்லுகிறார்களே! இது என்ன மோஹம்? என்று ஆச்சர்யப்படுகிறார்.]

34. 'சதுர்முக ப்ரஹ்மா முதலான சிலரும் ஜகத்தின் ஸ்ருஷ்டியைச் செய்கிறார்களென்பதும், பகவானாகிற உன்னுடைய கடாக்ஷத்திற்கு அவர்கள் பாத்ரமாக இருப்பதனாலேயே உபபந்நமாகின்றது' என்கிறார். பகவான், ஸ்ருஷ்டியைச் செய்வதற்கு ஆரம்பிக்கும் பொழுது 'தான் பஹுவாக ஆக வேணும்' என்று ஸங்கல்பித்து, அதற்காக ஸமஷ்டி ஸ்ருஷ்டியை மாத்ரம் செய்து, பிறகு வ்யஷ்டி ஸ்ருஷ்டியைச் செய்வதற்கு சதுர்முக ப்ரஹ்மா முதலான சிலரை நியமிக்கிறார். அப்படி அவனுடைய நியமத்தை அநுஸரித்து, சதுர்முகன் முதலானவர்களும் அவனாலே கொடுக்கப்பட்ட சக்தியை உடைத்தானவர்களாய், வ்யஷ்டி ஸ்ருஷ்டியைச் செய்கிறார்கள். ஆகையால் சதுர்முகாதிகளின் ஐச்வர்யம் முழுவதும் பகவததீநமே.

[பதவுரை] யே - எவர்கள், க்ஷணம் - ஒரு க்ஷணகாலம், த்வத்கடாக்ஷலவலக்ஷ்யமிவ - உன்னுடைய கடாக்ஷ லேச மாத்ரத்திற்கு லக்ஷ்யம்போல, [அபவன் - ஆனார்களோ], தே - அந்த, பும்பி: - புருஷர்களால், அன்யை: - [மற்றவர்களால்] அடையக் கூடாததான, ஈத்ருசம் - இப்

# கும்பகோணம் திவான்பஹதூர் V. K. ராமாநுஜாசாரியார் எழுதி அச்சிட்ட தமிழ் புஸ்தகங்கள்.

1. ச்ரௌதம் — விலை ரூ. 1—0—0

இதில் வேதத்தில் கர்மகாண்டத்தில் சொல்லப்படும் அக்னி ஹோத்ரம், தர்சம், பூர்ணமாஸம் என்கிற இஷ்டிகளும், அக்னிஷ்டோமம் என்கிற ஸோம யாகமும் விரிவாயும், மீமாம்ஸையைப் படிக்கிறவர்களுக்குத் தெரியவேண்டிய மற்ற யாகங்கள் சுருக்கமாயும் சொல்லப்படுகின்றன. வேதாந்த தீபிகையில் அச்சிடப்பட்டுவரும் மீமாம்ஸா சுருக்கத்தைப் படிக்கிறவர்களுக்கு இது அவசியம் வேண்டியது.

2. ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த கீதாபாஷ்யம் கிரந்த அக்ஷரத்திலும் அதற்கு எளிதான தமிழ் நடையில் உரையும், அதின் வ்யாக்யானமான தாத்பர்ய சந்திரிகையிலிருந்து குறிப்புகளும் அடங்கியது.

| | |
|---|---|
| முதல் ஆறு அத்தியாயம் | ரூ. 1—4—0 |
| இரண்டாவது ஆறு அத்தியாயம் | ரூ. 1—0—0 |
| கடைசி ஆறு அத்தியாயம் | ரூ. 0-12—0 |

3. ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் உள்ள அதிகார ஸங்கிரஹப் பாட்டுகளும், அவைகளுக்கு எளிதான தமிழ்நடையில் பதவுரையும், கருத்தும் விசேஷமான அர்த்தங்களின் குறிப்பும் அடங்கியது. 0—8—0

4. அதே புஸ்தகத்தில் பிரமாணங்களாகக்காட்டப்பட்ட ஸம்ஸ்கிருத வசனங்களுக்கும், தமிழ் வசனங்களுக்கும், அருப்பதங்களுக்கும் எளிதான தமிழ்நடையில் பொழிப்புரை. ரூ. 1—0—0

5. அதே புஸ்தகத்தில் ஒவ்வொரு அதிகாரத்தில் முதலிலும் கடைசியிலுமிருக்கும் அதிகாரஸங்க்ரஹ ச்லோகங்களும் அவைகளுக்கு எளிதான தமிழ் நடையில் பதவுரையும், கருத்தும், விசேஷமான அர்த்தங்களின் குறிப்பும் அடங்கியது. இது அச்சிடப்பட்டு வருகிறது. விலை [illegible] ஆக இருக்கும்.

---

N. B.— இவைகளை வேண்டுகிறவர்கள் கும்பகோணம் பாட்டாசாரியர் தெருவில் ஸ்ரீ-உ-வே சென்னூர் ஸ்ரீநிவாஸ பாட்டாசாரியருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

Registered No. M. 916.

## Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Iudian Companics Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has immediately taken on hand the publication of a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanujà Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is abcut to be issued.

Shares in the Company of Rs. 50 each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

| | | |
|---|---|---|
| *Sriman* | V. V. Sreenivasa Iyengar, B.A., B.L. | *President* |
| ,, | K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate. | *Genl Secy.* |
| ,, | R. Kesava Iyengar., M.A., B.L. | *Exec: Secy.* |
| ,, | T.D. Sreenivasachari, M.A , B.L. | ,, |
| ,, | S. Aravamuda Iyengar, B.A., B.L. Advocate. | *Treasurer.* |
| ,, | N.T. Shamanna, Solicitor. | *Director* |
| ,, | M. Sudarsana Iyengar, Merchant. | ,, |
| ,, | C.V. Venktaramana Iyengar, B.A , B.L. Coimbatore. | ,, |
| ,, | T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore. | ,, |

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamanta Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.

ஸம்புடம் 23] FEBRUARY 1935 [ஸஞ்சிகை 8

# ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

8-FEB 1935
MADRAS

பவ ஹுல



ஸ்தமீ

PUBLISHED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha,

MADRAS.

ஸ்ரீ:

## விஷய ஸூசிகை.


1. மாத்ரு பித்ரு பக்தி:—[மஹா மஹோபாத்யாய—ஸாரஸ்வத ஸார்வஜ்ஞ தட்டை ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 579
2. மோக்ஷ ஸ்வரூபம்:—[ஸ்ரீ. உப. K. ராஜகோபாலாசாரியர் B. A., B. L. வக்கீல், கூடலூர்] ... 583
3. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 587
4. க்ரந்த விமர்சம்:— ... 598
5. கடிதங்கள்:— ... 599
6. ஸம்பாதகீயம்:— ... 600
7. பரிகர விஜயம்:—[புத்தகக்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்.] ... 107
8. ஸ்ரீ பஞ்சஸ்தவம் —ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர். ... 69
9. திவ்ய ஸூரி சரிதம்:— [வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 97


---

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை


ஓர் மாதத் தமிழ்ப் பத்ரிகை

வருஷச் சந்தா: ரூ. 3.


தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றையும் "ஸம்பாதகர், ஸ்ரீ வேதாந்த தீபிகை, ராமஸ்வாமி தெரு தியாகராஜ நகர், மதராஸ்" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு,
தியாகராஜ நகர் போஸ்ட்,
மதிராஸ்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

த்ரிஸாவதகஜநம் தரோயுவணும்
ஸவிகாஸமளாஸ வாஸாஹ்லாம் ஷயாதெ ।
ஸவாஸஸகக ஸமாவ்யதாதநாஜெ
விஜயஸவெ ஸதிஸஹம் தேமதவதூ ॥

# வேதாந்த தீபிகை


ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 23] பவஹுமி தைமீ [ஸஞ்சிகை 8


ஸ்ரீ:

## மாத்ரு பித்ரு பக்தி.

(மஹா மஹோபாத்யாய—ஸாரஸ்வத ஸார்வஜ்ஞ தட்டை, ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசாரியர்)

[ஸஞ்சிகை 7, பக்கம் 569 தொடர்ச்சி]

கௌசிகன் எல்லா தர்மங்களையும், விசேஷித்து மாத்ரு பித்ரு பக்தியையும் தர்மவ்யாதரிடம் கேட்டறிந்து மனமகிழ்ச்சியை அடைந்து தன்னிடம் சென்றார். தர்மவ்யாதர் மட்டுமல்ல. ஸத்யவானும் இவ்வண்ணமாகவே மாத்ரு பித்ரு பக்தியினால் ச்ரேயஸ்ஸை யடைந்திருக்கிறான். இந்த ஸத்யவானுடைய மாத்ரு பித்ரு பக்தியை ஸ்ரீ மஹாபாரதத்தில் வந பர்வம் இருநூற்று தொண்ணூற்று எட்டாவது அத்யாயத்தில் காணலாம். ஸால்வதேசாதிபதியான த்யுமத்ஸேநனுடைய புதல்வன் ஸத்யவான். தாய்தந்தைகளும் தானும் ஸத்யத்தையே சொல்லுகிறபடியால், 'ஸத்யவான்' என்று அன்வர்த்தமான பெயர் அவனுக்கு ஏற்பட்டது. அவன் தேஜஸ்வியாகவும், சிறந்த புத்தியுள்ளவனாகவும், வீரனாகவும், பொறுமையுள்ளவனாகவும், உண்மையே பேசுகிறவனாகவும், மாத்ரு பித்ரு வத்ஸலனாகவும், கொடையாளியாகவும், சிறந்த அழகு வாய்ந்தவனாகவும் இருந்தான்.

158955

இந்த ஸத்யவானை [illegible]தேசாதிபதியான அச்வபதியின் குமாரத்தியாகிய ஸாவித்ரீ, தானாகவே வந்து கணவனாக வரித்தாள். ஸத்யவான் அந்த ஸாவித்ரியை விதிப்படி மணந்துகொண்டு அந்தனும், வயது முதிர்ந்தவனும், தரித்ரனுமான தன் தகப்பனாரையும் தாயையும் பரதேவதா பாவனையோடு பூஜித்து வந்தான். ஆனால் அவன் அல்பாயுஸ் உள்ளவனாக இருந்தான். அஸாதாரணமான மாத்ரு பித்ரு பக்தியினாலும், தன் பத்நியான ஸாவித்ரியின் பாதிவ்ரத்ய மஹிமையினாலும், அல்பாயுஸ்ஸை அகற்றி தீர்க்காயுஸ்ஸையும், நஷ்டமான ராஜ்யத்தையும், நஷ்டமான பித்ரு த்ருஷ்டியையும் அபரிமிதமான ஐச்வர்யத்தையும், கீர்த்தியையும், தர்ம சிந்தனையையும் பெற்று வாழ்ந்திருந்தான். அவன் காட்டில்போய் விறகு வெட்டிக்கொண்டு வருவதாக உத்தேசித்து மாதா பிதாக்களிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்படுந்தருணத்தில் நாரதரால் அன்று ஸம்பவிக்கப்போகிற அவனுடைய மரணத்தை அறிந்தவளான பத்நியான ஸாவித்ரியும் கூடவே கானகம் ஏகினாள். ஸத்யவான் காட்டில் விறகுவெட்டிக் களைத்து மயக்கமுற்று ஸாவித்ரியின் மடியில் படுத்தான். யமதர்மராஜன் தானே நேரில் வந்து பாசத்தால் கட்டி ஸத்யவானைக் கொண்டு செல்லவே, ஸாவித்ரியானவள் தன் பாதிவ்ரத்ய மஹிமையினால் தர்மராஜனைக் கண்டு பலவிதமாகத் துதித்து அவரிடமிருந்து அநேக வரன்களைப் பெற்று கடைசியாக ஸௌமங்கல்யப் பிச்சை எடுத்து ஸத்யவானுடைய உயிரை மீண்டும் வரவழைத்தாள். ஸத்யவான் உயிர் வந்தவுடன், தூங்கி எழுந்திருந்தவன்போல் ஸாவித்ரியின் மடியிலிருந்து எழுந்திருந்து ஸாவித்ரியை நோக்கி நெடுநேரமாகத் தூங்கி விட்டேன். நடு நிசி வேளை இது. ஆயினும் இப்பொழுதே நாம் இருவரும் நம் மாதா பிதாக்களிருக்கும் ஆச்ரமம் போய் சேரவேண்டும்.

“ [illegible] ||”



இவற்றின் பொருள்:— “ஸாவித்ரி, என் தலைவலி நீங்கிவிட்டது. என்னுடைய அங்கங்கள் ஸ்வஸ்தங்களாக இருக்கக் காண்கிறேன். தாய் தந்தையர்களோடு சேர்க்கையை விரும்புகிறேன். அஸமயத்தில் நான் ஒரு பொழுதும் இதற்குமுன் ஆச்ரமத்தை விட்டு அகன்றவனல்ல. ஸந்த்யா காலம் வராமலிருக்கும் தருணத்தில் நான் ஆச்ரமத்தை விட்டு வெளிப் புறப்பட்டால் என் மாதா என்னைத் தடுப்பாள். பகலில்கூட நான் வெளிப் பட்டுப்போனால் என் மாதா பிதாக்கள் ஸந்தாபத்தை அடைவார்கள். நான் ஆச்ரமம் வரும் ஸமயம் கொஞ்சம் தவறினால், பிதா அச்சமயத்தில் வஸிக்கிறவர்களோடு சேர்ந்து என்னைத் தேடுவார்கள். கல்யாணியே, என்னைப் பற்றி நான் வருத்தமடையவில்லை. பிதாவைப்பற்றியும் பர்த்தாவை அநுஸரித்திருப்பவளும், மிக்கத் துயரத்தில் ஆழ்ந்திருப்பவளுமான மாதாவைப் பற்றியும் வ்யஸநிக்கிறேன். என் நிமித்தமாக அவர்கள் இப்பொழுது அதிக ஸந்தாபத்தை யடைவார்கள். என்னால் காப்பாற்றத்தக்கவர்களான அவ்விருவர்களும் ஜீவித்திருக்கவேண்டுமே! என்று வ்யஸநிக்கிறேன். அவர்களுக்கு ப்ரியத்தைச் செய்யவேண்டுமென்றே நான் ஜீவித்திருக்கிறேன். எனக்கு மாதா பிதாக்கள் பரதேவதைகள். என்னால் எப்பொழுதும் பூஜிக்கத்தக்கவர்கள். இவ்வண்ணம் சொல்லிவிட்டு குருபக்தனும் குருப்ரியனுமான ஸத்யவான் இரு கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு உரத்த சப்தத்துடன் ரோதனம் செய்தான். ‘ஸாவித்ரி, பிதா மாதாக்களைக் காண விரும்புகிறேன். விரைவாகச் செல்வாயாக. அவர்கள் உயிரிருக்க நான் பார்ப்பேனா? அவர்களுக்கு ஏதாவது அரிஷ்டம் ஏற்பட்டு அதை நான் பார்ப்பேனாகில் உயிரை விட்டுவிடுவேன். இது ஸத்யம். என் ஹ்ருதயத்திலிருக்கும் ஆத்மாவைத் தொட்டு சபதம் செய்கிறேன்” என்று சொன்னான். இவ்விதமான மாத்ரு பித்ரு பக்தியைச் செய்த ஸத்யவான், தீர்க்கமான ஆயுளையும், நஷ்ட ராஜ்யத்தையும், குபேரனுக்கு ஸமமான ஐச்வர்யத்தையும், புகழ்ச்சியும் பெற்று மாத்ரு பித்ரு ப்ரஸாதத்தால் அக்ஷயமான பாரலௌகிக ஸுகத்தையும் பெற்றான். பிறப்பு இறப்பு இல்லாத பரமபுருஷன், “அஜாயமானோ [illegible] விஜாயதே” என்கிற ச்ருதி வசனத்தின்படி.

“பரித்ராணாய ஸாதூ⁴நாம் விநாஶாய ச து³ஷ்க்ருதாம் ।
த⁴ர்மஸம்ஸ்தா²பநார்தா²ய ஸம்ப⁴வாமி யுகே³ யுகே³ ॥”

என்கிற தன் ஸங்கல்பத்தால், ஸாதுக்களைப் பாதுகாப்பதற்கும், துஷ்டர்களை நிக்ரஹிப்பதற்கும், தர்மத்தை நிலைநாட்டுவதற்கும், பூமியில் ஸ்ரீ ராமபிரானாக அவதரித்து எல்லா தர்மங்களையும் அநுஷ்டித்துக் காட்ட வந்தவராதலால், மாத்ரு பித்ரு பக்தியை நன்றாகத் தானநுஷ்டித்துக் காட்டியதோடு அதனால் ஏற்படும் நற்பயன்களை ஸ்வாநுஷ்டானத்தால் உலகத்தாருக்குக் காட்டி இருக்கிறார்.

“விலபந்தீம் ததா² தீ³நாம் கௌஸல்யாம் ஜநநீம் தத꞉ । உவாச ராமோ த⁴ர்மாத்மா வசநம் த⁴ர்மஸம்ஹிதம் ॥ நாஸ்தி ஶக்தி꞉ பிதுர்வாக்யம் ஸமதிக்ரமிதும் மம । ப்ரஸாத³யே த்வாம் ஶிரஸா க³ந்துமிச்சா²ம்யஹம் வநம் ॥

அவ்வாறு தைந்யத்துடன் புலம்புகிற தாயாரான கௌஸல்யையைப் பார்த்து தர்மத்தில் நிலைபெற்ற மனதுடன் கூடின ராமன் தர்மத்தோடு சேர்க்கையுற்ற வசநத்தைப் பின் வருமாறு உரைக்கலானார்: “பிதாவினுடைய வாக்யத்தை மீறுவதற்கு எனக்கு சக்தியில்லை. அம்மா! உன்னைத் தலையால் வணங்கி அநுக்ரஹத்தைச் செய்ய ப்ரார்த்திக்கிறேன். கானகம் செல்ல விரும்புகிறேன்” என்று.

இந்த ஸ்ரீ ராமபிரானுடைய வசநங்களால் ‘பிதாவினிடத்திலும், மாதாவினிடத்திலும் உள்ள பக்தியானது கரைகடந்ததாக இருக்கிறது’ என்று யாவரும் அறியலாம். அர்ஜுநன் மாத்ரு வாக்யத்தினால் தன்னால் ஜயித்துக்கொண்டு வரப்பட்ட பாஞ்சாலியை எல்லாப் ப்ராதாக்களோடும் மணந்தான். பரசுராமன் பித்ரு பக்தியினால் ஆலோசியாமல் பிதா சொல்படி மாதாவைக் கொன்றார். ‘கண்டு’ என்கிற மஹர்ஷியானவர் பித்ரு பக்தியினால் அவர் சொல்படி பசுவை ஹத்யை செய்தார். இப்படி மாத்ரு பக்தியினாலும், பித்ரு பக்தியினாலும் தகாத கார்யங்களைச் செய்தும் ஐஹிகாமுஷ்மிக ச்ரேயஸ்ஸுக்களை அடைந்தவர்கள், கணக்கெண்ண முடியாதவர்கள். இதிஹாஸங்களும் புராணங்களும் இதை ஸவிஸ்தாரமாகக் கூறுகின்றன. விஸ்தரபயத்தால் லேகநத்தை இத்தோடு நிறுத்தலானேன்.

மாதா பிதா ச [illegible] பூஜநீயௌ [illegible] ।
இதி வேத³ஶாஸ்த்ர விஹிதம் [illegible] ॥

---

ஸ்ரீ:

# மோக்ஷ ஸ்வரூபம்

[ஸ்ரீ. உ.வே. K. ராஜகோபாலாசாரியர், B. A., B. L. வக்கீல், கடலூர்]

[ஸஞ்சிகை 7, பக்கம் 564 தொடர்ச்சி]

பகல் ராத்ரி விபாகமின்றி நாள் நீடித்தும் காலம் என்ற முதல் தத்வம் துயர்ந்து நீடித்திருப்பதால் இவ்வமரர்கள் அயலுற்றன்றோ? விராமமில்லாமல் கைங்கர்யமும் செய்வார்களோ! என்ற சங்கை உத்பவிக்க இடமுண்டு. அதற்கு அவர்கள் (நித்யஸூரிகள்) ஸ்வச்சந்தமாக க்ரீடிக்கிறார்களென்றும், ஸ்வாநுபவத்தின் பொருட்டு அந்நபாநாதிகளை ஸ்வீகரிக்கின்றார்களென்றும், முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ஆழ்வார் தானும், திருமலையில் வேங்கடாசல நாயகனை எண்திசையு முள்ளப் பூப்பறித்து அர்ச்சிக்கிறார்களென்று அருளிச்செய்திருக்கிறார். ஆகையினால் இவ்வுலகம்போல் உள்ள அநேக ஜநஸ்தானங்களில் பகவான் கோயில்கொண்டிருக்கும் திவ்ய ஸ்தானங்களில் அவர்கள் பூவைச் சிந்துகிறார்களென்று அருளிச்செயலிருக்கிறது. மேலும், விக்ரஹ அவயவங்களாகவே நிருக்கவேணுமென்று நியமமுமில்லை. அப்ராக்ருத ஸூக்ஷ்மங்களாகவும் ப்ரசரிக்கக்கூடும் அவயவங்களும், பொறிகளும், கர்மேந்திரியங்களும் அன்றி தர்மபூத ஜ்ஞாநத்தாலேயும் ஸ்வஸ்வ அஸாதாரண தர்மபூத ஜ்ஞாநத்தாலேயும், பகவத் க்ருபாகடாக்ஷத்தால் வந்த சக்தி பலாதிகளாலேயும் எந்த ஜ்ஞாநத்தையும் அவகாஹிக்கவும் எந்த தேசத்தையும் வ்யாபரிக்கவும், கூடும். ஸ்வச்சந்தமாக ஸுஷுப்தி தசையும் அநுபாவ்யமாகலாம்.

அங்கே அதிசயாவஹமான உத்ஸவாதி ஹேதுக்கள் உண்டோவென சோதிக்கலாம். உத்ஸவாதி ஹேதுக்கள் பல உள. அங்ஙனேயே அவைகள் காலதேச வரையறைப்பு அதாவது அளவிடப்படாமையாய் இருக்கக் கூடும். சிலவற்றை இங்கு எடுத்து பிரஸ்தாபிப்போம்.

இப்பூலோகத்து ஸம்ஸாரிகள் முக்தர்களாய் வைகுந்தம் ஏறும்போது, ஆழ்வார் அருளிச்செய்தபடி அது ஒரு உத்ஸாஹ நாளல்லவோ! ‘கோவிந்தன் குடியடியாரை’ எதிரேற்பதில் உள்ள அதிசயாவஹமான ப்ரீதி, உத்ஸாஹம், ஸௌப்ராத்ருத்வம், புதிதான ஸந்நிதானேறு கலக்கிற கலப்பும்யோலுள்ளரஸங்கள் நவநவமாய் கால விசேஷங்களில், கிடைக்கக்கூடும். அவனை எதிரேத்து இப்படிக்கு வந்த முக்தனை எல்லாரும் சூழ்ந்து கோஷ்டியாகி

வைகுண்ட கத்யத்தில் ப்ரஸ்தாபித்திருக்கிறபடி பகவானுடைய திருவடிகளில் சேர்ப்பிக்கிற உத்ஸாஹாவேசமும் அநுபாவ்யத்தில் ஒன்று. இவ்வானந்தங்கள் கதாசித்தாய் நின்று விடுமே. நித்யோத்ஸவமாய் நவநவமாய் இருத்தலில்லையே என்றும், சங்கை உத்பவிக்கலாம். அதற்கும் பரிஹாரம் சொல்லுகிறோம். பகவத் ஸ்ருஷ்டி ஆநந்தமல்லவோ? நாம் ஒவ்வொருவரும் ஓர் விசித்ரமான ஒட்டகையையோ, யானையையோ, ஸமுத்ரத்தையோ, புதிதாய்ப் பார்க்கையில் எவ்வளவு நேரம் அக்காக்ஷியிலிருந்து மீளாமல் பார்ப்போம்? அகிலாண்டகோடி ப்ரஹ்மாண்டநாயகனான லக்ஷ்மீபதனான நாராயணன், எந்தெந்த புதிதான ஜந்துக்களை நிர்மாணம் செய்கிறானோ; அவ்வளவையும் பார்த்து அநுபவிக்கக் காலந்தான் போதுமோ! இத்தனையும் வ்யாபித்தால் விராமமும் வேண்டி வருமோ! கேவலம் பகவத் ஸ்ருஷ்டியில் ஏகதேசமான இந்த பூமியில் தன்னே எத்தனை ஜந்துக்கள் அவ்வாகாரங்களில்லாமலே அவை பின் ஸந்ததியில்லாமல் மாண்டுபோயின. தற்காலம் எத்தனை ஜந்துக்கள் மாண்டுபோய்க்கொண்டிருக்கின்றன. சாஸ்த்ரத்தில் சொல்லியபடி பூமியில் எத்தனையோ 5 மைல் நீளமும் 2 மைல் அகலமுமுள்ள ஜந்துக்கள் ஒருகாலத்தில் வியாபரித்து பூமியில் ஸஞ்சாரம் பண்ணினவென்று அவைகளின் எலும்புகளால் நமக்குத் தெரிகிறது. 'டோ டோ' என்கிற பக்ஷி ஜாதிகளும் இப்போது லுப்தமாய்விட்டன. இப்படி ஒரு லோகத்தில் அற்புதமான ஸ்ருஷ்டிகள், தானே மறைந்தும் தோன்றியும் ஆகுமானால் அநந்தகோடி லோகங்களில் எத்தனை காக்ஷிகள் கிடையா?

இவ்வளவு சொன்னபிறகு முக்தனுடைய பகவத்சேஷைகரஸத்வம் அவனை, அவனுக்கு கைங்கர்யம் செய்யத் தூண்டுவிக்குமென்று சொல்லவும் வேண்டுமோ! இதை முக்யமாகக் கொண்டும், பகவத் சாஸ்த்ரத்தில் சொல்லியிருப்பதைக் கொண்டும், பகவதாராதநம் முதலிய கைங்கர்யம் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ப்ராப்தமென்று நடப்பு அபிப்ராயமும் ஸரியே. ஆனால் பகவான் ஸத்ய ஸங்கல்பனல்லவோ! அவனுக்குத் திருமஞ்சனம், சைத்யோபசாரம் இவையெல்லாம் முக்தன் செய்யவேண்டியது அவச்யமோ? என்ற கேள்விகளுக்கு சோத்யங்கள்—முக்தன் கைங்கர்யம் செய்வது அவனுக்கு அவச்யப் பட்டதல்ல. வத்ஸலனுக்கு ஆபரணம் பூட்டி வைப்பதில் பிதாவுக்கல்லவோ ஆனந்தம்! அதுபோல பகவானுக்குகப்பாய் இவனுக்கு ப்ரீதிகரங்களான அர்ச்சனை முதலான உபசாரங்களை அவன், ப்ரீதியாய் இவனுடைய உகப்புக்காக ஸ்வீகரித்து கொள்ளுகிறானென்றே கொள்ளவேண்டும். ப்ரியமுள்ள பெண்ணுக்கு அலங்கரித்துப் பூச்சூட்ட வேணுமென்ற தாயின் கோரிக்கைக்குப் பெண், இணங்குவதுபோல் முக்தனுடைய ஆராதனத்தை பகவான் பெற்றுக்கொள்வது முக்தனுக்கு ப்ரீதி உள்ளூர அடங்காமை



யைக் கண்டு அவசநாய் செய்யும் ஸ்வச்சந்த கைங்கர்யம் கட்டளையால் வந்ததல்ல. ஸ்வயம் ஆவிர்பாவமே!

இக்கைங்கர்யம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் "பாகவத பர்யந்தமாய் போரு" மென்று ஸ்ரீமத்தேசிகன் அருளிச்செய் திருப்பதை அங்கே பரக்கக் காணலாம்.

பாகவதர்கள் யாரென்று விசாரிக்க, இவ்விடத்தில் ப்ராப்தம்:—பகவத் சேஷைகரஸஜ்ஞர்களே பாகவதர்கள். அவர்கள் உகப்பே பாகவத கைங்கர்யம். அவர்களையே 'ததீயர்கள்' என்று சொல்ல ந்யாயம். அப்படி உள்ளார் வர்த்தமான தசையில் காணோமே! என்று சங்கித்து, பாகவத கைங்கர்யம் என்ற விசேஷம் ஏதோ ஏகதேசிகளைப்பற்றி மாத்திரம் அல்லவோ! அது காதாசித்கமல்லவோ! என்று எண்ணமிட்டு விசனிக்க இடம் வேண்டாம். பரமைகாந்திகளின் கோஷ்டியில் ஒருவர் அதற்காக பாகவத காஷ்டையில்லை என்று, நாம் நினைக்க ஒண்ணாது பகவத் ஸ்மரணமும், பகவானுக்கு நாம் உரியவர்களென்றும், விநியோக அர்ஹர்கள் என்றும், உள்ள மனஸ்ஸின் அத்யவஸாயம் ஒருக்ஷணம் ஒருமனிதனுக்கு உண்டானால், மேல்மேலும் அது அவனுக்கு பக்தியை உண்டுபண்ணி அவனை கரையேற்றும். இவ்விஷயத்தில் கீதாசார்யனே:—"என்னிடத்தில் ஒருவனுக்கு பக்தியிருந்தால், அவனுக்கு பதேபதே பாப நிவ்ருத்தியும் அதனால் விசேஷித்த பக்தியும் உண்டாய் ஓங்கிவளர்ந்து வைஷ்ணவனாவன், என்று நீ சபதம் செய்" என்று அர்ஜுநனுக்கு 13 அத்யாயத்தில் உபதேசித்திருக்கிறார். ஆகையினால் 'பாகவதர்கள் இங்கும், அங்கும், எங்கும் உளார்' என்று நினைத்தே எவ்வெவர்களையும் சோதனை செய்யாமல் நாம் விச்வஸித்து ஆதரணீயர்களாய் கொண்டு போந்தால் அதுவே ஒரு கைங்கர்யமாகும்.

இப்படி ஏற்பட்ட அப்ராக்ருத திவ்யதேசத்தில் ஆழ்வார் அருளிச்செய்திருக்கிறபடி நித்யஸூரிகளும், முக்தர்களும் தாந்தாமிடத்தில் அவர் எழுந்தருளும்போது, 'நல்வரவு ஏற்றார்கள்' என்று காணுகிறோமே! அங்கே மாகஸ்த்வ விவாஹமும், வஸ்து விவாஹமும் உண்டாமென அதாவது (Sense of Property) சங்கை சிலருக்கு உண்டாகலாம். சற்று ஆழ்ந்து பார்த்தால் அதற்கு இடமில்லை. ஏரி, குளம், ஜலம் முதலான ஜல ஆச்ரயங்கள் நிறைந்த இடத்தில் "என்னுடையது உன்னுடையது" என்ற விவாதம் காண்கிறோமோ! நவீந அர்த்த சாஸ்த்ரங்களில், சொல்லுகிற (Marginal utility) அந்த தேசத்தில் காண்பதரிது. ஆகையால் க்ரயவிக்ரயத்துக்கு அவச்யங்களான ந்யூந ஸங்கோசாதிகள் எவ்வஸ்துவும் ஏராளமாயும் விபஜிக்கவேண்டிய அவச்யமில்லாத அகண்டமாயும், ஸொத்துக்

கும் விலக்கும் ப்ரஸக்தி எதெது? நினைத்த விடத்திலும் நினைத்த திசையிலும், நினைத்த நேரத்திலும், ஸர்வ கர்மங்களும் எதேஷ்டமாய் கிடைக்குமானால் விபஜித்து வாழ்தல் கிடையாது. ஆழ்வார், இடத்திலுள்ள ப்ரீதியாலும், ஸௌஹார்தத்தாலும், ஏதோ ஒரு ஸ்தல விசேஷத்தை தாத்காலிகமாய் விபஜித்து நித்ய ஸூரிகள் அவருக்கு ப்ருதக்காய் உபசரித்தார்களென்றால், அவை ஆரோபிதங்களென்றே கொள்ளவேண்டும்.

அங்குள்ளார்க்கு சில சில ஸமயங்களில் அவர்கள் இயற்கை ஸ்வபாவத்திலுள்ள ஸாத்விக ருசிகள் கொண்டு சிலர், பகவன் முகோல்லாஸமாய் மண்டபங்களை வெகு சீக்கிரத்தில் நிர்மாணிக்கவும், பூக்களால் சிலர் அலங்கரிக்கவும், தார்க்கிக ருசியுள்ளவர்கள் பகவானுடைய ஒவ்வொரு குணத்தை எடுத்துக்கொண்டு மற்றொரு கல்யாண குணத்தைக் காட்டிலும், இது சிறந்தது "என்று நிருபிக்கவும், மற்றவர்கள் அதை ஆதரவோடு கேட்கவும் உண்டென்று ஆழ்வார் பாசுரத்தினால் அறிகிறோம். "ஸமயிகள் பிதற்றும் பித்தென்" றல்லவோ அநேக இடங்களில் அருளிச்செயல். ஒரு குண ஆவிஷ்காரத்தாலேயே, சிலர் உன்மத்தர்களாய் க்ரமமில்லாமல் அதைப்பற்றி பிதற்றிக்கொண்டிருக்கின்றார்களென்றல்லவோ நமக்கு அறிவு. வேறு சிலர் ஆழ்வாருடைய திருவாய்மொழியை ரஸாநுபவம் பண்ணிக்கொண்டிருக்கிறார்களென்றும், அது பகவானுக்கு நிரந்தரமான சோபாவர்த்தகம் என்றல்லவோ ஆழ்வார் அருளிச்செயலால் ஒருவாறு அறிகிறோம்.

இனி இதில் கண்ட ஒவ்வொரு அம்சத்தையும் விமர்சித்து விவரிக்க அடியேனுக்கு அபிப்ராயமானாலும், க்ரந்தம் விரியும். "ச்ரோதா ச துர்லப:" என்று சொல்லுவதுபோல் ச்ரோதாக்கள் நல்ல க்ரந்தங்களுக்கே கிடைப்பது அரிது என்றால், என் சிற்றறிவிற்கு எட்டி இந்த வ்யாஸத்தை விஸ்தரிப்பது உசிதமல்லவென்று உறுதியால் சுருக்கி எழுதியிருக்கிறேன். மஹாநுபாவர்கள் குற்றங்களை க்ஷமித்து அடியேனை அநுக்ரஹிக்கவேணுமென்று ப்ரார்த்தித்துக்கொள்ளுகிறேன்.

---

ஸ்ரீ:

# மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

(தொடர்ச்சி ஸம்-23 ஸஞ்-7, 558-பக்கம்.)

## மூன்றாவது அத்யாயம்—முதல்பாதம்.

83. இதில் ப்ரதாநமான கர்மங்களுக்கு உதவியைச் செய்வதை எப்படித் தெரிந்து கொள்ளுகிறது என்று விசாரிக்கப்படுகிறது. உதவியைச் செய்வதைச் சேஷம் என்றும், உதவியைப் பெற்றுக்கொள்வதைச் சேஷியென்றும் சொல்லுகிறது. சேஷமாயிருப்பதென்பதை அறிய முடியுமா? இந்த அத்தியாயத்தை ஆரம்பிக்கலாமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:— முடியாது. ஏனென்றால், ஒரு சொல்லும் அதைச் சொல்லவில்லை. சொற்களுக்கு எந்த அர்த்தம் ஏற்பட்டிருக்கிறதோ, அதைத்தான் அவைகளைக் கொண்டு அறியலாம். ஏற்பட்ட அர்த்தமானது க்ரியைக்கும் காரகத்துக்கும் உள்ள ஸம்பந்தம். காரகம் என்றால் ஒரு வேலையால் செய்யப்படுவது, அல்லது அதற்கு உதவியைச் செய்வது, அல்லது அது செய்யுமிடமாயிருப்பது. இவைகளை முறையே கர்மம் என்றும், கரணம் என்றும், அதிகரணம் என்றும் சொல்லுகிறது. ஆகையால் சேஷமாயிருப்பதை அறிய முடியாமையால் இந்த அத்தியாயம் ஆரம்பிக்கவேண்டியதில்லை.

ஸித்தாந்தம்:—சேஷமாயிருப்பதை அறிய முடியும். அது அந்வயத்தில் (ஸம்பந்தத்தில்) அடங்கியிருக்கிறது. ஒன்று ப்ரதாநமாயும் (முக்கியமாயும்) ஒன்று குணமாயும் (முக்கியமல்லாததாயும்) இல்லாவிட்டால் அவைகளுக்கு ஸம்பந்தமில்லை. குணங்களான இரண்டுக்கு ஸம்பந்தத்திற்கே யோக்யதையில்லை. ஏனென்றால், ஒன்று மற்றொன்றைத் தேடுகிறதில்லை. இப்படியே ப்ரதாநமான இரண்டுக்கும் ஸம்பந்தமில்லை. ஆகையால் இரண்டுக்கும் ஸம்பந்தம் இருந்தால், ஒன்று ப்ரதாநமாயும் மற்றொன்று அதற்குச் சேஷமாயிருக்கவேண்டும். க்ரியைக்கும் காரகத்துக்கும் உள்ள ஸம்பந்தத்தைச் சொற்கள் எப்படிச் சொல்லுகின்றனவோ; அப்படியே சேஷமாயிருப்பதையும் சேஷியாயிருப்பதையும் அவைகள் சொல்லுகின்றன. ஆகையால் அத்யாயத்தை ஆரம்பிக்கலாம். (அதி–1)

84. சேஷம் என்பது என்ன? அதை இன்னதென்று சொல்ல முடியுமா? சொல்ல முடியும். ப்ரயாஜங்கள் முதலானவைகள் சேஷம், வேறொன்

றுக்காகவே இருப்பதால், வேலைக்காரர்கள்போல—என்று. ஒன்று மற்றொன்றுக்குச் சேஷமாயிருப்பதற்கு ஹேதுவைச் சொல்லலாம். இந்த அடையாளமுடையது சேஷத்தன்மை. வேறொன்றுக்காக இருப்பது ஹேதுவானால் அது லக்ஷணமாயிருக்கக்கூடுமோ என்றால்; பதில் - ஹேதுவான ஆகாரம் வேறு. லக்ஷணமான ஆகாரம் வேறு. ஒரு இடத்தில் இரண்டு விஷயங்கள் சேர்ந்திருப்பதைப் பார்த்து அந்த அறிவின் உதவியால் ஒன்றைத் தெரிவிப்பது ஹேது. மற்றவைகளைக் காட்டிலும் வேறாகக் காட்டுவது லக்ஷணம். ஒன்றில் இரண்டு ஆகாரமும் இருக்கலாம். (அதி-2)

(2) ச்ருதி முதலான ஆறு ப்ரமாணங்களை மேலே சொல்லப்போகிறது. அவைகள் நேராகச் சேஷத்தன்மையைச் சொல்லவில்லை. விதியோடு சேர்ந்தே இந்த வேலையைச் செய்கின்றன. "ஸோமேந யஜேத" என்கிற வாக்யத்தில் விதியானது யாகத்தைச் செய்யும்படி ஒருவனை ஏவுகிறது. "ஸோமேந" என்று சொல்லில் இருக்கும் மூன்றாவது விபக்தியான ச்ருதி ஸோமத்தை அதற்கு ஸாதநமாகச் சொல்லுகிறது. பலனில்லாவிட்டால், ஒருவனும் ஒரு வேலையையும் செய்யமாட்டானாகையால் பலனைக் குறித்து யாகமும் யாகத்தின் வழியாய் ஸோமமும் சேஷமாகிறது. (சாஸ்-186)

85. ஸ்ப்யம், கபாலம் முதலானவை த்ரவ்யம். சிவப்பு முதலானது குணம், அவஹநநம் ப்ரோக்ஷணம் முதலானவைகள் ஸம்ஸ்காரங்கள், இவைகள் மூன்றும் சேஷமாயிருக்கும் என்று எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஸ்வர்க்கம் முதலான பலனும், அதை ஆசைப்படுகிற மனிதனும், தர்சம் பூர்ணமாஸம் முதலான யாகங்களும் சேஷமாயிருக்கலாம். எப்படி என்றால்—யஜமாநன் ஆசைப்படுவதால் பலன் அவனுக்குச் சேஷம், அவனுக்காக அது இருப்பதால். யஜமாநன் யாகத்தைச் செய்து முடிப்பதால் அவன் கர்மத்துக்குச் சேஷம். கர்மம் பலனுக்காகச் செய்யப்படுவதால், அது பலனுக்குச் சேஷம். (அதி-3)

86. அவஹநநம் ப்ரோக்ஷணம் முதலானவைகள் நெல்லின் தர்மங்கள். உத்பவநம்; அவேக்ஷணம் முதலானவைகள் நெய்யின் தர்மங்கள். மாடு கறப்பது, உறை குத்துவது ஸாந்நாய்ய தர்மங்கள். ஸாந்நாய்யம் என்பது பாலும் தயிரும். இவைகள் எல்லாம் ஸ்வர்க்கமான பலனை உண்டுபண்ணுகின்றன. தர்சத்தாலும் பூர்ணமாஸத்தாலும் உண்டாகும் அபூர்வத்தோடு அவைகளைச் சேர்க்கின்றனவா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ஆம். ஸ்வர்க்கத்தைக் கொடுக்கும் ஒரு அபூர்வத்தை ஒப்புக்கொண்டால் போதும். அதற்கு உட்பட்டதாக வேறு அபூர்வங்களைக் கல்பிக்கவேண்டியதில்லை. பலனைக் கொடுக்கும் அபூர்வத்தால் ஏற்படும் தர்மங்களை எந்தத் திரவியத்துக்காகச் செய்தாலும், பலனைக் கொடுக்கும் அபூர்வமுண்டாகலாம். நெல்லின் தர்மத்தை நெய்யிலும், நெய்யின் தர்மத்தை நெல்லிலும் செய்யலாம்.



ஸித்தாந்தம்:—தர்சம் பூர்ணமாஸம் என்று சொல்லப்படுவது ஆறு யாகங்கள், வெவ்வேறு க்ஷணங்களில் செய்யப்பட்டு உடனே போய் விடுகின்றன. ஆகையால் அவைகள் சேர்ந்து பலனைக் கொடுக்கும் அபூர்வத்தை உண்டுபண்ண முடியாது. ஆகையால் ஒவ்வொரு யாகமும் ஒரு அபூர்வத்தை உண்டுபண்ணுகிறதென்றும், இப்படி உண்டாகும் ஆறு அபூர்வங்களும் பலனை உண்டுபண்ணும் அபூர்வத்தை உண்டுபண்ணுகின்றன என்றும் ஒப்புக்கொள்ளவேணும். புரோடாசத்தைத் திரவ்யமாக உடைய யாகத்தால் உண்டாகும் அபூர்வத்துக்காக நெல்லின் தர்மங்கள் செய்யப்படுகின்றன. அதுதான் கிட்ட இருக்கிறது. இந்த தர்மங்களுக்கும் பலனைக் கொடுக்கும் அபூர்வத்துக்கும் நடுவில் அது இருப்பதால் பலனைக் கொடுக்கும் அபூர்வம் ஒதுங்கி இருக்கிறது? இப்படியே நெய்யின் தர்மங்களும் ஸாந்நாய்ய தர்மங்களும் அந்த அந்த திரவ்யங்களைக் கொண்டு செய்யும் யாகத்தால் உண்டாகும் சின்ன அபூர்வத்துடன் நேராகச் சேருகின்றன. ஆகையால் அந்தந்த அபூர்வத்தால் ஏற்படும் ஸம்ஸ்காரங்கள் அந்தந்த அபூர்வத்தை உண்டுபண்ணும் ப்ரக்ருதி த்ரவ்யத்துடன்தான் சேரும். புரோடாசத்துக்கு ப்ரக்ருதி த்ரவ்யம் நெல்.

(2) இங்கே ஒரு கேள்வி -- தர்சபூர்ணமாஸ ப்ரகரணமன்றோ இந்த ஸம்ஸ்காரங்களை இன்ன த்ரவ்யத்துக்குச் சேஷம் என்று சொல்லுகிறது. அது மூன்று த்ரவ்யங்களுக்கும் பொதுவானதையால், பூர்வபக்ஷத்தில் சொன்னபடி ஸம்ஸ்காரங்கள் கலந்து போகலாமே—என்று. பதில்—உமியைப் பிரிப்பது நெல்லுக்குத்தான் கூடும். ஆகையால் அவஹநநம் அதற்குத்தான் ஸம்ஸ்காரம். நெய்யிலும் ஸாந்நாய்யத்திலும் முடியாது. அப்படியே விலாபநம் (நெய்யை ஆஜ்யஸ்தாலியில் கொட்டுவது) நெய்யில் மாத்திரம் கூடும். அப்படியே மாடு கறப்பது ஸாந்நாய்யத்துக்கு மாத்திரம் செய்ய வேண்டியது.

(3) மறுபடியும் கேள்வி—எந்த தர்மங்களுக்கு பிரயோஜநம் திருஷ்டமோ அதாவது கண்ணுக்குத் தென்படுகிறதோ, அவைகளில் நீர் சொன்னபடி ஆகட்டும். ப்ரோக்ஷணம் முதலானவைகள் அத்ருஷ்டமான ப்ரயோஜநத்துக்காகச் செய்யப்படுகின்றன. அவைகள் கலக்கலாமே என்று. பதில்—"வ்ரீஹீந் ப்ரோக்ஷதி" (நெல்லை ப்ரோக்ஷிக்கிறது) "ஆஜ்யம் அவேக்ஷதே" (நெய்யைப் பார்க்கிறான்) என்று இரண்டாவது விபக்தியான ச்ருதியாலே இன்ன த்ரவ்யத்துக்கு இன்ன இன்ன ஸம்ஸ்காரமென்று ஏற்படுகிறது. ச்ருதியானது ப்ரகரணத்தைக் காட்டிலும் பலமுள்ளது. (அதி-4)

87. தர்சபூர்ணமாஸ ப்ரகரணத்தில் பத்து ஆயுதங்களைச் சொல்லி, இவை பத்தும் யஞ்ஞத்தின் ஆயுதங்கள் என்று ஒரு வாக்யம் முடிக்கிறது. இவைகளில் ஸ்ப்யம் என்பதால் வேதியிலிருந்து மண்ணை எடுக்கவேண்டியது. கபாலங்களாலே புரோடாசத்தை ச்ரபணம் பண்ணவேண்டியது. எந்த ஆயுதத்தாலே எந்த வேலையையும் செய்யலாமா ? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—செய்யலாம். எல்லாம் யஜ்ஞத்துக்கு ஆயுதந்தானே. இன்னதால் இன்னவேலை செய்கிறதென்று ஏற்பாடு இல்லாமையால் யஜ்ஞத்துக்கு ஸாதநமாயிருப்பது போய்விடாது.

ஸித்தாந்தம்:—ஸ்ப்யம் என்பதாலே மண்ணைக் கொத்தி எடுக்கிறது, கபாலங்களிலே ச்ரபணம் செய்கிறது, இப்படி இன்னதால் இன்னவேலை செய்கிறதென்று காட்டும் வேறு வாக்யங்கள் இருக்கின்றன. அவைகளுக்குப் பிரயோஜநமில்லாமல் போய்விடும்.

(2) கேள்வி—இப்படி ஏற்பாடு (வ்யவஸ்தா) உண்டு என்று சொல்லுகிற பக்ஷத்திலும் யஜ்ஞங்களின் ஆயுதங்களைச் சொல்லும் வாக்யமும் வீண்தானே என்று. பதில்—தனித்தனி வேலையைச் சொல்லும் வாக்யங்களில் ஏற்பட்டவைகளை இந்த வாக்யம் அநுவாதம் செய்கிறது.

(3) மறுபடியும் கேள்வி—இதை யேன் திருப்பிச் சொல்லக்கூடாது? எல்லா ஆயுதங்களையும் சொல்வது முக்யமானது. தனித்தனி வேலையைச் சொல்லும் வாக்யங்கள் அநுவாதங்கள் என்று. பதில் - இப்படி ஆனால் அநேக வாக்யங்களுக்குப் ப்யோஜனமில்லாமல் போய்விடும். எல்லா ஆயுதங்களையும் சொல்லும் வாக்யம் முழுவதும் வீணன்று. “ யஜ்ஞாயுதானி ஸம்ஹரதி ” (யஜ்ஞத்தின் ஆயுதங்களைச் சேர்க்கவேண்டியது.) என்று விதிப்பதற்கு அது உபயோகப்படுகிறது. ஆகையால் எப்படி இன்னதுக்கு இன்னது ஸம்ஸ்காரம் என்று முடிவு செய்யப்பட்டதோ; அப்படியே இன்ன ஆயுதத்தாலே இன்ன வேலை செய்கிறதென்று முடிவுசெய்யவேண்டும். (அதி - 5)

88. ஜ்யோதிஷ்டோமம் சொல்லுமிடத்தில் “ அருணயா பிங்காக்ஷ்யா ஏகஹாயந்யா ஸோமம் க்ரீணாதி ” என்று ஒரு வாக்யமிருக்கிறது. இதின் பொருள்–சிகப்பான பூனைக்கண்ணுள்ள ஒருவயதான பசுமாட்டைக் கொண்டு ஸோமத்தை வாங்கவேண்டியது-என்று. இதில் “ அருணயா ” என்கிற சொல் சிகப்பு என்கிற குணத்தைச் சொல்லுகிறது. இப்படியே 33-வது பாராவில் முடிவு செய்யப்பட்டது. இந்த குணத்தையுடைய



வஸ்துவைச் சொல்லவில்லை. “ பிங்காக்ஷ்யா ” என்கிற சொல்லும் “ ஏகஹாயந்யா ” என்கிற சொல்லும் ஒரே வஸ்துவைச் சொல்லுகின்றன. இரண்டு குணங்கள் உள்ளதென்று காட்டுவதற்காக இரண்டு சொற்கள். ஒரு சொல்லாலே விதித்த பிறகு மற்றொரு சொல்லாலே விதிக்கக்கூடாதென்று ஸந்தேஹப்படவேண்டாம். மூன்றுவது விபக்தியாகிய ச்ருதியாலே இரண்டும் ஒரே காலத்தில் வஸ்துவைச் சொல்லுகின்றன. ஆகையால் இங்கே “ அருணயா ” என்கிற சொல்லைப்பற்றித்தான் ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—சிகப்பு என்கிற குணத்தை ஸோமத்தை வாங்குவதற்கு ஸாதநமாக மூன்றுவது விபக்தியான ச்ருதி சொல்லுகிறது. அது ஸாதநமாயிருக்க முடியாது. அதற்குத் துணி, தங்கக்கட்டி முதலியவைகளைப் போல உருவமில்லாததால். ஆகையால் ச்ருதியால் இந்த குணம் இன்னதற்குச் சேஷமென்று சொல்ல முடியாது. ப்ரகரணத்தைக்கொண்டு இதை அறியவேண்டும். அப்போது ப்ரகரணத்தில் சொல்லப்படும் க்ரஹபாத்திரங்கள் சமஸங்கள் முதலான எல்லா த்ரவ்யங்களுக்கும் இந்தக் குணம் விதிக்கப்படுகிறது.

(2) கேள்வி—நீர் சொல்லும் நியாயப்படி பூனைக்கண் உள்ளதும் ஒரு வயதாயிருப்பதும் எல்லா த்ரவ்யங்களுக்கும் இருக்கவெண்டுமென்று ஏன் சொல்லக்கூடாது என்று. பதில்—“பிங்காக்ஷீ ’ என்பதும், “ஏகஹாயநீ” என்பதும் த்ரவ்யங்களைச் சொல்லுகின்றன. ஒரு த்ரவ்யம் இன்னமொரு த்ரவ்யத்தில் போய்ச் சேராது. சிகப்பு என்கிற குணம் ஒரு த்ரவ்யத்துக்கு விசேஷணமாய்ப் போய்ச் சேரலாம். ஆகையால், அருணயா என்பது தனி வாக்யம். ப்ரகரணத்தில் ஸோமயாகத்துக்கு ஸாதநமாகச் சொல்லப்பட்ட எல்லா த்ரவ்யங்களையும் மூன்றுவது விபக்தியான ச்ருதியாலே அநுவாதம் செய்து அருணயா என்கிற பாகத்தாலே சிகப்பு என்கிற குணம் விதிக்கப்படுகிறது.

ஸித்தாந்தம்:—குணத்துக்கு உருவமில்லைதான். ஆனபோதிலும், அது ஒரு வருஷம்போலவும் கண்போலவும் ஸோமத்தை வாங்குவதற்கு ஸாதநமான பசுமாடு என்கிற த்ரவ்யத்தை மற்ற த்ரவ்யங்களிலிருந்து பிரிக்கிறது. பசுமாடான த்ரவ்யம் ஸாதநமாயிருப்பதால் அது வழியாக குணத்துக்கும் விலைக்கு வாங்குவதில் ஸம்பந்தம் ஏற்படுகிறது. இப்படியானால் விதி வாக்யத்தை இரண்டாய்ப் பிரிக்கவேண்டியதில்லை.

(2) ஒரு கேள்வி—இரண்டாய் பிரிக்கவேண்டாம். லக்ஷணை என்கிற குற்றத்தை விலக்க முடியாது. ஏனென்றால், “ அருணயா ” என்கிற சொல் குணத்தை மாத்திரம் சொல்லுகிறது. குணத்தையுடையதென்று

பொருள் கொள்வது லக்ஷணை என்று. பதில்—இங்கே மூன்ருவது விபக்தியான ச்ருதியாலே குணத்தைத்தான் ஸாதநமாய்ச் சொல்லியிருக்கிறது. அது த்ரவ்யத்தின் வழியாய்த்தான் கூடும். இல்லாவிட்டால் ஸாதநமாக மாட்டாது. இந்த அர்த்தாபத்தி என்னும் பிரமாணத்தால் ஸாதநமான த்ரவ்யத்தைக் காட்டுகிறதென்று கற்பிக்கவேண்டும்.

(3) மறு கேள்வி—கிரஹபாத்திரங்களையும் சமஸங்களையும் ஸோம யாகத்துக்கு ஸாதநமான மற்ற த்ரவ்யங்களையும் காட்டப்படுமே – என்று. பதில்—அவைகள் ஸோமத்தை வாங்குவதற்கு ஸாதநங்களன்றே. ஸோமத்தை வாங்குவதற்கு ஸாதநமன்ரோ இங்கே சொல்லப்படுகிறது.

(4) மறுபடியும் கேள்வி—“வாஸஸா க்ரீணாதி,” “அஜயா க்ரீணாதி” (துணியாலே வாங்கவேண்டியது, வெள்ளாட்டாலே வாங்கவேண்டியது) என்பது முதலான வாக்யங்களாலே துணி முதலானவைகள் ஸோமத்தை வாங்குவதற்கு ஸாதநமாகச் சொல்லப்படுகின்றன. அவைகளுடன் சிகப்பு என்கிற குணம் சேரலாமே–என்று. பதில்—எந்த வாக்யத்தில் அருணயா என்கிற சொல் இருக்கிறதோ, அந்த வாக்யத்திலிருக்கும் ஏகஹாயநீ த்ரவ்யத்தை விட்டு, வேறு வாக்யங்களிலிருக்கும் துணி முதலானவைகளுடன் சேர நியாயமில்லை. ஆகையால் த்ரவ்யத்துக்கும் குணத்துக்கும் விலைக்கு வாங்குவது என்கிற வேலையோடு நேராக ஸம்பந்தமுண்டாகிறது. பிறகு அர்த்தாபத்தி என்னும் பிரமாணத்தால் குணமானது த்ரவ்யத்தை மற்ற த்ரவ்யங்களிலிருந்து பிரிக்கிறது. (அதி–6)

ஒரு த்ரவ்யமும் சில குணங்களைவிட்டு ஒரு வேலையையும் செய்யாது. குணங்கள் த்ரவ்யத்தை வேலையைச் செய்யத்தகுந்ததாய் பண்ணுவதால், அவைகளுக்கு வேலைக்கு ஸாதநமாயிருப்பது கூடும். ஒருகுணத்தை ஒரு வேலைக்கு ஸாதநமாய் விதித்தால், அந்த குணத்தாலே அந்த வேலை எப்படி முடியுமோ அப்படியே செய்யவேண்டும்—என்று விதியின் கருத்து. அது த்ரவ்யத்துக்கு குணமாயிருந்தே அந்த வேலையைச் செய்யும். அப்படியன்னியில் அந்த வேலை முடியாது. (சாஸ்-192)

89. இப்படி மூன்று அதிகாரணங்களால் ஸம்ஸ்காரமும் த்ரவ்யமும், குணமும் சேஷமாயிருப்பதற்கு உதாரணங்கள் காட்டப்பட்டன. இவைகளில் 4-வது அதிகரணத்தால் (பாரா-86) இரண்டாவது விபக்தியான ச்ருதிக்கும், 6–வது அதிகரணத்தால் (பாரா-88) மூன்ருவது விபக்தியான ச்ருதிக்கும் உதாரணம் காட்டப்பட்டது. 7–வது விபக்தியான ச்ருதிக்கு உதாரணம்—‘யதாஹவநீயே ஜுஹோதி’ என்பது. இதன் பொருள்—



ஹோமம் என்பது ஆஹ்வநீயம் என்னும் அக்நியில் – என்று. ஏழாவது விபக்தியாலே ஆஹவநீய அக்நி ஹோமங்களுக்குச் சேஷம் என்று காட்டப்பட்டது. “பசுநா யஜேத” (பசுவைக்கொண்டு யாகத்தைச் செய்) என்கிற இடத்தில் “பசுநா” என்னும் சொல்லில் இருக்கும் விபக்தியாலே கரணமான காரகமும், அது ஆண் என்பதும் ஒன்று என்பதும் காட்டப்படுகின்றன. அவைகளில் காரகத்துக்கு மற்ற இரண்டும் சேஷம். இந்த ச்ருதியை ஸமாநாபிதாந ச்ருதி என்று சொல்லுகிறது. “யஜேத” என்கிற சொல்லில் ப்ரத்யயத்தாலே பாவனைக்கு ஸங்க்யை சேஷம் என்று காட்டப்படுகிறது. இதுவும் ஸமாநாபிதாநச்ருதி. யஜ என்னும் தாதுவின் அர்த்தமான யாகத்துக்கு ஸங்க்யை சேஷம் என்று காட்டப்படுகிறது. இதற்கு ஏகபத ச்ருதி என்று பெயர். இப்படி ச்ருதியானது மூன்று உருவமுள்ளதாயிருக்கும். விஹக்ருத்வா, ஸநோதாஹி யாகங்க்ருத்வா, வசுவடிக்ருத்வா–என்று. (ஆபதேவீயம் 13-14)

90. இதின்மேலே ஒன்று மற்றொன்றுக்குச் சேஷமாயிருக்கும் விஷயத்தில் சில நியாயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

ஜ்யோதிஷ்டோம ப்ரகரணத்தில் “தசாபவித்ரேண க்ரஹம் ஸம்மார்ஷ்டி” (தசா பவித்ரம் என்று சொல்லப்படும் துணியால், ஸோமரஸத்தைப் பிடித்த பாத்ரத்தைத் துடை) என்கிற இடத்தில் ஸம்மார்ஜநம் (துடைப்பது) பாத்திரத்துக்கு ஸம்ஸ்காரம். அது க்ரஹத்துக்குச் சேஷம். (பாரா-56-1) சேஷியான க்ரஹமானது ஒன்று என்னும் ஸங்க்யையோடு சேர்ந்து சேஷியா? அல்லது அதைவிட்டுத் தனியே சேஷியா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:— “பசுநா யஜேத” என்கிற இடத்தில் உபாதேயமான பசு ஒன்ருக இருக்கவேணுமென்று கருத்து. இப்படியே உத்தேச்யமான க்ரஹமும் ஒன்ருகவே இருக்கவேண்டும். மேலும், க்ரஹம் என்ற சொல்லானது ஜாதியைச் சொல்லுகிறது. ஸம்ஸ்காரம் ஜாதிக்குச் செய்யவேண்டியது. அந்த ஜாதிக்கு இருப்பிடமான ஏதாவது ஒரு த்ரவ்யத்துக்கு ஸம்ஸ்காரத்தைச் செய்தால் ஜாதிக்கு ஸம்ஸ்காரம் செய்ததாய் ஆகும். ஆகையால் ஒரே க்ரஹத்தைத்தான் துடைக்கவேண்டியது.

‘பசுநா’ என்கிற இடத்தில் எப்படி ச்ருதியாலே பசு ஒன்று என்று சொல்லப்படுகிறதோ, அப்படியே ச்ருதியாலே க்ரஹம் என்கிற இடத்திலும் க்ரஹம் ஒன்றுதான் என்று சொல்லப்படுகிறது. (சாஸ்-193)

ஸித்தாந்தம்:—க்ரஹம் என்கிற சொல்லில் இரண்டாவது விபக்தியால் க்ரஹபாத்திரம் முக்யமானது என்று காட்டப்படுகிறது. அதைப்பற்றி

ஒன்று விதிக்கப்படுவதால், அது ஒரு ப்ரயோஜநத்தை அடைகிறது. அந்தக் காரணத்தாலும் அது முக்யம். துடைப்பது அதற்கு ஸம்ஸ்காரமானதால் குணம். "முக்யமானது எத்தனையோ? அத்தனை தடவை குணமான வேலையைச் செய்யவேண்டும்" என்று ஒரு நியாயமுண்டு. அதின்படி எத்தனை க்ரஹபாத்திரங்கள் இருக்கின்றனவோ, அவைகளையெல்லாம் துடைக்கவேண்டியது. இப்படி முடிந்தபிறகு துடைக்கவேண்டிய க்ரஹ பாத்திரங்கள் இத்தனையென்று அறியவேண்டியதில்லாமையால், உத்தேசத்துடன் சேர்ந்திருக்கும் ஒன்று என்னும் ஸங்க்யை சொல்லுவதில் கருத்தில்லை.

(2) இங்கே ஒரு கேள்வி—இங்கே ஸங்க்யை உத்தேச்யத்துடன் சேரவில்லை; அதுவும் விதிக்கப்படுகிறது அல்லவா - என்று. பதில்—ஸங்க்யை விதிக்கப்படவில்லை. விதிக்கப்படுவதானால் வாக்யத்தின் பொருள் – க்ரஹ பாத்ரத்தைத் துடை, அந்த பாத்ரம் ஒன்றை – என்று ஆகும். அப்போது விதிக்கப்படுவது வெவ்வேறாக இருப்பதால், இரண்டு வாக்யம் ஏற்படும். "பஶுநா யஜேத" என்கிற இடத்தில் யாகம் முக்யமானது, பசு குணம். ஒவ்வொரு குணத்துக்கும் முக்கியமானதை ஆவிருத்தி பண்ணுவது என்று நியாயமில்லை. குணம் இத்தனை என்று அறியவேண்டியபடியால் அதில் காட்டப்படும் ஒன்று என்னும் ஸங்க்யையைச் சொல்வதில் கருத்து. ஆகையால் இரண்டு வாக்யங்களும் ஒரே விதமன்று.

(3) பூர்வபக்ஷத்தில் ஸம்ஸ்காரம் ஜாதிக்குச் செய்யவேண்டியதென்று சொன்னது பிசகு. ஏனென்றால், அதற்கு உருவமில்லை. ஆகையால் ஜாதி வழியாய் அதை உடைய வஸ்துவைக் காட்டுகிறது க்ரஹம் என்கிற சொல். (அதி – 7)

(4) ஒன்று என்கிற ஸங்க்யையை விதிப்பதில் கருத்து என்று சொல்லமுடியாது. அது எதற்காக விதிக்கப்படுகிறது. க்ரஹபாத்ரத்துக்கா? அல்லது ஸம்மார்க்கம் என்கிற வேலைக்கா? முதல்பக்ஷத்தில் பல குற்றங்கள் ஏற்படும். (1) க்ரஹபாத்ரத்தைத் துடைப்பது என்று ஒரு விஷயம். க்ரஹ பாத்திரம் ஒன்று என்று ஒரு விஷயம். இரண்டு விஷயத்தையும் விதிப்பதால் வாக்யம் இரண்டாகும். (2) ஒன்று என்னும் ஸங்க்யை க்ரஹ பாத்ரத்தின் ஸ்வரூபத்தை மாத்திரம் குறிப்பதானால் ஸம்மார்க்கம் ஒன்று என்று ஏற்படாது. அப்போது எல்லா க்ரஹபாத்ரங்களுக்கும் ஸம்மார்க்கத்தைச் செய்யலாம். இது எங்கள் பக்ஷத்துக்கு விரோதமில்லை. (3) ஸம்மார்க்கத்தோடு சேர்ந்த க்ரஹபாத்ரம் ஒன்று என்று சொல்வதானால், அது முடியாது. ஏனென்றால் ஸம்மார்க்கம் க்ரஹபாத்ரத்துக்கு விசேஷணமன்று. விசேஷணம் என்பது ஒரு வஸ்துவில் இருந்து நம்மால் அறியப்



படுவது. இங்கே ஸம்மார்க்கம் புதிதாய் விதிக்கப்படுகிறது. அது எப்படி க்ரஹ பாத்ரத்துக்கு விசேஷணமாகும்? ஸம்மார்க்கத்தை விதிக்கும்போது விசேஷணமாயிருப்பதும் உண்டாகலாம் என்றால், வாக்யம் இரண்டாகும். அப்போது வாக்யத்தின் பொருள்:—"க்ரஹபாத்திரத்தைத் துடை, எதை துடைக்கிறாயோ அது ஒன்று" என்று. (4) ஒன்று என்கிற ஸங்க்யையோடு கூடின க்ரஹபாத்ரத்துக்கு ஸம்மார்க்கத்தைச் செய் என்கிற ஒரே விஷயம் விதிக்கப்படுகிறது என்றால், அப்போது வாக்யத்தின் பொருள் என்ன? எது க்ரஹபாத்திர ஜாதியில் சேர்ந்து ஒன்றாயிருக்கிறதோ, அதைத் துடை என்று பொருள் கொள்ளவேணும். ஒவ்வொரு க்ரஹபபாத்ரம் ஒன்றாயும் இந்த ஜாதியைச் சேர்ந்ததாயும் இருப்பதால் ஸம்மார்க்கம் அதற்குக் குணமாயிருப்பதாலும் எல்லாவற்றையும் துடைக்கவேண்டும். மேலும்: விபக்தியாலே கர்மம் என்கிற காரகமும் ஸங்க்யையும் சேர்ந்தே சொல்லப்படுகின்றன. முதலில் ஸங்க்யை க்ரஹ என்கிற சொல்லோடு சேர்ந்து அதை ஒன்று என்று காட்டி பிறகு அந்த ஸங்க்யையோடு கூடியது காரகம் என்று சொல்லப்படவில்லை. அப்படிச் சொல்லப்பட்டால்தான் நீர் சொன்னது கூடும். ஆகையால் ஒன்று என்னும் ஸங்க்யை க்ரஹபாத்திரத்துக்காக விதிக்கப்படுகிறதில்லை. ஸம்மார்க்கம் என்னும் வேலைக்காகவும் விதிக்கப்படவில்லை. விதிக்கப்பட்டால், "பஶுநா யஜேத" என்கிற இடத்தில்போலே விபக்தியாகிய ச்ருதியாலே ஒன்று என்று ஸங்க்யை காரகமாயிருந்துகொண்டு, க்ரியையோடேயே சேரும். அப்போது ஸங்க்யைக்கு ஸம்மார்க்கம் சேஷமாகவேணும், அல்லது ஸம்மார்க்கத்துக்கு ஸங்க்யை சேஷமாக ஆகவேணும். முதல்பக்ஷத்தில் க்ரஹபாத்திரம் ஒரு உத்தேச்யம், ஒன்று என்னும் ஸங்க்யை ஒரு உத்தேச்யம், ஒவ்வொன்றும் தனித்தனியே க்ரியையோடு சேரும். அப்போது இரண்டு வாக்யங்களாகும். மேலும், க்ரஹபாத்திரம் ஒன்று என்று சொல்லாததினால் எல்லா பாத்திரங்களுக்கும் ஸம்மார்க்கம் ஏற்படும். எங்களுடைய பக்ஷம் கூடுகிறது. ஸம்மார்க்கம் முக்யமாயும் ஒன்று என்கிற ஸங்க்யை குணம் என்கிற பக்ஷமும் கூடாது. இரண்டாவது விபக்தி குணத்தைச் சொல்லாது. அது முக்யமானதையன்றோ சொல்லுகிறது. "ஸக்துபிர் ஜுஹோதி" (மாவை ஹோமம் செய்) என்கிற இடத்தில் இரண்டாவது விபக்தி குணத்தைச் சொல்லவில்லையா? அங்கே ஸக்து முக்கியம் அன்று. ஏனென்றால், ஹோமம் செய்தவுடன் அது சாம்பலாகப் போய்விடுகிறது. ஆகையால் ஹோமம் என்கிற வேலை அதற்கு ஸம்ஸ்காரம் அன்று. வாக்யத்துக்கு 'ஸக்துவாலே ஹோமத்தைச் செய்' என்று பொருள் கொள்ளவேணும். ஸக்து ஹோமத்துக்குக் குணமாகிறது. அப்படியே இங்கேயும் இரண்டாவது விபக்தி குணத்தைச் சொல்லுகிறது என்றால், அது கூடாது. இரண்டாவது விபக்தியான ச்ருதிக்கு முக்யமான அர்த்தம் கிடைக்கும்போது

லக்ஷணை கூடாது. மேலும், ஒன்று என்னும் ஸங்க்யை குணமானால் க்ரஹ என்பதும் குணமாகவேண்டும். க்ரஹ என்பது முக்யம். ஒன்று என்பது குணம் என்று சொல்லுகிறீரோ? அதுவும் முடியாது. இரண்டாவது விபக்தி ஒரே தடவை சொல்லப்படுகிறது. அது எப்படி க்ரஹ என்பதைப்பற்றி முக்யத்தை ச்ருதியாலும் ஒன்று என்பதைப்பற்றி குணத்தை லக்ஷணையாலும் சொல்லும்? ஆகையால் பூர்வபக்ஷம் கூடாது. (சா-194-195)

(91) வாஜபேயத்தைச் சொல்லுகிற இடத்தில் "ஸப்தத³ஶாரத்நி: வாஜபேயஸ்ய யூபோ ப⁴வதி" என்று ஒரு வாக்யம் இருக்கிறது. இதன் பொருள்—வாஜபேயத்தினுடைய யூபமானது பதினேழு அரத்நி உயரமுள்ளதாயிருக்கிறதென்று அரத்நி 24 அங்குலம். இங்கே முதலாவது பதமானது ஒரு உயரத்தைச் சொல்லுகிறது. இது வாஜபேயம் என்கிற கர்மத்துக்கு அங்கமா? அல்லது யூபத்துக்கு அங்கமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—வாஜபேயம் என்கிற கர்மத்துக்கு அங்கம். முதலாவது பதத்துக்கு அடுத்த சொல் "வாஜபேயஸ்ய" என்கிற சொல். இப்படிப் பொருள் கொண்டால் ப்ரகரணத்துக்கும் ஒரு ப்ரயோஜனம் ஏற்படும். ஒரு கேள்வி—வாஜபேயம் ஒரு வேலை. அதற்கு உயரமில்லையே, அதற்கு எப்படி அங்கமாகும்? என்று. பதில்—வாஜபேயத்துக்கு அங்கமாக ஷோடசிக்ரஹபாத்ரம் இருக்கிறது. அதன் உயரத்தை அந்தச் சொல் முதலில் சொல்லி, பிறகு அதின் வழியாய், வாஜபேயம் என்கிற கர்மத்துக்கு அங்கமாகிறது.

ஸித்தாந்தம்:—முதல் பதத்துக்கும் "யூப:" என்கிற பதத்துக்கும் ஒரே விபக்தி இருக்கிறது. ஆகையால் அந்த முதல் பதம் யூபம் என்கிற சொல்லோடு முதலில் சேருகிறது. யூபம் பசு யாகத்துக்கு அங்கமாகையால், யூபத்தின் வழியாய் உயரம் பசு யாகத்துக்கு அங்கம். பசு யாகம் வாஜபேயத்துக்கு அங்கமானதால், பசு யாகம் வழியாய் உயரம் வாஜபேயத்துக்கு அங்கமாகிறது. மேலும், "வாஜபேயஸ்ய" என்கிற சொல்லும் யூபம் என்கிற சொல்லும் சேர்ந்திருகின்றன.

(2) ஒரு கேள்வி—வாஜபேயம் ஸோமயாகமானதால், அதுக்கு யூபத்தோடு நேராக ஸம்பந்தமில்லையே - என்று. பதில்—பசு யாகம் நடுவிலிருந்தாலும் இரண்டுக்கும் ஸம்பந்தத்தை ஒப்புக்கொள்ளவேண்டும். ஏனென்றால்,—வாஜபேயம் என்கிற சொல்லோடு சேர்ந்த ஆறுவது விபக்தியானது ஸம்பந்த மாத்திரத்தைச் சொல்லுகிறது. ஸம்பந்தமுள்ள இரண்டுக்கும் நடுவில் வேறு ஒன்று இருந்தாலும் குற்றமில்லை. தேவதத்தனுடைய கொள்ளு பேரன் (தே³வத³த்தஸ்ய நப்தா) என்று பிரயோகமிருக்கிறது. தேவதத்தனுக்கும் கொள்ளுப் பேரனுக்கும் நடுவில் பிள்ளையும் பேரனும் இருந்தபோதிலும் ஸம்பந்தம் சொல்லப்படுகிறது; அதுபோல.



(3) பூர்வபக்ஷத்தில் சொன்ன யுக்திக்கும் விரோதமில்லை. உயரமானது யூபத்தின் வழியாய் பசு யாகத்துக்கு அங்கமானபோதிலும், முடிவில் வாஜபேயத்துக்கு அங்கமென்று ஏற்படுகிறது. அந்த பக்ஷத்தில் யூபம் என்கிற சொல் ஷோடசி க்ரஹ பாத்ரத்தைச் சொல்லுகிறது என்று லக்ஷணை என்கிற குற்றமுண்டு. ஸித்தாந்தத்தில் இது இல்லை. (அதி-9)

92. இதின்மேலே ஒரு கர்மம் மற்றொரு கர்மத்துக்கு அங்கமாக இருக்கலாம் என்று காட்டப்படுகிறது. ப்ரயாஜயாகங்களைச் சொல்லுகிற விடத்தில் "ஸமிதோ⁴ யஜதி" ... "அபி⁴க்ராமம் ஜுஹோதி" என்று ஒரு வாக்யமிருக்கிறது. அதின் பொருள்:—முன்னால் வந்து ஹோமம் செய்கிறான் என்று. இந்த அபிக்ரமணம் எதற்கு அங்கம்? எல்லா தர்சபூர்ணமாஸ வியாபாரங்களுக்குமா? அல்லது பிரயாஜ ஹோமங்களுக்குமாத்திரமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—எல்லா தர்சபூர்ணமாஸ வியாபாரங்களுக்கும் அங்கம். காரகமாயிருந்தால், அதற்குக் கிரியையோடு ஸம்பந்தமுண்டு. அபிக்ரமணம் கிரியை. ஆகையால் ப்ரயாஜ ஹோமங்களுடன் அதற்கு ஸம்பந்தமில்லை.

ஸித்தாந்தம்:—தர்சபூர்ணமாஸமும் க்ரியைதானே, அத்துடன் அபிக்ரமணத்துக்கு எப்படி ஸம்பந்தமுண்டாகும்? நீங்கள் இதற்கு இப்படி பதில் சொல்லலாம். அபிக்ரமணத்துக்கு அந்த க்ரியைச் செய்கிற கர்த்தாவுடன் ஸம்பந்தம். அவன் வழியாய் எல்லா தர்சபூர்ணமாஸ வியாபாரங்களுடன் ஸம்பந்தம் ஏற்படுகிறது என்று. இந்த ஸமாதானம் எனக்கும் உண்டு. ப்ரயாஜ ஹோமங்களைச் சொல்லுகிற இடத்தில் இந்த வாக்கியமிருப்பதால், அபிக்ரமணம் ப்ரயாஜ ஹோமங்களுக்கு மாத்திரம் அங்கம். (அதி-10)

இந்த விஷயத்தில் சாஸ்த்ர தீபிகை. க்ரியையுடன் காரகம்தான் சேரும். வெறொன்றும் சேராது. அபிக்ரமணம் க்ரியை. அதற்கு உருவமில்லை. காரகமாகமாட்டாது; 88-வது பாராவில் குணம் த்ரவ்யத்தின் வழியாய் ஒரு கர்மத்துக்கு அங்கமாயிருக்கலாம் என்று சொல்லப்பட்டது. அங்கே ஏகஹாயநி (ஒரு வயது மாடு) என்கிற த்ரவ்யம் வாக்யத்தில் இருக்கிறது. இங்கேயோ "ஜுஹோதி" என்கிற சொல்லாலே ஹோமம் என்கிற வேலை சொல்லப்படுகிறது. கர்த்தாவைக் காணோமே. ஆகையால் அவன் வழியாய் அங்கமென்று சொல்ல முடியாது. ஆகையால் ப்ரகரணத்தாலே எல்லா தர்சபூர்ணமாஸ வியாபாரங்களுக்கும் அங்கம். ப்ரகரணத்தாலே ஒரு க்ரியை மற்றொரு கிரியைக்கு அங்கமாகலாம். ப்ரயாஜங்கள் ப்ரகரணத்தாலேதான் தர்சபூர்ண மாஸங்களுக்கு அங்கமாகின்றன.

**ஸித்தாந்தம்:**—கர்த்தாவைச் சொல்லுகிற சொல்வாக்யத்தில் இல்லாமல் போனாலும், கர்த்தா இருக்கிறான். ஆகையால் அவன் வழியாய் அபிக்ரமணம் ப்ரயாஜஹோமங்களுக்கு அங்கம். (197-198)

(93) வார்த்திககாரர் வேறுவழியாய் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்.

பூர்வபக்ஷம்—ப்ரயாஜஹோமங்களைச் சொல்லுகிற இடத்தில் இந்த வாக்யம் இருப்பதால் அபிக்ரமணம் ப்ரயாஜஹோமங்களுக்கு அங்கமென்று சொல்லுகிறீர். இது ஸந்நிதி என்கிற ப்ரமாணம். இந்த வாக்யம் தர்சபூர்ணமாஸத்தைச் சொல்லுகிற இடத்தில் இருக்கிறது. இதுப்ரகரணம் என்கிற பிரமாணம். இது ஸந்நிதி என்கிற பிரமாணத்தைக்காட்டிலும் வலிமையுள்ளது. ஆகையால் அபிக்ரமணம் எல்லாவியாபாரங்களுக்கும் அங்கம்.

**ஸித்தாந்தம்**—நாம் பேசுகிற வாக்யத்துக்கு முன்னாலும் பின்னாலும் ப்ரயாஜ விஷயமான வாக்யங்கள் இருக்கின்றன. அவைகள் இடிக்கிபோல் அதைப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. இதற்கு அவாந்தர ப்ரகரணம் என்று பெயர். ஆகையால் அபிக்ரமணம் ப்ரயாஜங்களுக்கு மாத்திரம் அங்கம். ப்ரயாஜங்கள் வழியாய் மஹாப்ரகரணத்தால் தர்ச பூர்ணமாஸ வியாபாரங்களுக்கும் அங்கமாயிருக்கலாம். (அதி-10)

முதல்பாதம் முற்றிற்று.

ஸ்ரீ:

# க்ரந்த விமர்சம்.

(1) அருளிச்செயல் பாகவதம்:—ஆழ்வார்களது நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தில், பற்பல இடங்களில் தோன்றும் கண்ணனுடைய கதையை ஆழ்வார்கள் அருளிச்செய்த திருமொழியைக்கொண்டே இதில், ஸ்ரீமாந் சே. ரங்கஸ்வாமி ஐயங்கார் எம். ஏ. என்னும் ஒரு பக்தசிகாமணி ஒருங்கே சேர்த்து தொகுத்திருக்கிறார். ஸ்ரீ ராமாயண கதையை இம்மாதிரி ஒருங்கே திரட்டி தொகுததிருக்கும் க்ரந்தமொன்றை நாம் பார்த்திருக்கிறோம். ஸ்ரீ பாகவதத்திற்கு இவ்விதம் ஒரு அமைப்பை நாம் இதுவரை பார்த்ததில்லை. அந்தக் குறையை இது தீர்க்கின்றதென்று நாம் ஸந்தோஷிக்கிறோம். இதை ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் வாசோ விதேயமாகச் செய்து ப்ரதிதினம் அநுஸந்தித்து வருவது எம்பெருமானுடைய திருவுள்ளத்திற்கு உகப்பாக இருக்கும். இந்த க்ரந்தத்தில் ஸ்ரீ வங்கிப்புரத்தாய்ச்சி தொகுத்த திருமால் திருப்பதிகளின் திருமணிக்கோவையும் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. இதை அபேக்ஷிப்பவர்கள், ' ஸ்ரீ. உப. சேட்லூர் ரங்கஸ்வாமி ஐயங்கார், எம். ஏ. 8/71, துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, மதிராஸ்'' என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இதன் விலை அணா 1.

(2) தத்வதுணதர்சம்:—இரண்டாவது பிம்பம், 2-வது பாகம்:—ஸ்ரீ கோஷ்டிபுரம் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீ ராமதேசிகாசார்யரால் செய்யப்பட்டது.

(3) ப்ராணம நிஷ்கர்ஷம்:—திருவஹீந்த்ரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் பண்டித பூஷணம் தேசிகதர்சநாசார்ய மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உப. வே. நரஸிம்ஹாசார்யர் இதன் கர்த்தா.

இவை இரண்டும் நாம் வரப்பெற்றோம்.

ஸ்ரீ:

# கடிதங்கள்

## (1)

## ஒரு தேவாலய ஸம்ப்ரோக்ஷணம்.

கும்பகோணம் ஸ்ரீ சக்ரத்தாழ்வான் ஸந்நிதியில், ஸ்ரீ விஜயவல்லித் தாயார் ந்நிதி கர்ப்ப க்ருஹம், மண்டபங்கள் முதலிய திருப்பணி கைங்கர்யம் நடைபெற்று, கழும் பீப்ரவரிமீ 8வ வெள்ளிக்கிழமை தினம் காலை $6\frac{3}{4}$ நாழிகைக்கு மேல் $9\frac{3}{4}$ நாழிகைக்குள் மஹா கும்பாபிஷேகம் நிறைவேறப் போகின்றது. இந்தக் கைங்கர்யத்திற்காக கல்கத்தா ஸ்ரீ மாந் சேட் மக்னிராம் ராம் குமார் (பாங்கெர்) அவர்கள் த்ரவ்யம் ற்றேறக்குறைய ரூ. 10000 மும், ஸ்ரீ. உப. வே. நரஸிம்ஹ ஐயங்கார் ஸ்வாமி த்ரவ்யம் 4000மும், ஸ்ரீ மாந் ப. கோ. க்ருஷ்ணமூர்த்தி செட்டியார் த்ரவ்யம் ரூ 1000 மும், உபயோகப்படுத்தப்பட் டிருக்கின்றன. இந்த ஸம்ப்ரோக்ஷண காலத்தில் பாகத ததீயாராதநமும் வேத பாராயணம் முதலிய கோஷ்டிகளும் நடைபெறுகின்றன. இந்தத் ததீயாராதந மஹா கைங்கர்யத்தைச் செய்யத் துணிந்து முன்வந்திருக்கிற அடியேனையும் மற்றைப் பக்தர்களையும், உதாரர்களாயுள்ள பக்த ஆஸ்திகர்கள், இந்தக் கைங்கர்யம் த்ருப்திகரமாக நிறைவேறுமாறு அநுக்ரஹிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன். பணமோ வேறு த்ரவ்யமோ கீழ்க் குறிக்கப்பட்டுள்ள அடியேனுடைய விலாஸத்திற்கு அனுப்பப்படலாம்.

ஸ்ரீ ராம நிலயம்
57, பெரிய தெரு,
கும்பகோணம்.
25-1-1935.

வி. விஜயராகவாசார்யன்.
ஸ்ரீ விஜயலக்ஷ்மீ கைங்கர்ய பரன்,
ரிடையர்ட் டெபுடி இன்ஸ்பெக்டர்.

## (2)

## ஒரு விஜ்ஞாபநம்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

பகவத் ராமாநுஜனுக்கு முக்கியமான அபிஸந்தி, ஸ்ரீ பாஷ்யாதிகளை வாசித்துப் ப்ரவர்த்திப்பித்தல். அந்தப் பாஷ்யத்தைத் தெரிந்து கொள்வதற்கு முன் தீபத்தையும் ஸாரத்தையும் வாசித்தால் பாஷ்யம் சுலபமாக அர்த்தமாகும். அதற்காகத்தான் ஸ்வாமி மூன்று கிரந்தங்களை ஸூத்ரத்துக்கு உரையாக எழுதினார் என்று கேள்வி. அதில் முதலில் எடுத்துக் கொள்ள வேண்டியது தீபம் - பிறகு ஸாரம் - பிறகு பாஷ்யம். தேவரீர் வேதார்த்த ஸங்க்ரஹத்துக்கு உரை எழுதினாப் போல் தீபத்துக்கு உரை எழுத வேண்டியது; பிறகு ஸாரத்துக்கு, பிறகு பாஷ்யத்துக்கு. அதே மாதிரி உபநிஷத்துக்களுக்கு. உபநிஷத்துக்கள் விசிஷ்டாத்வைதிகளுக்கு ஒத்ததில்லை என்பது அத்வைதிகள் வார்த்தை. ஆனால் ரங்க ராமாநுஜ ஸ்வாமி உரை எழுதி யிருக்கிறார். அவ்வுரையைப் பதிப்பிக்க வேண்டுகிறேன். ஆளவந்தார் ஸித்தி த்ரயம், ஆகம ப்ராமாண்யம் இவைகளுக்கு உரை எழுதவும். பாஞ்சராத்ரக்ஷைக்கும் நிக்ஷேபரக்ஷைக்கும் உரை எழுதவும்.

மதராஸ்
15-1-1935

கே. ஸுந்தர ராஜாசார்யன்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

யேநாங்கை: ப்ரவிஶ்ய ஶிவ வாசகோம் ப்ரஸாத்யம்

ஸஞ்ஜீவயத்யவிருஸ்க்தியா: ஸ்வயாத்ர ।

அநந்தம் ஹஸ்த வாரணஸ்ய வணத்வமாநீய

பூர்ணாஸௌ ஸதவதே வாஸாஷாய தவைஸ ॥

# ஸம்பாதகரின் குறிப்புகள்

---

**ஸ்ரீ வேதாந்த தீபிகை**

இந்த ஸம்வத்ஸரத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீ வேதாந்த தீபிகையின் ப்ரவர்த்தநம், பழய ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையாரிடமிருந்து புதிதாக ஏற்பட்டுள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரிடம் மாறிற்று என்பதை ஏற்கெனவே நமது ஸஹ்ருத்துக்களுக்கு நாம் விஜ்ஞாபநம் செய்துகொண்டிருக்கிறோம். அப்படி மாறினபொழுது, புதிய ஸபையார், தீபிகையை இன்னும் அபிவ்ருத்தமாகச் செய்யவேண்டும் என்னும் எண்ணத்துடன், ப்ரதி மாஸமும் 40 பக்கங்களுக்கு பதிலாக 60 பக்கங்கள் அச்சுப் பதிப்பிக்கப்பட வேண்டுமென்றும், அந்தக் காரணத்தால் வர்ஷச் சந்தாவையும் ரூ. 3-0-0-க்கு பதிலாக ரூ. 4-0-0 ஆக உயர்த்தவேண்டுமென்றும், ஒரு தீர்மானம் செய்தார்கள். அந்தத் தீர்மானத்தை அநுஸரித்து தீபிகை அம்மாதிரி பெரியதாகச் செய்யப்பட்டதுடன் சந்தாவும் ரூ. 4-0-0 வீதமே இதுவரை வஸூல் செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது தீபிகையின் ஸஹ்ருத்துக்களுட் சிலர், இம்மாதிரி சந்தாவை உயர்த்தியிருப்பது அநேகச் சந்தாதாரர்களுக்கு ச்ரமத்தை விளைவிக்கின்றது என்றும், ஆகையால் சந்தாவைப் பழய ஏற்பாட்டுக்கு மாற்றுவது உசிதமாக இருக்குமென்றும் நியமித்ததின்பேரில், ஸபையார் அந்த நியமநத்தை ஆதரித்து, மறுபடியும் சந்தாவைப் பழய ரூ. 3-0-0 க்குக் குறைத்துவிட்டார்கள். இவ்வருஷத்துச் சந்தாவுக்காக ஏற்கெனவே ரூ. 4-0-0 வீதம் கட்டி இருப்பவர்கள், தாம் செலுத்தி இருக்கும் அதிக அம்சத்தைத் தீபிகையின் உதவிக்காக ப்ரதி ப்ரயோஜநமின்றிக்கே கொடுத்ததாய் பாவிக்கலாமோவென்று நாம் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படி அதைக் கொடுத்துவிட இஷ்டமிராதவர்கள் தமது அபிப்ராயத்தை ஒரு பத்ரிகா மூலமாகத் தெரிவிக்கும் பக்ஷத்தில், அவர்களால் கொடுபட்டிருக்கும் அதிகாம்சமான ஒரு ரூபாய் அடுத்து வரும் வருஷத்திற்கு முன்னதாகச் செலுத்தப்பட்ட சந்தா பாகமாகக் கணக்குப் புஸ்தகங்களில் பதிவு செய்துகொள்ளப்படும். தீபிகையின் தற்கால ஸ்திதி இம்மாதிரி உதவியையும் இன்னும் இதைக் காட்டிலும் அதிகமான உதவியையும் அபேக்ஷித்து நிற்கிறபடியால், நாம் சந்தாதாரர்களுக்கு இம்மாதிரி ஒரு ப்ரார்த்தநையைச் செய்யத் துணிந்தோம். அப்படித் துணிந்ததை நமது ஸஹ்ருத்துக்கள் க்ஷமித்தருளவேண்டும்.

*　　　*　　　*　　　*

சென்ற ஜநவரி மாஸத்தில் நடைபெற்ற மதிராஸ் சட்ட ஸபை ஸங்கத்தில், தேவஸ்தாந சட்ட விஷயமாக சில மாறுதல்கள் செய்யப்பட்டன.

**மதராஸ் தேவஸ்தாந சட்டம்**

இம்மாறுதல்களின் பர்யவஸாநம், பெரும்பாலும் தேவஸ்தாந பரிசீலநம் முழுவதையும் ராஜாங்கத்தாரின் ஆளுகைக்கு உட்பட்டதாகச் செய்துவிடுமளவு செல்லும் என்பது வ்யக்தமாகத் தெரிகின்றது. இப்பொழுது தேவஸ்தாநங்களில் நடைபெற்று வரும் நிர்வாஹம் ஏதாவது ஒரு காரணத்தால் ராஜாங்கத்தாருக்கு அத்ருப்திகரமாகத் தோன்றும் பக்ஷத்தில், ராஜாங்கத்தார் உடனே, அது வ்யாஜமாக அந்தத் தேவஸ்தாநங்களின் பண்டைய நிர்வாஹ முறைமையை ரத்துசெய்து, பழைய தர்ம கர்த்தாக்களையும் விலக்கி, அந்தத் தேவஸ்தாந விஷயங்களைப் பரிசீலித்து வருவதற்காகப் புதிய ஒரு ஸர்க்கார் மநுஷ்யனையும் நியமித்து விடலாம். அப்படி நியமிக்கப்படும் மநுஷ்யர்களின் மாசச் சம்பளம் முதலிய செலவெல்லாம் தேவஸ்தாந சொத்தையே சார்ந்து நிற்கும். நிற்க; தேவஸ்தாநங்களும் மடங்களும், தமது கணக்குப் பரிசோதநம் முதலிய விஷயங்கள் ஸம்பந்தமான செலவுக்காக தேவஸ்தாந போர்டுக்குத் தமது வருமானத்தில் ரூ. 100 க்கு ரூபாய் ஒண்ணறை வீதம் ஒவ்வொரு வர்ஷமும் வரி செலுத்தவேண்டுமாம். இம்மாதிரியான தீர்மானங்களெல்லாம் கொஞ்சமேனும் ந்யாயத்திற்கு ஒத்தவையல்ல. இந்தத் தேசத்தில் அநாதி காலம் தொடங்கி இதுவரையில் தேவஸ்தாந விஷயங்களெல்லாம் அங்கங்கிருக்கும் கௌரவப்பட்ட ஆஸ்திகர்களைக் கொண்டு தேவஸ்தாநத்திற்கு எவ்வித செலவுமின்றிக்கே நடத்தப்பட்டு வந்தன. இப்பொழுது அம்மாதிரி செலவின்றி பரிபாலநம் செய்யப்படாததுடன்; முன்போல கௌரவமுள்ளவர்களாற் செய்யப்படக்கூடிய பராமர்சங்களும் நின்றுவிடலாம். புதிதாக நியமிக்கப்படும் மநுஷ்யர்கள் நாஸ்திகர்களாகவும் வேறு மதத்தைத் தழுவினவர்களாகவும் அங்கங்குள்ள ஜநங்களின் விச்வாஸத்திற்கும் கௌரவத்திற்கும் அநர்ஹர்களாகவும் இருப்பதற்

கும் ஸம்பாவனை உண்டு. இம்மாதிரியான பர்யவஸாநங்கள் நேரும் பக்ஷத்தில் தேவஸ்தாநங்களுக்கும் அந்தத் தேவாலயங்களில் ஸேவார்த்திகளாகச் சேரும் ஜநங்களுக்கும் ச்ரேயஸ் என்பது எப்படி ஸம்பவிக்கும்? இம்மாதிரி விஷயங்களில் ஸர்க்கார் ப்ரவர்த்திப்பது ந்யாயத்திற்கு அத்யந்தம் விருத்தமே. எவ்வளவு வரையில் ஜநங்கள் தங்களுடைய ஸமூஹ விஷயங்களைத் தாங்களே பராமர்சித்து வருவார்களோ, அவ்வளவு வரை அவர்களைக்கொண்டே அந்த விஷயங்களைப் பராமர்சம் செய்வித்து வருவதுதான் ராஜ தர்மமாகும். எவ்விடத்தில் அப்படிப் பராமர்சித்து வருவதற்கு ஜநங்கள் அத்யந்தம் அசக்தராக இருக்கிறார்களோ, அவ்விடத்தில் மாத்ரம் ராஜாங்கத்தார் ப்ரவர்த்திக்கலாம். இந்தத் தர்மத்திற்கு மீறி ராஜாங்கத்தாரே ஸகல அதிகாரங்களையும் வஹித்து வருவதற்கு ப்ரயத்நப்படுவது தர்ம விருத்தமே. இதைப் பெரியோர்கள் கொஞ்சமேனும் ஸஹிக்கமாட்டார்கள்.

* * *

**ஹரிஜநங்களின் ஆலய ப்ரவேசம்**

தேவாலயங்களில், இப்பொழுது ஹரிஜநங்கள் என்று வ்யவஹரிக்கப்பட்டுவரும் இந்தியர்களுடைய ப்ரவேசம் கூடுமா கூடாதா என்பதைப் பற்றி நேபாள தேசத்து மஹாராஜன் பின்வருமாறு தமது அபிப்ராயத்தை வெளியிட்டிருப்பதாக நாம் அறிகிறோம். காசி ராமேச்வரம் பதரி முதலிய பெரிய ஆலயங்கள் கேவலம் அங்கங்கிருக்கும் ஜநங்களால் மாத்ரம் ஆதரிக்கப்பட்டு வரும் ஆலயங்களல்லவாதலால், அவைகளின் நடவடிக்கைகளில் பஹுகாலமாக அநுஷ்டிக்கப்பட்டுவரும் முறைகள் மாற்றப்படக்கூடியவை அல்ல என்பதுதான் அவர் அபிப்ராயம். ஸ்வயம் வ்யக்தமாயும் அநாதிகாலமாயும் இருந்து வரும் ஆலயங்கள் விசேஷித்த ஏற்றத்தை உடையவை என்பது உண்மையேயாயினும், ப்ராக்ருத ஆசாரம் போன்ற ஆசாரங்கள் ஸம்பந்தப்பட்டவரையில் அந்த ஆலயங்களுக்கும் மற்றை ஆலயங்களுக்கும் அநுஷ்டாந பேதத்தைக் கற்பிக்க ஒருவித ஹேதுவும் நமக்குப் புலப்படவில்லை. பெரிய ஆலயங்களில் எவை நிஷித்தங்களோ அவை மற்றை ஆலயங்களிலும் நிஷித்தங்களாகவே க்ரஹிக்கப்படவேண்டுமன்றோ? நிந்தித அநுஷ்டாநங்களை அநுஷ்டித்துவரும் ஜநங்களின் ப்ரவேசம் ஆலயங்களின் பெருமையையும் சிறுமையையும் பொறுத்ததன்று; அந்த ஜநங்களின் ப்ரவேசத்தைப்பற்றி சாஸ்த்ரங்கள் என்ன சொல்லுகின்றனவென்பதை மாத்ரம் அது சார்ந்து நிற்கும். ஆகையால், ஹரிஜனங்கள் ஆலய ப்ரவேசத்திற்கு அநர்ஹர்கள் என்றே சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றனவென்று நிஷ்கர்ஷித்துவிட்டால், அவர்கள் ஒருவித ஆலயத்திலும் ப்ரவேசிக்கக் கூடாது என்றே ஏற்படும்.

* * *



[illegible]

ஆகையினல், நர - என்கிற சப்தமானது எல்லா ஜாதி மனிதர்களையும் சொல்லக்கூடிய சப்தமாகையினல் அது ப்ராஹ்மணனைத் தவிர மற்றை ஜாதி மனிதர்களைச் சொல்லுகிறதாய்க் கொண்டு "அவர்கள் பிறருக்கு சக்ராதி தாரணத்தைச் செய்துவைக்கக் கூடா" தென்று சொல்லுகிறது.

காளிகா கண்டத்தில் ததீசி சாப ப்ரகரணத்தில்:—"நீங்கள் சங்கம், சக்ரம், அங்குசம் முதலியவைகளினல் ச்ரத்தையோடு அங்கங்களில் அடையாளம் பண்ணப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் வேதத்தை அங்கீகரிக்காத கெட்ட ப்ராஹ்மணர்களாக ஆகக்கடவது.

யக்ஞ வைபவ கண்டத்தில்—"சங்கம், சக்ரம், கதை, பாசம், சாப தண்டம், அங்குசம் இவை முதலியவைகளினல், நீங்கள் ச்ரத்தையோடு அடையாளம் பண்ணப்பட்டிருக்கிறீர்கள். கெட்ட ப்ராஹ்மணர்களாகக்கடவீர்கள்.

நீங்கள், சக்ரமாகவும், அரசின் இலைபோலவும், அர்த்த சந்திரன்போலவும், அடையாளங்களை ச்ரத்தையுடன் தரிக்கிறீர்கள். நீங்கள் வேதத்தை அங்கீகரிக்காத கெட்ட ப்ராஹ்மணர்களாகக்கடவீர்கள் என்று இருக்கிறது.

இவ்விடத்தில் அங்கங்களில் 'அங்கிதா:' என்பவை முதலியதினல் அக்காலத்திலிருக்கும் அந்த ப்ராஹ்மணர்களுடைய வேஷமானது சொல்லப்படுகிறது.

தைவத விஹ்நாங்கிதாநாம் கஷ்டம் ஶாபோ ந பவிஷ்யதி ந ஶங்கிதவ்யமிதி பாவ: ।

அத ஊர்த்வ புண்ட்ர விதி:

ருக்வேதே—

"ஊர்த்வ புண்ட்ரவந்தம் ப்ருதயந்தம் ந விஷ்ணுமிந்த்ராக்நீ, அவதம் இயம் வாம் அஸ்ய மநுமந்த தீர்க்கமாயு: ப்ரதத்த ॥ ஊர்த்வபுண்ட்ரவந்தம்- ஊர்த்வபுண்ட்ரம், ப்ருதயந்தம்-தாரயந்தம், ந விஷ்ணு:-விஷ்ணுரிவ, । அத்ர யாஸ்க: நஇ, யதா நிருக்தகாரேண 'அஶ்வோ ந த்வா வாரவந்தம்-அஶ்வமிவ, த்வா வாரவந்தம்' இதி, "ம்ருகோ ந பீம: குசரோ கிரிஷ்டா:, ம்ருகோ நம்ருக இவ இத்யாதிஷு, நஇ இவார்த்தே ப்ரயுக்த: ॥

"தேவதா சிஹ்னங்களினால் அடையாளம் பண்ணப்பட்டிருக்கும் நமக்கு சாபம் ஸம்பவிக்காது' என்று நீங்கள் ப்ரமிக்கக் கூடா"தென்று அபிப்ராயம். ஆகையினால், இம்மாதிரி வசனங்கள் தாபஸம்ஸ்காரத்தை நிஷேதிக்கமாட்டா!

தாபஸம்ஸ்கார விசாரம் முடிந்தது.

இதற்குமேல் ஊர்த்வபுண்டரத்தினுடைய விதியானது சொல்லப்படுகிறது.

ருக் வேதத்தில் க்ஷயரோகமுள்ள மனிதனைக் குறித்துச் சொல்லுகிற இடத்தில் — இந்த்ராக்னீ - "ஓ இந்திரன் அக்னி என்கிற தேவதைகளே, ந விஷ்ணு:-விஷ்ணுவைப்போல, (இங்கு, அஶ்வோ ந த்வா வாரவந்தம், என்கிற இடத்தில் அஶ்வோ ந என்கிற சப்தத்திற்கு குதிரையைப்போல என்றும், ம்ருகோ ந பீம:-என்கிற இடத்தில் ம்ருகோ ந என்கிற சப்தத்திற்கு ம்ருகத்தைப்போல என்றும், ந பதத்திற்கு போல என்கிற அர்த்தத்தை நிருக்தத்தில் எழுதி இருப்பதுபோல, இங்கும் ந விஷ்ணு: - என்பதற்கும்-விஷ்ணுவைப்போல என்றும் அர்த்தம்) ஊர்த்வபுண்ட்ரவந்தம் - ஊர்த்வ புண்ட்ரத்தை ப்ருதயந்தம் - தரித்துக்கொண்டிருக்கிறவனையும், ம்ரியம் - மரிக்கும் ஸ்வபாவத்தை, தயாநமபி - தரித்தவனாக இருந்தபோதிலும், இமம் - இந்த க்ஷய



தந்தத்தரபி ॥ ம்ரியம் - மரணஸ்வபாவம், தயாநமபி இமம் ப்ருகுதம் க்ஷயரோகிணம், இந்த்ராக்நீ அவதம்-ரக்ஷதம், இயம் வாம் - இயம் தீ: வாமஸ்தி அஸ்மை [illegible] ॥

மஹோபநிஷதி:—

"ஊர்த்வபுண்ட்ரவந்தம் பரமேஶிதாரம் நாராயணம் ஸாங்க்யயோகாதிகம்யம் । ஜ்ஞாத்வா விமுச்யதே நர: ஸமஸ்தை: ஸம்ஸாரபாஶைரிஹ சைவ விஷ்ணும் ॥ இதி॥

பால்வஶாகாயாம்:—

"அவர்த்தநாதௌ, யஜ்ஞமூர்த்தேர்ஹரேரூர்த்வபுண்ட்ரம்" இத்யாரப்ய "க்ஷணேந தாரயதே ஸப்த ஸ ம்ருத்யுமேஷ்யம் வைஷ்ணவம் பதம்" இதி॥

ரோகியை, அவதம் - ரக்ஷியுங்கள். இயம்_வாம்_அஸ்தி – இந்த புத்தியானது உங்களுக்கு இருக்கின்றது, அஸ்மை - இவனின் பொருட்டு, தீர்க்கம் – அதிகமான, ஆயு: - ஆயுஸ்ஸை, ப்ரதத்தம் - கொடுங்கள், என்று விஷ்ணுவைப்போல ஊர்த்வபுண்ட்ரத்தை மனிதன் தரிப்பதாகச் சொல்லப்படுகிறது.

மகோபநிஷத்தில்—"இஹ - இந்த வுலகத்தில், நர: - மனிதனானவன் ஊர்த்வபுண்ட்ரவந்தம் - ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்தவனைக்கொண்டு, பரமேஶிதாரம் - எல்லா வீச்வரர்களுக்கும் ஈச்வரனையும், ஸாங்க்யயோகாதிகம்யம் - ஞானயோகம், பக்தியோகம் இவைகளினால் அடையக்கூடியவனையும், விஷ்ணும் - எங்கும் வ்யாபித்திருக்கிறவனுமிருக்கிற, நாராயணம் – நாராயணனை, ஜ்ஞாத்வா - த்யாநம் செய்து, ஸமஸ்தை:-ஸர்வவிதங்களான, ஸம்ஸாரபாஶை: – ஸம்ஸார காரணங்களான பாசக்கயருபோன்ற கர்மங்களினால், விமுச்யதே - விடப்படுகிறான்" என்றும்

பால்வசாகை என்கிற வேதத்தில்—"யக்ஞமூர்த்தியான பகவானுடைய அர்ச்சநம் முதலிய காலங்களில் எவன் ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக் கொள்ளுகிறானோ அவன் தனது 7 - வம்சத்தை கரையேத்தி விடுகிறான். பிறகு அவன் விஷ்ணுவினுடைய ஸ்தாநத்தை அடைகிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது,

𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑍇 :—

“𑌹𑌰𑍇𑌃 𑌪𑌾𑌦𑌾𑌕𑍃𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌹𑌿𑌤𑌾𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌯𑍋 𑌧𑌾𑌰𑌯𑌤𑌿, 𑌸 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿, 𑌸 𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿, 𑌸 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌭𑌾𑌕𑍍 𑌭𑌵𑍇𑌤𑍍” 𑌇𑌤𑌿 ||

𑌸𑍍𑌮𑍃𑌤𑌯𑌶𑍍𑌚 𑌅𑌗𑍍𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯 𑌗𑍃𑌹𑍍𑌯𑍇 𑌯𑌥𑌾 :—

𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌲𑍀𑌲𑌯𑌾𑌽𑌪𑌿 𑌨 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 |
𑌧𑌾𑌰𑌯𑍇𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌯𑌤𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 || 𑌇𑌤𑌿 ||

𑌉𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑍇𑌨 :—

𑌹𑍋𑌮𑍇 𑌚 𑌪𑍂𑌜𑌾𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌸𑌾𑌯𑌂𑌪𑍍𑌰𑌾𑌤𑌸𑍍𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 |
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌧𑌰𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌭𑌵𑍇𑌚𑍍𑌛𑍁𑌦𑍍𑌧𑍋 𑌨 𑌚𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 ||

---

அதர்வணவேதத்தில்:—“எந்த மனிதன் தன்னுடைய க்ஷேமத்தை உத்தேசித்து நடுவில் இடைவெளியோடு கூடினதாயும் விஷ்ணுவினுடைய பாதத்திற்கு ஸமானமான ஆகாரத்தை உடையதுமான ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளுகிறானோ, அவன் ஸர்வேச்வரனுக்கு ப்ரியனாக ஆகிறான். அவன் அதிகமான புண்யத்தை அடைகிறான். அவன் மோக்ஷத்தை அடைகிறான்” என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விஷயத்தில் ஸம்ருதிகளும் அனேகமிருக்கின்றன.

அக்நி வைச்யக்ருஹ்யமென்கிற க்ரந்தத்தில்—வித்வானான ப்ராஹ்மணனானவன் விளையாட்டினாலாவது த்ரிபுண்ட்ரத்தை (அதாவது குறுக்காக இட்டுக்கொள்வதை) தரித்துக்கொள்ளக்கூடாது.

பரிசுத்தனாக இருந்துகொண்டு ப்ரயத்நப்பட்டாவது சாஸ்த்ரப்படி ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளவேண்டியது.

போதாயனராலும் இது சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ராஹ்மணனானவன் ச்ரத்தையோடுகூட ஸாயங்காலத்திலும் ப்ராதக்காலத்திலும், ஹோமம் பூஜை இவைகளைச் செய்யும் காலத்தில் ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொண்டிருந்தால்தான் சுத்தனாகுவன். இல்லாவிட்டால் சுத்தனாகமாட்டான்.



𑌶𑌾𑌤𑌾𑌤𑌪𑌶𑍍𑌚 :—

𑌯𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌂 𑌨𑍈𑌵 𑌤𑌦𑍍𑌦𑍇𑌹𑌂 𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑌸𑌦𑍃𑌶𑌂 𑌹𑌿 𑌤𑌤𑍍 || 𑌇𑌤𑌿 ||

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍌 𑌚 :—

𑌉𑌪𑌵𑍀𑌤𑌂 𑌶𑌿𑌖𑌾𑌬𑌨𑍍𑌧𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌕𑍃𑌤𑌮𑍍 |
𑌅𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌕𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌫𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ||

𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇 :—

𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌭𑍋𑌜𑌨𑍇 𑌚𑍈𑌵 𑌹𑍋𑌮𑍇 𑌚𑍈𑌵 𑌚 𑌮𑌙𑍍𑌗𑌲𑍇 |
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌧𑌾𑌰𑌯𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂 𑌵𑌾𑌰𑌣𑌾𑌯 𑌚 || 𑌇𑌤𑌿 ||

𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌶𑍍𑌚 :—

---

சாதாதபரும்:—

“மனிதர்களுடைய எந்த தேகமானது ஊர்த்வபுண்ட்ரமில்லாமலிருக்கிறதோ, அந்த தேகத்தைப் பார்க்கக்கூடாது. அது ச்மசானத்திற்கு ஸமானமானது” என்றும்,

விஷ்ணுஸ்ம்ருதியிலும் :—

“பூணல், குடுமி, ஊர்த்வபுண்ட்ரம் இவைகளில்லாமல் செய்யப்பட்டதும். கையில் பவித்ரமில்லாமல் செய்யப்பட்டதுமான ப்ராஹ்மணனுடைய கர்மாவானது பயனற்றதாகிறது” என்றும்,

மற்றொரு ஸ்ம்ருதியிலும்:

“வேதத்தை அத்யயநம் செய்யும்பொழுதும் சாப்பிடும் பொழுதும் ஹோமம் செய்யும்பொழுதும், மற்றும் மங்களகாரியங்களைச் செய்யும்பொழுதும், இராக்ஷஸர்கள் ஷை கர்மங்களைக் கெடுக்காமலிருப்பதற்காக தினந்தோறும் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்துக்கொள்ளவேண்டியது” என்றும்,

பார்க்கவ ஸ்ம்ருதியில் :—

யஜ்ஞோ தானம் தபோ ஹோமோ போஜனம் பித்ருதர்ப்பணம்
ஸர்வே பவந்தி விபலா ஊர்த்வபுண்ட்ரம் விநா க்ருதா: ॥ இதி ॥

பராசரஸ்ம்ருதௌ —

நிரூர்த்வபுண்ட்ரஸ்து பவேந்ந கதாசிதபி த்விஜ: ।
வைஷ்ணவஸ்து விசேஷேண ஸர்வகர்மாணி ஸாதயேத் ॥
இதி ॥

ஸ்ம்ருதிஸாரே —

ஸ்வாத்யாயே போஜனே சைவ ஹோமே ச மங்கலகர்மணி ।
ஊர்த்வபுண்ட்ரதரோ பவேத் ரக்ஷஸாம் சாபநுத்தயே ।

வாமனே —

---

"ஊர்த்வபுண்ட்ரமில்லாமல் செய்யப்பட்டதான யஜ்ஞம், தானம், தவம், ஹோமம், போஜநம், பித்ருக்களின் தர்ப்பணம் இவையெல்லாம் பயனற்றதாக ஆகிவிடுகின்றன" என்றும்,

பராசரஸ்ம்ருதியில் :—

"ப்ராஹ்மணன் ஒருகாலத்திலும் ஊர்த்வபுண்ட்ரமில்லாதவனாக இருக்கக்கூடாது. ப்ராஹ்மணர்களுக்கும் விஷ்ணுபக்தனானவன் முக்யமாக ஊர்த்வபுண்ட்ரமில்லாமல் இருக்கக்கூடாது. ஊர்த்வபுண்ட்ரத்தை தரிப்பவன்தான் எல்லா தர்மங்களையும் அநுஷ்டிப்பதற்கு யோக்யனாகிறான்" என்றும்,

ஸ்ம்ருதிஸாரத்தில் :—

"வேதாத்யயநம், போஜநம், ஹோமம், மங்கள கர்மங்கள் இவைகளைச் செய்யும்பொழுது ராக்ஷஸர்களை வெரட்டுவதற்காக ஊர்த்வபுண்ட்ரத்தை தரிக்கவேண்டியது" என்றும்,

வாமன புராணத்தில் :—



ரக்ஷார்த்தம் பாபநாசார்த்தம் மங்கலார்த்தம் ச பாமினி ।
தாரயேதூர்த்வபுண்ட்ரம் து சிரஸாऽஹர்நிசம் ஸதா நர: ॥

சதுரங்குலமூர்த்வமாயாமம் த்வ்யங்குலம் விஸ்த்ருதம் ததா ।
த்விஜ: புண்ட்ரம் ஸுசோபம் ஸாந்தராலம் து தாரயேத் ॥

நிரந்தராலம் ய: குர்யாதூர்த்வபுண்ட்ரம் த்விஜாதம: ।
ஸ ஹி தத்ர ஸ்திதம் விஷ்ணும் ச்ரியம் சைவ வ்யபோஹதி ॥

அச்சித்ரமூர்த்வபுண்ட்ரம் து த்ரிபுண்ட்ரம் தாரயேத்து ய: ।
ஸ பர்யாயேண யாதி நரகானேகவிம்சதிம் ॥

வ்ருத்தமனு: —
ஊர்த்வபுண்ட்ரம் ம்ருதா குர்யாத் யதீனாம் து விசேஷத: ।
பஸ்ம சந்தன கந்தாதீன் வர்ஜயேதாப்ராயணாந்திகம் ॥

---

"ஓ பாமினியே மனிதன் எப்பொழுதும் தன்னை ரக்ஷித்துக்கொள்வதற்காகவும், பாபம் போவதற்காகவும், மங்களத்திற்காகவும், நெற்றியில் இரவும் பகலும் ஊர்த்வபுண்ட்ரத்தை தரிக்கவேண்டியது. இது முதலாக மற்றும் பல வசநங்களிருக்கின்றன.

ப்ராஹ்மணன் புண்ட்ரத்தை உயர நுனியை உடையதாகவும் 4 அங்குலம் நீளமுள்ளதாகவும், 2 அங்குலம் அகலமுள்ளதாகவும், ஒழுங்காகவும் அழகாகவும் இடைவெளி யுள்ளதாகவும் (திரு) மண்ணினால் தரித்துக்கொள்ள வேண்டியது.

எந்த அதம ப்ராஹ்மணனானவன் ஊர்த்வபுண்ட்ரத்தை நடுவில் இடைவெளியில்லாமல் தரிக்கிறானோ அவன் அந்த ஊர்த்வபுண்ட்ரத்திலிருக்கிற விஷ்ணுவையும், லக்ஷ்மியையும் போக்கிவிடுகிறான்.

எந்த மனிதன் ஊர்த்வபுண்ட்ரத்தை இடைவெளி யில்லாமலாவது அல்லது த்ரிபுண்ட்ரத்தையாவது தரிக்கிறானோ அவன் 21 நரகங்களையும் வரிசையாக அடைகிறான்.

வ்ருத்தமனு:—ஊர்த்வபுண்ட்ரமானது மண்ணினால் தரிக்கப்படவேண்டியது. ஸந்யாஸிகளுக்கோவென்றால், முக்யமாக சாம்பல், சந்தனம், மற்றும் வாஸனை த்ரவ்யங்களையும், ஜீவித்திருக்கும்வரையில் ஊர்த்வபுண்ட்ரங்களை தரிப்பதற்காக உபயோகப்படுத்தக்கூடாது.

மாத்ஸ்யே.—

த்ரிபுண்ட்ரம் ப்ராஹ்மணோ வித்வாந் க்ரீடயாபி ந தாரயேத் |
தாரயேச்ச ப்ரயத்நேந ஊர்த்வபுண்ட்ரம் து நித்யஶ: ||

நாரதீயே.—

ஸர்வ ஜாதிஷு யோ மர்த்யோ விஷ்ணுபக்த: ஸதாநக: |
தஸ்யைவோர்த்வபுண்ட்ரகரணே அதிகாரோ பவேத் ஸ்ம்ருத: ||
ஸர்வ வர்ணேஷு பக்தா: கார்யமூர்த்வபுண்ட்ரகம் |
ப்ராஹ்மணாஸ்து விஶேஷேண ஜபஹோமபராயணா: ||

---

மாத்ஸ்யபுராணத்தில்—வித்வானன ப்ராஹ்மணனவன் விளையாட்டினாலாவது த்ரிபுண்ட்ரத்தை (நெற்றியில் குறுக்காக மூன்று கோடாக புண்ட்ரம் தரிப்பதை) தரித்துக்கொள்ளக்கூடாது.

தினந்தோறும் பரிசுத்தனாக இருந்துகொண்டு ஊர்த்வபுண்ட்ரத்தை நன்றாக தரித்துக்கொள்ளவேண்டியது.

நாரதீயத்தில்—"ஓ மஹர்ஷியே! எல்லா ஜாதியிலும் எந்த மனிதன் விஷ்ணுவினிடத்தில் பக்தியுள்ளவனாக இருக்கிறானோ, அவனுக்குத்தான் ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்வதற்கு அதிகாரம் உண்டு என்று ஜ்ஞானவான்களினால் சொல்லப்பட்டிருக்கிறது" என்றும்,

"எல்லா ஜாதியில் பிறந்திருந்தாலும் என்னிடத்தில் பக்தியுள்ளவர்கள் ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளவேண்டும். அதற்குள்ளும் ப்ராஹ்மணர்கள் முக்யமாக ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளவேண்டும். அதற்குள்ளும் ஜபம் ஹோமம் முதலிய சாஸ்திரம் விதித்த காரியங்களை பரலோகத்திற்கு ஸாதகமென்று செய்யுமவர்கள் அவச்யம் ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளவேண்டும்" என்றும், சொல்லப்பட்டிருக்கிறது.

[இதனால் இந்த ஜாதியில் பிறந்தவன்தான் ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளலாம். இந்த ஜாதியில் பிறந்தவன் ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளக் கூடாதென்கிற ஜாதி நியமம் இதற்குக் கிடையாதென்றும், பகவானிடத்தில் பக்தியுள்ளவர்கள் எல்லாரும் ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளவேண்டுமென்றும், அவற்றுள்ளும் ப்ராஹ்மணன் மற்றவர்களுக்கு தர்மங்களை உபதேசிப்பதினாலும் அநுஷ்டானத்தினாலும் தர்மங்களைத் தெரிவிக்கும் கடமையுள்ளவனாகையினால் அவன் முக்யமாக ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்துக்கொள்ளவேண்டுமென்றும், அதிலும் தர்மங்களைச் செய்யும் காலத்தில் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிக்கவேண்டியது மிகவும் அவசியமான காரியமென்றும் சொல்லப்பட்டதாகிறது.]



நித்யேஷு வஸ்துஷு த்வதநபேக்ஷமேவ
தத்தத்ஸ்வரூபமிதி கேசிதிஹ ப்ரமேது: |
ஐஶ்வர்யமத்ர தவ ஸாதிஶயம் ஶ்ரியஸ்தே
ஸம்ஸேதி ஶ்ருதிஸ்து நிரவாயிகஶீலநேத்ரே || ௧௫

---

படிப்பட்ட, ஐஶ்வர்யம் - [ஜகத்தை ஸ்ருஷ்டிப்பது போன்ற] ஐச்வர்யமானது, ஸம்ஸ்ருஷ்டம் - அடையப்பட்டிருக்கின்றது. யத: - ஏனென்றால், கேசந - சிலர், தேஷாமபி - அந்தப் புருஷர்களுக்கும், தத்ஸம்பந்த ஸங்காத் - அப்படிப்பட்ட ஐச்வர்யாதிசயத்தின் அநுஷங்கத்தாலேயே, பாரமேஷ்ட்யம் - உயர்ந்த ஐச்வர்யத்தை, ஶ்ருதிஷு - வேதங்களில் [சொல்லப்பட்டிருக்கிறதென்று], ஸஞ்ஜகிரே - சொல்லியிருக்கிறார்கள்.

சதுர்முக ப்ரஹ்மாவை ஜகத் காரணமாகச் சிலர், 'ஹிரண்யகர்ப்ப: ஸமவர்த்ததாக்ரே' என்னும் ச்ருதி வாக்யங்களைக் கொண்டு வாதிப்பதெல்லாம், 'யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை' [எந்தப் பகவான் சதுர்முகனை முதலில் ஸ்ருஷ்டித்தாரோ, எவன் அந்தச் சதுர்முகனுக்கு [வேதங்களையும் கொடுத்தாரோ] என்று ச்ருதிகள் சொல்லுகிறபடி அந்த ஐச்வர்யம் ப்ரஹ்மாவுக்கு அந்தப்பகவானால் கொடுக்கப்பட்டது என்பதை ஆதாரமாகக்கொண்டன்றோ? ஆகையால் சதுர்முகன் முதலானோர்கள் விஷயத்தில் ஐச்வர்ய ப்ரயோகம் முழுவதும், அந்தச் சதுர்முகன் பகவத் கடாக்ஷ பாத்ரமானான் என்பதனாலேயே.

35. சில வஸ்துக்கள் நித்யங்களாய் இருக்கின்றன வென்பது உண்மையே; ஆனால், அவை அப்படி இருப்பதும் பகவானுடைய கடாக்ஷத்தாலேயே என்று சொல்லுகிறார்.

[ப - ரை] நித்யேஷு வஸ்துஷு - நித்யங்களாய் இருக்கும் வஸ்துக்களின் விஷயங்களில், தத்தத்ஸ்வரூபம் - அந்தந்த நித்ய வஸ்துவின் ஸ்வரூபமெல்லாம், த்வதநபேக்ஷமேவ - உன்னுடைய அபேக்ஷை இன்றிக்கே [அதாவது - பகவத் கடாக்ஷமின்றிக்கே ஸ்வதந்த்ரமாக], [ஸித்யதி - ஸித்திக்கின்றது], இதி - என்று, கேசித் - சிலர், இஹ - இந்த விஷயத்தில், ப்ரமேது: - ப்ரமித்தவர்களாய், அத்ர - இதில் [அதாவது - ஜகத் காரணத்வத்தை வ்யவஸ்தை செய்யும் விஷயத்தில்], தவ ஐஶ்வர்யம் - உன்னுடைய ஐச்வர்யத்தை, ஸாதிஶயம் - ஒரு எல்லைக்கு உட்பட்டதாக,

இச்சாத ஏவ தவ விச்வபதார்த்தஸத்தா
நித்யம் ப்ரியாஸ்தவ து கேசன தே ஹி நித்யா: |
நித்யம் த்வதேகபரதந்த்ரநிஜஸ்வரூபா
பாவத்கமங்கலகுணா ஹி நிதர்சனம் ந: || ௩௬

---

நிராஹு: - சொல்லுகிறார்கள். த்ரயீ து - வேதமோவென்றால், தே - உன்னுடைய, ஐச்வர்யம் - ஐச்வர்யத்தை, நிரவதிகம் - இயற்கையாலேயே ஏற்பட்டதென்று [ஆகையால், எல்லையற்றதென்று], ஆஹ - சொல்லுகின்றது.

சிலர், 'நித்ய வஸ்துக்களென்று சொல்லப்படும் வஸ்துக்களெல்லாம் பகவத் கடாக்ஷமின்றிக்கே ஸ்வதஸ் ஸித்தங்களாக இருக்கின்றன' என்று சொல்லிக்கொண்டு, பகவானுடைய ஐச்வர்யத்திற்கு ஒருவித குறைவைப் பேசிவருகிறார்கள். அது ச்ருதி விருத்தமானதால் அங்கீகரிக்கத் தக்கதாக மாட்டாது என்று சொல்லப்படுகின்றது.

36. நித்ய வஸ்துக்களும் பகவானுக்கு அதீனமான இருப்பையே உடைத்தாயிருக்கின்றன வென்பது விளக்கப்படுகின்றது.

[ப - ரை] விச்வபதார்த்தஸத்தா -- இந்த ஜகத்திலுள்ள பதார்த்தங்களெல்லாவற்றுடையவும் இருப்பானது, தவ - உன்னுடைய, இச்சாத ஏவ - ஸங்கல்பத்தாலேயே. து - ஆனால், கேசன - சில பதார்த்தங்கள், தவ நித்யம் ப்ரியா: - நித்யங்களாயிருத்தல் வேண்டுமென்று உன்னால் ஸங்கல்பிக்கப்படுகின்றன; தே ஹி - அவை தாம், நித்யா: - நித்ய பதார்த்தங்கள். நித்யம் த்வதேகபரதந்த்ர நிஜஸ்வரூபா: - எப்பொழுதும் உனக்கே பாரதந்த்ரமாயிருக்கும் ஸ்வரூபங்களையுடைய, பாவத்கமங்கலகுணா: - உன்னுடைய கல்யாண குணங்கள், ந: - எங்களுக்கு, நிதர்சனம் ஹி - [இந்த விஷயத்தில்] த்ருஷ்டாந்தமாகின்றன.

நித்யங்களாக இருக்கும் வஸ்துக்களும் பகவானுடைய ஸங்கல்பத்தாலேயே அப்படி நித்யங்களாக இருக்கின்றது என்று விவரித்தார். அப்படி அவை அவன் ஸங்கல்பாதீனங்களாக இருந்தால், அவைகளை நித்யங்களென்று எவ்விதம் சொல்லக்கூடும் என்று ஒரு சங்கையைச் செய்து கொண்டு, அதற்கு ஸமாதானமாக ஒரு த்ருஷ்டாந்தம் சொல்லுகிறார். லோகத்தில் குணங்களின் இருப்பு, அந்தக் குணங்களை உடைய குணியின் இருப்பைச் சார்ந்தது. குணிகள் நித்யங்களானால் குணங்களும் நித்யங்கள், பகவான் நித்யன்; ஆகையால் அவனுடைய குணங்களும் நித்யங்களென்றே ஏற்படுகின்றது. அப்படி அவை நித்யங்களாயிருப்பதும் அவை அவனுக்கு அதீனங்களாயிருப்பதும்



விச்வஸ்ய விச்வவிதகாரணதாஞ்ச தத்த்வம்
கார்யம் த்வதீயமபி ஶம்ஸதி விச்வரூப |

---

எவ்விதம் பரஸ்பரம் விருத்தங்களல்லவோ, அவ்விதமே நித்யங்களாக இருக்கும் பதார்த்தங்களெல்லாம் அவனுக்கு அதீனங்களாகவும் இருக்கக் கூடும் என்பது தான் இவ்விடத்தில் செய்யப்படும் உபபாதநம்.

37. ஜகத்தில் கார்யமான ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் வெவ்வேறான மூன்று காரணங்கள் உண்டு. அவையாவன:—உபாதாநம், நிமித்தம், ஸஹகாரி. மண் குடம் என்னும் கார்ய வஸ்துவுக்கு, மண் உபாதாந காரணம்; குயவன் நிமித்த காரணம், சக்ரம் முதலியவை ஸஹகாரி காரணம். இம்மாதிரி ஒவ்வொரு வஸ்துவுக்கும் வெவ்வேறாக மும்மூன்று காரணங்கள் லோகத்தில் தென்படுகின்றன. ஜகத் ஆகிற இந்தக் கார்ய வஸ்துவுக்கோவென்றால் இம்மூன்று காரணங்களும் பகவானே. பகவானுக்குச் சரீரமாயிருக்கும் சேதநாசேதந வஸ்துக்களே, முதலில் ஸூக்ஷ்மமாக இருந்து கொண்டு பிறகு ஸ்தூலமாக மாறி ஜகத்தாகப் பரிணமிக்கிறபடியால், பகவானே ஜகத்திற்கு உபாதாந காரணமாகின்றான். பகவானே, 'நான் பஹுவாக ஆகக்கடவேன்' என்று ஸங்கல்பித்து அந்த ஸங்கல்பம் காரணமாக ஜகத்தை உண்டுபண்ணுகிறபடியால் அவன் நிமித்தகாரணமாகின்றான். ஸ்ருஷ்டியாகிற வ்யாபாரத்தில் உபகரணங்களாயிருக்கும் காலம் முதலியவைகளும் பகவானுக்கு ப்ரகாரங்களாயுள்ள வஸ்துக்களுள் சேர்ந்தவையாதலால், பகவானே, ஸஹகாரிகாரணமாகவும் ஆகின்றான். இவ்வாறு சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இது ஸம்பந்தமாக ஒரு ஸம்சயம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டு, அதற்கு ஸமாதாநமும் சொல்லப்படுகின்றது. அந்த ஸம்சயம் என்னவென்றால்:—'லோகத்தில் காரணம் என்று சொல்லப்படும் வஸ்துவானது ஒருவிதமான மாறுதலை அடைந்தே கார்யவஸ்து ஆகின்றதன்றோ? மண் மாறுதலை அடைந்தே குடமாகின்றது. அதுபோலவே, பகவான் காரணமாயும் ஜகத் அவனுடைய கார்யமாயும் இருக்கும் பக்ஷத்தில், பகவான் மாறுதலை அடைகின்றான் என்று சொல்லப்பட்டதாகின்றதே. உபநிஷத்துக்களிலோ பகவான் எவ்வித மாறுதலுமற்றவன் என்று சொல்லப்பட்டிருக்கிறான். இது எவ்விதம் ஸங்கதமாகும்?' என்பதுதான். 'தான் விகாரஹேதுவாக இருக்கையிலும், அதனால் எவ்வித விகாரத்தையும் தான் அடையாமல் இருப்பதே பகவானுடைய விலக்ஷணங்களான கல்யாண குணங்களுள் ஒன்று' என்பதே இந்த ஸம்சயத்திற்கு ஸமாதாநம். பகவானுக்கு ப்ரதாந குணங்களாகச் சொல்லப்படும் ஜ்ஞாநம் முதலிய ஆறு குணங்களுள் வீர்யம் என்பது ஒன்று. தான் அவிகாரனாக இருந்துகொண்டே, மற்றைப் பொருள்களுக்குக் காரணமாக ஒருவன் இருக்கும் பக்ஷத்தில் அவனுக்கு அந்த வீர்யம் என்னும் குணம் உண்டென்று சொல்லுவார்கள். விலக்ஷணமான இப்படிப்பட்ட குணமொன்று பகவானுக்கு இருக்கிறபடியால், அவனை அவிக்ருதனென்று சொல்வதில் எவ்வித அஸாங்கத்யமும் இல்லை.

த்வம் நிர்விகார இதி வேதசிரஸ்ஸு கோஷோ
நிஸ்ஸீமமேவ தவ தீபயதீச்வரத்வம் ॥ ௩௭

கிம்ஸாதந: க்வ நிவஸந் கிமுபாததாந:
கஸ்மை பலாய ஸ்ருஜதீச இதம் ஸமஸ்தம் ।

[ப-ரை.] ஹே ஈச்வர - ஹே பகவந்!, த்வம் - நீ, விச்வஸ்ய-ஜகத் முழுவதற்கும், விச்வவிதகாரணம் [அஸி] - ஸகலவித காரணமாயும் இருக்கிறாய். அதச்ச - ஆகையால் ப்ரஸித்தமாயும் ப்ரத்யக்ஷவிஷயமாயுமிருக்கும், அகிலம் - சிதசித்ஸ்வரூபம் - சேதநாசேதநங்கள் முழுவதும், கார்யம் [அஸ்தி]-[உன்னுடைய] கார்யமாக இருக்கிறது. த்வம்-நீ, நிர்விகார இதி - விகாரமற்றவனென்று வேதசிரஸ்ஸு கோஷ: - வேதாந்தங்களில் தென்படும் ப்ரவாதமானது, தவ-உன்னுடைய, நிஸ்ஸீமம்-எல்லையற்ற, ஐச்வர்யமேவ - ஐச்வர்யத்தையே, தீபயதி - ப்ரகாசிப்பிக்கின்றது.

விச்வவிதகாரணம்—கீழ் விவரித்திருக்கிறபடி காரணங்கள் மூவகைப்பட்டவை. அந்த மூன்று காரணங்களும் ஜகத்தின் ஸ்ருஷ்டி விஷயத்தில் பகவானே. இவ்விடத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள 'அச்யுத' என்னும் ஸம்போதநமும் அவனே காரணமாக இருக்கத் தகுந்தவன் என்பதைக் குறிக்கின்றது. ஏனென்றால், எவன் அச்யுதனோ [விகரிக்கும் ஸ்வபாவமற்றவனோ] அவனே ஜகத் காரணமாயிருப்பதற்குத் தகுந்தவனாவானன்றோ? இவனைத் தவிர்த்த மற்றை தேவதைகளெல்லாரும் நழுவும் ஸ்வபாவமுள்ளவர்களென்பது குறிப்பு.

ஐச்வர்யம்—ஐச்வர்யம். இந்தப் பதம் இவ்விடத்தில் இவனுடைய ஷாட்குண்ய பரிபூர்த்தியைச் சொல்லுகின்றது. பகவானுக்கு அநந்தங்களான குணங்கள் இருக்கையிலும், அவைகளுள் ஆறு குணங்களை முக்யங்களாகச் சொல்வது உண்டு. அந்த ஆறு குணங்களுள் 'வீர்யம்' என்பது ஒன்று. எந்த வஸ்துவானது, தான் காரணமாக இருந்துகொண்டு மற்றை வஸ்துக்களைத் தனது கார்யங்களாக உண்டுபண்ணுகையிலும் அப்படிக் கார்யங்களை உண்டு பண்ணுவதால் தான் எவ்வித விகாரத்தையும் அடையாமல் ஏகரூபமாக இருக்கின்றதோ அதைத்தான் வீர்யம் என்னும் குணத்துடன் கூடியதாகச் சொல்வார்கள். "ஸ்வயமவிக்ருதத்வே ஸதி உபாதாநத்வம் விகாரவிரஹோ வீர்யம்".

38. கீழ்ச் சொல்லப்பட்ட விஷயமாகவே, இந்த லோகத்தில் தென்படும் வ்யாபாரங்களின் ரீதியை அவலம்பித்து மறுபடியும் ஒரு சங்கையைச் செய்துகொண்டு அதற்கு ஸமாதாநம் சொல்வதுடன், என்ன பலத்தை உத்தேசித்து பகவான் ஜகத் ஸ்ருஷ்டியைச் செய்கிறான் என்பதையும் விளக்குகிறார்.



இத்யாதி நிஷ்பதித துஸ்தர்க துர்விதக்தான்
த்வத்வைபவம் ச்ருதிவிதோ விதுரப்ரதர்க்யம் ॥ ௩௮

யஸ்ஸர்வத: ஸமதிபூர்ண தரஸ்ஸ்வதத்வே
ஸ்ருஷ்டிம் ப்ரதிஜந லீலயார்த்தயா ஸ: ।

[ப-ரை] ஈச: - ஸர்வேச்வரன், கிம்ஸாதந: - எதை ஸாதநமாகக் கொண்டு, க்வ நிவஸந் - எவ்விடத்தில் இருந்துகொண்டு, கிமுபாததாந: - எதை உபாதாந த்ரவ்யமாக வைத்து, கஸ்மை பலாய - என்ன ப்ரயோஜநத்தை உத்தேசித்து, இதம் ஸமஸ்தம் - இவை எல்லாவற்றையும், ஸ்ருஜதி - ஸ்ருஷ்டிக்கிறான், இத்யாதி - இது முதலான, அநிஷ்பதித துஸ்தர்கம் - வ்யவஸ்தையற்ற குதர்க்கத்தை; ச்ருதிவித: - வேதாந்தத்தின் உட்கருத்தை அறிந்தவர்கள், அநாத்ருத்ய: - அநாதரித்தே, த்வத்வைபவம் - உன்னுடைய வைபவத்தை, அப்ரதர்க்யம் - [இம்மாதிரியான குதர்க்கத்தால் எட்டக்கூடாததாகவே, விது: - அறிகிறார்கள்.

லோகத்தில் வீடு முதலியவைகளை நிர்மாணம் செய்யும் தச்சன் முதலானவர்கள், சில கருவிகளை ஸாதநமாகக் கொண்டு ஒரு ஸ்தல விசேஷத்தில் இருந்துகொண்டு மரம் முதலிய த்ரவ்யங்களை உபாதாநங்களாகக் கைப்பற்றி சிற்சில ப்ரயோஜநத்தை உத்தேசித்தேயன்றோ கார்யங்களில் ப்ரவர்த்திக்கிறார்கள்? அம்மாதிரியே ஈச்வரனும் ப்ரவர்த்திக்க வேண்டாவோ? என்பது இவ்விடத்தில் செய்யப்படும் சங்கை. அதற்கு ஸமாதாநம், 'பகவானுடைய சக்தி அளவற்றதாகையால் அவன் லோகத்தார் செய்வதுபோலவே கார்யங்களைச் செய்யவேண்டுமென்னும் நிர்பந்தமில்லை' என்பதுதான்.

"பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே"

[அவனுடைய சக்தி அளவற்றது] என்னும் சுருதி வாக்யம் இதற்கு ப்ரமாணம்.]

கிம்ஸாதந: — இது ஸமஸ்த பதம். 'கிம் ஸாதநம் அஸ்ய' என்பது அதன் விவரணம்.

39. 'பகவான் அவாப்த ஸமஸ்த காமன்; அவனுக்கு ஆகவேண்டிய ப்ரயோஜநமொன்று உண்டு என்பதில்லை. ஆகையால் அவன் இந்த ஜகத் ஸ்ருஷ்டியில் ப்ரவர்த்திப்பதெல்லாம் ஒரு லீலையே' என்று இந்த ச்லோகத்தால் சொல்லப்படுகின்றது.

[illegible]
[illegible] ॥ ௩௯

[illegible]
[illegible] ।

---

[ப-ரை] [illegible] - ஒவ்வொன்றைக் காட்டிலும் பல்வத்து மடங்கு பெரியவையாயுள்ள ஏழு தத்வங்களால், [illegible] - சூழப்பட்டுள்ள, [illegible] - பதினுறு ஜகத்துக்களை உடைய; [illegible] - அண்டமானது, [illegible] - சிவன் ப்ரஹ்மா இவ்விருவர்களுடைய வாஸ ஸ்தாநம். [illegible] - இந்த அண்டத்தைப்போலவே இருக்கும், [illegible] - எண்ணிக்கையற்ற, [illegible] - அண்டங்கள், [illegible] - லீலையை வ்யாபாரமாயுடைய, [illegible] - உனக்கு, [illegible] — உபகரணமாயிருக்கும் தன்மையை, [illegible] - அடைந்திருக்கின்றன.

இம்மாதிரி கணக்கற்ற அண்டங்களை நிர்மாணம் செய்வதெல்லாம் பகவானுக்குக் கேவலம் லீலையே என்று சொன்னதாயிற்று. லீலையென்றால், ஒருவித ப்ரயோஜநத்தையும் உத்தேசியாமல், ஸப்த த்வீபாதிபதியான மஹாராஜன் பந்து முதலிய விளையாட்டில் ப்ரவர்த்திப்பது போல, ப்ரவர்த்திப்பதே.

[illegible] — ப்ருதிவீ, அப், தேஜஸ், வாயு, ஆகாசம், மஹத், அஹங்காரம், என்று தத்வங்கள் ஏழு. முதலில் ப்ருதிவியும், அதைச் சுற்றி அதைக் காட்டிலும் பத்து மடங்கு அதிக விஸ்தீர்ணமான ஜலமும், அம்மாதிரியே அதைச் சுற்றி தேஜஸ்ஸும், இவ்வாறு இந்தத் தத்வங்கள் கீழ்குறிக்கப்பட்டுள்ள க்ரமமாக வ்யாபித்து நிற்கின்றன. இவையெல்லாம் சேர்ந்து ஒரு லோகம். இவ்வாறு பதினுறு லோகங்கள் கொண்டது ஒரு அண்டமாகும். அதற்கு அதிகார புருஷர்களாக ப்ரஹ்மா முதலிய தேவதைகள் உண்டு. இம்மாதிரி கணக்கற்ற அண்டங்கள் இருக்கின்றனவென்று நமது சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இவையெல்லாம் பகவானால் கேவலம் ஸங்கல்பத்தால் மாத்ரம் ஏவ்வித ப்ரயத்நமுமின்றிக்கே ஸ்ருஷ்டிக்கப்படுகின்றனவென்றால், அவனுடைய சக்தி எப்படிப்பட்டது என்பதை ஊஹிக்கலாம்.

“[illegible]”
என்னும் ஸ்ரீ ஆளவந்தாருடைய திவ்ய ஸூக்தி இவ்விடத்தில் அநுஸந்திக்கத்தக்கது.

40. இவ்விதம் லீலா விபூதியைப் பேசிவிட்டு, இனி நித்ய விபூதியைப் ப்ரஸ்தாவிக்கிறார். மேல் சொல்லப்பட்டுள்ள அண்டங்களெல்லாம் ப்ரக்ருதி தத்வத்



[illegible]
[illegible] ॥ ௪௦

---

தின் விகாரங்கள்; விகாரமடையும் ஸ்வபாவமுள்ளவை; ப்ரளயத்தில் நாசமடைந்து தமஸ்ஸாக பகவானிடத்தில் லயித்துவிடும். அப்படி ப்ரக்ருதியின் விகாரமாக இராமலும், எவ்வித அபக்ஷய விநாசம் முதலியவை அற்றதும், இந்த லீலா விபூதியைக் காட்டிலும் பல மடங்கு பெரியதுமான மற்றொரு விபூதி உண்டு. அதை நித்ய விபூதியென்று சொல்வார்கள்.

“[illegible]”

[சேதநா சேதநங்களடங்கிய இந்த லீலா விபூதியானது, பகவத் விபூதியில் ஒரு அம்சமே. இதைக் காட்டிலும் பல மடங்கு பெரியதாக நாச கந்தமற்ற மற்றொரு விபூதி ப்ரக்ருதிக்கு மேல்பட்டு இருக்கின்றது] என்று புருஷ ஸூக்தம் சொல்லுகின்றது. அவ்விடத்தில் பகவான் சதுர்புஜனாய் சங்க சக்ராதிகளைத் தரித்துக்கொண்டு ஒரு திவ்ய மங்கள விக்ரஹத்துடன் எழுந்தருளி இருக்கிறானென்றும், நித்யர்கள் முக்தர்கள் இவர்களெல்லாரும்,

“[illegible]”

என்கிறபடி அவ்விடத்தில் அவனை தர்சநம் செய்துகொண்டு அதனால் பரமாநந்தத்தை அநுபவித்துக் கொண்டிருக்கிறார்களென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அவ்விடத்தில் காலம் என்பது ப்ரபுவன்றும்.

[ப - ரை] [illegible] - ஸ்வச்சந்தமான லீலை செய்யும் பொருட்டு, [illegible] - ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ள, [illegible] - இந்த அண்டங்களெல்லாம், [illegible] - உன்னுடைய விபூதியின் லவலேசத்தின் ஒரு கலையினுடைய பதினுயிரத்தில் ஒரு அம்சமே. [illegible] [[illegible]]-எந்த விபூதியானது, [illegible]-ஒரு பொழுதும், [illegible] — பரிணமிக்கின்றது என்னும் வ்யவஹாரத்திற்கு விஷயமாக, [illegible] - ஆகிறதில்லையோ, [illegible] - அப்படிப்பட்ட, [illegible] - காலத்தால் உண்டாகக்கூடிய விகாரத்தைத் தாண்டினதாயிருக்கும், [illegible] - மற்றொரு, [illegible] - உன்னுடைய விபூதியானது, [illegible] - மிகப் பெரியது.

ஸ்ரீ ஆளவந்தார்,
“ [illegible]”

யஜ்ஜைஷ்ணவம் ஹி பரமம் பதமாமநந்தி
வ்யோம ஸ்ய யதேவ பரமம் தமஸ: பரஸ்தாத் ।
தேஜோமயம் பரமஸத்வமயம் த்ருவம் ய
தாநந்தகந்தமதிஸுந்தரமத்புதம் யத் ॥ ௪௧

---

என்று இந்த விச்வத்தைப் பகவானுடைய விபூதியின் ஒரு மிகச் சிறிதான அம்சமாக வர்ணித்திருக்கிறார். பதினாயிரத்தில் பதினாயிரத்தில் நூற்றில் ஒரு அம்சத்தின் ஒரு கலையினுடைய ஒரு அம்சத்தின் ஒருஅம்சமாம். புருஷஸூக்தத்தில் இந்த விபூதியை ஒருபாதம் (கால்பாகம்) என்றும், நித்யவிபூதியை மூன்று பாதங்கள் கொண்டது என்றும் சொல்லியிருந்த போதிலும், அவ்விடத்தில் 'பாதம்' என்னும் பதத்திற்கு 'அம்சம்' என்றே ஆசார்யர்கள் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

41. இனி ஐந்து ச்லோகங்களால் அந்த நித்ய விபூதியாகிற பரம பதத்தை வர்ணிக்கிறார்.

[ப-ரை] யத் - எதை [எந்த விபூதியை], வைஷ்ணவம் - விஷ்ணு ஸம்பந்தியான, பரமம் பதம் - பரம பதமென்று, ஆமநந்தி - வேதங்கள் சொல்லுகின்றனவோ ; யதேவ - எதையே, பரமம் வ்யோம - பரமமான ஆகாசமென்று, [ஆமநந்தி - சொல்லுகின்றனவோ] ; யத் - எதை, தமஸ: பரஸ்தாத் - தமஸ் என்று சொல்லப்படும் அதிஸூக்ஷ்மாவஸ்தையை அடைந்திருக்கும் ப்ரக்ருதியைக் காட்டிலும் வெளிப்பட்டதென்றும், பரமஸத்வமயம் - சுத்த ஸத்வமென்று சொல்லப்படும் ஸ்வயம் ப்ரகாச வஸ்துவால் செய்யப்பட்டதென்றும், தேஜோமயம் - [அந்தக் காரணத் தாலேயே] தேஜோமயமா யிருக்கிறதென்றும், த்ருவம் - சாச்வதமென்றும் [ஆமநந்தி - சொல்லுகின்றனவோ] ; யத் - எதை, ஆநந்தகந்தம் - ஆநந்தத்திற்கு ஹேதுவென்றும், [ஆமநந்தி - சொல்லுகின்றனவோ] ; யத் - எதை, அதிஸுந்தரம் - மிக அழகியதென்றும், அத்புதம் - [ஆகையால்] ஆச்சர்யகரமென்றும், [ஆமநந்தி - சொல்லுகின்றனவோ].

இந்த ச்லோகத்திலும் அடுத்து வரும் ச்லோகங்களிலும் காணப்படும் 'யத்' [எந்த] என்னும் நிர்த்தேசத்திற்கு, "வைகுண்டநாத தவ யாத் ததாமநந்தி" என்று மேல்வரும் வாக்யத்திலுள்ள 'தத்' என்பதை ப்ரதி நிர்த்தேசமாகக் கொள்ள வேண்டும்.

வைஷ்ணவம்—விஷ்ணு ஸம்பந்தியான. "தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:" என்னும் வாக்யம் இதற்கு ப்ரமாணம்.

பரமம் வ்யோம—பரமமான ஆகாசம், "ததக்ஷரே பரமே வ்யோமந்" என்பது ச்ருதி. இம்மாதிரி ஒவ்வொன்றுக்கும் ச்ருதி ப்ரமாணம் உண்டு,



வேறு

விண்வாணியி னுரைதன்செவி விழவில்லிபுத் தூரான்
பெண்சானகி யின்முன்சன கனுமம்புயம் பிறங்கும்
கண்வேலெனுந் திருவிற்கல சாம்போதியு மன்றே
கொண்மாபுகழ் கொண்டேனென வுரையாவுளங் களியா. 9

திருவாடியி னொருபூரநா டிகழப்பிறந் தவளை
யிருமாமலர்க் கரங்கொண்டுத னெழின்மார்புற வணையாத்
திருமாளிகை யணைந்தேதிரு சேரும்மனைய வன்கைக்
கருமாமணி யிதுகொள்கென வருளாவிலை தறைவார். 10

பண்டேபுரி தவமுண்டதி னந்தம்படர் பொழிலுட்
கண்டேனிவள் கருமாமுகிற் கருணைகொடு திருவே
தண்டேன் றுளிதுளவத் தடிதனில் யோனிசை யலளாய்
விண்டேமல ரெழுந்தாளினி விழைவிற்புரந் திடுவாய். 11

எனவப்பதி விரதாமணி யெனுமில்லவள் பொங்கி
யுனதித்திரு மனையம்புய மலரோவென வுரையாத்
தனதொத்தக லிலம்விம்முபு பெருகும் பயந்தந்தே
மனதிற்கிளை வண்ணம்வளர் தரநன்கு வளர்த்தாள். 12

ஊர்தோறுறை யனைவோர்களு மிதுதஞ்செவி யுற்றே
பேர்போகிய வாழ்வாரகம் பெட்பிற்படர்ந் தணையா
வேர்தான்குடி கொள்ளுங்குழ லியினின்னொளி காணப்
பார்தாவிய பரமற்றுற திருவேயிவ ளென்பார். 13

திருவின்செறிந் தரேயோபெருந் திருவொன்றின ரிவளால்
மருவுண்டன மனைவோருமென் றவர்யாவரு மகிழாக்
கருமென்குழ லவளைக்கரங் களிகொண்டில ரணைவார்
புரிவார்திரு நடனஞ்சிலர் புகழ்பாடுவர் சிலரே. 14

பொன்னின்கடா ரத்தேநிறை பூக்கைதயலை புனைவார்
மன்னுந்திரு மஞ்சட்பொடி மணமுறு கற்பூரந்
துன்னுந்தக னிலவேழுறத் தூவிக்கலந் தெங்கும்
புன்னுஞ்சிறப் பவர்செய்தது பன்னுந்திற முளமோ. 15

இவ்வாறுவ னெண்மூன்றின்விழ வயரும்மவர் தாமு
மொவ்வாமதர் வுறவுவ்வருள் தங்கிக் கிளைய
வவ்வானவர் புகழ்விண்டெறித் திருமிம்பரி சனிந்தா
செவ்வானவர் களுமைந்தரு விண்பூமழை விழைந்தார். 16

ஓதார்மறை யோதிக்கிழி யறுவாதமு னிழைத்தோர்
மாதேரிடக் கரமாகுமென் மலரிற்கொடி குடையுந்
தாதார்கம லமுமாதியுந் தயங்கக்குறித் தரிக்கே
யாதாரமா யிவளாகுவ ளென்றேமுத மடையா. 17

மீண்டன்னவண் மிளிர்செந்தளிர் மேவும்பத வரைகண்
டூண்டும்விபு தரின்பன்னிய ரிலகுங்குழன் மலர்க
டூண்டும்வணங் குலவும்மிஃ தென்றேநனி தெரிந்தே
பூண்டும்மிவள் புகழும்பெய ரதுவென்றரி தாய்ந்தார். 18

மறையேதரு கோவித்திரு மாலுக்குந வுவளென்
றறியாவத ஞனேயெழிற் கோதாவெனு மருப்பேர்
நெறியாணிடு நிறைஞானியுங் கனகச்சிறு கட்டி
லெறியாவொளி யிலகும்மணி யிழைத்தொன்றதி லிட்டார். 19

அத்தொட்டிலி னவளாட்டிடு மவர்வேறிசை பாடின்
பித்துப்பிடித் ததுபோலழும் பீதாம்பரன் பெருமை
வைததிட்டது வழங்குந்தொறும் வனப்பார்மதி வதன
மத்திட்டொளிர் கமலம்மென வலர்ந்தங்கது கேட்கும். 20

அணியங்கணத் துகளின்னிடை மலர்க்கைம்முறை யமர்த்தி
மணிமின்சிறுசதங் கைச்சிலம் பின்னின்னிசை மலிய
வணியுஞ்செவி யித்தாய்முத லனைவோர்களுங் களிக்கத்
தணிவின்முறு வலிப்போடவ டவழ்ந்தேயிளை யாடும். 21

முகபங்கய மூசும்மள கமெனும்மளி நிரையை
நகுதன்கர நறுஞ்செந்தளிர் கொண்டேநனி யொதுக்கி
யுகுபற்பல மலரின்நுக ளொளிரும்மனை முழுதும்
மிகுபற்பல விதவாடல்கண் மேவித்திரி கிற்பாள். 22

வில்வீசிரத் தினமார்பணி விளங்கத்திரு நுதன்மேன்
மெல்வீமக ரந்தத்துடன் மிளிரத்திரு விதழ்விண்
டெல்வீசிள நகைசெய்யுமவ் வெழில்சேர்மக ளணையா
வல்வீசடர் குழலுச்சியி னையன்முகந் துகப்பார். 23

அப்பெண்மணி மணிகுட்டிம மதனுட்டன தழகார்
தப்பின்னித ழொடுதோன்றுறுந் தண்டந்தனை நோக்கா
வொப்பின்றிய வொருபங்கய மிதுவென்றதைப் பிடிப்பா
ளப்புங்கையி னதுறுமையி னகலாததை நோக்கும். 24



மணிபித் தியின்மி னுருத்தனை நோக்குற் றனண்மகிழா
வணிபெற் றவோர்கனி யென்றதை யழைத்தே கரமசைத்தே
யணுகிற் றிலததன் னையங் கழைத்கும் மெனநினைவா
ணணுகிச் சுவரரு கின்னனி நண்பிற் பலவுரைப்பாள். 25

வேறு

செவிலியின் காந்தண் மானுஞ் செவ்விர லுதியைப் பற்றி
யிவண்மெல வெழுந்தி ரத்தினச் சிலம்பொ லிப்ப வைக்குந்
திவளொளி செறிந்த செங்கேழ் மலரடித் திறங்கண் டூன்ற
நவையறு விண்டு சித்தர் நளியுளங் களிப்பர் மாதோ. 26

காதலார் கைத்தா யன்னை யப்பவென் றறையக் கண்ட
மாதரா ளதனின் மற்றுங் கோவிந்தன் மருவு நாம
மாதரா திசயம் பண்டே யுண்டதி னறைந்து கொண்டே
போதராக் கரங்கள் கொட்டித் திருவுளம் பூரித் தாடும். 27

வாயச நமக்கு முன்னர் வடுவிழைத் ததுவென் றந்தத்
தீயசெந் துவைவ வரைந்து கலுழனைத் தெரிந்து கூவுஞ்
சேயசந் திரனங் கண்ணன் சிந்தையி னுதித்தா னென்றே
நேயசிந் தையினே வாவா வென்றிடு நிசியி னம்மா. 28

கோமறு கிடையி னெய்தி யிகுளையி னினத்திற் கூடிக்
காமரு புழுதி கொண்டு கடன்மலை யடவி சேர்ந்த
மாமகி யடங்க லுற்ற மந்திர மிழைத்து நாளுந்
தாமரை விழிய னென்னத் தானுமின் றுடலை யாற்றும். 29

காவியஞ் சுள்ளி நாப்பண் கமலபாத் திரத்துண் மல்க
மேவரு நறவ மாது ளம்பழ விதைக ளாகுந்
தூவரி நிறையப் பெய்து சண்பகச் சுடரு மூளத்
தேவரு மருந்திக் காணு வடிசிலுந் தெரிந்து செய்வாள். 30

இன்னுமங் நீலச் சுள்ளி யிடைதுகிர்க் குழிசி யூடே
யின்னறும் பனிநீர் தேக்கிச் செம்மணி யெரியை மூட்டி
மின்னொளி வயிர மென்னு மேவரு மரிசி யிட்டே
யன்னவ ளடுதல் காணு வனைவருங் களிப்ப ரம்மா. 31

மரகத மணியின் மாணிக் கத்தினும் வனைந்த கண்ணன்
விரவுருக் குமிணி யென்னு மிருபது மைகளை வேய்ந்த
தாளவெண் பந்தர்க் கீழே தாலகே தனன் செய் சேதி
திருபனின் சமரத் தோடு கிழத்துவள் வதுவை மாதோ. 32

வில்லெறி வயிர வேதி கைக்கிடைப் பவளத் தூயு
நல்லரி சந்தனத் திந்த னத்தினு னலங்கொண் டோங்கச்
சொல்லருந் தாளக் குப்பை யாம்பொறி சொரிந்து மந்த
மல்லடு திணிதோண் மாயன் மணத்தொழின் நடத்து மன்றே. 33

பைங்கிளித் திரளி னுப்பண் டோகையைப் பரப்பி மஞ்ஞை
பொங்குற நடிப்ப போலும் பூவை யாரிடை யினன்ன
டிங்களின் வதன நான்கு புறத்தினுந் திகழச் சுற்றிக்
கொங்கவிழ் குழலுஞ் சோரக் கந்துகத் தொடலை யாற்றும். 34

இடையிடை நீவி பந்த மின்புறப் பிணிப்பாள் சோர்ந்து
படிபுரள் குழலை யாப்பா ளூபுர முதல பல்ல
விடுசுடர் மணிப்பூ ணுங்காங் கிலகுற விரகிற் சேர்ப்பா
ளிடையிடு கவள்ப ந்தாட லெழிலெவ ரியம்பு கிற்பார். 35

கழலாடித் தோற்று நிற்குங் காலையிற் சகிக ளன்ன
ளழகாரும் வதன நோக்கி யாருனக் கரிய கொண்கன்
விழைவோடு விளம்பி னீயே வென்றனை யெனவே நாணி
மழையாரும் வண்ண னென்று மெல்லென வழங்கு மன்றே 36

இரணியத் திழைத்த வீரேழ் குழிகளை யிலகு முத்தத்
திரளினி னிரப்பி முற்று மொன்றினிற் றிரட்டிப் பின்னு
திரல்பட னன்னுன் காக நிரப்பு நித்தி லங்கள் வவ்வி
முரணதி னெதிரி லாடுந் தோழியை முடங்க லாற்றும். 37

வண்ண மூன்று டையமா ழைவகை படவிழைத் தகாய்க
ளொண்ணறு மலர்க்கை கொண்டே யும்பரை நிவந்து நோக்கா
மண்ணையுண் டுமிழ்ந்த மாயன் மகிமையா ரிசைகள் பாடிப்
பெண்ணெலாம் வியந்து நோக்க வம்மனை பெருக வாடும். 38

ஆடலின் னனம னேக மாற்றுறு மழகி தந்தை
வீடருள் பெருமாற் கென்றே விதம்படத் தொடுத்து வைத்த
தோடவிழ் தொடைய லுளுந் தன்றிருங் குழலிற் சூடி
யாடியி னழகு நோக்கா மீண்டதைக் களைந்து வைப்பாள். 39

அம்மரு வொலிய லுரு மணிர்தகங் குளிரு மாயன்
செம்மைசேர் விண்டு சித்தர் செய்துமுன் புனைந்த தானும்
வெம்மையார் கஞ்சன் மாலா காரன்முன் விழைவி னீந்த
பொம்மலார் பிணைய லானும் பூத்திலன் களிப்பி னம்மா. 40



நாடோறுங் கோதை தந்தை நந்தன நணுகி யன்று
கோடாரப் பூக்து வாசங் கொண்மல ரெடுத்துக் கட்டிச்
சூடாதின் றவர்கைக் காணு தளித்திடச் சூடு மாற்றும்
பீடார மணக்கக் கண்ணன் பெருமிதம் பெருகச் சூடும். 41

யௌவனம் புதிய தேற்கு மிவளுடம் பெனும்பூ மீதே
திவ்விய நதியீன் சோதி திகழ்முலை யிரத வீயு
நவ்வி சேர்விழி களாகு நீலமு நணுகி மாலென்
பவ்வ மேயடைய நாளும் பான்மையிற் படரு மாதோ. 42

அத்திருப் பருவ மன்னுட் கரிய பூடண முங்காம
னத்திர மணியு மாகி யனந்த னம்பா யலான்றன்
வித்தக விழிம லர்க்கே பெருகுறு மமுத தாரை
யொத்த தாயொழு குமென்று மொருபடி முதிர்த லின்றே. 43

புதியயௌ வனத்த வன்னுள் பொன்னுடன் முகிழ்மென் கொங்கை
மதியிலார் புதிய செல்வ மணக்குமே னோக்கு மாபோல்
புதைதரத் தரள மாலை யிரண்டிடை பூரித் தோங்க
வதுபொறு திடுகு தொய்ப கொடிமருங் குடைய தாகி. 44

பிறைநுதன் மிசையே யேறி வளைந்துலாம் புருவ வில்லும்
பிறழ்கயல் பிணையுங் கண்க ளென்றிடுங் கணையும் பெய்த
நிறைமதி முகமென் செய்ய பங்கய மிடைந்து நீலஞ்
செறிதரும் புழுகு நாறுங் குடிலமாங் குழலுஞ் சேர்ந்தே. 45

ஒருமுனை யிரண்டு கொங்கை யோங்கலும் பிறிதோர் கோடி
பெருகிய நிதம்பந் தானும் பிறங்கிடக் கோத்து மின்னுங்
கருமணிச் சலாகை யென்று கழறுறு மயிரை முங்கி
லரியவா யொளிரு மண்ட நாயகம் கமைந்த தானே. 46

மற்றுமத் திருவின் மேனி முலைமலை மணைக்கங் காழும்
பெற்றவுந் திமெனும் வாவி பிணைந்துதோள் வல்லி யார்ந்து
கொற்றவேல் விழியென் வண்டின் கூடியே மதனை னுடற்
றுற்றவா ராம மாத வொளிர்தரு மென்ப மாதோ. 47

பெண்மணி யிவள யாங்கும் பெய்கொடுங் கணையா யந்த
வொண்மலர்க் கணையான் கன்ன லாரத்தினி லழுத்தி வெல்லா
னுண்மையி தன்றே லண்ட நாதனு மொருவன் றன்னைத்
தன்மை கொண் மலரம் பெய்து தன்வயப் படுத்த லென்னே. 48

கொண்டழூக் காறு நாறும் பங்கயங் குலவு மாதுங்
கண்டுதற் கடுகடுத்த தாலையுங் கண்ணன் கோதை
கொண்டையிற் புனைந்த தாரே புனைந்தகங் குளிரு மாற்றுற்
கொண்டனே ரதுவே மேன்மை கொண்டதென் றறைவ ரம்மா. 49

அமுதமா கிரணத் தன்னு ளானன மறிந்து தேர்ந்து
கமழ்தர வுலக மூன்றிற் கடிப்பதொன் றிலதாய்க் கஞ்ச
மமர்தரு கடவுள் செய்தா னென்றெனி லரிமான் காணு
மிமிழ்தரு கலைக ளாலே யெங்ஙன நிறையு மாதோ. 50

புயலதை யவள ளிச்சப் பூந்தொடைக் குரிய நட்பாய்
நயமுள தெனவே நன்கு நவிலுறு மிலதேல் வையம்
வயமுற வளந்த மாலின் கந்தரத் தொழு குறுந்தேன்
மயவிளர் துளவத் தாரின் மகிழ்வுற வணித லென்னே. 51

செய்யரித் தடங்க ணாளின் மேனியா நதியிற் சேர்ந்தே
தொய்யிலின் விகாரிக் குங்கட் டுநதி லெனுங்கோ கங்க
ளையமென் கரிய வாய மயிரொழுங் கெனும்பூ வல்லி
மெய்யுற வெழுந்த குஞ்த் திணையென மிளிரு மன்றே 52

சேயிழை யுருவங் காமன் செங்கண் மாற்கெழு துமாணை
யாயபொன் னிலகு மோலை யாயடைந் தனி ணப்ப
ணையலின் றறிய விங்குச் சுன்னமென் றெழுதி ணான்கா
ணுபலின் றதனை யுந்தி யாமென லடுப்ப தன்றால். 53

நிலவுணும் பறவைக் கண்ணின் சேயொளி நிறைந்து செய்ய
மலர்மணச் செருக்கை வாட்டு மங்கையின் மலர்த்தாண் மாயன்
குலவுகௌத் துபமென் செய்ய குலமணி யுரைந்து நாளும்
வலிவுறு முரத்தின் வன்மை யெவ்வணஞ் சமிக்கு மம்மா. 54

கோதையிக் குணத்து மாயன் குலவுத்தோள் புல்லு மார்வம்
மீதுற விதுவின் றண்ணங் கலையென மிகுமின் வாசச்
சீதசந் தனத்து வீறுங் கொடியெனச் செழித்தா ணாளும்
வேதவிற் பனராம் விண்டு சித்தரின் மனையின் மன்னே. 55

ஆகச் சருக்கம் 8 க்குச் செய்யுள்-474.

ஸ்ரீ

# ஆண்டாள் வைபவம்

## 9-வது சருக்கம்

நின்ன டைக்கல மென்றுவீ ழமார்க ணிலையின்
மன்ன மித்திரன் மரபினி லெழுந்துகான் மணந்து
தன்னு யிர்த்திருத் தன்னையுந் தனாந்தரக் கர்களைப்
பின்ன ழித்தசெம் பிரமமன் றேபரம் பொருளாம். 1

விண்டு சித்தரோர் பகன்மலி விரைமலர்த் தொடையல்
கொண்டொ சித்தவெங் குவலயா பீடவான் கோட்டை
யண்டர் கட்கிறை யாலிலைப் பாயலாற் கணிந்து
கண்டு மற்றகன் றீண்டினர் தமதகங் களிப்பின். 2

தன்க ருத்தெலாந் தாமரை விழியவ னுழையே
நன்கி ருத்தியந் நாரணன் குணமெலா நணுகி
யின்பு றத்திருக் கோதையவ் வெல்லையி னவரை
யன்பி னிற்பணிந் தின்னண மறைதன்மே யினளால். 3

அண்ட கோடிக ளவைபரு வரலுறு தளிக்குங்
கொண்டல் வண்ணனின் குணகண சரிதமே முற்றுங்
கண்டொ ளிர்ந்தனை யாதலிற் காசினித் தலையவ்
வண்ட நாயக னருச்சை யாயுமர் தலமுழுதும். 4

வாவ தூகனாய் வளருந் தந்தையே யருள்கென்
றுவ லாயவள் வினவுற வருந்தவத் திறையாம்
பாவ லார்களிற் சிறந்தவப் பாகவ தருமத்
தேவ தேவியின் றிருவுளங் குளிர்ப்புறத் தெரிப்பார். 5

பெண்ணி ரத்தின மெனத்தகை பிறங்கருந் தனமே
யெண்ணி னாறுட னிணைந்த வெட்டவன் னலமென்ட
மண்ணி னத்தல மகிமையிற் படிந்திடு மவரோ
நண்ணி முத்தியி னமுதந் தணிவற மிசைவார். 6

கேளெ னாவவர் கெடலரு மவைகளின் விறலை
நீள யாவையு நிகழ்த்தினர் வருகையின் மதுரை
யாள னங்கிருட் டினனரு முடலையை யறையும்
வேலை யன்னவள் கொண்டதே விம்மித மெனலாம். 7

பின்னர்ச் சுந்தர ராசனின் பெருமைகள் பேசக்
கன்ன லுங்கசப் புறுமின மழலையங் கன்னி
பொன்னின் மின்னுறும் பொருவரு முடலெலாம் புளகந்
துன்ன மன்னிய மலர்ச்சியின் றனையுமொன் றுளதோ. 8

வேறு லோகமே யிருமஃ தெனும் வேங்கடத் துறையு
நாறு பைந்துழாய் நாரணன் பகடுகண் முழுதும்
கூறு போதவள் குளிர்மதி முகந்தனிற் கொண்ட
வீறு மின்விகா சந்தனை விளம்பவீ றுறுமோ. 9

பங்க யத்திகழ்த் தடங்கணி பரம்பதம் படிமே
லிங்கி தென்றல விறைஞ்சிடு மரங்கநா யகன்றன்
பொங்கு வைபவத் தமிழ்தினைப் புதிதுண மீண்டுந்
தங்கு மால்விழை வொடுந்திருத் தந்தைதா டொழுதே. 10

தாதை யேயயன் றுதையா மரங்கனின் றகையார்
காதை யாவையுங் கழறுக விரிதர வெனலும்
மாத ரார்சிரோ மணியுளக் கருத்தினை மகிழா
வாத ரம்பெரு கவை யெலா முணர்ந்தன ரறைவார். 11

நந்தி ருக்குலம் பெருகுற வுதித்திடு நங்காய்
முந்த னத்தினன் முகுந்தனின் றனைமல ரடியைச்
சிந்தை யிற்பதித் திரும்பகற் செழுந்தவம் புரிய
விந்தி ரைக்கிறை யிதயநன் குவந்தன னிதனால். 12

பின்ன ராரண மயமெனப் பிறங்குபொன் முடியார்ந்
தின்ன லாறரும் பிரணவத் தெழிலுரு வேய்ந்து
மின்ன லாரிஃ தரங்கமா விமானமா மிகைசேர்
பன்ன லாந்திருப் பாற்கட லிடையெழுந் ததுகாண். 13

வேறு

செங்கதிர்க ளொருகோடி யொருங்கெழுந்த செவ்வியெனச்
சமுக்கென் றந்தப்
பொங்குசுதி ருர்தியெழப் பூந்தவிசன் கண்விழித்துக்
காணுங் காலை
யங்கதனு ருபரிடத மிலைத்திருக்கு மந்தமென
வலர்ந்து மாயன்
றிங்களெனப் பளபளெனத் திகழுமந்தப் பாயலிடைத்
திகழக் கண்டான். 14



ஆனந்தக் கூத்தாடி யங்குமிங்கு மாயோடி
யவனு லன்றே
தானந்தப் பெற்ற வொருநான் மறையான் றழுதழுத்த
நாவா லேத்தி
நாணிந்தப் பேறடைந்த நற்றவமே யுற்றதவ
மென்று நாடா
வானுந்தப் பொன்முகடா ருர்தியினை வலம்வந்து
பணிந்து மாங்கே. 15

அறிதுயிலா ரதனிடையே யப்பெருமா னாணையினு
னதனைக் கொண்டே
நிறைதிருசேர் தன்னுலக மிடைந்தங்கு நின்மலனை
கெடுநாள் வாசஞ்
செறிதுளப மலர்கொண்டா ராதனஞ்செய் தேயிறகச்
செங்கண் மாலின்
புறதிருமா மகமொன்றுங் குறைத்திடுதற் கோரமையந்
துணிந்தான் மன்னோ. 16

அம்மகத்திற் கமரரவு ணைசர்களு மருந்தவரு
முதலா மற்றை
மும்மையுல கங்களுறு முக்கியரும் படர்போழ்து
முடுகி வரவுஞ்
செம்மையுறு மேழ்பரியோ னின்மரபின் சேகரனு
மனுவின் மைந்த
னம்மகிமை யளவரிய வரங்கனெழிற் கடலாடி
யகம்பூ ரித்தான். 17

வேறு

மகமுடியா வவபிருத மயனு ராட
மனுதனயன் வன்பரிசும் விடையுங் கொண்டு
கருகனக முடிச்சிகரிப் புரிசை சூழு
நாகர்களுக் கருந்துணையா மயோத்தி நண்ணி
கிகரரிய திசைமுகனுர் வழுத்து மந்த
நெடியதிரு வரங்கனைத்தான் பரவு நாளு
மனவுறுதி யுடனரிய தவத்தி லந்த
வம்புயனை யுளத்தமையா வுழந்தான் மன்னோ. 18

தன்றந்தை நெறிபிறழா துலகந் தாங்கும்
தடம்புயத்தத் தாரபதியின் றவத்தின் மேன்மை
கன்றந்த நான்முகத்தோ னுணர்ந்தே யன்று
னலமிகுந்த பத்திதனக் குவந்து தாழான்
மின்றந்த வோங்கார விமானந் தன்னின்
மீளியவன் கண்முகப்பின் மிளிர வந்தப்
பொன்றந்த இணிதோளா னிதியைக் கண்ட
பிடியனைன வதுகண்டான் பூரித் துள்ளம். 19

முதவமுத முளத்தடங்கா தெழுந்து பாய
மொய்புளக முடன்முழுது முளைத்து வி றத்
துதிபுரியு மலற்கருளி யிதனைத் தோன்று
னின்னரிய தவத்தினைக் களித்தே னிந்த
மதுரிபுவை யின்றுமுறை யருச்சித் தைய
மறுதினமே யென்னுழைமீண் டளிப்பா யென்று
சுதைபுரைய மொழிந்தருளி யுடனே செய்ய
சூட்டெட்கின மிசையிவர்ந்து மறைந்தான் மன்னோ. 20

பின்னரவன் பெருமிதங்கொண் டாரா தித்தே
பெறலரிய பேறடைந்தா னவனே யாதி
யன்னமர பினரெவரு மடைவே பூசித்
ததன்பிறகத் தாசரதி யடைந்த காலே
பொன்னலரா நிசிசரரை யொழித்து மீளா
வுலகாளு முடிசூடி யொளிர வாங்கே
தன்னையகல் கிற்கிலனுய்த் தவிக்கும் வீட
ணன்றனக்கீது வந்தளித்தான் றயையின் மிக்கான். 21

கீழேழி யுயிர்வாழ்வு மமா ரூரை
நிகர்க்குமிலங் காபுரியு மருளிப் பின்னிப்
பிடாரு மாங்கனையு மளிக்கப் பெற்ற
பிசிதாசன் பெருமகிழ்வின் மீண்டு சென்று
தோடோரங் தனிற்றிரையிற் கனக முய்க்குங்
குளிர்புனல்பாய் பொன்னியினைக் கிடையே தூய
நீடேரின் சைகதக்குன் றனையே வைத்தா
னெடியவிமா னத்தனையோர் நியமத் தாலே. 22

நியமமுதை நிறைவேற்றி மீள வந்த
நிலவரிய யானத்தைப் பெயர்க்கு மெல்லைப்
புயமதனுக் கசைவுசையாப் பொருப்பே யென்னப்



பொருந்தியது கண்டவனும் புதுன்ம யெய்தித்
துயருறலு மசரீரி யுரையா லந்தத்
தொல்லரங்கன் வீடணனின் றாய வுள்ள
மயர்வொழிக வயலகன்ற யாறு சூழு
மரும்புளின மிதனுழையே யமர்வோம் யாமே. 23

இத்தலையிற் றருமவரு மனுமீங் கொன்பா
னிரும்புனித நறுந்தீர்த்தக் கரைமே லெம்மை
வைத்தமன நவவிருடி களுநன் றூற்றும்
வளர்தவக்கேய் வண்பலனு யமர்ந்து நின்றன்
னைத்திரள்கண் முடிதவழு மாட கூட
மதிளிலங்கை யனவரத நோக்கா நின்றே
யைத்தநறும் பாம்பணைமேற் பள்ளி கொளாவாம்
படர்குகவுள் ளுவந்தென வீங்கருளி னுல். 24

எம்பெருமான் றிருவாக்கி னிதயம் பூரித்
திருநிலமேல் விழுந்தெழுந்து வலஞ்சூழ் வந்து
மும்பர்தொழு மரங்கேசா வருடந்தன்னி
லொருமுறையிங் கணுகியுனை யருச்சித் துய்வேன்
சம்பரவை ரியையளித்த சலசக் கண்ணு
வென்றுதுதி புரிந்தந்த வரமுஞ் சார்ந்தே
தம்பிதச கந்தரன்ற னெழுந்து சென்றான்
றுமரையாள் கொழுநனு மாங்கமர்ந்தா னம்மா. 25

வேறு

நாறுபுன்னை நீரகண்ணுங் திங்கட் பொய்கை
வீறரங்க விமானத்து டேரேழ் வையந்
தேறியுய்யும் வண்ணந் திருவரங் கனந்த
வாறமர்ந்தே யிங்ங னருளுமென்று மம்மா. 2

பொன்னங் குன்றமென்னப் பொலியுமாட வோளி
மன்னுமுறை யூரின் மண்டலம் புரக்குஞ்
சென்னிமுன்னஞ் செய்த செந்தவத்தின் மாவை
மின்னுஞ் சுதையாக மேவினன் மகிழ்ந்தான். 3

அவனனங்க னங்கே பெண்மயினீர் இந்தப்
பவனவாசியாங்கள் தன்மைமனம் பன்னு

டிவளரங்க னந்தத் தினம்புனைந்த கோலந்
தவளநாக ராசன் றனுரைப்ப தென்னே. 28

அன்றமுத லையற் கமரர் முதலாரு
நன்றழ குறும ணாளப் பெருமாளென்
றென்றுநா மங்கூறி யுள்ளங் களிகொள்வார்
மின்றயங் குமேனி மேதினித் திருவே. 29

கோளொன் பதினென்றே கொள்ளுமா ழித்தேரோன்
கோளொன் றியவண்ணங் கொண்டல் வண்ணன்கூடி
யாளுந் திருப்பதி யாகுநாற் றெட்டுள்ளு
நீளு மிவ்வரங்க நேர்மை தன்னிலென்ப. 30

இத்திரு வரங்கற் கிதரநாற் றேரேழும்
வித்தகத் தினொரோர் வேலை விளையாடுஞ்
சித்திரப் பொழிலாய்த் திகழு மென்றுமேலோ
ருத்திகொண் டுரைப்பா ரும்பர் தொழுநங்காய். 31

என்றுரைத்த காலை யிலகிழையாள் பின்னு
மன்றளித்த வன்னன் மறுதினமே தன்கட்
பின்றிருப்பு கென்று பேசியும் பலநா
ளென்றிருப்பா தின்னுமிருந்த தென்னச் சொல்வார். 32

பெண்மணியே வேதன் பேசிய தவனூர்
வண்மனுவந் தரநா லேழதின் வைகும்
மண்முழுது மாங்கே மடியுமந்த வூழிக்
கண்மணந் திடுவன் கஞ்சனிதை மற்றும். 33

மாதரசே யென்று மாதவ னுரைக்கும்
போதன நடையாள் பொங்கிமறை யோடை
யாதவனு லோங்கு மாறரங்கத் தம்மான்
மீதின் மயலோடும் மீறினனு டோறும் 34

விண்டுமெயஞ் சகமென் றுரைக்கும் வேதம்
பண்டைமொழி போலப் பாவையன்று தொட்டக்
கொண்டல்வண் ணனென்றே குவலய முழுதுங்
கண்டவன்கட் காமங் கழிபெருக மூழ்கும். 35



வேறு

இன்னண மவளரங் கேசன் றன்னையே
தன்னகின் னெழுங்குறத் தழுவு மாசையால்
பன்னரும் பகடுறும் பயந்த பாவலர்
பொன்னடி தொழுதுபின் புகலு மீங்கரோ. 36

அன்பினிற் பெற்றவெண் ணரிய தாதையே
கற்பினிற் புறங்குலக் கன்னி மாரிரும்
பொற்புறுங் கண்ணனைப் புணரு மாறுநீ
யெற்பரிந் தருள்செய வியம்ப லாயினர். 37

பொதுவிய ரன்றுபொற் பூவை மேனியன்
மதுவழி துளபமால் மார்பம் புல்லுறு
மதர்விழின் மார்கழி விரத மாடியே
யிதழுறுங் கண்ணனை யிணைந்து வாழ்ந்தனர். 38

நீயுமக் கிகாறு மதியி னேமமா
யேயுமின் விரதம திழைக்கி லெங்கணுந்
தோயுமப் பரம்பொரு ளுவந்து தோன்றியன்
பாயுன தருத்தியின் படியி ழைக்குமால். 39

என்னவாங் கியம்பலு மெழிற்பூங் கோதையும்
பன்னிரு மதியிலும் பரிய மார்கழி
தன்னிலக் கோவியர் தன்மை யெய்தரு
வன்னவ ரதனிடை யிழைத்த யாவுமே. 40

தேவரும் விழைவதாய்த் தீஞ்சு வைத்ததாய்
மேவரு மமுதினை யிடைதற் காந்திருப்
பாவையென் றொருபிர பந்த மாகவே
யாவலின் முப்பது கவியி யற்றினள். 41

மற்றினி விரதமே யூறு மாண்பதா
யுற்றநா ளுடனொரு நாற்ப தாங்கவி
பெற்றிடு நாய்ச்சியார் திருமொ ழிப்பெயர்
சொற்றன ளரியநூல் சுருதி யென்னவே. 42

மூன்றெனு நவையினை முறுக்கி மூன்றதிட்
டான்றிடும் வாய்மையை [illegible]

தான்றொலைந் தொழிந்திடத் தயங்கு மவ்விரண்
டான்றநால் களுமவை யறிதல் சாலுமே. 43

கங்குலும் பகலுமக் கஞ்சக் கண்ணினா
ளங்கலு ழாங்கன்மே லாசை விஞ்சிடப்
புங்கவன் மலர்க்கணை புகுந்த நெஞ்சகஞ்
செங்கனல் புகுந்தபோற் சிதைந்து சாம்புமால். 44

பதமுறு மங்கையம் பருவ நம்மதை
யிதமுறப் புயங்களா லிறுகப் புல்லுதன்
முதலருஞ் செய்கையா லரங்கன் முந்தியெவ்
விதநுகர்ந் திடுமென நினைந்து வெம்புவாள். 45

சிந்தைசெய் திவ்வணந் துயிலுஞ் செவ்வியிற்
சுந்தர வரங்கனைச் சூழ்ந்த வண்ணமுன்
னந்தமார் கனவிடை நனவி லாற்றுமா
றிந்துமா முகிகலந் தின்பங் கூருமால். 46

ஆங்கருந் துயிலுணர்ந் தரவ ணைப்பரன்
பாங்கரி னமர்கிலா தழுங்கிப் பண்பினந்
தாங்கிய கனவினுக் கொன்றுந் தந்திலே
நீங்கிய ததுவென நினைந்து நையுமே. 47

பானலங் கண்ணினா ளுடலப் பைங்கொடி
வேனில்வேள் குனிசிலை விசித்த நாரியின்
வானுறு மொலியினா னடுங்கும் வன்மைபோ
ருரைசெந் திடும்வழி தொல்வோர் காலையே. 48

மயர்வினின் மன்னு மவ்வுரு மணந்துபின்
னயர்வுற வதுகரந் தகல வையனென்
னுயர்வுறு முளமல ரொளித்திட் டானென
வியர்வுற நெட்டுயிர்ப் பெறிந்து விம்முவாள். 49

உண்டலுங் கோசிக வுடையு மங்கொரீஇ
வண்டலும் வரைந்தனள் கழங்கு காணுறாள்
விண்டனள் பணிகளும் வீயுங் கொய்கிலள்
கொண்டலின் வண்ணனென் றொளித்துக் கூறுமால. 50



எம்மைமுன் மீறிய திருவ யங்கொளற்
கம்மவிவ் வடயமே யமையு மென்றவள்
செம்மைசேர் மலர்முகச் செவ்வி வவ்வினான்
பொம்மலின் கரங்களாற் பொலியுந் திங்களே. 51

ஆசைநோ யின்னண மடக்க லில்லளாய்க்
கூசியூ ரறியுமென் றுணர்ந்து கூர்தரும்
வாசமென் குழலியர் வளைந்து சூழ்வரப்
பூசெறி தருமெழிற் பொதும்ப ரெய்தினாள். 52

எய்தியு மென்பய மிதய மீர்த்திடு
மைதிகழ் மலர்வனத் தூடு மண்டுதீ
வெய்தெழுங் காலொடு மிடைந்த தொத்ததே
மெய்திகழ் மடமயில் விரக வெம்மையே. 53

அனங்கனின் வில்லொடு ஞமலி யஞ்சுகம்
வனங்கெழு பிகமிவை செறிந்து வந்தெதிர்க்
கனங்குழை தனின்முனி ரிந்த காரணச்
சினங்கெழு தரச்செருச் செய்ய மேயவால். 54

கானமா மயிலனாள் காமத் தீயினைத்
தான்மிடைந் தோங்குற வளர்த்த தன்மையா
னனிலம் வன்னியைக் காற்றி னன்பனென்
றானமின் றொருபெய ருரைக்கு முண்மையே. 55

மாரனம் மிருப்பது மறந்து சேயிழை
யாரமா வனத்தினா டாங்குப் புக்கனள்
பாரகத் தெவர்களும் பண்ணு முன்வினை
நீர்தின் மனஞ்செல நிகழ்வ ராங்கரோ. 56

பொதும்பரு ணிரல்பட பொதுளுஞ் சாலையை
மதன்படை நிறைதர மணந்த சாலையும்
முதம்படு பிகரவ முறுக்கு நஞ்சுமாய்ச்
சதங்கையின் பதத்தினா னினைந்து சாம்புமால். 57

மந்தமா மாருதங் குளிர்ந்து லாவினும்
சிந்துமந் தாரமா மலரின் றேன்றுளி
யுந்தியங் குலவுற வுணர்ந்து நையுமால்
சந்தமா மசிகை தயங்கு கொங்கையாள். 58

**Registered No. M. 916.**

# Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Indian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has immediately taken on hand the publication of a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is about to be issued.

Shares in the Company of Rs. **50** each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

| | | |
|---|---|---|
| *Sriman* | V. V. Sreenivasa Iyengar, B.A., B.L. | *President* |
| ,, | K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate. | *Genl Secy.* |
| ,, | R. Kesava Iyengar., M.A., B.L. | *Exec: Secy.* |
| ,, | T.D. Sreenivasachari, M.A , B.L. | ,, |
| ,, | S. Aravamuda Iyengar, B.A , B.L. Advocate. | *Treasurer.* |
| ,, | N.T. Shamanna, Solicitor. | *Director* |
| ,, | M. Sudarsana Iyengar, Merchant. | ,, |
| ,, | C.V. Venkataramana Iyengar, B.A , B.L. Coimbatore. | ,, |
| ,, | T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore. | ,, |

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamanta Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.

ஸம்புடம் 23] MARCH 1935 [ஸஞ்சிகை 9

# ஸ்ரீ

# வேதாந்த தீபிகை



பவ௵ மாசி௴

**PUBLISHED BY**

Sri Vaishnava Siddhanta Prachara Sabha,

**MADRAS.**

ஸ்ரீ:

# விஷய ஸூசிகை.


1. ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸ்வரூபமும் தர்மமும்:—
வங்கீபுரம் ஸ்ரீ. உ.ப. வாஸுதேவாசார்யாரால்
செய்யப்பட்ட உபந்யாஸம்]. ... 603
2. தருபக்தி:—(ஸ்ரீ. உ.ப. V. S. வெங்கடேச பாட்டாச்சாரியர்) ... 613
3. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர்
ஸ்ரீ. உ.ப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 621
4. க்ரந்த விமர்சம்:— ... 629
5. கடிதங்கள்:— ... 629
6. ஸம்பாதகீயம்:— ... 634
7. பரிகர விஜயம்:—[புத்தங்கோட்டகம் வித்வான்
ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸாசார்யர்.] ... 115
8. ஸ்ரீ பஞ்சஸ்தவம்.—ஸ்ரீ. உ.ப. வாஸுதேவாசார்யர். ... 77
9. திவ்ய ஸூரி சரிதம்:—
[வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 113


---

ஸ்ரீ:

## ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்


(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி—
ஸ்ரீ. உ.ப. வாஸுதேவாசார்யாரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடன் கூடியது] ... ... ரூ 0 8 0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யானத்துடனும் கூடியது ... ... ரூ 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம், தேனம்பேட்டை போஸ்ட்,
மதிராஸ்.


ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

ஸ்ரீ ஸாத்வதகுருதம் தத்வமுக்தாகலாபம்
ஸவிகாஸமாஸ்வாத்ய ஸம் ஸ்யாதே ।
ஸஹ ஸத்ஸ கஸாஸ்ராவ்யதாநந்ய
விஜயஸவெ ஸதிரஸ்து தேஜஸ்ய ॥

# வேதாந்த தீபிகை


ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 23] பவ(ஸ) மாசி மீ [ஸஞ்சிகை 9


ஸ்ரீ:

## ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸ்வரூபமும் தர்மமும்.

[இது, மாம்பலம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையில், வங்கீபுரம் ஸ்ரீ. உ.ப. வே. வாஸுதேவாசார்யாரால் செய்யப்பட்ட உபந்யாஸம்].

இந்த லோகத்தில் ஜீவாத்மாக்கள் எடுக்கும் ஜந்மங்கள், அவரவர்களின் ஜந்மாந்த்ர கர்மங்களுக்கேற்றபடி நான்கு விதங்களாக ஏற்படுகின்றன. அவையாவன—தேவ ஜந்மம், மனித ஜந்மம், ம்ருகம் பக்ஷி முதலியவைகளின் ஜந்மம், கொடி செடி முதலியவைகளின் ஜந்மம். இவைகளுள் தேவ ஜந்மமானது, ஜ்ஞாநத்தையும் சக்தியையும் அதிகமாகப் பெற்றிருப்பதாலும் அந்த ஜந்மத்தைப் பெறும் ஜீவன்கள் சிற்சில அதிகார விசேஷங்களில் பகவானால் நியமிக்கப்படுகிறபடியாலும், அது மற்றை மூன்று பிறப்புக்களைக் காட்டிலும் ஏற்றமுள்ளது. மநுஷ்யர்களுக்கு தேவர்களைக் காட்டிலும் ஜ்ஞாந சக்திகள் குறைவுபட்டிருந்த போதிலும், விவேகமென்னும் பகுத்தறிவை அவர்கள் பெற்றிருக்கிறபடியால், அவர்கள், அந்தப் பகுத்தறிவு பெறாத திர்யக் ஸ்தாவரங்களைக் காட்டிலும் ஏற்றமுள்ளவர்களாகிறார்கள். இந்த மநுஷ்யர்களுக்குள் சிலர், தமது விவேகத்தைச்

158955



[illegible] விநியோகம் [illegible]மல், குயுக்திகளால் தேஹத்தைக் காட்டிலும் வே[illegible] என்று ஒன்றுமில்லை யென்றும், தைவமே இல்லை யென்றும், ப்ரத்யக்ஷம் ஒன்றே ப்ரமாணமென்றும், இம்மாதிரி சில தவறுதலான நிர்ணயங்களைச் செய்துகொண்டு, கேவலம் விஷயஸுகங்களில் ப்ரவ்ருத்தர்களாய் பொழுது போக்கி வருகிறார்கள். இவர்களுடைய ஜீவநம் திர்யக்குக்களாகிற ம்ருக பக்ஷிகளைக் காட்டிலும் ச்லாக்யமாக இராததால், இவர்களை ஏற்றமுள்ளவர்களாக ஒத்துக் கொள்ளக் காரணமில்லை. இவர்கள், கர்மம் ஜ்ஞாநம் இவையற்றவராதலால், தம்ச மசகங்கள் முதலிய திர்யக்குக்கள் போல, "ஜாயஸ்வ ம்ரியஸ்வ" [திரும்பத் திரும்பப் பிறப்பம் இறப்பதுமாக] என்கிறபடி மேல் லோகம் போகாதவர்களாக இவ்விடத்திலேயே சுழன்று கொண்டிருக்கிறார்கள் என்று நமது உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன.

தைவமென்று ஒன்று உண்டு என்றும் தேஹம் போனபிறகு ஆத்மா இருக்கின்றது என்றும் ஒத்துக் கொள்பவர்களுள் சிலர், சாஸ்த்ரமென்று ஒன்றையும் அவலம்பியாமலே, கேவலம் யுக்தியை மாத்ரம் கைக்கொண்டு ஒரு ஸித்தாந்தத்தைச் செய்து, தமது அறிவுக்குச் சரியாகத் தோன்றும் கொள்கைகளை மாத்ரம் அநுஷ்டாநத்திற்குத் தகுந்தவைகளாக அங்கீகரித்திருக்கிறார்கள். மநுஷ்யனுடைய அறிவு அளவுக்கு உட்பட்டதாகையாலும், ஒரு காலத்தில் இருப்பது போல மற்றொரு காலத்தில் இராமல் ஒவ்வொரு க்ஷணத்திலும் மாறிக் கொண்டிருக்கிறபடியாலும், வ்யக்திதோறும் வ்யத்யாஸப்பட்டுள்ள மலர்ச்சியை உடைத்தாயிருக்கிறபடியாலும், அந்த அறிவை மாத்ரம் ஆதாரமாகக் கொண்டு ஏற்படுத்தப்படும் ஸித்தாந்தத்திற்கு ஒரு வ்யவஸ்தை என்பது ஸம்பவியாததையால், இவர்களுடைய ஸித்தாந்தமும் விவேகிகளுக்கு அநாதரணீயமே. கேவலம் யுக்திவாதம் செய்பவர்களைப் பற்றி ஸ்ரீ வ்யாஸர் "தர்க்காப்ரதிஷ்டாநாத்" இத்யாதியான ஸூத்ரத்தால் அது நிலைபெறாத ஸித்தாந்தமே ஆகுமென்று அநுக்ரஹித்திருக்கிறார். அந்த ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் ஸ்ரீ சங்கராசார்யரும் பின்வருமாறு பாஷித்திருப்பது கவனிக்கத்தக்கது.

" [illegible]
[illegible]
[illegible]
[illegible]"



இவர்களுடைய ஸித்தாந்த ப்ரகாரம் எல்லாரும் அநுஷ்டிக்கப் புகுந்தால் ஜகத்திற்கு க்ஷேமமாவது ஸமாதாநமாவது ஏற்பட ஹேதுவிருக்கமாட்டாது. இதற்கு நிதர்சநமாக மேல் நாட்டாரின் தற்கால நாகரிகத்தைக் காணலாம். அவர்களில் சிறந்தவர்கள் கூட, இப்பொழுது உண்டாகும் ஜகத்தின் குழப்பத்தைப் பார்த்து, 'Morals' [தர்மம்] என்பதற்கு நிர்ணயம் இல்லையென்றும், ஒரு காலத்தில் ஸாதுவாக இருப்பதே மற்றொரு காலத்தில் அஸாதுவாகவும், இப்பொழுது மஹாஜநங்களால் நிந்திக்கப்படுவது வருங்காலத்தில் அவர்களால் சிறந்ததென்று கொண்டாடத்தகுந்ததாகவும் மாறலாமென்றும் வாதித்து வருகிறார்கள். ஸ்வல்ப காலமாக அவர்களுக்குள் ஸ்த்ரீபுமான்கள் ஸம்பந்தமான நடவடிக்கைகள் (Sex morality) எவ்விதம் மாறுதல் அடைந்து கொண்டு வருகின்றது என்பதைக் கவனித்தால், இவர்கள் செய்வது போல யுக்தியை மாத்ரம் ப்ரமாணமாகக் கொண்டு தர்மாதர்ம நிர்ணயத்தைச் செய்வது கொஞ்சமேனும் சரியன்று என்பது நன்கு விளங்கும். நமது தேசத்தில், பாச்சாத்ய ஸம்ஸ்காரம் பெற்றவர்களுள் பலர் பெரும்பாலும் இம்மாதிரியான நோக்கத்தை உடைத்தாயிருக்கிறார்கள். இவர்களுக்கு ச்ரேயஸ் எவ்விதம் கிடைக்கக்கூடும் என்பது நமக்குப் புலப்படவில்லை. ஆனால், தைவமோ இல்லையென்று சொல்லும் நாஸ்திகர்களைக் காட்டிலும் தைவமென்று ஒன்று உண்டென்று ஒப்புக்கொள்ளும் இவர்களிடம் பகவான் கொஞ்சம் ப்ரஸாதத்தைச் செய்யலாம் என்று ஒரு ஸம்பாவனை உண்டு என்பதே ஒரு ப்ரத்யாசை.

இவ்விதம் வரம்பு கெட்டு அலையாமல், சாஸ்த்ரங்களென்று சிலவற்றை ஆதரித்து அதில் சொல்லியிருக்கும் விதி நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டு தமது நடவடிக்கைகளையும் மநோபாவங்களையும் சீர்படுத்தி நடத்திவரும் ஆஸ்திகர்கள் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள இருவரைக்காட்டிலும் சிறந்தவர்களென்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால், அவர்களுட் சிலர், மநுஷ்யர்களாற் செய்யப்பட்டுள்ள சில க்ரந்தங்களையே சாஸ்த்ரமென்று எடுத்துக்கொண்டு போகிறார்கள். அவர்களால் ப்ரமாணமாக ஒத்துக்கொள்ளப்படும் சாஸ்த்ரங்கள் மநுஷ்ய கர்த்ருகங்களாக இருக்கிறபடியாலும், அந்த மநுஷ்யர்கள் ப்ரமம் விப்ரலம்பம் முதலிய தோஷங்களுக்குப் பாத்ரமாகக் கூடியவர்களாதலாலும், அவர்களாற் செய்யப்படும் சாஸ்த்ரங்களை நிர்த்துஷ்டங்களென்று அங்கீகரிப்பது உசிதமாகமாட்டாது. இவர்களைக் காட்டிலும், புருஷ கர்த்ருகமிராமலும் அநாதிகால ஸித்தமாயும் இருக்கும் சாஸ்த்ரங்களை ப்ரமாணமாகக் கைப்பற்றி அந்தச் சாஸ்த்ரங்களிற் சொல்லியிருக்கிறபடி தமது நடவடிக்கைகளை நடப்பிக்கிறவர்களே மிகவும் ச்லாக்யராவார்கள். நமது வேதம் அப்படிப்பட்ட சாஸ்த்ரமாதலால், நாம் நமது வைதிகர்களையே நல்வழியிற் செல்பவர்களாக க்ரஹிக்கின்றோம். இந்த வைதிகர்களுள் அளவற்ற பேதங்

கள் ஏற்பட்டிருக்கின்றனவென்பது உண்மையே. அப்படி இருந்தபோதிலும், அவர்களெல்லாரும் அபௌருஷேயங்களாயும் அநாதிகாலஸித்தமாயும் மாதா பிதா ஸஹஸ்ரங்களைக்காட்டிலும் ஸகல ஜநங்களிடமும் வத்ஸலதமாயும் இருக்கும் வேதத்தை அநுஸரித்து நடக்கிறார்கள் என்னும் காரணத்தால், அவர்களெல்லாரும் சிறந்தவராவார்களென்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ வைஷ்ணவரென்று சொல்லப்படுபவர்கள் இந்த வைதிகர்களுள் ஒரு வகுப்பினரென்றே சாஸ்த்ரங்களிலிருந்தும் நடவடிக்கைகளிலிருந்தும் தெரிகின்றது. வேதங்களும் அவைகளுக்கு உபப்ருஹ்மணங்களான ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களுமே, இவர்களுடைய கொள்கைகளுக்கும் அநுஷ்டாநங்களுக்கும் ஆதாரங்கள். இதர வைதிகர்கள்போல இவர்களும் வர்ணாச்ரம தர்மங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். இந்தத் தர்மங்களுக்கு ஸ்வல்ப அம்சத்தில் லோபம் வந்தாலும், பகவதநுக்ரஹம் தமக்கு நேரமாட்டாது என்று மிகவும் பயப்படுகிறவர்கள். இவர்களைப்பற்றி சாஸ்த்ரங்கள் என்ன சொல்லுகின்றன என்பதை முதலில் விசாரிப்போம்.

ஸ்ரீ பாகவதத்தில் பதினொன்றாவது ஸ்கந்தத்தில் பின் வருமாறு ஒரு உபாக்யாநம் காணப்படுகின்றது. ஒரு காலத்தில் நிமி என்னும் விதேஹ தேசாதிபதி பெரியதொரு ஸத்ரம் செய்து வந்தபொழுது, கவி முதலிய மஹர்ஷிகள் அந்த ஸத்ரத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அந்த அரசன், அவர்களுக்கு அர்க்யம் பாத்யம் முதலியவைகளால் பூஜையைச் செய்துவிட்டு, அவர்களைப் பார்த்து,

𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌭𑌾𑌗𑌵𑌤𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑍂𑌤 𑌯𑌦𑌿 𑌨𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑍇 𑌕𑍍𑌷𑌮𑌮𑍍 ।
𑌯𑍈𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌃 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌯 𑌦𑌾𑌸𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌪𑍍𑌯𑌜𑌃 ॥

[ஹே மஹர்ஷிகளே! பாகவதர்கள் என்று சொல்லப்படும் மஹாத்மாக்களுடைய தர்மங்களைக் கேட்கவேண்டுமென்று விரும்புகின்றேன். அவைகளைக் கேட்பதற்கு நான் அர்ஹனென்று உங்களுக்குத் தோன்றினால் க்ருபை செய்து அவைகளை எனக்கு உபதேசிக்கவேண்டும். அந்தத் தர்மங்களை அநுஷ்டித்தால் பகவான் ப்ரஸந்நனாய், அப்படி அநுஷ்டிப்பவர்களுக்குத் தன்னையே கொடுக்கிறானென்று பெரியோர்கள் சொல்லுகிறார்களன்றோ?] என்று ஒரு ப்ரச்நம் செய்தான். இதைக் கேட்ட அந்த மஹர்ஷிகள் பின்வருமாறு பாகவத தர்மங்களை அந்த அரசனுக்கு உபதேசித்தார்களென்று அவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌾𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌭𑌗𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌷 𑌭𑌾𑌗𑌵𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।



𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾𑌪𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 𑌯𑍋 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌨 𑌹𑍃𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌮𑌾𑌯𑌾𑌮𑌿𑌦𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌸 𑌵𑍈 𑌭𑌾𑌗𑌵𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।

𑌨 𑌕𑌾𑌮𑌕𑌰𑍍𑌮𑌬𑍀𑌜𑌾𑌨𑌾𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌚𑍇𑌤𑌸𑌿 𑌸𑌮𑍍𑌭𑌵𑌃 ।
𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍈𑌕𑌨𑌿𑌲𑌯𑌃 𑌸 𑌵𑍈 𑌭𑌾𑌗𑌵𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥

𑌨 𑌯𑌸𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌜𑌾𑌤𑌿𑌭𑌿𑌃 ।
𑌸𑌜𑍍𑌜𑌤𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌹𑌂𑌭𑌾𑌵𑍋 𑌦𑍇𑌹𑍇 𑌵𑍈 𑌸 𑌹𑌰𑍇𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥

𑌨 𑌯𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌃 𑌪𑌰 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌵𑌾 𑌭𑌿𑌦𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑌮𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌃 𑌸 𑌵𑍈 𑌭𑌾𑌗𑌵𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌵𑌿𑌭𑌵𑌹𑍇𑌤𑌵𑍇𑌽𑌪𑍍𑌯𑌕𑍁𑌣𑍍𑌠
𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌸𑍁𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌮𑍃𑌗𑍍𑌯𑌾𑌤𑍍 ।
𑌨 𑌚𑌲𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌦𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌾𑌤𑍍
𑌲𑌵𑌨𑌿𑌮𑌿𑌷𑌾𑌰𑍍𑌧𑌮𑌪𑌿 𑌯𑌃 𑌸 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌗𑍍𑌰𑍍𑌯𑌃 ॥

[எவன், 'இந்த லோகத்தில் தென்படும் பூதங்களெல்லாம் பகவானுக்குச் சேஷபூதங்கள்; பகவானே இவையெல்லாவற்றுக்கும் சேஷி' என்று அறிகிறானோ, அவனே பாகவதோத்தமன். வெளிப்பட்டுள்ள விஷயங்களை இந்த்ரியங்களால் க்ரஹித்தும், எவன் இவையெல்லாம் பகவானுடைய சொத்துக்களென்று உணர்ந்து, தனது மநஸ்ஸை ஹர்ஷம் த்வேஷம் முதலிய விகாரங்களுக்கு ஆஸ்பதமாகாமல் நிலைநிறுத்திக் கொள்ளுகிறானோ, அவனே பாகவதோத்தமன். எவன் எப்பொழுதும் பகவானையே த்யானித்துக்கொண்டு காமம் முதலிய தோஷங்களை மநஸ்ஸில் ஜநிக்கவொட்டாமல் தடுக்கிறானோ, அவனே பாகவதோத்தமன். எவனுக்குத் தனது ரூபத்தினாலாவது நடத்தையினாலாவது வர்ணத்தினாலாவது ஆச்ரமத்தினாலாவது ஜாதியினாலாவது தேஹத்தில் நான் என்னும் புத்தி ஜநியாமல் இருக்கின்றதோ, அவனே விஷ்ணுவுக்கு ப்ரியனாவான். எவன், ஒருவனைத் தன் மனிதனென்றும் மற்றொருவனை வேறொருவனுடைய மனிதனென்றும் நினையாமல் எல்லாரையும் எவ்வித பேதமுமின்றிக்கே பாவித்து ஸர்வபூத ஸுஹ்ருத்தாகவும் சாந்தனாகவும் வர்த்தித்து வருகிறானோ, அவனே பாகவதோத்தமன். எவன் மூன்றுலோக விபவத்தை அடைந்தும் சரியான நினைவு தவறாமல் நிற்கிறானோ, எவனுடைய புத்தியானது விதி சிவ ஸநகாதிகளாலும் ப்ரார்த்திக்கப்படும் பகவத் பாதாரவிந்தத்திலிருந்து ஒருபொழுதும் சலியாமல் இருக்கின்றதோ அவனே வைஷ்ணவச்ரேஷ்டன்.]

இதில் வைஷ்ணவ கர்மங்கள் அனைத்தும் சொல்லப்பட்டிருக்கின்றன. முதல் ச்லோகத்தால் 'பகவான் சேஷி; நாம் எல்லாரும் அவனுக்குச் சேஷ பூதர்கள்' என்னும் ஜ்ஞாநமும், இரண்டாவது ச்லோகத்தால் பகவானைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களிடம் வைராக்யமும், மூன்றாவதால் இந்த்ரியங்களை அடக்கும் திறமையும், நான்காவதால் எவ்வித கர்வமுமற்றிருக்கும் தன்மையும், ஐந்தாவதால் ஸர்வ பூத ஸௌஹார்த்தம் முதலிய ஆத்ம குணங்களின் ஸம்பத்தியும், ஆறாவதால் பகவானிடத்தில் அளவற்ற பக்தியும், இவையெல்லாம் பாகவதன் என்பவனுக்கு அவச்யம் அபேக்ஷிதங்கள் என்று விவரிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளை ஊன்றிப் பார்த்தால், முதல் ச்லோகத்தில் விவரிக்கப்பட்டுள்ள சேஷ சேஷி ஸம்பந்த ஜ்ஞாநமே மற்றை எல்லாவற்றுக்கும் மூல பூதமானது என்பது விளங்கும். அந்த ஜ்ஞாநம் தெளிவாகவும் த்ருடமாகவும் ஏற்பட்டால், வைராக்யம் இந்த்ரிய ஜயம் சாந்தி ஸர்வ பூத ஸௌஹார்த்தம் பகவத் பக்தி இவையெல்லாம் ஸ்வயமாகவே அந்த ஜ்ஞாநத்திலிருந்து பெருகுமாதலால், பாகவதனுக்குச் சேஷசேஷி ஸம்பந்த ஜ்ஞாநமே ஸ்வரூப நிரூபக தர்மமென்று சொல்லக்கூடும். இவ்விடத்தில் சில ச்லோகங்களில் 'பாகவதன்' என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருந்த போதிலும், கடைசி ச்லோகத்தில் காணப்படும் விசேஷ நிர்த்தேசத்தால் வைஷ்ணவனே அந்தப் பதத்தால் கருதப்பட்டவனாகிறான் என்பது வ்யக்தம். இதிஹாஸ புராணாதிகளில் வைஷ்ணவர்களே பாகவதர்களென்றும் ஸாத்வதர்களென்றும் இன்னும் இம்மாதிரியான வேறு பெயர்களாலும் வ்யவஹரிக்கப்படுகிறார்கள் என்பது ப்ரஸித்தம்.

நிற்க, தைத்திரீய உபநிஷத்தில், 'எவர்கள் ஸத்துக்களாவார்கள்?' என்பதை விசாரித்து வருகையில் அவர்களுக்குப் பின் வருமாறு ஒரு லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கின்றது.

"அஸந்நேவ ஸ பவதி அஸத் ப்ரஹ்மேதி வேத சேத் |

அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோ விது: ||"

இதன் அந்வயமும் அர்த்தமும் என்னவென்றால்:—"ப்ரஹ்ம வேதேதி யத்யஸௌ ச, ஸ அஸந்நேவ பவதி || ப்ரஹ்ம வேதேதி யத்யஸ்தி மசேத், தத ஏநம் ஸந்தம் விது:" [ப்ரஹ்மத்தின் ஜ்ஞாநம், அதாவது ப்ரஹ்மம் எல்லாவற்றுக்கும் சேஷி என்னும் ஜ்ஞாநம் எவனுக்கு இல்லையோ, அவன் 'அஸத்' ஆகிறான்; எவனுக்கு அந்த ஜ்ஞாநம் இருக்கின்றதோ அவனையே 'ஸத்' என்று அறிந்தவர்கள் சொல்வார்கள்.] அதாவது சேஷசேஷி ஸம்பந்த ஜ்ஞாநமுள்ளவனே 'ஸத்' என்று வ்யவஹரிக்கத்தகுந்தவன் என்று சொன்னதாயிற்று. இந்த ச்லோகத்திற்கு வேறுவிதமாக அர்த்தம் சொல்லக்கூடாதோவென்று ஒரு சங்கை ஜநிக்கலாம். அதாவது—'ப்ரஹ்மம் இல்லை என்று எவன் நினைக்கிறானோ அவன் அஸத்; ப்ரஹ்மம் உண்டு என்று எவன் நினைக்கிறானோ அவன் ஸத்' என்பது தான். இந்த அர்த்தம் யுக்திக்குப் பொருந்தாமல் இருப்பதுடன் ப்ரகரணத்திற்கும் விருத்தம். இந்த அநுவாகத்திற்கு முன் அநுவாகத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டுள்ள ஜ்ஞாநமானது கேவலம் 'ப்ரஹ்மம் உண்டு' என்னும் ஜ்ஞாநமன்று; 'விஜ்ஞாநம் என்று சொல்லப்படும ஜீவாத்மாவுக்கு ஆநந்தமயன் என்று சொல்லப்படும் பர ப்ரஹ்மமே ஆத்மா' என்னும் ஜ்ஞாநமே அவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையினால் அந்த ஜ்ஞாநமே இவ்விடத்திலும் விவக்ஷிதமென்பது ஸித்தம். அதாவது 'ப்ரஹ்மமே ஆத்மா; அதாவது, சேஷி' என்பதே 'ஸத்' என்பவனுக்கு அபேக்ஷிதமான ஜ்ஞாநமென்று இவ்விடத்திற் சொல்லப்பட்டதாகின்றது.



இப்படி ஸத்துக்களின் ஸ்வரூபம் சொல்லப்பட்ட பிறகு மேல் ச்லோகங்களால், இந்த உபநிஷத்தே அந்த ஸத்துக்களின் மாஹாத்ம்யத்தையும் விளக்குகின்றது.

"யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுதரமந்தரம் குருதே । அத தஸ்ய பயம் பவதி । தத்த்வேவ பயம் விதுஷோऽமந்வாநஸ்ய ।"

'இந்த ப்ருஹ்ம த்யாநத்திற்கு ஸ்வல்ப விச்சித்தி எப்பொழுது நேர்கின்றதோ, அப்பொழுதுதான் அவனுக்கு பயம் உண்டாகின்றது' என்றும், 'அமந்வாநஸ்ய - இதர விஷய மநந விமுகனை, விதுஷ: - அந்த ப்ரஹ்ம வித்துக்கு, தத்த்வேவ - அந்தப் பகவத் த்யாந விச்சேதமே, பயம் - பயமாகும்' என்றும் இந்த வாக்யங்களாற் சொல்லப்படுகின்றது.

"யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே ।
ஸா ஹாநிஸ்தந்மஹச்சித்ரம் ஸா ப்ராந்தி: ஸா ச விக்ரியா ॥"

[எந்த க்ஷணத்தில் ஸ்ரீ நாராயணனுடைய சிந்தை இல்லையோ, அதுவே அந்த ப்ரஹ்ம த்யாநிகளுக்குப் பெரிய ஹாநி, அளவற்றச் சித்ரம்; அது தான் ப்ராந்தி, அதுவே விகாரம்] என்பதே அந்த ஸத்துக்களுடைய ஸ்திதி. இதிலிருந்து ஏற்படுவதென்னவென்றால், ஸத்துக்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கு பகவத் ஸம்ச்லேஷமே ஸுகம், அவனுடைய விச்லேஷமே

துக்கம் என்பதுதான். இந்த ஸத்துக்கள் தாம் வைஷ்ணவாக்ரேஸராவார்கள்.

'ஸத்துக்கள்' என்னும் சப்தம் விஷ்ணு பக்தர்களையே குறிக்கும் என்றும், அவர்களுக்கு பகவச் சேஷத்வ ஜ்ஞாநத்தை உடைத்தாயிருப்பதே லக்ஷணமாகுமென்றும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன், ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தில் தெனபடும் முதல் ச்லோகம் கடைசி ச்லோகம் இந்த இரண்டு ச்லோகங்களால் விளக்கியிருக்கிறார். அவைகளுள் முதல் ச்லோகமாவது:-

"𑌸𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌪𑍃𑌥𑍍𑌵𑍀𑌶𑌚𑌰𑌣𑌤𑍍𑌰𑌾𑌣𑌶𑍇𑌖𑌰𑌾𑌃 ।
𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌾𑌣𑌪𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌰𑍇𑌣𑌵𑌃 ॥"

என்பதுதான். இதில் "𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌪𑍃𑌥𑍍𑌵𑍀𑌶𑌚𑌰𑌣𑌤𑍍𑌰𑌾𑌣𑌶𑍇𑌖𑌰𑌾𑌃" என்னும் விசேஷணத்தால், "𑌸𑌨𑍍𑌤𑌃" என்னும் பதம் ஸ்ரீ விஷ்ணு பக்தர்களையே குறிக்கின்றதென்றும், அவர்கள் அந்த விஷ்ணு பர்யவஸாநமான பகவச் சேஷத்வ ஜ்ஞாநத்தை உடையவர்களே என்றும் சொல்லப்பட்டதாகின்றது. "𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌾𑌣𑌪𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌰𑍇𑌣𑌵𑌃" என்னும் விசேஷணத்தால், அந்த ஸத்துக்களின் மஹாத்ம்யம் எப்படிப்பட்டதென்று சொல்லப்பட்டதாகின்றது. அவர்களுடைய பாததூளிகளே லோக ரக்ஷணம் செய்ய ஸமர்த்தங்களென்றால், அவர்களுடைய மாஹாத்ம்யத்தைத் தனியாகச் சொல்லவும் வேண்டுமோ? அந்தப் பாதுகா ஸஹஸ்ரத்தின் கடைசி ச்லோகமாவது:

𑌜𑌯𑌤𑌿 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌜𑌯𑌤𑌿 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑍁𑌕𑌾𑌯𑍁𑌗𑌲𑍀 ।
𑌤𑌦𑍁𑌭𑌯𑌧𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑍇𑌦𑍀𑌮𑌵𑌨𑍍𑌧𑍍𑌯𑌯𑌨𑍍𑌤𑍋 𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌭𑍁𑌵𑌿 𑌸𑌨𑍍𑌤𑌃 ॥

என்பதுதான். இந்த ச்லோகத்தால் அந்த வைஷ்ணவர்களின் மாஹாத்ம்யத்தை அருளிச்செய்து, ஸ்ரீ தேசிகன் அவர்களுடைய மங்களாசாஸநத்துடன் அந்த க்ரந்தத்தைத் தலைக் கட்டுகிறார். "𑌤𑌦𑍁𑌭𑌯𑌧𑌨𑌾𑌃" என்னும் பதத்தால் ஸ்ரீ பாஷ்யாதி ஸ்ரீ கோசங்களை ஸேவிப்பதால் உண்டாகும் ஜ்ஞாநமும் தத்கார்யமான சேஷ வ்ருத்தியுமே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸ்வரூப நிரூபக தர்மங்களென்று சொல்லப்பட்டதாகின்றது. இப்படி இந்த ப்ரபந்தம் ஸம்மூலமாய் ஸத்ப்ரதிஷ்டமாய் விளங்குகையால், அது ஸர்வ ப்ரபந்தோத்க்ருஷ்டமாய் அதனால் ப்ரதிபாதிக்கப்படும் வஸ்துபோல அதுவும் மஹாங்களுக்கு சிரஸா வஹிக்கும்படியாய் இருக்கிறதென்பது த்யோதிதம்.



நிற்க; ஸ்ரீ பாகவதத்தில் தசம ஸ்கந்தத்தில் பின்வருமாறு ஸத்துக்களின் ஒரு விவரண விசேஷத்தைக் காணலாம்.

"𑌸𑌨𑍍𑌤𑍋𑌽𑌨𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌃 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ।
𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌾 𑌨𑌿𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌾 𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌾 𑌨𑌿𑌷𑍍𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌃 ॥"

ஸத்துக்களாவார் யார் என்றால்; 𑌅𑌨𑌪𑍇𑌕𑍍𑌷𑌾𑌃 - அபேக்ஷையற்றவர்கள்; அதாவது விரக்தர்களென்று சொன்னதாயிற்று. கேவலம் விஷய ஸங்கத்திலிருந்து நிவ்ருத்தர்கள் என்பது மாத்ரம் இந்தப் பதத்தின் கருத்தாக மாட்டாது. பகவான், '𑌉𑌦𑌾𑌰𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵𑍈𑌤𑍇' என்று தன்னை ஆச்ரயிப்பவர்களைப் புகழ்ந்து அவர்களுக்கு மோக்ஷ புருஷார்த்தங்களைக் கொடுக்க முயன்றாலும், அவைகளையும் தமது ப்ரயோஜநமாக அபேக்ஷியாமல் இருப்பவர்கள் என்பதுதான் அதன் கருத்தாகும்.

• "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே"

என்பதன்றோ அவர்களுடைய ஸ்திதி? 'ஸ்ரக் சந்தநாதிகளோபாதியாகக் கொள்ள வேணும். அது குடிமவனுக்கும் பூசுமவனுக்கு முறுப்பாய் மிகுதி கழித்துப் போகடுமத்தனையிறே.' சேஷ வஸ்துவுக்கு ஸ்வார்த்த ப்ரஸக்தியே இல்லை என்பது தாத்பர்யம். 𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌃 – என்னையே சித்தத்தில் உடையவர்கள். ஸர்வ சக்தனான பகவான் லீலார்த்தமாக அவர்களைத் தன்னிடமிருந்து பிரித்து வைக்க முயன்றாலும்,

'என்னை நெகிழ்க்கிலும் என்னுடைய நன்னெஞ்சம்
தன்னை அகல்விக்கத் தானும் கில்லான்'

என்கிறபடி அவனாலும் பிரிக்கக் கூடாதபடி அவனிடத்திலேயே லக்நமான மநஸ்ஸை உடையவர்கள். 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌃 - பகவானிடத்திலேயே மனம் வைத்திருப்பதாலே பாஹ்ய விஷயங்களிலிருந்து அந்த꞉ கரணத்தை நிக்ரஹித்துப் போந்தவர்கள். 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 – 'நிற்கின்றதெல்லாம் நெடுமால்' என்கிறபடி எல்லா வஸ்துக்களிடத்திலும் அச்சேஷத்வ ஜ்ஞாநமுடையவர்கள். 𑌅𑌤𑌏𑌵 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌾 𑌨𑌿𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌃 – எல்லாம் ஸர்வசேஷியான பகவானுக்குச் சேஷபூதமென்னும் ஜ்ஞாநம் பிறந்தவனுக்கு ஒரு வஸ்துவிலும் மமத்வ புத்தியும் தன்னிடத்தில் ஸ்வாதந்த்ர்ய புத்தியும் உண்டாகாதன்றோ? 𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌾𑌃 - ப்ரஹ்மாதிகளைப் போன்ற ஸமதர்சிகளானவர்களுக்கு சீதோஷ்ணங்கள் முதலிய த்வந்த்வ கந்த ப்ரஸக்தி எப்படி ஸம்பவிக்கும்? 𑌨𑌿𑌷𑍍𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌃 – '𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌯𑌯𑌾 𑌸𑌙𑍍𑌗𑌾 𑌗𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑍀𑌵 𑌯𑍋𑌷𑌿𑌤𑌃' எனக்கடவது.

இப்படிப்பட்ட ஸத்துக்களே வைஷ்ணவாக்ரேஸராரவார்கள் என்பதை ஸ்ரீ பாஷ்யகாரரும் தமது கீதா பாஷ்யத்தில்,

"பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் |
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||

என்னும் ச்லோக வ்யாக்யாநாவஸரத்தில் அநுக்ரஹித்திருக்கிறார்.

"ஸாதவ: - வைஷ்ணவாக்ரேஸரா: - மத்ஸமாச்ரயணே ப்ரவ்ருத்தா: - மந்நாமகர்மஸ்வரூபாணாம் வாங்மநஸாகோசரதயா மத்தர்சநேந விநா ஸ்வாத்மதாரணபோஷணாதிகமலபமாநா: க்ஷணமாத்ரகாலம் கல்பஸஹஸ்ரம் மந்வாநா:, ப்ரசிதிலஸர்வகாத்ரா பவேயு: "

['ஸாதூநாம் பரித்ராணாய' என்னுமிடத்தில், ஸாதுக்கள் யாரென்றால் எவர்கள் என்னை ஆச்ரயிப்பதிலேயே ப்ரவ்ருத்தித்து, என்னுடைய பெயரும் சேஷ்டிதமும் ஸ்வரூபமும் வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாதவையாகையால், என்னை நேரில் ஸாக்ஷாத்கரியாவிட்டால் ஆத்மாவைத் தரித்து வைத்துக் கொள்ள அசக்தர்களாகி ஒரு க்ஷண காலத்தையும் ஆயிரம் கல்பம் போல அநுபவிப்பவர்களாய் ஸகல அங்கங்களும் சைதில்யம் அடையும்படி உருகுவார்களோ, அவர்களே ஸாதுக்கள். அவர்கள்தாம் வைஷ்ணவாக்ரேஸரர்கள்]. இதனால், இவர்களுக்குப் பகவானிடத்தில் இருக்கவேண்டிய பக்தியின் அதிசயம் விவரிக்கப்பட்டதாகின்றது.

"அடதி யத்பவாநஹ்நி காநநம்
த்ருடிர்யுகாயதே த்வாமபச்யதாம் |"

பக்தர்களான கோபிகைகள் க்ருஷ்ணனுடைய விரஹத்தில், 'ஹே க்ருஷ்ண, நீ மாட்டை ஓட்டிக்கொண்டு காட்டுக்குப் போயிருக்கும்பொழுது, உன்னைப் பாராத எங்களுக்கு ஒவ்வொரு த்ருடியும் அநேக யுகங்களாகின்றதே!" என்று கதறினதுபோல இந்த ஸாதுக்களும் கதறும் சீலமுள்ளவர்கள். இம்மாதிரியான பக்தர்களுக்கு அந்ந பாந தாம்பூலாதிகள் தாரண போஷண போக்யங்களாகமாட்டா; எல்லாம் அவர்களுக்கு க்ருஷ்ணனே.

"உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்"



"உண்ணா நாள் பசியாவதொன்றில்லை, ஓவாதே நமோ நாராயணவென்று
எண்ணா நாளும், ருக் யஜுஸ் ஸாம நாண்மலர் கொண்டு அவன்பாதம்
நண்ணா நாளும் அன்று அவனுக்குப் பட்டினி நாள்"

என்பதன்றோ அந்த வைஷ்ணவாக்ரேஸரர்களுடைய நிலை?

இவ்வளவால் ஏற்படுவது என்னவென்றால், எவர்களிடம் 'ஸ்ரீமந் நாராயணனே நமக்கு சேஷி, நாம் அவனுக்கே சேஷபூதர்கள்' என்னும் ஜ்ஞாநம் நன்கு ஏற்பட்டிருக்கின்றதோ, எவர்கள் ஸ்வார்த்த ப்ரஸக்தி இன்றிக்கே பகவன் முகோல்லாஸத்தையே பரம ப்ராப்யமாக அநுஸந்திக்கிறார்களோ, எவர்கள், தாங்களும் ஆநந்தித்து அவனையும் ஆநந்திப்பிக்கும் முக்தர்கள் நித்யர்கள் போலன்றிக்கே, தாங்கள் ஆநந்தியாதே அவனையே ஆநந்திப்பிக்கும் நோக்கமுள்ளவர்களோ, எவர்களுக்குக் கீழ்க் கூறப்பட்டுள்ள சீலமே ஸ்வரூப நிரூபக தர்மமாகின்றதோ, அவர்களே ஸத்துகள், அவர்களே ஸாதுக்கள், அவர்களே வைஷ்ணவாக்ரேஸரர்கள் என்று சொன்னதாயிற்று.

(தொடரும்)

---

ஸ்ரீ:

# குரு பக்தி

(ஸ்ரீ. V. S. வெங்கடேச பட்டாச்சாரியர்)

குரு பக்தியாவது, நமக்கு வித்யாப்யாஸம் செய்துவைத்து ஜ்ஞாநத்தை உண்டுபண்ணுகிறவரிடத்தில் வைக்கும் நிரதிசயப்ரீதிதான். நாம் பெரியோர்களிடத்தில் செய்துவரும் ப்ரீதியைத்தான் பக்தி என்று சொல்லி வருவது. ப்ரீதியானது ஆச்ரயபேதேந நாமாந்தரங்களை யடைகிறது. அதாவது நாம் பெரியோர்களிடத்திலும் பகவானிடத்திலும் செய்துவரும் ப்ரீதிக்கு பக்தி என்றும் நமக்குக் கீழ்ப்பட்ட புத்ராதிகளிடத்தில் வைக்கும் ப்ரீதிக்கு வாத்ஸல்யமென்றும், மித்ரர்களிடத்தில் வைக்கும் ப்ரீதிக்கு மைத்ரம் என்றும், இவை முதலான அததற்கு ஏற்பட்ட பெயர்களை அங்காங்கு சொல்லிவருகிறோம். குரு என்ற பதத்திற்கு பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கும் அர்த்தமாவது:—

"குசப்தஸ்த்வந்தகாரஸ்ஸ்யாத் ருசப்தஸ்தந்நிரோதக: |
அந்தகாரநிரோதித்வாத் குருரித்யபிதீயதே ||"

[இதன் பொருள்:—'கு' என்ற ஓர் அக்ஷரமுள்ள பதத்திற்கு (அஜ்ஞாநமாகிற) அந்தகாரம் - (இருள்) 'ரு' என்ற அக்ஷரமுள்ள பதத்திற்கு அஜ்ஞாநமாகிற அந்தகாரத்தைப் போக்கடிப்பது. அந்த அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கடிப்பதால் குரு என்று சொல்லப்படுகிறார். [நமக்கு படிப்பைப் புகட்டும் பெரியோர்] என்பது.

நமக்கு ஓர் நல் விஷயத்தை போதித்தாலும் படிப்புக்கு வேண்டிய உதவியைச் செய்து கொடுத்தாலும், அவர் குருவே. நமக்கு வித்யைப் போதிக்கிறவர்கள் அநேகவிதமான பிரிவை உடையவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பிரிவை உடையவர்களும் க்ரமப்படி உயர்வை அடைகிறார்கள். நம் பெரியோர்கள் அப்பேர்ப்பட்ட பிரிவுகளுக்கு மூன்று பதங்களில் பெயர்களை ஏற்படுத்தி அடக்கி சொல்லி இருக்கிறார்கள். அவைகளாவன:— உபாத்யாயர், குரு, ஆசார்யன். குரு என்பவருக்கு லக்ஷணம் முன்னமேயே கூறப்பட்டிருக்கிறது. இன்னொரு விசேஷ வசநமும் இருக்கிறது. இங்கு க்ரமப்படி எழுதுவோம்.

உபாத்யாயர்:—

𑌏𑌕𑌦𑍇𑌶𑌂 𑌤𑍁 𑌵𑍇𑌦𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 ।
𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌤𑌿 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍁𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥"

குரு:—

"𑌨𑌿𑌷𑍇𑌕𑌾𑌦𑍀𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌯𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ।
𑌸𑌂𑌭𑌾𑌵𑌯𑌤𑌿 𑌚𑌾𑌨𑍍𑌨𑍇𑌨 𑌸 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌗𑍁𑌰𑍁𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥"

ஆசார்யன்:—

"𑌉𑌪𑌨𑍀𑌯 𑌤𑍁 𑌯𑌶𑍍𑌶𑌿𑌷𑍍𑌯𑌂 𑌵𑍇𑌦𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑍇𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ।
𑌸𑌕𑌲𑍍𑌪𑌂 𑌸𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌚 𑌤𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ॥"

என்று மநுஸ்ம்ருதியில் இரண்டாவது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. [இவைகளின் பொருள்:—

எவர் வேதத்தையும் வேதாங்கங்களையும் (யாகமந்த்ராதிகளையும்) கொஞ்சம் வேதநம் (சம்பளம்) வாங்கிக்கொண்டு சொல்லிவிக்கிறாரோ, அவர் உபாத்யாயர் என்று சொல்லப்படுகிறார்.

எவர் கர்ப்பாதாநம் முதலிய க்ரியைகளை செய்வித்து ஜீவனோபாயத்தைக் கற்பிக்கிறாரோ, அந்த ப்ராஹ்மணன் குரு என்று சொல்லப்படுகிறார்.



எவர் ப்ரஹ்மோபதேசம் செய்து வைத்து யாக மந்த்ரங்களையும், வேத வேதாந்தங்களையும் சொல்லி வைக்கிறாரோ, அவர் ஆசார்யன் எனப்படுகிறார்.]

இங்கு க்ரமப்படி உயர்வுகளும் ஏற்பட்டிருக்கின்றன. தவிர, நமக்குப் பிதாவாக இருப்பவர் சாஸ்த்ரங்களையும், ஆத்மோஜ்ஜீவநத்திற்கு ஹேதுவான கார்யங்களையும் செய்வித்தால் எல்லாரையும்விட அவர் உயர்ந்துவிடுகிறார். நம் தகப்பனாருக்கு பித்ருத்வம், ஆசார்யத்வம இரண்டு தர்மங்களிருக்கின்றனவன்றோ!

"𑌉𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑍍 𑌦𑌶𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌶𑌤𑌂 𑌪𑌿𑌤𑌾 ।"
𑌇𑌤𑌿 ॥

உபாத்யாயரைக் காட்டிலும் குரு ஒருபடி உயர்ந்தவரென்றும், குருவைக் காட்டிலும், ஆசார்யன் பத்து பங்கு உயர்ந்தவரென்றும், ஆசார்யனைவிட ஆசார்யனான பிதா நூறு மடங்கு உயர்ந்தவரென்றும், கூறப்பட்டிருக்கிறது. இங்கு லௌகிக வ்யவஹாரங்களையும் ஒட்டி கொஞ்சம் எழுதவேண்டி வருகிறது. அவையாவன: — ஸாதாரணமாக குரு, ஆசார்யன் என்று இரு வகையாகப் பிரித்துக்கொண்டு, குருவென்றால், காவ்யாதி சாஸ்த்ரங்களை சொல்லி வைக்கிறவரென்றும், ஆசார்யன் என்றால் அத்யாத்ம சாஸ்த்ரங்களையும், வேதங்களையும், மந்த்ரோபதேசங்களையும் ப்ரபத்யாதி ஆத்மோஜ்ஜீவநத்துக்கு ஹேதுவான கார்யங்களையும், நன்னடவடிக்கைகளையும் போதிக்கிறவர் என்றும் சொல்லிக்கொண்டு வருகிறோம். கடைசியில் எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால் ஒருவாறு ஒத்தேயிருக்கும். ஆசார்யபதத்திற்கு வேறு ஒரு லக்ஷணம்:—

"𑌆𑌚𑌿𑌨𑍋𑌤𑌿 𑌹𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌚𑌾𑌰𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌤𑍍𑌯𑌪𑌿 ।
𑌸𑍍𑌵𑌯𑌮𑌾𑌚𑌰𑌤𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥"

இந்த ச்லோகத்தின் கருத்தாவது:—

[சாஸ்த்ரங்களை சொல்லி வைக்கிறவரும், நன்னடவடிக்கைகளில் நிறுத்தி வைக்கிறவரும் அதேபடி நடக்கிறவரும் எவரோ அவர்தான் ஆசார்யன் என்று சொல்லப்படுகிறார்] என்பது.

ஆதலால், குருவைவிட ஆசார்யன் கிரமப்படி உயர்ந்தவன் என்று சொல்லி வருகிறோம். ஏனென்றால், க்ரந்த க்ரமப்படி, உயர்வைச் சொல்லி வருகிறோம். நாம் கொண்டாடுவதும் அப்படியே இருந்து வருகிறது. காவ்யாதி சாஸ்த்ரங்களைச் சொல்லிவைக்கிறவரோடு கொஞ்சம் பக்தியோடும்

ஸ்நேஹத்தோடும் பழகி வருகிறோம். க்ரந்த காலக்ஷேபாதிகளை பண்ணி வைக்கிறவர்களிடத்தில் மிகவும் பய பக்தியோடு கிட்டேபோய் பேசக்கூட பயந்து அப்படி கொண்டாடி வருகிறோம்.

இங்கு ஓர் ஆசங்கை:—

படிப்பு சொல்லிக்கொடுக்கிறவர் எல்லாரும் ஒன்றுதானே. இப்படிப் பட்ட க்ரமங்கள் கூடுமா? என்றால் அதற்கு ஸமாதாநமாவது:—காவ்யாதிகளைவிட வேத, வேதாந்தங்கள் கொஞ்சம் மேல்படியை யடைந்ததன்றோ? அந்த க்ரமப்படி உயர்ந்தவர்கள் என்பது.

ஓர் உதாரணம் கூறுவோம்:— ஓர் பெரிய ஸபையில் ஓர் பண்டித ச்ரேஷ்டரை அத்யக்ஷராக வைத்துக்கொண்டு அதற்குக்கீழ் ஒருவர் உபந்யாஸம் செய்கிறார். அப்போது அங்கு இன்னும் அநேக வித்வான்களும் வந்திருக்கக் கூடும். அத்யக்ஷராக இருப்பவர், மேல் ஸ்தாநத்திலும் ச்ரோதாக்கள் கொஞ்சம் கீழ்படியிலும் உட்காருகிறார்கள். அப்போது ச்ரோதாக்களில் பண்டிதர்களுக்குள் சிலபேர்கள் மஹா பண்டிதர்களாகவும் இருக்கலாம். அப்போது அவர்களுக்கு ஏதாவது குறைவு உண்டா? இல்லை யாது. அங்கு ஸ்தாந கௌரவத்தால் பரஸ்பரம் கௌரவமுண்டாகிறது. மற்றுமொரு உதாரணம்:—ந்யாயஸ்தலத்தில் ந்யாதிபதி மேல் ஸ்தாநத்திலும் ந்யாயவாதி கீழிலும் இருக்கிறார்கள். அப்போது ந்யாயவாதிகளில் மிகவும் ஸமர்த்தர்கள் கூட இருப்பதுண்டு. அப்படி யிருக்கும்பொழுதும் ந்யாயவாதி கீழ் நின்றுதான் பேசவேண்டும். ஏனென்றால் ஸ்தாந கௌரவந்தான் அதற்குக் காரணம்:— அப்படிப்போல் இங்கு ஆசார்யரிடத்தில் விஷய கௌரவத்தால் க்ரமப்படி மேன்மை யுண்டாகிறது. அப்படியிருந்தாலும், குருவாக இருந்தாலும், பொதுவாக சில தர்மங்களை அவச்யம் கொண்டாடி வரவேண்டும். அதாவது:—குருவினிடத்தில் துரோக சிந்தனை இல்லாமை, பொய் சொல்லாமை, குரு தநத்தை அபஹரித்தலில்லாமை, பரிஹாஸமில்லாமை, இவை முதலான அநேக தர்மங்களை அவச்யம் கைகொள்ளவேண்டும்.

குருவினிடத்திலிருக்கவேண்டிய முறைகள்:—

இங்கு குருவினிடத்திலிருக்கவேண்டிய முறைகளை பொதுவாகப் ப்ரஹ்மசாரி க்ரஹஸ்தர் முதலான எல்லோருக்கு முள்ளதாகச் சொல்லுவோம்.

முதலில் குரு ஸமீபத்திலிருந்தால் காலையில் ஸந்த்யாவந்தநாத்யநுஷ்டாநங்களான பிறகு குருவை வந்து திருவடிகளில் வணங்கவேண்டும். கு



சொல்லுகிற கார்யங்களை மறுத்துச் செய்யக்கூடாது. குருவுக்கு மனதிற்கு வருத்தம் உண்டாகும் கார்யத்தை ஒருபோதும் செய்யக்கூடாது. எந்தக் கார்யங்களைச் செய்தாலும் சாஸ்த்ர ஸம்மதமாயும் பெரியோர்களுக்கு ஸம்மதமாயும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட கார்யத்தை குருவின் உத்திரவைக் கேட்டுக்கொண்டு செய்யவேண்டும். ஏனென்றால் குருவானவர் சிஷ்யனுக்கு நல்லதையே நினைக்கும் ஸ்வபாவமுடையவராகத்தானிருப்பார். ஒரு காரியத்தைத் தானே நன்றாக யோஜித்துச் செய்யவேண்டும். குரு ஸமீபத்திலிருந்தால் குருவைக் கேட்டுக்கொண்டே செய்யவேண்டும்.

“ச்ருதவாக்யஸ்யைவ குருவாக்யவிசேஷத: |”

என்று சொல்லப்பட்டிருக்கிறதன்றோ! ஆதலால் குருவை கேட்டே ஸகலமும் செய்யத் தகுந்தது. குருவைக் கண்டுவிட்டால்:—

கௌதம தர்ம ஸூத்ரமென்கிற க்ரந்தத்தில்,

“வஜ்யேச—குரு ஸமீபே ஸம்ப்ராவ்ருதாவஸக்திகா பாச்ரயண பாதப்ரஸாரணாநி, நிஷ்டீவித ஹஸித விஜ்ரும்பிதா வஸ்போடநாநி |”

என்றபடி எல்லாவற்றையும் விடவேண்டியது. [அதன் பொருள். வஸ்த்ரத்தால் போர்த்திக்கொள்வது. துடைமேல் துடை போட்டுக்கொள்வது, ஒத்தக்காலை தாங்கிக்கொண்டு ஒத்தக் காலால் நிற்பது, காலை நீட்டுவது எச்சில் துப்புவது, அகாரணமாய் சிரிப்பது, கொட்டாவி விடுவது, துடை தட்டுவது இவை முதலானவைகளை விட்டுவிடவேண்டும். இவைகளெல்லாம் அலக்ஷ்யதா புத்தியை ஸூசிப்பிக்கின்றவையாதலால், அவச்யம் விட்டுவிட வேண்டியது. ஆசார்யன் திருநாமத்தை உச்சரிக்கக்கூடாது. ஜபகாலத்திலும் தர்மகார்யங்களை செய்கிற காலங்களிலும், வந்தநத்துக்காக ஆசார்ய நாமாவை, சதுர்த்யந்தமாயும், நம: என்ற பதத்தை கடைசியில் வைத்தும் உச்சரிக்கவேண்டும். படுக்கையிலிருக்கும்போது ஆசார்யன் கூப்பிட்டால் உடனே படுக்கையைவிட்டு எழுந்திருந்து ஸமீபத்தில் போய் ‘தாஸன் வந்திருக்கிறேன்’ என்று வணக்கமாய்ச் சொல்லவேண்டும்.
கீழ்சொன்ன க்ரந்தத்திலேயே:

“சய்யாஸநஸ்தாநாநி விஹாய ப்ரதிச்ரவணம்”

என்று ப்ரமாணமுமிருக்கிறது. குரு போய்க்கொண்டிருக்கும்போது கையைத்தட்டியாவது இரைந்தாவது கூப்பிடக்கூடாது. அவர் போகும்போது

ஸமீபத்துக்குப் போய் தான் வந்திருக்கிறதை அவருக்குத் தெரியப்படுத்தி பிறகு ஸமாசாரங்களை விஜ்ஞாபித்து கொள்ளவேண்டும். குரு நிற்குமிடத்தில் காற்றை மறைத்துக்கொண்டு நிற்கக்கூடாது. ஸ்நாநகாலத்திலும், உட்கார்ந்திருந்துகொண்டிருக்கும் ஸமயத்திலும் குருவைக் கண்டுவிட்டால் மறுபக்கம் போய் நிற்கவேண்டும்.

கீழ்சொன்ன க்ரந்தத்திலேயே:—

ஸ்நாநாஸந ஶய்யாஸநவாயாம் [illegible] உத்திஷ்டேத்"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. மநுஸ்ம்ருதியிலும், குருவினிடத்தில் இருக்கவேண்டிய முறைகளை இரண்டாவது அத்யாயத்தில் 191-வது ச்லோகம் முதற்கொண்டு 20-வது ச்லோகத்துக்குள் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளின் தாத்பர்யங்களை இங்கு எழுதுவோம்:—

குருவானவர் ஆஜ்ஞாபித்தாலும் இல்லாவிட்டாலும் வேதாத்யயநத்திலும், குருவின் பணிவிடையிலும், தானாகவே நாள்தோறும் முயற்சி செய்யவேண்டியது.

சரீரம், வாக்கு, புத்தி, பஞ்சேந்திரியங்கள், மநது, இவைகளை அடக்கிக்கொண்டு கைகளை கூப்பிக்கொண்டு குருவுக்கு எதிராக குருவின் முகத்தை பார்த்துக்கொண்டு நிற்கவேண்டியது.

எப்போதும் உத்தரீயத்துக்கு வெளியில் தன் வலது கையை வைத்துக்கொண்டு இருக்கவேண்டியது. [அதாவது போர்த்துக்கொள்ளாமலிருத்தல்] உட்கார்ந்து கொள்ளென்று குரு உத்தரவு செய்தால் அவருக்கெதிராக பரிசுத்தனாய் மறைக்கவேண்டிய அவயவங்களை வஸ்த்ரத்தினால் மறைத்துக்கொண்டு உட்காரவேண்டியது.

குருவினிடத்தில் வாஸஞ் செய்யும்போது உயர்ந்த அந்நத்தை புசிக்கவும், உயர்ந்த வஸ்த்ரத்தைத் தரிக்கவும் கூடாது. உயர்ந்த வேஷத்தோடு இருக்கவும் கூடாது. விடியற்காலத்தில் குரு வெழுந்திருப்பதற்கு முன்னர் தானெழுந்திருக்கவேண்டியது. இரவில் அவர் படுத்து நித்திரை செய்த பின் தான் படுக்கவேண்டியது.

குருவின் ஆஜ்ஞையை, சிஷ்யன் படுத்துக்கொண்டும் உட்கார்ந்துகொண்டும் நடந்துகொண்டும் பராங்முகமாயிருந்துகொண்டும் கேழ்க்கக் கூடாது. மறுமொழியுஞ் சொல்லக் கூடாது.



குருவினிடம் வித்யையைக் கற்க மூன்று வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. சிச்ருஷையினாலும், அதிகமாக தநத்தைக் கொடுத்து, ஒரு வித்யையை ச்சொல்லிக்கொடுத்து இன்னமொரு வித்யை வாங்குவதாலும் வித்யையை க்ரஹிக்க வேண்டும். நாலாவது உபாயம் கிடையாது. இங்கு மூன்று உபாயங்களும் தநிகர்களையும், திநர்களையும் உத்தேசித்துமே இந்த மாதிரிகளான உபாயத்தை ஏற்படுத்தி உள்ளார்கள் என்று தோணுகிறது பணங்கொடுக்கச் சக்தியற்றவன் சிச்ருஷைபண்ணி வித்யையைக் கற்றுக்கொள்ளுகிறான். தநிகன் நிறைய தநத்தைக் கொடுத்து வித்யையை க்ரஹித்துக் கொள்ளுகிறான். இந்த இரண்டு விஷயத்திலும் சக்தியற்றவன், தனக்குத் தெரிந்த வித்யைக்கொடுத்து அவன் வித்யையைத் தான் வாங்கிக்கொள்ளுகிறான். (அவன் வயதானவனும் சக்தியற்றவனுமிருப்பவன்) ஆதலால் மூன்று உபாயங்களால் வித்யையை க்ரஹிக்கலாம். தவிரவும், எல்லோருக்கும் குருபக்தி என்பது முக்யமாக இருக்கவேணும் அது இல்லாவிட்டால் ஒருக்காலும் வித்யை வரவே வராது. பக்தியினாலாகிற கார்யம் வேறொன்றினாலும் ஆகாது. ஆதலால் குருபக்தியை நாம் அவச்யம் கைக்கொள்ளவேண்டும்.

(தொடரும்)

ஸ்ரீ:

# மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்]

[தொடர்ச்சி ஸம்-23 ஸஞ் 8, பக்கம் 569 தொடர்ச்சி]

## மூன்றாவது அத்யாயம்—இரண்டாவது பாதம்

(94) இரண்டாவது பாதத்தில் லிங்கம் என்கிற பிரமாணம் சொல்லப்படுகிறது. லிங்கம் என்பது ஸாமர்த்தியம். ஒரு விஷயத்தை வெளிப்படுத்தும் சக்தி. "பர்ஹிர்தேவஸதநம் தாமி" என்று ஒரு வாக்கியமிருக்கிறது. அதன் பொருள்—தேவர்கள் உட்காரும் பர்ஹிஸ்ஸை (தர்ப்பத்தை) அறுக்கிறேன் என்று. இதுக்கு அறுப்பதைக்காட்டும் சக்தி இருக்கிறது. ஆகையால் இந்த மந்திரம் தர்ப்பத்தை அறுப்பது என்கிற கிரியைக்கு அங்கம்.

இங்கே ஸந்தேஹம்—அறுக்கப்படும் திரவ்யம், குசம் காசம் முதலான பத்து விதமான தர்ப்பங்களாக இருக்கலாம். அவைகளைப் போன்ற வேறு புல்லுகளாகவும் இருக்கலாம். இந்த மந்திரம் எதை அறுப்பதற்கு அங்கமென்று.

பூர்வபக்ஷம்:—பர்ஹிஸ்ஸு என்கிற சொல்லுக்கு தர்ப்பம் முக்கியமான பொருளாயிருந்த போதிலும், அதைப்போல் இருப்பதால் மற்றப் புல்லையும் சொல்லுகிறது. ஆகையால் இரண்டு விதத்தையும் அறுப்பதற்கு மந்திரம் அங்கம்.

ஸித்தாந்தம்:—சொல்லைச் சொன்ன உடனே அதின் முக்கியமான பொருள் தோன்றுகிறது. முக்கியமல்லாத பொருள் (கௌணம்) தோன்ற தாமதமுண்டாகிறது. முக்கியமான பொருளில் உள்ள ஒரு குணத்தை நினைத்து அந்தக் குணம் இருக்கும் வஸ்துவின் நினைவுக்கு வரவேண்டியது. முக்கியமான பொருள் தோன்றினவுடனே மந்திரம் அதைப்பிடித்துக் கொண்டு வேறொன்றைத் தேடுகிறதில்லை. ஆகையால் இந்த மந்திரம் தர்ப்பத்தை அறுப்பதற்கு மாத்திரம் அங்கம். (அதி 1)

(95) கீழே சொன்ன நியாயத்துக்கு அபவாதம் (விலக்கு). மஹாசயநம் சொல்லுகிற இடத்தில், 'ஐந்த்ர்யா கார்ஹபத்யமுபதிஷ்டதே' என்று விதி வாக்கியம் இருக்கிறது. அதின் பொருள்—இந்திர தேவதையின் மந்திரத்தாலே கார்ஹபத்ய அக்னியை ஸ்தோத்ரம் பண்ணு என்று. த்ருதீயா ச்ருதியாலே இந்த மந்திரம் அக்கினி உபஸ்தாநத்துக்கு அங்கம். ஆனால், அதில் இந்த்ர: என்கிற சொல் இருக்கிறது. அதின் முக்கியமான பொருள் சுவர்க்க லோகத்துக்கு ராஜாவான தேவதை. ஆகையால் அந்த தேவதா விஷயத்தில் அதைச் சொல்லவேண்டியதென்று கீழே சொன்ன நியாயத்தால் ஏற்படுகிறது. விதி வாக்கியம் அதை அக்கினியின் உபஸ்தாநத்துக்கு அங்கமாக விதிக்கிறது. மந்திரத்துக்கும் விதிவாக்யத்துக்கும் ஒற்றுமை உண்டாவதற்காக, இந்திரன் என்கிற சொல்லுக்கு இந்திரனைப் போல் சிறந்தது என்று பொருள் கொள்ளுகிறதா? அல்லது, கார்ஹபத்ய என்கிற சொல்லுக்கு அந்த அக்கினிக்குக் கிட்ட இருக்கும் இடம் என்று பொருள் கொள்ளுகிறதா? இரண்டில் ஒன்றைச் செய்யவேண்டும்.

பூர்வபக்ஷம்:—கீழ்ப்பாராவில் சொன்ன நியாயப்படி இந்திரன் என்கிற சொல்லுக்கு முக்கியமான அர்த்தத்தையும் கார்ஹபத்திய என்கிற சொல்லுக்கு கௌணமான அர்த்தத்தையும் கொள்ள வேணும்.

ஸித்தாந்தம்:—விதிவாக்கியமானது முன் ஏற்படாத கர்மத்தைச் செய்யச் சொல்லுகிறது. அதில் உள்ள சொல்லுக்கு லக்ஷணையினாலே முக்யமான அர்த்தத்தை விட்டு கௌணமான பொருளைக் கொள்ளுவது நியாயமன்று. ஏற்பட்ட கர்மத்தைச் செய்யும் விதத்தைச் சொல்லுகிறது மந்திரம். ஆகையால் அது அநுவாதம். விதி வாக்யத்தைக் காட்டிலும் பலம்



குறைந்தது. இந்திரன் என்கிற சொல்லுக்குத்தான் கௌணமான பொருள் கொள்ளவேணும். (அதி 2)

(96) தர்சபூர்ணமாஸ ப்ரகரணத்தில் "ஹவிஷ்க்ருதேஹீதி த்ரிரவக்னம் ஆஹ்வயதி" என்று ஒரு வாக்யமிருக்கிறது. இங்கே 'ஹவிஷ்க்ருதேஹி' என்பது மந்திரம். அதின் பொருள் - தேவதைகளுக்காக ஹவிஸ்ஸைச் செய்கிறவனே! வா - என்று. இந்த மந்திரத்தைச் சொல்லி அத்வர்யு அவனைக் கூப்பிடுகிறான். இந்த வாக்யத்துக்கு என்ன பொருள்? இந்த மந்திரத்தைச் சொல்லி அவஹநநம் செய்துகொண்டு கூப்பிடுகிறது என்றா? அப்போது மூன்றுவது தடவை என்பது அவஹநநத்துக்கு அங்கமாகும். அல்லது அவஹநநம் செய்கிறவனைப், மந்திரத்தைச் சொல்லி மூன்று தடவை கூப்பிடுகிறது என்று பொருளா? அப்போது மூன்று தடவை என்பது ஆஹ்வாநத்துக்கு கூப்பிடுவதற்கு அங்கமாகும்.

பூர்வபக்ஷமாகும்: —அவஹநநத்துக்கு அங்கம். இப்படி இல்லாமல் ஆஹ்வாநத்துக்கு அங்கம் என்று கொண்டால் "அவக்னம்" (அவஹநநம் செய்துகொண்டு என்கிற சொல்லுக்கு ப்ரயோஜனமில்லாமல் போய்விடும். ஆகையால், அவஹநநத்துக்கு அங்கமாக மந்திரம் விதிக்கப்படுகிறது. கேள்வி:—மூன்று தடவை என்பதையும் விதிக்கவேண்டுமே. அதையும் மந்திரத்தையும் விதி இரண்டு வாக்யங்களாகுமே. (பாரா-36). பதில்:—மூன்று தடவை என்பது ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிறது. அதை அநுவாதம் பண்ணி மந்திர மாத்ரம் விதிக்கப்படுகிறது. ஒரு சாகையில் மந்த்ர காண்டத்தில் மந்த்ரம் மூன்று தடவை படிக்கப்பட்டிருக்கிறது. அதை மறுபடியும் விதிக்கவேண்டியதில்லை. இன்னுமொரு கேள்வி – மந்த்ரத்துக்குக் கூப்பிடுவதில் அன்றோ சக்தி. அவஹநநத்தில் இல்லையே - என்று. பதில் — கீழ் பாராவில் சொன்னபடி கௌணமாய் அர்த்தம் பண்ண வேண்டும்.

ஸித்தாந்தம்:—மூன்று தடவை என்பது நீர் சொன்னபடி ஒரு சாகையில் படித்திருப்பதனால் மாத்திரம் ஏற்படாது. ஒரு சாகையில் இரண்டு தடவையும் படிக்கப்பட்டிருக்கிறது. அதை விதிக்கவேண்டியது. 'அவக்னம்' என்ற சொல்லுக்கு ப்ரயோஜநமில்லாமல் போகவில்லை. அது அவஹநநம் பண்ணுகிற வேளையில் என்று காலத்தை காட்டுகிறது. காலத்தை விதிக்க வேண்டியதில்லை. அவஹநநத்தைச் செய்ய உதவியைத் தேடுவது அந்த காலத்தில் தானே நேரிடும். வேறு காலத்தில் நேரிடாது. கூப்பிடுவதையும் விதிக்கவேண்டியதில்லை. மந்திரத்தின் சக்தியாலே அது ஏற்படுகிறது. "வா" என்கிற சொல்லைக் கூப்பிடுவது இல்லாமல் பொருள் சொல்லுவார்

களோ. ஆகையால் விதிக்கவேண்டியது கூப்பாடு மூன்று தடவை என்று அப்படியே வேதம் மந்த்ரத்துக்கு அர்த்தம் பண்ணுகிறது. “ஹவிஷ்க்ருஜ் தேஹி” என்று சொல்லுகிறான். — ‘எவர்கள் தேவர்களுக்கு ஹவிஸ்ஸைச் செய்கிறார்களோ - அவர்களைக் கூப்பிடுகிறான்’ என்று. ஆகையால் வாக்யத்தின் பொருள் - ‘அவஹநநம் பண்ணும் காலத்தில் செய்யவேண்டிய கூப்பாட்டை மூன்று தடவை செய்யவேண்டியது’ என்று.

மந்திரத்தைக் கூப்பாட்டுக்கு அங்கமாக விதிக்கவேண்டியதில்லை. லிங்கத்தாலேயே அது ஏற்படுகிறது. (அதி-1).

(97) அக்னிஷ்டோம ப்ரகரணத்தில் “உத்திஷ்டந்நந்வாஹ அக்நீதக்நீந் விஹர” என்று ஒரு வாக்யம் இருக்கிறது. “அக்நீதக்நீந் விஹர” என்பது மந்த்ரம். அதின் பொருள் - ஏ ஆக்னீத்ரனே! அக்னிகளை ஜ்வலிக்கும்படி பண்ணு - என்று. இது எதுக்கு மந்திரம் - உத்தாநத்துக்கா (எழுந்திருப்பதற்கா)? அல்லது அக்னி விஹரணப்ரைஷத்துக்கா? (ஆக்னீத்ரனை ஏவுதற்கா)? மந்திரத்துக்கும் எழுந்திருப்பதற்கும் ஸம்பந்தமில்லை. ஆகையால் அதற்கு அங்கமாயிருக்கக்கூடாது. ஆகையால், உத்திஷ்டந் என்கிற சொல்லுக்கு எழுந்திருக்கும்போது என்று பொருள் கொள்ளவேண்டியது. அந்தக் காலத்தில் இந்த மந்திரத்தைச் சொல்லவேண்டியதென்று வாக்யத்துக்குப் பொருள்.

இது கீழ்ப் பாராவில் சொன்ன நியாயத்தாலேயே ஏற்படுமே. வேறு அதிகரணம் எதற்காக என்றால், பதில்—இங்கே இரண்டு ஸந்தேஹம் உண்டாகக் கூடும். (1) முன் அதிகரணத்தில் மந்திரத்தையும் மூன்று தடவை என்பதையும் விதிப்பதானால் வாக்ய பேதம் உண்டாகும் என்று ஆக்ஷேபிக்கப்பட்டது. இங்கே அந்த ஆக்ஷேபமில்லை. மந்த்ரம் ஒன்றைத்தான் விதிக்கவேண்டியது. (2) காலத்தை விதிக்கிறது என்று சொல்லக் கூடாது. விதி வாக்யத்தில் லக்ஷணை கூடாது என்று 95-வது பாராவில் ஸித்தாந்தத்தில் சொல்லப்பட்டது. ‘உத்திஷ்டந்’ என்கிற சொல்லுக்கு எழுந்திருக்கும்போது என்று பொருள் கொண்டால் லக்ஷணைதானே—என்று இவைகளைத் தீர்ப்பதற்காக இந்த அதிகரணம். ஸமாதானம் என்ன என்றால், ஐந்த்ரீ நியாயத்தில் லிங்கத்துடன் விரோதமிருந்தது. ஆனாலும் ச்ருதி மந்திரத்தைக் கொண்டு அக்கினியை உபஸ்தானம் பண்ணும்படி விதித்தது. ச்ருதி, லிங்கத்தைக் காட்டிலும் வலிமையுள்ளது. ஆகையால் லக்ஷணையைக் கொள்ளவில்லை. இங்கே வாக்யத்தால் காலம் விதிக்கப்படுகிறது. வாக்யத்தைக் காட்டிலும் லிங்கம் வலிமையுள்ளது. ஆகையால் லிங்கத்துடன்



விரோதத்தைப் பார்த்து லக்ஷணை வேறு கதியில்லாமையால் பொறுத்துக் கொள்ளவேண்டியது. (சாஸ்-21-4).

(98) லிங்க விஷயத்தில் ஒரு ஸந்தேஹம் — ச்ருதிக்கு ஒரு ப்ரமாணத்தின் உதவி வேண்டியதில்லை. அப்படியே ஒரு ப்ரமாணத்தையும் பார்க்காமல் லிங்கம் மந்த்ரங்களைக் கர்மங்களுக்கு அங்கமாகச் சொல்லக் கூடுமா? என்று. இதற்காக இரண்டு அதிகரணங்கள். யஜுர்வேதத்தில் இரண்டாவது காண்டத்தில் 2, 3, 4-வது ப்ரச்நங்களில் காம்யங்களான இஷ்டிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. முதல் காண்டம் முதல், மூன்றாவது காண்டம் வரையில் ஒவ்வொரு ப்ரச்நத்தின் கடைசி அநுவாகத்தில் இஷ்டிகளுக்கு வேண்டிய, யாஜ்யா புரோநுவாக்யா என்கிற மந்த்ரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மந்த்ரகாண்டம் என்கிற யாஜ்ஞிகர்களுடைய ஸமாக்யையால் (பெயரால்) இவைகள் காம்யமான இஷ்டிகளுக்கு மந்த்ரங்களென்று ஏற்படுகிறது. இஷ்டி காண்டத்தையும் மந்த்ர காண்டத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, முதல் இஷ்டிக்கு முதலில் படிக்கப்பட்ட இரண்டு மந்த்ரங்கள் என்றும், இரண்டாவது இஷ்டிக்கு இரண்டாவது தடவை படிக்கப்பட்ட மந்த்ரங்கள் என்றும், க்ரமத்தால் (வரிசையால்) ஏற்படுகிறது. இந்த்ராக்னி விஷயமாய் ஒரு இஷ்டியும், இந்த்ராக்னி விஷயமாய் யாஜ்யாவும் புரோநுவாக்யாவும் படிக்கப்பட்டிருக்கின்றன. லிங்கத்தால் இந்த மந்த்ரங்களைக் கொண்டு இந்த இஷ்டியை மாத்ரம் செய்கிறதா? அல்லது நித்தியமான வேறு இந்த்ராக்னி விஷயமான வேறு இஷ்டிகளையும் செய்யலாமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இந்த மந்த்ரங்களான காம்யமான இஷ்டியை மாத்திரம் செய்ய வேண்டியதென்று சொல்லக்கூடாது. அப்படிச் சொல்லுவதற்குப் பிரமாணம் ஸமாக்யையும் க்ரமமும். இவைகளைக் காட்டிலும் லிங்கம் வலிமையுள்ளது.

ஸித்தாந்தம்:—இந்த இடத்தில் லிங்கத்தைக் கொண்டு மற்ற இரண்டு பிரமாணங்களையும் தள்ளிவிடக் கூடாது. லிங்கமானது தேவதையை மாத்திரம் சொல்லுகிறது. அதினால் இன்ன கர்மத்துக்கு இன்ன மந்த்ரம் என்று ஏற்படாது. ஆகையால் முதலில் ஸமாக்யையால் மந்த்ர காண்டத்துக்கும் கர்மகாண்டத்துக்கும் ஸம்பந்தம் ஏற்பட்டு, மந்த்ரத்துக்கும் கர்மத்துக்கும் ஸம்பந்தம் ஏற்படுகிறது. பிறகு இன்ன கர்மத்துக்கு இன்ன மந்த்ரம் என்று க்ரமத்தாலே ஏற்படுகிறது. இந்த்ராக்னி மந்த்ரங்களுக்கு இந்த்ராக்னி இஷ்டி ஸம்பந்தம் இப்படி ஏற்படுகையில், ஏற்படுத்தின பிரமாணங்களைத் தள்ளிவிடக் கூடாது.

(2) ஒரு கேள்வி-லிங்கத்தாலேயே இன்ன மந்த்ரம் இன்ன இஷ்டிக்கு என்று ஏற்படலாமோ என்று. பதில்—இந்த்ராக்னி இஷ்டி இன்னுமொன்று இருக்கிறது. யாஜ்யா புரோநுவாக்யாவும் வேறு இருக்கின்றன. க்ரமத்தாலேதான் இன்ன இஷ்டிக்கு இன்ன மந்த்ரங்கள் என்று தீர்மானஞ் செய்ய வேணும்.

(3) இன்னுமொரு கேள்வி—க்ரமத்தாலேயே தீர்மானம் பண்ணலாமோ? லிங்கத்தைப் பார்ப்பானேன்?—என்று. பதில்—இந்த்ராப்ருஹஸ்பதி தேவதையின் இஷ்டி ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இரண்டு விதமான யாஜ்யாவும் புரோநுவாக்யாவும் இருக்கின்றன. க்ரமத்தினால் முதலில் படித்த மந்த்ரங்களை இஷ்டிக்கு அங்கமாகச் சொல்லலாம். இரண்டாவது தடவை படித்த மந்த்ரங்களுக்கு இஷ்டியுடன் ஸம்பந்தம் லிங்கத்தாலேயே ஏற்பட வேண்டும்.

ஆகையால் கிரமம் ஸமாக்யா இவைகளின் உதவியின் பேரில்தான் காம்யமான இஷ்டி விஷயத்தில் அவைகளுக்கும் மந்த்ரங்களுக்கும் ஸம்பந்தம் ஏற்படும் (அதி-7)

(99) லிங்கம் என்கிற ப்ரமாணத்துக்கு க்ரமம் ஸமாக்யை என்கிற ப்ரமாணங்களின் உதவி வேண்டுமென்று கீழே சொல்லப்பட்டது. ப்ரகரணம் என்கிற ப்ரமாணத்தின் உதவியும் வேணுமென்று சொல்லப்போகிறது. அக்நிஷ்டோம ப்ரகரணத்தில் "ஆக்நேய்யா ஆக்நீத்ரமுபதிஷ்டதே" என்று ஒரு வாக்யம் இருக்கிறது. அதின் பொருள்—அக்னி தேவதையின் மந்த்ரத்தாலே ஆக்னீத்ரமண்டபத்தை ஸ்தோத்ரம் பண்ணு என்று. இங்கே ஸந்தேஹம்-இந்த ப்ரகரணத்தில் படித்திருக்கும் மந்த்ரத்தைச் செய்கிறதா? அல்லது அக்னி தேவதையின் விஷயமான வேறு எந்த மந்த்ரத்தைக் கொண்டாவது செய்யலாமா? என்று.

பூர்வபக்ஷம்:—ஆக்நேய்யா என்கிற சொல் அக்கினி தேவதையின் மந்த்ரம் என்று பொதுவாய்ச் சொல்லுகிறது; இன்ன மந்த்ரம் என்று சொல்லவில்லை. ஆகையால் எந்த மந்த்ரத்தையும் சொல்லலாம்.

ஸித்தாந்தம்:—யஜ்ஞத்தைச் சொல்லுமிடத்தில் படித்திருக்கும் மந்த்ரத்தைக் கொண்டுதான் யஜ்ஞத்துக்கு வேண்டிய வியாபாரங்களைச் செய்ய வேண்டியதென்று ப்ரகரணத்தால் தெரிகிறது. அந்த வியாபாரம் ஏது என்று கேள்வி உண்டாக, வாக்யமானது அந்த வியாபாரம் ஆக்னீத்ர மண்டபத்தின் ஸ்தோத்ரம் என்று சொல்லுகிறது. இப்படி கொள்ளுவதில் லாகவம் இருக்கிறது. வேறு மந்த்ரம் விஷயத்தில், அதைக்கொண்டு யஜ்ஞத்துக்கு வேண்டிய வியாபாரங்களைச் செய்ய வேண்டியதென்றும், அந்த வியாபாரம் இன்னதென்றும் இரண்டு விஷயங்கள் ஏற்படவேண்டியவை. இதில் கௌரவம் என்கிற குற்றம் உண்டு. ஆகையால் ப்ரகரணத்தில் படித்த மந்த்ரத்தைக்கொண்டுதான் ஸ்தோத்ரத்தைச் செய்யவேண்டியது. (அதி-8)



ஆக்னீத்ர மண்டபத்தின் உபஸ்தானத்துக்கு இரண்டு ரூபங்கள் இருக்கின்றன. அதினுடைய உபஸ்தானம் என்றும், அக்நிஷ்டோமத்தினால் அபூர்வம் உண்டாவதற்கு உதவி செய்கிறது என்றும். இந்த இரண்டையும் சாஸ்திரத்தைக்கொண்டுதான் அறியவேண்டியது. வேறு மந்த்ரத்துக்கு முதலாவது ரூபம்தான் வாக்யத்தாலே ஏற்படும்; இரண்டாவது ரூபம் ஏற்படாது. அதைப்பற்றி வாக்யம் இல்லை. (சாஸ்-220)

இரண்டாவது பாதம் முற்றிற்று.

## மூன்றாவது பாதம்-

(100) முன் பாதத்தில், வாக்யம்-ப்ரகரணம்-க்ரமம்-ஸமாக்யை என்கிற ப்ரமாணங்களைப்பற்றி பேசப்பட்டது. அவைகள் இன்னவை என்றும், அவைகள் செய்கிற வேலைகள் இன்னவை என்றும் இந்தப் பாதத்தில் சொல்லப்படுகிறது.

(101) வாக்யம்:—அக்நிஷ்டோம ப்ரகரணத்தில் "உச்சை: ருசா க்ரியதே, உபாம்ஶு யஜுஷா, உச்சை: ஸாம்நா" என்று ஒரு வாக்யம் இருக்கிறது. அதின் பொருள்—உச்ச த்வனியோடு ருக் மந்த்ரத்தைக்கொண்டு செய்யப்படுகிறது. ஒருவருக்கும் கேட்காமல் யஜுர் மந்த்ரத்தைக்கொண்டு, உச்சத்வனியோடு ஸாம மந்த்ரத்தைக்கொண்டு—என்று. இங்கே இரண்டு சொற்களின் சேர்க்கை வாக்யம் என்கிற ப்ரமாணம். அவைகளைச் சேர்த்துச் சொல்லுவதாலேயே ஒரு சொல்லால் சொல்லப்பட்டது மற்றொரு சொல்லுக்கு அங்கமென்று ஏற்படுகிறது.

(102) இந்த இடத்தில் ஒரு முக்யமான நியாயம் விசாரிக்கப்படுகிறது. மேற் சொன்ன வாக்யத்தில், ருக் யஜுஸ் ஸாம என்கிற சொற்கள் அந்தப் பெயருள்ள மந்த்ரங்களைச் சொல்லுகின்றனவா? அல்லது அந்தப் பெயருள்ள வேதங்களையா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இந்தச் சொற்கள் மந்த்ரங்களைச் சொல்லுகின்றன; ஆகையால் இன்ன த்வனியோடு சொல்லுவது என்பது மந்த்ரங்களின் தர்மம்

கள். இப்படி இருப்பதால், யஜுர்வேதத்தில் இருக்கும் ருக் மந்திரங்களையும், அத்வர்யு உச்சஸ்வரத்தோடு சொல்லவேண்டியது.

ஸித்தாந்தம்:—இந்த இடத்தில் முதலில் ஒரு வாக்யம் இருக்கிறது:— "த்ரயோ வேதா அஜாயந்த – அக்நேர் ருக்வேத: – வாயோர் யஜுர்வேத: – ஸூர்யாத் ஸாமவேத:" என்று. இதன் பொருள் – மூன்று வேதங்கள் உண்டுபண்ணப்பட்டன. அக்நியினிடமிருந்து ருக் வேதம், வாயுவினிடமிருந்து யஜுர்வேதம், ஆதித்யனிடமிருந்து ஸாம வேதம்—என்று. இதனால் வேதத்தைப்பற்றி ஏதோ விஷயம் விதிக்கப்போகிறது என்று தோன்றுகிறது. அது இன்னது என்று கடைசியில் வருகிற முன் சொன்ன வாக்யம் சொல்லுகிறது. ஆகையால் அதில் இருக்கும் ருக் யஜுஸ் ஸாம என்கிற சொற்கள் வேதங்களைத்தான் சொல்லுகின்றன.

(2) இங்கே ஒரு கேள்வி—முதல் வாக்யம் அர்த்தவாதம்; ஆகையால் அதற்கு வலிமை கிடையாது. கடைசி வாக்யம் ஒன்றை விதிக்கிறது. ஆகையால் அதற்கு வலிமையுண்டு. ஆகையால் வலிமையில்லாத முதல் வாக்யத்தைக் கொண்டு வலிமையுள்ள கடைசி வாக்யத்தில் லக்ஷணை பண்ணக் கூடாது—என்று. பதில்—முதல் வாக்யத்தைக் கேட்டபோது, ஒரு விரோதமும் இல்லை. ஆகையால் கேட்டபடி அதின் அர்த்தம் மனதில் பட்டது. கடைசி வாக்யத்தைக் கேட்டபடி அர்த்தம் கொள்வதானால் முதல் வாக்யத்துடன் விரோதிக்கும். இரண்டும் ஒரு வாக்யமாகாது. ஆகையால் ஒரு வாக்யமாக வேணுமானால் முதல் வாக்யத்துக்கு ஒத்து அர்த்தம் பண்ணவேணும். ஆகையால் ருக் முதலான சொற்கள் வேதத்தைத்தான் சொல்லுகின்றன.

விதி வாக்யத்தில் உத்தேச்யத்தைச் சொல்லுவது வலிமையுள்ளதுதான். அதின் ஸ்வரூபம் உண்டானால் அதற்கு வலிமை உண்டு. முதல் வாக்யம் ஒரு புத்தியை உண்டுபண்ணும் காலத்தில் விதி வாக்யமில்லை. அது வரும்போது, முதல் வாக்யத்தோடு ஒரு வாக்யமாவதற்காக அதற்கு விரோதமில்லாமலே அதற்கு ஸ்வரூபம் உண்டாகிறது. ஆகையால் விதி வாக்யத்தில் அந்தச் சொற்கள் உத்தேச்யத்தைச் சொன்னபோதிலும் லக்ஷணை செய்யவேண்டியது. அதைப் பொறுத்துக்கொள்ளவேண்டியது. (கா-அதி-1-232/233)

(தொடரும்)

ஸ்ரீ:

# க்ரந்த விமர்சம்.

## அதிகார ஸங்க்ரஹ ச்லோகங்கள்.

ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் என்னும் க்ரந்தத்தில் குரு பரம்பரா ஸாரம் என்று ஒரு அதிகாரமும் அது நீங்கலாக வேறு முப்பத்திரண்டு அதிகாரங்களும் இருக்கின்றன. இவைகளில் உபபாதிக்கப்பட்டுள்ள விஷயங்களின் ஸங்க்ரஹத்தை அந்தந்த அதிகாரத்தின் உபக்ரமத்திலும் முடிவிலும் ஸம்ஸ்க்ருத ச்லோகரூபமாக ஸ்ரீ தேசிகனே அநுக்ரஹித்திருக்கிறார். அந்த ச்லோகங்களெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து ஒவ்வொரு ச்லோகத்திற்கும் பதவுரை பொழிப்புரை அவதாரிகை இவைகளுடன் ஒரு வ்யாக்யானத்தைத் திருக்குடந்தை ஸ்ரீ. உப. வே. வி. கே. ராமாநுஜாசார்யர் ஸ்வாமி எளிதான தமிழ் நடையில் அதிகமுடமொழி பதங்களின் சேர்க்கையின்றி வெளியிட்டிருக்கிறார். ஸாரஸ்வாதினீ ஸாரப்ரகாசிகை முதலிய வ்யாக்யானங்களை அநுஸரித்து விசேஷார்த்த விவரணங்களுடன் இந்த உரை எழுதப்பட்டிருக்கின்றது என்பதே இதற்கு ஒரு ஏற்றம். முகவுரையில் இந்த உரையின் கர்த்தாவால் எழுதப்பட்டிருக்கிறபடி, இந்த க்ரந்தமானது, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தை ஆசார்ய முகமாகப் பூர்வம் ஸேவித்திருக்குமவர்களுக்கு பிறகு சிந்தனை செய்யும் காலங்களில், மிகவும் உபகாரகமாக இருக்கும். இதன் விலை அணா 8. இதை அபேக்ஷிப்பவர்கள், இந்த உரையின் கர்த்தாவாகிய, கும்பகோணம் பெரிய தெரு திவான்பஹதூர் ஸ்ரீ. உப. வே. வி. கே. ராமாநுஜாசார்யரிடமிருந்தே பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

(1)

## ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, புது மாம்பலம்.

மதராஸைச் சேர்ந்த புது மாம்பலத்தில் 'ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை' என்னும் பெயருடன் ஒரு வைதிக ஸமாஜம் சென்ற தை மாஸத்தில் ஏற்படுத்தப்பட்டது. விஷ்ணு பக்தர்களெல்லாரும் அந்த ஸபையின் அங்கத்தினராவதற்கு அர்ஹர்கள். வைதிக தர்மத்தைப் பரவச்செய்யவேண்டும் என்பதே அதன் முக்ய நோக்கம். பொதுவாக எல்லா ஜனங்களுக்கும் உபயோகப்படும்படி இதிஹாஸ புராண ப்ரவசனங்களை நடைபெறுவிப்பதுடன், விசேஷித்து பரம புருஷார்த்தத்தைப் பெற விரும்புவோர்களுக்கு வேதாந்த ப்ரவசனம் செய்விப்பதற்கும் சாஸ்த்ரியங்களான ஸம்

விதாநங்கள் செய்யப்படும். ஒவ்வொரு வர்ஷத்திலும் ஒரு வித்வத் ஸதஸ்ஸை நடத்த வேண்டும் என்பதும் ஸபா ப்ரவர்த்தகர்களின் மநோரதங்களுள் ஒன்று.

வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரிப்பவர்களெல்லாரும் நல் வழியில் நடப்பவர்கள் என்பதே இந்த ஸபையோர்களுடைய கொள்கை. ஒவ்வொருவரும் தம்தம் ஆசார்யர்களால் உபதேசிக்கப்பட்டுள்ள மார்க்கத்திலேயே நடந்து வருகையில், வேறு வைதிக ஆசார்யர்களால் உபதேசிக்கப்பட்டுள்ள வழியில் நடக்கும் மற்றோர்களிடம் எவ்வித த்வேஷத்தையும் பாராட்டாமல் உண்மையான ஸௌஹார்த்தத்துடனேயே வர்த்தித்து வரவேண்டும் என்பதும் இந்த ஸபையின் நியமங்களுள் ஒன்று. இந்த ஸபையைச் சேர்வதற்கு மாஸம் ஒன்றுக்கு ரூ 1_0_0, அல்லது அணா 8, அல்லது அணா 4 செலுத்துதல் வேண்டும். ஸ்ரீமாந் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் ஸபாத்யக்ஷராகவும், ஸ்ரீமாந் ஸ்ரீரங்கம் சடகோபாசார்யரும் ஸ்ரீமாந் ஆர். ரங்கஸ்வாமி ஐயங்காரும் உபஸபாத்யக்ஷர்களாகவும், ஸ்ரீமாந் ஜீ. பராங்குச ஐயங்கார் பொக்கிஷதாரராகவும், ஸ்ரீமாந் ஜி. ஆர். ராமஸ்வாமி ஐயங்காரும் ஸ்ரீமாந் ஆர். எஸ். ராஜகோபால ஐயங்காரும் கார்யதர்சிகளாகவும், நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸபையின் ப்ரதம ப்ரவ்ருத்தியாக ஸ்ரீமாந் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரால் அக்ராஸநம் வஹிக்கப்பட்டு ஒரு ஸங்கம் தை மாஸத்தில் நடைபெற்றது. அப்பொழுது ஸ்ரீமாந் வாஸுதேவாசார்யரால் 'வைஷ்ணவர்களின் ஸ்வரூபமும் தர்மமும்' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு உபந்யாஸம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு ஒவ்வொரு வாரத்திலும் இருமுறை வீதம் ஸ்ரீமாந் ஸ்ரீரங்கம் சடகோபாசார்யரால் ஸ்ரீமத் ராமாயண கதை ப்ரவசநம் செய்யப்பட்டு வருகின்றது. ஸபையைப் பற்றிய மற்றை விஷயங்கள் அடுத்த ஸஞ்சிகையில் வெளியிடப்படும்.

புது மாம்பலம் }
28—2—35 }

ஆர். எஸ். ராஜகோபால ஐயங்கார்,
கார்யதர்சி.

(2)

## ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் எண்பதாம் ஆண்டுநிறைவு விழா.

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுக்கு 1935-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ம் தேதி எண்பதாவது ஆண்டு பூர்த்தியாகின்றது.

நம்முடைய தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் அபிவிருத்தியாவதற்கு அறுபது ஆண்டுகளாக ஐயரவர்கள் மதிப்பரிய தொண்டுகளைச் செய்துவந்திருப்பதை யாவரும் நன்கறிவர். தம்முடைய மெய்வருத்தங்களை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், தனியாகவே இருந்து சங்ககாலத்து அரிய பெரிய நூல்களைப் பாதுகாத்து ஆராய்ந்து பிழையறப் பரிசோதித்துப் பதிப்பிக்கும் பெருஞ்செயலைச் செய்திருக்கிறார்கள்.



அவர்கள் செய்துள்ள பேருதவியினாலேயே பண்டைத் தமிழரின் நாகரிகத்தையும் பெருமையையும் நாம் இப்பொழுது அறிந்திருக்கிறோம். நமது தொன்மையைக் குறித்து நாம் நியாயமாகப் பெருமை பாராட்டிக் கொள்வதற்கு அவர்களே முக்கிய காரணமாக உள்ளார்கள். அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள ஒப்புயர்வற்ற தொண்டுகளைத் துரைத்தனத்தாரும் ஸர்வகலாசாலையாரும் நன்கு மதித்து மஹாமஹோபாத்தியாயர் டாக்டர் என்னும் பட்டங்களை அவர்களுக்கு அளித்துக் கௌரவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பாஷாபிமானிகளும் கல்வியின் மேம்பாட்டைக் கருதுவோரும் தமிழ்ப் பெரியாராகிய ஐயரவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாட விரும்புவார்கள் என்பது திண்ணம்.

பிறநாடுகளிலே கல்வித்துறைகள் பலவற்றில் மேம்பாடுற்ற பெரியார்களின் வாழ்க்கையில் இவ்வகையான ஸந்தர்ப்பங்களை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டுரைத் தொகுதிகளை வெளியிட்டு, உருவச் சிலைகளை நிறுவி, உபகார நிதிகளையும் அமைத்துப் பலவாறுகப் பாராட்டுகிறார்கள்.

தமிழ்மக்களுக்கு ஐயரவர்களிடமுள்ள நன்றியறிவைப் புலப்படுத்துவதற்கும், சிறந்த பாஷா விற்பன்னராகவும் போதகாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் இருந்து நெடுங்காலமாக அவர்கள் செய்துவரும் அருஞ்செயல்களைப் பாராட்டுவதற்கும் இது தக்க ஸமயமாகும்.

ஆதலால் மார்ச்சு மாதம் 6-ம் தேதி புதன்கிழமை மாலை 5-மணிக்கு, ஐயரவர்களுக்கு உபசாரப்பத்திரம் ஒன்று அளித்தும், அவர்களுடைய உருவப்படத்தைச் சென்னைச் சர்வகலாசாலை மண்டபத்தில் நிலைபெற வைத்தும், அவர்கள் செய்துவரும் நூற்பதிப்பு வேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தும், பொருளுதவி செய்வோர் கருத்துக்கு ஒத்தபடி வேறு உசிதமானவற்றைச் செய்தும், அவர்களை இச்சமயம் பாராட்ட எண்ணியிருக்கிறோம்.

இந்த விழாவிலே தாங்களும் கலந்து கொள்வீர்களென்று நம்புகிறோம். தங்கள் உடன்பாட்டையும் தங்களுடைய கருத்துக்களையும் தெரிவிப்பதோடு தங்களாலான பொருளுதவியையும் செய்யும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

பணம் அனுப்ப விரும்புவோர்கள் மயிலாப்பூர் வடக்குமாடவீதியிலுள்ள ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களுக்கு அனுப்பலாம். பொருளுதவி செய்வோரின் கூட்டமொன்று மார்ச்சு மாதம் முதல் தேதி வெள்ளிக்கிழமை மாலை $5\frac{1}{4}$-மணிக்கு தேனாம் பேட்டை மௌப்ரேஸ் ரோட்டில், தலைவர் கனம் பி. டி. ராஜனவர்கள் வீட்டில் நடைபெறும். தாங்கள் அச்சமயம் வந்திருந்து விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டியனவற்றைச் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இப்படிக்கு,
பி. டி. ராஜன்

(3)

## ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை, ஸ்ரீரங்கம்.

பவ ஞு கார்த்திகைமீ 28உ முதல் நடந்த இரண்டாவது வார்ஷிக மஹா ஸதஸ்ஸின் விபரம்:—

(1) கார்த்திகைமீ 28உ முதல் நாள் ஸ்ரீ அஹோபில மடத்தில் தசாவதார ஸந்நிதியில் நடைபெற்றது. ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் பெரிய அழகிய சிங்கர்ஸ்வாமி அக்ராஸனத்தில், யாம. பரி. சின்ன அழகிய சிங்கர் மாலை 3 மணிமுதல் 5-30 மணிவரையில் "ஸ்ரீதேசிகன் செய்துள்ள பரமோபகாரம்" என்னும் விஷயமாக உபன்யாஸம் செய்தருளியாயிற்று.

(2) கார்த்திகைமீ 29உ இரண்டாது நாள் ஸ்ரீதசாவதார ஸந்நிதியில் ஸதஸ் நடைபெற்றது. ஸ்ரீ அழகிய சிங்கர் அக்ராஸனத்தில் ஸ்ரீ உப. வே. புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி "தத்வஹித புருஷார்த்தங்களை"ப்பற்றி ஸ்ரீ தேசிகன் ஸூக்திகளைக் கொண்டு உபன்யஸித்தார்.

(3) கார்த்திகைமீ 30உ கீழ் உத்தர வீதியில் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் ஸதஸ் நடைபெற்றது. பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதி ஸ்ரீமதாண்டவன் ரெங்கநாத மஹா தேசிகன் அக்ராஸனத்தில் எழுந்தருளி சென்றவருஷம் அக்ராஸனம் வஹித்த பரமஹம்ஸ பரிவ்ராஜக பௌண்டரீகபுரம் ஆண்டவன் ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் பரமபதித்ததைப் பற்றி அனுசோசித்துவிட்டு ஸபையை உபக்ரமித்தாயிற்று.

(1) V. கோபாலய்யங்கார் M. A., "தேசிகன் கவிதையின் உத்கர்ஷம்" என்னும் விஷயமாய் உபன்யஸித்தார்.

(2) புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ஸ்வாமி" ஸ்ரீ தேசிகனுக்கு திராவிட கவிதையிலுள்ள ஸாமர்த்தியத்தைப்பற்றி உபன்யஸித்தார்.

(4) மார்கழிமீ 1உ கீழ் உத்தர வீதியில் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் ஸ்ரீமத் பரமஹம்ஸ, ஆண்டவன் ரெங்கநாத மஹாதேசிகன் அக்ராஸனத்தில் ஸதஸ் நடைபெற்றது.

(1) திருக்குடந்தை வித்வான் அக்னிஹோத்ரம் தாததேசிக தாத்தாசார் ஸ்வாமி "ஸ்ரீதேசிகன் ப்ராமாணிகத்வம்" என்பதைப் பற்றி உபன்யஸித்தார்.

(2) திருக்கோட்டியூர் வித்வான் ஸ்ரீ ராம தேசிகாச்சார் ஸ்வாமி "ஸ்ரீ தேசிகனுக்கு நாம் செய்யவேண்டிய ப்ரத்யுபகாரம்" என்பதைப் பற்றி உபன்யஸித்தார்.

புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. வெ. ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமி ஸபையை உபஸம்ஹரித்தவுடன் கிருதக்ஞதா நுஸந்தானத்துடன் ஸபை கலைந்தது.

பிறகு வருகிற வருஷத்திய ஸபை உத்யோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

28-1-'35

அன்பில் சே. ஸௌமிய நாராயணன்
உபகாரியதரிசி.



(4)

## ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை ஸ்ரீரங்கம்.

(கிளை, 29 கிருஷ்ணபவநம், வேப்பேரி, சென்னை)

ஷை ஸபையின் ஆதரவில் சென்னையைச் சேர்ந்த பலவிடங்களில் நடந்த காரியங்களின் விபரம்:—

### 1934-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில்

1. மாம்பலம். ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பள்ளிக்கூடத்தில் (1) ஸ்ரீ உப. வே. வேதாந்ததீபிகை பத்ராதிபர் வாஸுதேவாசார்யார் ஸ்வாமி (2) வியாகரண ஸாஹித்ய வேதாந்த சிரோமணி திருவாதி காலேஜ் புரொபஸர் வேளிய நல்லூர் R. ஸ்ரீநிவாஸ தாதாசாரியார் இவர்கள் முதலான அநேகம் ஸ்வாமிகள் ஸந்நிதியிலும்.

புரசைவாக்கம். ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீ. உப. வே. Rao Bahadur K. N. நரஸிம்மாசார்யார் ஸ்வாமி (Assistant Director of Surve y) யின் அக்ராஸனத்தின் கீழ் சுமார் 100 ஸ்வாமிகள் ஸந்நிதியிலும்,

3. மயிலாப்பூர். ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் ஸ்ரீ. உப. வே. N. ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி (Comissioner of Hindu Religions Endowment ) அக்ராஸனத்தில் சுமார் 100 ஸ்வாமிகள் ஸந்நிதியிலும்.

4. திருவல்லிக்கேணி. ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ உப. வே. கமலாபுரம் ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி (Assistant Secretary to Government, Dovelopment Department) அக்ராஸனத்தில் சுமார் 50 ஸ்வாமிகள் ஸந்நிதியிலும்.

5. சிந்தாதிரிப்பேட்டை. ஸ்ரீ. உப. வே. திருவஹீந்திரபுரம் சேட்லூர் ஸுந்தர ராகவாச்சாரியார் ஸ்வாமி M.A., L. T., அக்ராஸனத்தில் சுமார் 50 ஸ்வாமிகள் ஸந்நிதியிலும்.

6. நுங்கம்பாக்கம். ஸ்ரீஸரஸ்வதி கான சபையில் ஸ்ரீ உப. வே. வித்யாரத்ன வேதாந்த கேஸரி V. R. நரஸிம்மாசாரியார் ஸ்வாமி அக்ராஸனத்தில் சுமார் 50 ஸ்வாமிகள் ஸந்நிதியிலும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் பகல் 3 மணி முதல் 5 மணி வரையிலும் ஸ்ரீவேதாந்த மஹா தேசிகன் ஸ்ரீஸூக்திகளின் பெருமையும், அவைகளில் சிலர் எழுதும் குற்றங்கள் இல்லை என்பதும், இதர ஸம்பிரதாயத்திலுள்ள சிறந்த பண்டிதர்கள் அவைகளை புகழ்ந்திருப்பதும் ஷை ஸபையின் காரியதரிசி ஸ்ரீ உப. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாச்சாரியால் உபன்யஸிக்கப்பட்டது.

ஷை ஸபையில் சேர விரும்புவோர்களிடம் மனுபாரத்தில் கையெழுத்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(5)

## ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷண ஸபா, ஸ்ரீரங்கம். ஸ்ரீதேசிகன் ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஸந்நிதியில்

## ஓர் விஜ்ஞாபனம்

ஸ்ரீ தேசிகன் நம்மை உய்யச் செய்ய பல க்ரந்தங்களைச் செய்தருளியிருப்பது யாவரு மறிந்ததே. அவைகளில் சிலர் குற்றமிருப்பதாக நினைத்து க்ரந்தங்களை எழுத, ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்திலுள்ள பண்டிதர்களும் அவைகளுக்குக் கண்டனமாகப் பல க்ரந்தங்களை எழுதி யிருக்கிறார்கள்.

தற்போது சிலர் ஸ்ரீதேசிகஸூக்திகளைத் தூஷித்துச் சில புஸ்தகங்களை வெளியிட்டு வருகிறார்கள். அவைகளுக்கு கண்டனமாக இச் சபையாரால் இதுவரையில் மூன்று க்ரந்தங்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீதேசிகன் திருவடிகளான ஸ்வாமிகள், இந்த க்ரந்தங்களுக்கும், நம்முடைய முன்னோர்களான பண்டிதர்களால் முன் எழுதப்பட்டவைகளும் இனி எழுதப்படுமவைகளுமான இதுபோன்ற க்ரந்தங்களை அச்சிடுவதற்கும் யதோசிதம் த்ரவ்யஸஹாயம் செய்யும்படி ப்ரார்த்திக்கிறோம்.

இந்தக் கைங்கர்யத்தில் அந்வயமுள்ளவர்களுக்கு அச்சிட்ட ஒவ்வொன்றிலும் ஒரு புஸ்தகம் அனுப்பப்படும்.

வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று முதல் சேர்ப்பவர்கள் ஸபையின் அங்கத்தினர்களாகவும், ரூபாய் ஐந்துமுதல்சேர்ப்பவர்கள் போஷகர்களுமாகவும் ஆவார்கள் என்று ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அங்கத்தினர்களாகவோ போஷகர்களாகவோ ஸ்வாமிகள் சேர்ந்து இந்த ஸபையை வ்ருத்தி செய்யும்படி ப்ரார்த்திக்கிறோம்.

ஸபையின் வார்ஷிக மஹாஸங்கம் ஸ்ரீரங்கத்தில் அத்யயந உத்ஸவஸமயத்திலும், விசேஷ மஹா சங்கங்கள் இதர திவ்ய தேசங்களில் ப்ரதான உத்ஸவ காலங்களிலும் கூடும்.

ஏ. வி. கோபாலாசாரியார், M. A., B.L.,
அட்வொகேட்.
அக்ராஸநாதிபதி.

(6)

## ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ராமபிரான் கோயில் திருப்பணி கைங்கர்யம்.

பிரபல திவ்ய க்ஷேத்திரமான திருக்குருகாபுரி (ஆழ்வார் திருநகரி)யின்கண் அணிதலமென ஈடுவே ஸ்ரீராமபிரான் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கிறார். இந்தச் ஸந்நிதி சிறிய வனப்பினால் கண்டவர் கண்ணைக் கவரக்கூடியதாகும். இச் சந்நிதியில் சுவாமி பொலிந்துநின்ற பிரானும் சுவாமி நம்மாழ்வாரும் பிரம்மோத்ஸவந்தோறும் மற்றும் சில விசேஷ ஸமயங்களிலும் மண்டகப்படியின் நிமித்தம் எழுந்தருளுவது வழக்கம். இத்துணை முக்கியத் தன்மைவாய்ந்த இக்கோயிலில் தற்சமயம் ப்ராகாரத் திருப்பணி செய்யவேண்டியதவசியமாயிருக்கிறது. இத்திருப்பணி அரைகுறையாயிருப்பது ஸேவார்த்திகட்கும், இக்கர நித்தியவாசிகட்கும் வருந்தத்தக்கதாயிருக்கிறது. எனவே இதைப் பூர்த்தி செய்யவேண்டியதவசியமான கடமையாகும். ஆகவே ஒவ்வொரு ஆஸ்திகரும் மிகவும் புண்ணியகரமான இத்திருப்பணிக் கைங்கரியத்தில் அந்வயித்து தங்கள் தங்களாலான பொருளுதவி செய்து ஸர்வேச்வரனது பரிபூரண கிருபாகடாக்ஷத்திற்கு பாத்திரராக வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

ஆழ்வார் திருநகரி,
28—2—35

A. D. ராமாநுஜ அய்யங்கார்,
திருப்பணிகைங்கர்ய நிதி தர்மகர்த்தர்,
ஸ்தானிகர், ஸ்ரீராமசுவாமி கோவில்.

---

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

[illegible] நம: ।

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

## ஸம்பாதகரின் குறிப்புகள்

சென்ற ஐம்பது வர்ஷ காலமாக, இந்த விபூதியில், நமது ஸ்ரீவைஷ்ணவ குலத்திற்கு ஓர் திலகம் போல விளங்கி வந்த ஸ்ரீமாந் எஸ். கோபால ஸ்வாமி ஐயங்கார் என்னும் மஹாந், சென்ற மார்கழி மாஸத்தில், ஸ்ரீ ஆண்டாளுடைய ஸேவையை உத்தேசித்து ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் போயிருந்த இடத்தில் தேஹ வியோகத்தை அடைந்தார் என்பதைக் கேட்டு நாம் மிகவும் துக்கிக்கிறோம். இவரை நாம் பஹு காலமாக அறிவோம். அது மாத்ரமின்றி, இவருடன் நெருங்கிப் பழகும்படி

ஸ்ரீமாந் எஸ்.
கோபாலஸ்வாமி
ஐயங்கார்

யும் இவருடைய விசேஷித்த ப்ரீதிக்குப் பாத்ரமாகும்படியும் நாம் ஒரு பாக்யத்தை பெற்றிருந்தோம். அந்தக் காரணத்தால் இவருடைய வியோகம் நமக்கு அதிகமான தாபத்தை ஜநிப்பிக்கின்றது.

இவரை அஸாதாரணமான ஒரு புண்ய புருஷன் என்றே சொல்லலாம். சிறு வயதிலேயே பாஷாந்தரத்தில் ச்லாக்யமான தேர்ச்சியைப் பெற்று, அக்காலத்தில் மிகப்பெரியோர்களாகக் கொண்டாடப்பட்டு வந்த ஸர். வி. பாஷ்யம் ஐயங்கார் முதலானவர்களால் ச்லாகிக்கப்பட்ட மேதையை உடையவராய், பஹு காலம் லௌகிக ச்ரேயஸ்ஸின் ஸம்ருத்தியை எவ்வித குறைவுமின்றி இவர் அநுபவித்து வந்தார். ஆனால் அம்மாதிரியான ச்ரேயஸ் அநேக ஸாமாந்ய ஜநங்களுக்கும் ப்ராப்தமாவது உண்டு. அதுமாத்ரமே ஒருவனுடைய புகழ்ச்சிக்குக் காரணமாகமாட்டாது. அந்த ச்ரேயஸ்ஸுடன் ஆத்மகுணபூர்த்தியும் பகவத் கடாக்ஷத்திற்கு ஸாதநமான வேறு ஸாமக்ரிகளும் ஒருவனிடம் அமைந்திருந்தால் மாத்ரம் அவனைப் பாக்யசாலியென்று புகழ்வது உசிதமாகும். இவரிடம் அவை பூர்ணங்களாக இருந்தபடியாலேயே இவரைப் புண்ய புருஷனென்று நாம் புகழத் துணிந்தோம். அவைகளுட் சிலவற்றையாவது இவ்விடத்தில் உதாஹரிப்பது உசிதமாகும்.

இவரிடம் ஐஹிக ச்ரேயஸ்ஸானது ஸம்ருத்தமாக இருந்த காலத்தில், பரம காருணிகனான பரமசேஷியால் ப்ரேரிதர் போல ஒரு காருணிகோத்தமர் இவருக்கு தேசிகராக நேர்பட்டார். ஸ்ரீ ஆழ்வார் ஸ்வாமி என்னும் ஒரு மஹாந், இவருடைய யோக்யதா விசேஷத்தை சில லக்ஷணங்களாலே அறிந்து, இவரிடம்வந்து வேதாந்த காலக்ஷேப புரஸ்ஸரமாக இவருக்கு ஆத்மஸ்வரூபத்தை உணர்த்தி மேலுள்ள ஹிதத்தையும் தெளிவித்ததுடன், இவருடைய ஸத்குணங்களால் ஆகர்ஷிக்கபபட்ட மநஸ்ஸை உடையவராய் இவருக்குச் சாச்வதமான ச்ரேயஸ்ஸின் ப்ராப்தியையும் ஹார்த்தமாக அநுக்ரஹித்தருளினார். அந்த ஆழ்வார் ஸ்வாமி என்பவர் ஒரு பெரிய ஸாத்விக பாகவதோத்தமர்; நித்ய ஸூரிகளின் அவதாரங்களுள் ஒருவரோ என்று உத்ப்ரேக்ஷிக்கக் கூடிய ஆச்சர்யகரங்களான ஜ்ஞாநத்தையும் கல்யாண குணங்களையும் அமையப்பெற்றவர். அப்படிப்பட்ட மஹாநுடைய கடாக்ஷம் இவருக்கு நேர்ந்தது ஒரு பெரிய ஸுக்ருத விசேஷத்தின் பலமே. இவரிடமும் சிஷ்ய ஸம்பத் பூர்ணமாக இருந்தபடியால் அந்தக் கடாக்ஷம் வீணாகாமல், அது இவருக்கு பகவச்சேஷத்வ ஜ்ஞாநத்தையும் பகவானிடம் அஸாதாரணமான ஒரு பக்தி விசேஷத்தையும் ஜநிப்பித்தது. இவை காலக்ரமேண முதிர்ச்சி பெறவே, இவர் ஸாம்ஸாரிக தாபங்களைப் பெரியவையாகப் பாராட்டாமலே, எம்பெருமானுடைய திருவடிகளையே தஞ்சமாக த்ருடமாய் அவலம்பித்து, அந்த எம்பெருமான் அர்ச்சாமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் இடங்கள் செல்பவராகவே வார்த்தகத்தில் காலத்தைக் கழித்து வந்தார். கடைசி காலத்திலும் உத்தமமான பகவத் க்ஷேத்ரத்திலேயே இவருக்குச் சரீர விச்லேஷம் நேர்ந்தது. அம்மாதிரி விச்லேஷத்தை அநேகர் ப்ரார்த்தித்துப் பெறுவது உண்டு. அப்படிக்கிராமல், இவர், அவன் அருள அதைப் பெற்றார். இதுவன்றோ பாக்யம்? நானூறு மயில் தூரத்துக்கப்பால் இதை மநஸ்ஸால் கூட சிந்தியாமல் இருந்த இவரை, ஸ்ரீ ஆண்டாள், வத்ஸலையான மாதா விளையாட்டில் நோக்கமுள்ள புத்ரனைக் கூப்பிட்டு போகங்களைக் கொடுப்பது போலன்றோ தனது ஸந்நிதிக்கு வரவேற்றி சாச்வத ச்ரேயஸ்ஸை இவருக்கு ஸ்வயமாகவே அளித்தாள்? சரண்ய தம்பதிகளுடைய ப்ரியர்களுக்கின்றி வேறு யாருக்கு இந்த பாக்யம் நேரும்? இப்படிப்பட்ட மஹாநுடன் சேர்த்தியாகிற பெரும்பேற்றை நாமும் திருவருளால் பெற்றோம். இதுவும் ஒரு பாக்யமே.



இந்த மஹாநுக்கு ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் ஒரு விசேஷித்த அபிமாநமுண்டு. இவ்விதம் ஸ்வயூதத்தார்களின் மீது அபிமாநம் செய்வதைச் சிலர் ஒரு தோஷமாக நினைப்பார்கள். அந்யர்களிடத்தில் த்வேஷத்தைப் பாராட்டித் தம்மவர்களிடம் ப்ரீதி செய்தால் அது தோஷமாகும் என்பது உண்மையே. எல்லாரிடமும் ப்ரீதியைச் செய்து கொண்டே சிலரிடம் அவர்களுடைய குணவிசேஷங்களைப் பார்த்து அதிக ப்ரீதி செய்வது எவ்விதத்தில் தோஷமாகும்? நிற்க, ஒருவனிடம் உண்மையான ப்ரீதியைச் செய்யும் ஒருவனுக்கு, அவனுடைய பரிஜநங்களையும் அன்புடன் பாராட்டாமல் இருப்பது ஸாத்யமோ? எவனிடம் ப்ரீதி செய்கிறோமோ, அவனைச் சேர்ந்தவர்கள் வரையில் அந்த ப்ரீதி ப்ரவஹிக்குமன்றோ, அம்மாதிரியான ஒரு ப்ரீதி விசேஷத்தால், விஷ்ணு பக்தரான இவர் அநேக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸமாஜங்களுக்கும் த்ரவ்யத்தாலும் வாக்காலும் சரீரத்தாலும் பல பேருதவிகளைச் செய்து வந்தார். இந்தத் தீபிகைக்கு இவர் செய்திருக்கும் பரமோபகாரங்கள் ஒருகாலும் மறக்கக்கூடாதவை.

இப்படிப்பட்ட ஸாது ச்ரேஷ்டர்கள் ஒருவர் பின் ஒருவராக இந்த விபூதியிலிருந்து மறைந்து விடுகிறார்களே என்று நாம் மிகவும் சோகிக்கின்றோம்.

ஸாயுஜ்யமணிம்ஹௌவெ ஸவடுத்ர தஸ்மா வ்ருதெ ।
மதஸ்ரீகஸ்ய ஶொகஸ்ய ஶ்ரேயஸ்ஸம்ஹவ: க்ஷய: ॥

**மாம்பலம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை**

முன் ஒரு ஸஞ்சிகையில், மாம்பலத்தில் ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்று நாம் விண்ணப்பம் செய்துகொண்டிருந்தோம். சென்ற மாஸத்தில் அதன் ப்ரதம ப்ரவ்ருத்தியாக ஒரு ஸபை நடைபெற்றது. அப்பொழுது ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி அந்த ஸங்கத்திற்கு அத்யக்ஷராக எழுந்தருளி இருந்தார். அநேகஆஸ்திகர்களின் முன்னிலையில் "வைஷ்ணவ தர்மம்" என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு உபந்யாஸமும் நடைபெற்றது. அந்த உபந்யாஸத்தில், த்ருடமான பக்தி வரையிலும் ப்ரவஹித்து ப்ரீதிகாரிதமான கைங்கர்யத்தில் விச்ரமிக்கும் பகவச்சேஷத்வ ஜ்ஞாநமே ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸ்வரூபத்தை நிரூபித்துக்காட்டும் தர்மமாகுமென்றும், ஸ்ரீ வைஷ்ணவர்கள் ப்ரபத்தி வித்யையை மோக்ஷ ஸாதநமாகக் கைப்பற்றினவர்களாயினும் பக்திக்கு ஸாதநங்களாகச் சொல்லப் பட்டுள்ள விவேகம் முதலிய ஏழுவித ஸாமக்ரிகளையும் அவர்கள் பெறுவதற்கு அவசியம் முயலவேண்டுமென்றும், பகவானுடைய திருவடிகளைச் சரணமாக அடைந்து அதனால் இந்த ஜந்மத்தின் முடிவிலேயே மோக்ஷ புருஷார்த்தத்தைப் பெறுவதில் அவர்கள் நிச்சய புத்தி உள்ளவர்களே ஆயினும் இந்தத் தேஹம் இருக்கும் வரையில் ச்ருதி ஸ்ம்ருதிகளிற் சொல்லப்பட்டுள்ள வர்ணாச்ரம தர்மங்களெல்லாவற்றையும் தவறாமல் அவர்கள் அநுஷ்டித்து வரவேண்டியது அவசியமென்றும் இன்னும் இம்மாதிரி பல விஷயங்கள் விவரிக்கப்பட்டன. 'எல்லாம் பகவானுக்குச் சேஷபூதம்' என்னும் நிஷ்க்ருஷ்டமான ஜ்ஞாநமே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸ்வரூப நிரூபக தர்மமாகும் என்று நிரூபித்ததிலிருந்து ஆத்ம குணங்களும் அவர்களுக்கு அவசியம் அபேக்ஷிதங்கள் என்பது ஸித்திக்கின்றதாகையால் அவர்கள் ஆத்ம குணங்களை அநாதரிக்கமாட்டார்கள் என்பதும், அப்படி ஆத்ம குணங்கள் அவர்களிடம் பூர்ணமாக இருத்தல் வேண்டுமாதலால் அவர்கள் ஒருவரையும் த்வேஷிக்கமாட்டார்கள் என்பதும் நிரூபிக்கப்பட்டன. ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக, ஸித்தாந்த ப்ரயுக்தமாக நமக்குள் இக்காலத்தில் காணப்படும் மாத்ஸர்யம் முதலியவையெல்லாம் உண்மையான ஸ்ரீ வைஷ்ணவத்வத்திற்கு அத்யந்தம் விருத்தங்கள் என்பதும், வெவ்வேறு வேத சாகைகளை அவலம்பித்துள்ள வைதிகர்கள் எவ்விதம் பரஸ்பரம் த்வேஷத்தைப் பாராட்டாமல் இருக்கிறார்களோ அம்மாதிரியே வெவ்வேறு ஆசார்யர்களுடைய ஸித்தாந்தத்தை அநுஸரித்து நடக்கும் வைதிகர்களும் பரஸ்பரம் த்வேஷியாமல் தம் தம் குலக்ரமாகதமான ஸித்தாந்



தத்தை அநுஸரித்துக்கொண்டே, பிந்ந அபிப்ராயங்களால் பேதித்திருக்கும் மற்றவர்களுடைய கொள்கைகளையும் அநுஷ்டாநங்களையும் ஸஹ்யங்களாகவே பாவித்து வரவேண்டும் என்பதே ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் கருத்து என்பதும் விஸ்தாரமாக உபபாதிக்கப்பட்டன.

இப்பொழுது அந்த ஸ்ரீ. வை. ஸி. ஸபையார், ஸ்ரீமத் ராமாயண கதையை, ஸ்ரீரங்கம் ஸ்ரீமாந் சடகோபாசார்ய பாகவத ஸ்வாமியைக் கொண்டு வாரம் இருமுறை உபந்யாஸ ரூபமாக விவரிப்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது வரையில் இரண்டு மூன்று உபந்யாஸங்கள் நடை பெற்றன. "ஸாஶ்ருவெ ஜயாஶ்ரு" என்னும்படியான அந்த ராமாயண கதையை ஸ்ரீ சடகோபாசார்ய ஸ்வாமி அம்ருத வர்ஷம்போல எல்லாருக்கும் அதிமாத்ரம் ரஞ்ஜகமாக வர்ஷித்து வருகிறார். கணக்கற்ற ஜநங்கள் அதைக் கேட்டு ஆநந்தித்து வருகிறார்கள். ஸ்ரீ வைஷ்ணவ ஸபையார் செய்யும் இந்த உபகாரம் மிகப் பெரியதான உபகாரமே. இதுபோல வேறு பல இடங்களிலும் பல ஸபைகள் ஏற்பட்டு பகவத் கதா ப்ரசாரங்கள் நடைபெற்று அதனால் ஜநங்கள் எல்லாரும் க்ருதார்த்தராகும்படி பகவான் அநுக்ரஹிக்க வேண்டும் என்பதே நம்முடைய ப்ரார்த்தனை.

சுவாஸ்ய ஶஷோநிகூதிம் ஶுதீநா
ஜொகஸ்ய மாஶதம் விஷயெ ஶுஶா யஃ।
தஷொத ஹஜ்ரணி ஷயாவயொயிஃ
ஸ ஷெந ஶுவஷஶமெஷ ஶவஷீஶவஸிஹுஃ॥

* * * *

**மடங்களைப் பற்றிய சட்டம்.**

சென்ற ஸஞ்சிகையில், தேவஸ்தாந சட்டத்தின் மாறுதல்களைப்பற்றி ப்ரஸ்தாவித்து வருகையில், இம்மாதிரி விஷயங்களில் ராஜாங்கத்தார் ஸ்வயமே யாஜமாந்யத்தை வஹிக்க ப்ரவர்த்திப்பது ந்யாய விருத்தமென்றும், ஜநங்களைக் கொண்டே ஸமூஹ விஷயங்களையெல்லாம் நடைபெறுவிப்பதே உத்தமமான தர்மமாகுமென்றும் நாம் எழுதி இருந்தோம். அந்த் தர்மத்திற்கு விருத்தமாக, சட்டஸபையால் ப்ரேரிதராகளாய் ராஜாங்கத்தார் ஸ்வல்ப காலமாய் பல விஷயங்களில் ப்ரவ்ருத்தியைச் செய்து வருகிறார்கள் என்பதை எல்லாரும் கவனித்திருக்கலாம். பொதுவாகப் பல சிறிய தேவஸ்தாநங்களும், விசேஷித்துத் திருப்பதி போன்ற ப்ரபல தேவ

ஸ்தாநங்களும் எவ்விதம் ராஜாங்கத்தாருடைய பராமர்சத்திற்குள் கொண்டுவைப்பட்டிருக்கின்றனவென்பதும் அவை அவர்களால் எப்படி பரிபாலிக்கப்பட்டு வருகின்றனவென்பதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயங்கள். இவை போதாவென்று போல, இப்பொழுது மடங்களிலும் ப்ரவேசத்தை ஸம்பாதித்துக் கொள்வதற்காகச் சட்டமொன்றை ஏற்படுத்த சட்டஸபையார் ப்ரயத்நப்படுகிறார்கள். இது மிக்க அதர்மமாவதுடன், உத்கடமான பாபமாகவும் பரிணமிக்கும் என்பதை நாம் வணக்கத்துடன் விஜ்ஞாபித்துக்கொள்ளத் துணிகின்றோம்.

மடத்தின் சொத்துக்களெல்லாம், அந்தந்தக் காலங்களில் ஆஸ்தாநங்களை வஹித்து வந்த மடாதிபதிகளான ஆசார்யர்களுக்கு அவரவர்களுடைய சிஷ்யர்களால் பாத காணிக்கையாகக் கொடுக்கப்பட்ட த்ரவ்யத்தால் ஏற்பட்டவை. ஆகையால், அந்தச் சொத்துக்களை விநியோகிக்கும் அதிகாரம் அந்த ஆசார்ய பரம்பரையைச் சேர்ந்ததே. அப்படி அவை வ்யக்தி விசேஷத்திற்குச் சொந்தமானதால் அதை அந்த வ்யக்திகளிடமிருந்து எவர்கள் அபஹரிக்க ப்ரயத்நப்பட்ட போதிலும், அவர்களெல்லாரும் பரஸ்வாபஹாரமே செய்தவர்கள் ஆவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. அவைகளின் விநியோகத்தில் அந்த ஆசார்யர்கள் சிற்சில நிபந்தநங்களுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டியது என்று சாஸ்த்ரங்கள் ஒரு நியமத்தை விதித்த போதிலும், அந்த நியமம் அந்தச் சொத்துக்களைப் பற்றி அவர்களுக்குள்ள ஸ்வாம்யத்தை அவர்களிடமிருந்து கொஞ்சம்கூட அபஹரிக்க மாட்டாது. அந்தச் சொத்துக்கள் சிஷ்ய வர்க்கத்தாராகிற மஹாஜநங்களுக்குச் சொந்தமானவையென்றும் அந்த ஆசார்யர்கள் அவைகளைப் பற்ற கேவலம் தர்ம கர்த்தாக்கள் மாத்ரமே என்றும் சொல்வது அஜ்ஞர்களின் வார்த்தை. ஆனால் இக்காலத்தில் தர்மா தர்ம விசாரத்தை யார் செவி கொடுத்துக் கேட்கப் போகிறார்கள்? பலிஷ்டர்கள் தமது பலத்தை ஆதாரமாகக் கொண்டு அதர்மத்தில் ப்ரவர்த்தித்தால், துர்பலர்கள் அதை அநுபவிக்க வேண்டுமே தவிர அவர்களால் அதற்கு ப்ரதீகாரமாகச் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. அகிஞ்சநர்களுக்கு அகிஞ்சந சரண்யனே கதி.

---



தத்ரைவ.—

யஃ கரோத்யூர்த்வபுண்ட்ரம் து ஸந்த்யாவந்தந கர்மஸு ।
தேநாஹம் ஸர்வதோ ப்ரஹ்மந் ஸுலபோ ஹ்யேகஜந்மநி ॥

தத்ரைவ.—

மதாராதந காலே ச ஸதா யஜ்ஞாதி கர்மணி ।
அவஶ்யம் தாரயேதூர்த்வபுண்ட்ரம் த்விஜோத்தமஃ ॥

தத்ரைவாந்யத்ர.—

பாஷண்டஸ்பர்ஶஸம்பாஷணவதோऽபி யஃ । [ப்ராஹ்மண
ஸோऽபி பாபைர் விமுச்யேத ஹ்யூர்த்வபுண்ட்ரஸ்ய தாரணாத் ॥
ப்ரஹ்மசாரீ க்ருஹஸ்தோ வா வாநப்ரஸ்தோऽதவா யதிஃ ।
அவஶ்யம் தாரயேந் மாங்கல்யமூர்த்வபுண்ட்ரம் ஸபாவநம் ॥

---

அதே க்ரந்தத்தில் (ஓ ப்ராஹ்மணனே) எந்த மனிதன் ஸந்த்யாவந்தநம் முதலிய கார்யங்களைச் செய்யும்பொழுது ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்கொள்ளுகிறானோ, அந்த மனிதனால் ஓரே ஜன்மத்தில் நான் ச்ரமமில்லாமல் அடையப்படுகிறேன். (என்று பகவானுடைய வாக்யம்)

அதே க்ரந்தத்தில் ப்ராஹ்மண ச்ரேஷ்டனானவன் என்னுடைய ஆராதந காலத்திலும் யாகம் முதலிய கர்மங்களைச் செய்யும் காலத்திலும் எப்பொழுதும் இந்த ஊர்த்வபுண்ட்ரத்தை அவச்யம் தரித்துக்கொள்ளவேண்டும்.

அதே க்ரந்தத்தில் மற்றொரு இடத்திலும்:—

ஓ ப்ராஹ்மணனே! எந்த மனிதன் பாஷண்டர்களைப் பார்ப்பது, தொடுவது, பேசுவது முதலிய ஸம்ஸர்க்கத்தையே செய்துகொண்டிருக்கிறானோ அவனும்கூட (அந்த பாப கார்யங்களைச் செய்கிறவனும்கூட) ஊர்த்வ புண்ட்ரத்தை தரிப்பதினால் ஷை பாபங்களினால் விடப்பட்டவனாய் பரிசுத்தனாக ஆகிறான்.

ப்ரஹ்மசாரி, க்ரஹஸ்தன், வாநப்ரஸ்தன், ஸந்யாஸி இந்த 4 ஆச்ரமத்தையுடையவர்களும் மிகவும் மங்களத்தைக் கொடுப்பதாயும், பரிசுத்தத்தைக் கொடுப்பதுமான ஊர்த்வபுண்ட்ரத்தை தரிக்கவேண்டியது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அதே க்ரந்தத்தில் மற்றொரு இடத்தில்:—

ஊர்த்வபுண்ட்ரங்களை தரிப்பதற்கு ப்ரமாணங்களையும், ஊர்த்வபுண்ட்ரங்களை தரிக்க உபயோகப்படுத்தவேண்டிய த்ரவ்யங்களையும், இத்தனை அங்குலம் நீளம், அகலம், தரிக்கவேண்டியதென்பதையும் வெளுப்பு, சிகப்பு, கறுப்பு முதலிய வர்ணங்களையும் அதற்கு வேண்டிய மந்திரத்தின் பேதங்களையும் பயன்களையும் சொல்லுகிறேன் என்று தொடங்கி மலையின் மேல் புறத்திலும், நதியினுடைய கரையிலும் விஷ்ணுவினுடைய க்ஷேத்திரத்திலும், ஸமுத்திரத்தின் கரையிலும், கரையான் புற்றிலும், துளஸியின் அடியிலும், இருக்கும் மண்களை ஊர்த்வபுண்ட்ரத்திற்காக எடுத்துக்கொள்ளலாம். மற்றை இடத்திலிருக்கும் மண்களை எடுத்துக் கொள்ளக் கூடாது.

கறுப்பு நிறமுள்ள மண்ணானது தோஷங்களைப் போக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சிகப்பு நிறமுள்ள மண்ணானது ஸ்வாதீனமல்லாதவர்களை ஸ்வாதீனமாக்கிக் கொடுக்கும். மஞ்சள் நிறமுள்ள மண்ணானது ஐச்வர்யத்தைக் கொடுக்கும் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

வெளுப்பு நிறமுள்ள மண்ணானது மோக்ஷத்தைக் கொடுக்குமென்று சொல்லப்படுகிறது, அதாவது—அந்த நிறமுள்ள மண்ணினால் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிப்பவனுக்கு இங்கு சொல்லப்படும் பலன்கள் உண்டாகுமென்றபடி.

இன்ன விரலினால் புண்ட்ரத்தைத் தரிக்கவேண்டுமென்பது—கட்டைவிரலானது புஷ்டியைக் கொடுக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது, நடு



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

விரல் ஆயுஸ்ஸை கொடுப்பதாக ஆகும். பவித்ரவிரலானது இஷ்டங்களைக் கொடுக்கும். ஆள்க்காட்டி விரலானது மோக்ஷத்தைக் கொடுக்கிறது. அதாவது - அந்தந்த விரல்களினால் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிப்பவனுக்கு இங்கு சொல்லப்பட்ட அந்தந்த பலன்கள் உண்டாகுமென்று தாத்பர்யம். இப்படி அந்தந்த அங்குளிகளினால் ஊர்த்வபுண்ட்ரங்களைத் தரித்துக் கொள்ளவேண்டியது. நகங்களினால் புண்ட்ரங்களை தொட்டாவது ஒழுங்காக இருப்பதற்காக புண்ட்ரங்களை நகங்களினால் கீரகூடாதென்றபடி.

விஷ்ணுவினுடைய பாதத்திற்கு ஸமானமாகவாவது மூங்கில் இலைக்கு ஸமானமாகவாவது, தாமரை மொட்டுக்கு ஸமானமாகவாவது, அப்படியே ஆம்பல் மொட்டுக்கு ஸமானமாகவாவது, மத்ஸ்யம், ஆமை இவைகளைப் போலவாவது சங்கைப்போலவாவது ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்துக் கொள்ளவேண்டியது.

10-அங்குலம் நீளமாக ஊர்த்வபுண்ட்ரத்தை தரிப்பது உத்தமோத்தமம் எனப்படும். 9 அங்குலம் நீளமாக தரிப்பது உத்தம மத்யமமெனப்படும். 8 அங்குலம் நீளமாகத் தரிப்பது உத்தமத்தில் அதமமென்றும் சொல்லப்படுகிறது.

7 அங்குலம் நீளமாகத் தரிப்பது மத்யமத்தில் உத்தமமென்றும், 6 அங்குலம் நீளமாக தரிப்பது மத்யம மத்யமமென்றும், 5 அங்குலம் நீளமாகத் தரிப்பது மத்யமத்தில் அதமமென்றும் சொல்லப்படுகிறது.

4 அங்குலம் நீளமாக தரிப்பது அதமத்தில் உத்தமமென்றும், 3 அங்குலம் நீளமாகத் தரிப்பது அதமத்தில் மத்யமமென்றும், 2 அங்குலம் நீளமாகத் தரிப்பது அதமத்தில் அதமமென்றும் சொல்லப்படுகிறது.

ஊர்த்வபுண்ட்ரஸ்ய மாஹாத்ம்யம் வக்ஷ்யாமி ஶ்ருணு ஶோபநே |
தாரணாதேவ முச்யேத ஸம்ஸாராத் த்விஜஸத்தம: ||

ஸ ஸ்நாத: ஸர்வதீர்த்தேஷு ஸர்வயஜ்ஞேஷு தீக்ஷித: |
யோ தாரயேத் ஊர்த்வபுண்ட்ரம் து ம்ருதா ஶுப்ரேண வைஷ்ணவ: ||

ஊர்த்வபுண்ட்ரதரோ விப்ர: ஸர்வலோகேஷு பூஜித: |
ஸ விமானம் ஸமாருஹ்ய யாதி விஷ்ணோ: பரம் பதம் ||

ஊர்த்வபுண்ட்ரதரம் விப்ரம் த்ருஷ்ட்வா பாபை: ப்ரமுச்யதே |
நமஸ்க்ருத்ய ததா பக்த்யா ஸர்வதானபலம் லபேத் ||

ஊர்த்வபுண்ட்ரதரம் விப்ரம் ய: ஶ்ராத்தே போஜயிஷ்யதி |
ஆகல்பகோடி பிதரஸ் தஸ்ய த்ருப்தா ந ஸம்ஶய: |

---

ஓ! சுபமான அழகை உடையவளே, ஊர்த்வபுண்ட்ரத்தினுடைய மஹிமையைச் சொல்லுகிறேன் ப்ராஹ்மண ச்ரேஷ்டனானவன் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்ததினாலேயே ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடப்படுகிறான்.

எந்த வைஷ்ணவன் வெளுப்பான மண்ணினால் ஊர்த்வபுண்ட்ரத்தை தரிக்கிறானோ அவன் எல்லா புண்யதீர்த்தங்களிலும் ஸ்நாநம் பண்ணினவனாக ஆகிறான். (அதாவது எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நாநம் பண்ணினதினால் உண்டாகக்கூடிய புண்ய பலத்தை அடைகிறான்) அவன் எல்லா யாகங்களிலும் தீக்ஷைபண்ணப்பட்டவனாகிறான். (எல்லா யாகங்களையும் செய்த பயனை அடைகிறான்) அவன் பிறகு விமானத்தில் ஏறிக்கொண்டு விஷ்ணுவினுடைய உயர்ந்த ஸ்தானத்தை அடைகிறான்.

எவன் ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்த ப்ராஹ்மணனை பக்தியோடு பார்க்கிறானோ அவன் அப்படி பார்த்தமாத்திரத்தினால் ஸர்வபாபங்களினால் விடப்படுகிறான். பிறகு பக்தியோடு நமஸ்கரித்தால் எல்லா தானங்களையும் கொடுத்ததின் பயனை அடைகிறான்.

எந்த மனிதன் ச்ராத்தத்தில் ஊர்த்வபுண்ட்ரங்களைத் தரித்த ப்ராஹ்மணனை சாப்பிடும்படி செய்கிறானோ அவனுடைய பித்ருக்கள் கல்பகோடி காலம் த்ருப்தி யடைகிறார்கள் இதில் ஸம்சயமில்லை.



ஊர்த்வபுண்ட்ரதரோ யஸ்து குர்யாச் ச்ராத்தம் ஸமாஹித: |
கல்பகோடி ஸஹஸ்ராணி கயாஶ்ராத்தபலம் லபேத் ||

தத்ரைவான்யத்ர:—

மத்ப்ரியார்த்தம் மங்களார்த்தம் ரக்ஷார்த்தம் சதுரானன |
மத்பக்தோ தாரயேந்நித்யமூர்த்வபுண்ட்ரமதந்த்ரித: ||

தத்ரைவ:—

விமலாந்யூர்த்வபுண்ட்ராணி ஸாந்தராளாநி யோ நர: |
கரோதி விமலம் தஸ்ய மந்திரம் தத்ர கரோம்யஹம் ||

ஊர்த்வபுண்ட்ரஸ்ய மத்யே து விஶாலே ஸுமனோஹரே |
லக்ஷ்ம்யா ஸார்த்தம் ஸமாஸீனோ ரமேऽஹம் தத்ர நித்யஶ: ||

---

எந்த மனிதன் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்துக்கொண்டு ச்ராத்தத்தை பண்ணுகிறானோ அவன் ஆயிரம் கோடி கல்பகாலத்தில், கயையில் ச்ராத்தம் பண்ணின பலத்தை அடைகிறான்.

அதே க்ரந்தத்தில், மற்றொரு இடத்தில்—"ஓ நான்கு முகத்தையுடைய ப்ராஹ்மாவே! என்னுடைய பக்தனானவன், சோம்பலில்லாதவனாக என்னுடைய ப்ரீதிக்காகவும், மங்களத்திற்காகவும், தன்னுடைய ரக்ஷணத்திற்காகவும், எப்பொழுதும் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிக்கவேண்டியது" என்றும்,

அதே—க்ரந்தத்தில், "எந்த மனிதனானவன், விமலங்களான ஊர்த்வபுண்ரங்களை நடுவில் இடைவெளி யுள்ளவைகளாக தரிக்கிறானோ அவன் அந்த இடத்தில் எனக்கு விமலமான ஆலயத்தை உண்டுபண்ணுகிறான்" என்றும்,

விசாலமாயும் அதிக மனோஹரமுமான ஊர்த்வபுண்ட்ரத்தினுடைய நடுவில் நான் அவ்விடத்தில் லக்ஷ்மியோடுகூட உட்கார்ந்துகொண்டு சுகத்தை உடையவனாக விளையாடிக்கொண்டிருக்கிறேன்" என்றும் பகவானுடைய வாக்யமிருக்கிறது.

𑌶𑌾𑌕𑌲𑍍𑌯𑍇:—

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌮𑍃𑌦𑌾 𑌧𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌣 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌾 ।
'𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌸𑍀'𑌤𑌿 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍇𑌨 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥ 𑌇𑌤𑌿 ॥

𑌨𑌾𑌰𑌦𑍀𑌯𑍇:—

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌗𑌤𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌯𑌸𑍍𑌯𑍇𑌷𑍍𑌟𑌂 𑌤𑌸𑍍𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌦𑍈𑌵𑌤𑍍𑌵𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌨𑌯𑌤𑌿 𑌯𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌃 𑌪𑌾𑌪𑌕𑌾𑌰𑌿𑌣𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌮𑌿𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌵𑍇𑌦𑌿𑌭𑌿𑌃 ॥ 𑌇𑌤𑌿 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑌾𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑍍𑌯𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌮𑍍:—

𑌶𑍍𑌵𑍇𑌤𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌯𑌾 𑌵𑌾𑌪𑌿 𑌶𑍍𑌯𑌾𑌮𑌯𑌾 𑌪𑍀𑌤𑌯𑌾𑌪𑌿 𑌵𑌾 ।
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍈𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍈𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।

---

மார்க்கண்டேய ஸ்ம்ருதியில்:—

ப்ரஹ்மத்தை அறிந்தவனை, பிராஹ்மணனால் "உத்ருதாஸி" என்கிற மந்திரத்தைச் சொல்லி மண்ணினால் ஊர்த்வபுண்ட்ரமானது தரிக்கப்படவேண்டியது. அதிலும் வைஷ்ணவனால் அவச்யமாக தரிக்கப்படவேண்டியது.

நாரதீயத்தில்:—"எவனுக்கு உயர்ந்த ஜன்மத்தை அடைவதில் இஷ்டமிருக்கிறதோ, அவன் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிக்கவேண்டியது" என்று சாஸ்த்ரத்தில் சொல்லப்படுகிறது. அப்படி ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்தவன் தேவஜாதியில் பிறக்கிறான். அதில் ஸம்சயமில்லை.

எந்த புண்ட்ரமானது பாபத்தைச் செய்கிற ப்ராணிகளையும்கூட உயர்ந்த லோகத்தை அடையும்படி செய்கிறதோ, அந்த புண்ட்ரத்துக்கு ஊர்த்வபுண்ட்ரமென்று பெயர். ஆகையினால் ப்ராஹ்மணன் அதை தரித்துக் கொள்ளவேண்டியது.

பாஞ்சராத்திரத்தில் பாரமேஷ்ட்ய ஸம்ஹிதையில்—வெளுப்பான மண்ணினாலாவது கறுப்பான மண்ணினாலாவது மஞ்சளான மண்ணினாலாவது



𑌤𑌤𑍍𑌰𑍈𑌵:—

𑌧𑍃𑌤𑍍𑌵𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌾 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑍍 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 ।
𑌨𑌮𑍋𑌨𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌞𑍍𑌜𑌲𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌨𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑍇:—

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌧𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑍁𑌲𑌾𑌕𑌾𑌰𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑍈𑌵 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌕𑌮𑍍 ॥

𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑍍𑌰𑍀𑌡𑌯𑌾𑌪𑌿 𑌨 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌤𑌸𑍍𑌸𑌮𑍍𑌯𑌗𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ॥

---

ஊர்த்வபுண்ட்ரமானது; த்விஜர்களால் தரிக்கப்படவேண்டியது. அவர்களுக்குள்ளும் வைஷ்ணவர்களால் முக்கியமாக தரிக்கப்படவேண்டியது.

அதே க்ரந்தத்திலேயே:—

சாஸ்திரப்படி ஊர்த்வபுண்ட்ரங்களை தரித்துக்கொண்டு யாதொரு பகவானுடைய கேசவாதிகளான 12 திருநாமங்களையும் நமஃ என்பதை கடைசியில் உடையவைகளாக (கேசவாய நமஃ என்று) வரிசையாகச் சொல்லிப் பிறகு அதே திருநாமங்களைச் சொல்லி அஞ்சலியைப் பண்ணவேண்டியது.

ப்ரஹ்மாண்டம் என்கிற க்ரந்தத்தில்:—

ப்ராஹ்மணன் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிக்கவேண்டியது. க்ஷத்ரியனுக்கு அர்த்தசந்திரன்போலவும் வைச்யனுக்கு வர்துளாகாரமாகவும் சூத்ரனுக்குத்தான் த்ரிபுண்ட்ரமும் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சாஸ்திரமறிந்த ப்ராஹ்மணன், த்ரிபுண்ட்ரத்தை (குறுக்காக இட்டுக் கொள்வதை) விளையாட்டுக்காகவாவது தரித்துக்கொள்ளக்கூடாது. பரிசுத்தனாக இருந்துகொண்டு ப்ரயத்னப்பட்டாவது நன்றாக ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிக்கவேண்டியது.

தத்ரைவ:—

பூஜாகாலே ச ஹோமே ச ஸாயம் ப்ராதஸ்ஸமாஹித: ।
ஸாவித்ர்யா ஜபகாலே ச வேதாத்யயநகாலே ச ॥

யாநே ச போஜநே சைவ ஶயநே ச விஶேஷத: ।
மந்த்ரீ ஶ்ரத்தாய விதிநா தாரயேதூர்த்வபுண்ட்ரகாந் ॥

ரக்ஷார்த்தம் வம்ஶவ்ருத்த்யர்த்தம் மங்களார்த்தம் ச பத்மஜ ।
உக்தாபிரங்குலிபி: புண்ட்ரம் தாரயேத் ஸ நரோ பவேதகல்மஷ: ॥

பாராஶர்யஸம்ஹிதாயாம்:—

நிரூர்த்வபுண்ட்ரோ ந பவேத் கதாசிதபி ஸத்விஜ: ।
வைஷ்ணவஶ்ச விஶேஷேண ஸர்வகர்மாணி ஸாதயேத் ।

---

அதே க்ரந்தத்தில், ஸாயங்காலம் ப்ராத:காலங்களில் காயத்ரியை ஜபிக்கும் காலத்திலும் ஹோமம் பண்ணும் காலத்திலும், பூஜாகாலத்திலும் வேதாத்யயனம் பண்ணும் காலத்திலும், நடக்கும் காலத்திலும் சாப்பிடும் காலத்திலும், படுத்துறங்கும் காலத்திலும், சாஸ்திரப்படி மந்திரங்களைச் சொல்லி விசேஷமான பக்தியோடுகூட ஊர்த்வபுண்ட்ரங்களை தரிக்க வேண்டியது.

"ஓ தாமரைப்பூவில் பிறந்தவனான ப்ரஹ்மாவே! எந்த மனிதன் தன்னை ரக்ஷித்துக்கொள்வதற்காகவும், தனது வம்சம் வ்ருத்தியடைவதற்காகவும், மங்களத்தை அடைவதற்காகவும், கீழே குறிப்பிட்ட விரல்களினால் புண்ட்ரத்தை தரிக்கிறானோ அவன் பாபமில்லாதவனாகிறான்.

பாராசர்ய ஸம்ஹிதை என்னும் க்ரந்தத்தில்:

ப்ராஹ்மணனானவன் ஊர்த்வபுண்ட்ரமில்லாதவனாக ஒருகாலத்திலும் இருக்கக்கூடாது. அதிலும் வைஷ்ணவனாக இருந்தால் முக்கியமாக ஊர்த்வபுண்ட்ரமில்லாமல் ஒருபொழுதும் இருக்கக்கூடாது. ஊர்த்வபுண்ட்ரத்துடன் இருப்பவன்தான் ஸர்வகர்மங்களையும் அனுஷ்டிப்பதற்கு யோக்யனாகிறான்.



யத்ப்ரஹ்மருத்ரபுருஹூதமுகைர்துராபம்
நித்யம் நிவ்ருத்திநிரதைஸ்ஸநகாதிபிஶ்ச ।
ஸாயுஜ்யமுஜ்ஜ்வலமுஶந்தி யதாபரோக்ஷ்யம்
யஸ்மாத்ப்ருஶம் ந மஹிதம் பதமஸ்தி கிஞ்சித் ॥ ௪௨

42. இச்ச்லோகத்தில் நித்ய விபூதியின் பெருமைகளுள் சிலவற்றைச் சொன்னார். அது சுத்த தேஜோமயமென்றும், ஆகையால் ஸ்வயம் ப்ரகாசமென்றும், சுத்த ஸத்வமென்னும் ஒரு த்ரவ்ய விசேஷத்தால் ஏற்பட்டிருக்கின்றதென்றும், ஆகையால் அது இப்படிப்பட்டதென்று வர்ணிப்பதற்கு அநர்ஹமென்றும், கேவலம் ஆச்சர்யகரம் அதிஸுந்தரமென்று மாத்ரம் சொல்லலாம்படி அவ்வளவு விலக்ஷணமாக இருக்கின்றதென்றும் சொல்லப்பட்டது. இப்பொழுது, அது முக்தர்களால் மாத்ரம் அடையக்கூடியதே தவிர மற்றை ஒருவரும் அதை எட்டினவராகமாட்டாரென்று சொல்லப்படுகின்றது.

[ப - ரை] யத் - எந்த ஸ்தானமானது, ப்ரஹ்மருத்ரபுருஹூதமுகை: - ப்ரஹ்மா ருத்ரன் இந்த்ரன் இவர் முதலானவர்களால் கூட, துராபம் - அடையத்தகாததோ; யத் - எது, நித்யநிவ்ருத்திநிரதை: - எப்பொழுதும் நிவ்ருத்தி தர்மங்களையே அநுஷ்டித்து வரும், ஸநகாதிபிஶ்ச - ஸநகர் முதலானவர்களாலும், [துராபம் - அடையத் தகாததோ]; யதாபரோக்ஷ்யம் - எதனுடைய ஸாக்ஷாத்காரத்தை, உஜ்ஜ்வலம் - பரிபூர்ணமான, ஸாயுஜ்யம் - ஸாயுஜ்யமென்று, உஶந்தி - [பெரியோர்கள்] சொல்லுகிறார்களோ, யஸ்மாத் - எதைக்காட்டிலும், ப்ருஶம் - அதிகமாக, மஹிதம் - பூஜிக்கப்படும், கிஞ்சித்பதம் - ஒரு ஸ்தானமும், நாஸ்தி - இல்லையோ".

ப்ரஹ்மருத்ரபுருஹூதமுகை: - ப்ரஹ்மா ஜகத ஸ்ருஷ்டியைச் செய்கிறவர்; ருத்ரன ஸம்ஹாரத்தைச் செய்கிறவர்; இந்த்ரன் மூன்று லோகங்களுக்கும் அதிபதி. இவர்கள், இம்மாதிரியான பெரிய அதிகாரிகளாக இருக்கையிலும், காம பந்தத்திற்கு உட்பட்டவர்களானதால், தமஸ்ஸுக்கு அப்புறமிருக்கும் ஸ்ரீ வைகுண்டத்தை அடைந்தவர்களல்லர்.

நிவ்ருத்திநிரதைஸ்ஸநகாதிபிஶ்ச - ஸநகர் முதலான மஹான்கள் எப்பொழுதும் ப்ரஹ்ம பாவனையைச் செய்பவர்கள். அவர்களும் அந்த ஸ்ரீ வைகுண்டத்தை அடைந்தவர்களல்லர். தர்மம், ப்ரவ்ருத்தி லக்ஷணமென்றும் நிவ்ருத்தி லக்ஷணமென்றும் இருவகைப்படும். தம் தம் தர்மங்களை எவர்கள் எவ்வித பலாபிஸந்தியு

ஜ்ஞாநாதயோ குணகணா: ஸமதீதஸீமா
லக்ஷ்மீ: ப்ரியா பரிஜநா: பதமேதது₃ர்த்₄வம் ॥ ௪௬

ஏகஸ்ய யேஷு ஹி குணஸ்ய லவாயுதாம்ஶ:
ஸ்யாத் கஸ்யசித் ஸ ஹி வாங்மநஸாதிகஶ்ரீ: ।

நிர்...ஸீமா:— லோகத்தில் ஒரு சக்ரவர்த்தியின் பெருமை அவனுடைய ராஜ்யத்தின் விஸ்தாரத்தைச் சார்ந்து நிற்கும். ஒரு பெரிய ராஜ்யத்திற்கு அதிபதியாயிருக்குமவனை ஒரு சிறிய ராஜ்யாதிபதியைக் காட்டிலும் அதிகப் பெருமை வாய்ந்தவனாக ஜனங்கள் சொல்லுவார்களன்றோ ! அம்மாதிரி பகவானுடைய பெருமை அவனுடைய விபூதி த்வயாதிபத்யத்தைச் சார்ந்து நிற்கின்றதோவென்றால், 'அப்படி அது சார்ந்து நிற்கவில்லை ; ஸ்வயமாகவே அவனுடைய பெருமை அளவற்றது' என்பதை இந்தப் பதம் விளக்குகின்றது. அப்படி ஸ்வயமே மஹிமை வாய்ந்தவனுக்கு அளவற்ற விபூதியும் சேர்ந்தால் அவனுடைய ஏற்றத்தைப் பற்றி சொல்லவும் வேண்டுமோ ?

ஸமதீதஸீமா: - ஸமதீதா ஸீமா யேஷாம் தே — எல்லையைக் கடந்தவை என்பது பொருள். இந்தப் பதத்தில் காணப்படும் 'ஸீமா' என்னும் பதம் ஆகாராந்த ஸ்த்ரீலிங்கம். நகாராந்தமாகவும் 'ஸீமந்' சப்தமொன்றுண்டு. அந்தச் சப்தம் ப்ரயோகம் செய்யப்பட்டால், 'ஸமதீதஸீமாந:' என்று ரூபம் கிடைக்கும்.

47. பகவானுடைய குணங்கள் அளவற்றவை என்பதைச் சொல்லி, அப்படி இருக்கையிலும் அவனுடைய மஹிமை அவைகளைச் சார்ந்து நிற்கவில்லை என்று சொல்லுகிறார்.

[ப - ரை] யேஷு - உன்னிடத்தில் இருக்கும் இந்தக் குணங்களுள், ஏகஸ்ய குணஸ்ய - ஒரு குணத்தின், லவாயுதாம்ஶ: - ஒரு சிறிய பாகத்தினுடைய பதினாயிரத்தில் ஒரு அம்சம், கஸ்யசித் - ஒருவனுக்கு, ஸ்யாச்ச (சேத்) – இருக்கும் பக்ஷத்தில், ஸ: - அவன், ஹி - அந்தக் காரணத்தாலேயே, வாங்மநஸாதிகஶ்ரீ: - வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் எட்டாத பெருமையை உடையவனாக, [ஸ்யாச்ச] மத: - க்ரஹிக்கப்படுகிறானன்றோ ? தாத்ருஶா: - அப்படிப்பட்ட, அநவதய: - எல்லையற்றவையும், ஸமதீதஸங்க்யா: - எண்ணிக்கையற்றவையுமான, தே - ப்ரஸித்தங்களான [அந்தக் குணங்கள்], த்வத்குணா: - உன்னுடைய குணங்களாக இருக்கின்றன. [அப்படி இருந்த போதிலும்] த்வம் - நீ, தந்நிரபேக்ஷலக்ஷ்மீ: - அவைகளைச் சார்ந்திராமல் இருக்கும் பெருமையை உடையவனாக, அஸி - இருக்கிறாய்.



தே தாத்ருஶோ(அ)நவதய: ஸமதீதஸங்க்யா:
த்வத்குணாஸ்த்வமஸி தந்நிரபேக்ஷலக்ஷ்மீ: ॥ ௪௭

ஸர்வஸ்ய சைவ குணதோ ஹி விலக்ஷணத்வாத்
ஐஶ்வர்யதஶ்ச கிமு கஸ்யசிதந்யதஸ்த்வாம் ।

அநவதய: - எல்லையற்றவை. இதற்கு நிதர்சனமாக, வாத்ஸல்யம் என்னும் ஒரு குணத்தை எடுத்துக் கொண்டால், 'அவனுடைய வாத்ஸல்யம் இவ்வளவுவரை மாத்ரம் செல்லும், அதற்கு அப்புறம் செல்லமாட்டாது' என்று சொல்லக்கூடாமல் அப்படி அது கரை புரண்டு நிற்கின்றது. இப்படி ஒவ்வொரு குணமும் கரை புரண்டு நிற்கின்றது என்பதையே இந்த 'எல்லையற்றது' என்னும் பதம் குறிக்கின்றது.

ஸமதீதஸங்க்யா:—'அப்படி கரை புரண்டு இருக்கும் குணங்கள் நூறு ஆயிரம் லக்ஷம் என்று கணக்கிடுவதும் ஸாத்யமன்று' என்பது தாத்பர்யம்.

வாங்மநஸாதிகஶ்ரீ:, நிரபேக்ஷலக்ஷ்மீ: — இந்த இரண்டு பதங்களிலும் காணப்படும் 'ஶ்ரீ:' 'லக்ஷ்மீ:' என்னும் சப்தங்கள் 'பெருமை' என்னும் ஸாதாரண அர்த்தத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றன. பெருமை என்பது, ஐச்வர்யத்தாலும் குணங்களாலும் ரூபத்தாலும் வித்யையாலும் பலத்தாலும் இன்னும் இம்மாதிரி பலவித காரணங்களாலும் உண்டாகக் கூடும். அந்தப் பெருமை எல்லாவற்றையும் 'ஶ்ரீ:' என்றும் 'லக்ஷ்மீ:' என்று பேசுவது உண்டு.

48. இம் ச்லோகங்களில், 'பகவானுடைய பெருமை அவனுடைய விபூதியையாவது குணங்களையாவது சார்ந்து நிற்கவில்லை; இந்தவிபூதியும் குணங்களும் அவனுக்கு இராவிட்டாலும் அவனுடைய பெருமை குறைவற்றதாகவே இருக்கும்' என்பது சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தில், விபூதி குணங்கள் இவை முதலியவைகளால் அவனுக்கு ஒரு விசேஷ ஏற்றம் ஏற்படவில்லை என்பது மாத்ரமின்றிக்கே, அந்த விபூதி முதலியவைகளுக்கு இவனுடைய ஸம்பந்தம் ஒரு விசேஷித்த சோபையைக் கொடுக்கின்றது என்று சொல்லுகிறார். இதை விவரிக்க ஒரு த்ருஷ்டாந்தம் கூறுவோம். லோகத்தில் ஆபரணங்களைத் தரிப்பது அவைகளைத் தரிக்கும் தேஹத்திற்கு ஒரு சோபையை உண்டாக்குவதற்காகவே. ஸ்வயமாகவே அளவற்ற சோபையை உடையதாக ஒரு தேஹம் அமைந்து இருக்கும் பக்ஷத்தில், அந்தத் தேஹத்தில் தரிக்கப்படும் ஆபரணங்கள் அந்தத் தேஹத்திற்கு சோபாதிசயத்தைச் செய்வதற்கு பதிலாக, அந்தத் தேஹத்தின் ஸம்பந்தத்தால் தாமே சோபாதிசயத்தைப் பெற்றவையாகுமன்றோ ? அது போலவே, இந்த விபூதியும் குணங்களும் பகவானுக்கு ஒரு விசேஷித்த பெருமையைச் செய்வதற்கு பதிலாகத் தாமே அவனுடைய ஸம்பந்தத்தால் நிறம் பெற்றவையாகின்றன. இந்த அர்த்தமே இந்த ச்லோகத்திற் சொல்லப்படுகின்றது.

தத் வ்யத்யயஸ் த்வயி விபோ விபவோ குணாஶ்ச
ஸம்பந்ததஸ் தவ பஜந்தி ஹி ஸௌஷ்டவம் ॥ ௪௮
தூரே குணாஸ் தவ து ஸத்த்வரஜஸ்தமாம்ஸி
தேந த்ரயீ ப்ரவததி த்வயி நிர்குணத்வம் ।

---

[ப - ரை] ஸர்வஸ்ய ச - எல்லாருக்கும், விலக்ஷணத்வம் - ஏற்றமானது, குணத ஏவ ஹி [பவதி] - குணங்களாலேயே உண்டாகின்றது. ஐஶ்வர்யத: - ஐச்வர்யத்தாலும், கஶ்சித் - ஒருவன், உதஞ்சிதஸ்ய கிம் - ஏற்றம் பெற்றவனாகிறானன்றோ ? ஹே விபோ - ஹே பகவானே, த்வயி - உன்னிடத்திலோ வென்றால், தத் - அந்த ந்யாயம் வ்யத்யய: - மாறி நிற்கின்றது. விபவ:-[உன்னுடைய] விபூதிகளும், குணாஶ்ச - குணங்களும், தவ ஸம்பந்தத: - உன்னுடைய ஸம்பந்தம் பெற்றதின் காரணத்தால், ஸௌஷ்டவம் - ஏற்றத்தை, பஜந்தி ஹி - அடைகின்றன வல்லவா ?

49. இப்படி பகவானிடத்தில் இருக்கும் குணங்கள் கணக்கற்றவை என்றும் அவனுடைய ஸம்பந்தத்தால் அவைகளுக்கு சோபாதிக்யம் உண்டாகின்றதென்றும் சொல்லக்கூடுமோ ? ச்ருதிகள் பகவானை நிர்க்குணன் [குணமற்றவன்] என்றன்றோ சொல்லுகின்றன ? என்றால், அதற்கு ஸமாதானம் கூறுகிறார்.

[ப - ரை] ஹே ஸ்வாமின் - ஹே பகவந் ! ஸத்த்வரஜஸ்தமாம்ஸி - ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும், குணாஸ்து - குணங்களோவென்றால், தவ - உனக்கு; தூரே - தூரத்திலேயே [இருக்கின்றன]. தேந - அந்தக் காரணத்தினாலேயே, த்ரயீ - வேதமானது, த்வயி-உன்னிடத்தில், நிர்குணத்வம் - நிர்க்குணனாயிருக்கும் தன்மையை, ப்ரவததி - சொல்லுகின்றது, ஈஶ்வராணாம் பரமேஶ்வரம் த்வாம் - ஈச்வரர்களுக்கெல்லாம் பெரிய ஈச்வரனாயிருக்கும் உன்னை, நித்யம் நிகிலஸத்குணஸாகரம் - எப்பொழுதும் ஸகல கல்யாண குணங்களால் நிரம்பினவனாக, ஶ்ருதய: ஹி - வேதங்கள் சொல்லுகின்றனவல்லவா ?

வேதங்கள் பகவானை நிர்க்குணனென்று சொல்லுகின்றனவென்பது உண்மையே. ஆனால், அந்த வேதங்களே அவன் ஸகல கல்யாண குணங்களாலும் நிரம்பி இருக்கின்றான் என்றும் சொல்லுகின்றனவல்லவா ? ஆகையால், நிர்க்குணன் என்பதற்கு 'ஒரு வித குணமும் அவனுக்கு இல்லை' என்பதைப் பொருளாகக் கொள்வது அஸங்கதமாகும். ஆனால், வேறு என்ன பொருள் கொள்ளலாமென்றால், 'ப்ரக்ருதியில் காணப்படும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் முக்குணங்களற்றவன்' எனறே பொருள் கொள்ளவேண்டும் என்பதுதான் ஸமாதானம்.



பெற்றார் பெரியார் பெட்பாருஞ் சேடியின
முற்று ரிவராருங் காணாதன் றுள்ளமலர்ப்
பொற்று மரைவிழி யெப்பொற்பா ரிளம்புருடன்
கற்றூழ் முலைமயிலே கள்ளமுற வந்துறைந்தான் 66

தன்செய் யுளமறியா தம்புவியிற் றூனெளிக்கு
மென்செய் தியுமிலதே யிகுளையுமத் தகையவளே
மின்செய் மணியிழையாய் மெய்யே யிழற்றுவையே
என்செய் கையொன்றதற்கு நாடுதுமென் றூனணவாய். 67

கேட்டே யினிமொழியாள் கெண்டையங்க ணென்சகியே
காட்டா மரைவிழியார் நாரா யணனன்றி
மாட்டா ரெவரேனு மன்னியுற வென்மனத்து
ளாட்டா நின்றூன வனேயம்மா வுளம்புகுந்தே. 68

என்றே குயிலுண வேந்திழையு முன்னுனி
யின்றேன் றுளித்திடுசெங் குமுதமெனு மேர்பவள
நன்றே திறந்திசைக்க நாடியவ ளோர்படத்தை
முன்றேவி கண்ணுறகன் றேவிரித்தாண் மொய்குழலாள் 69

தாயேயித் தாரணியுட் டாமோதர னருச்சை
மேயேதிக ழுருவ மெல்லாமினிர் யிதன்கண்
நீயேதுள நிறுவி நித்தங்கரை குறியோ
வீயேயெழிற் கரத்தால் விளக்குகதை யென்றனளால். 70

கோதையத னிடையே கூர்ந்திலகும் பொன்னரங்கன்
சோதிவடி வொன்றனையே சுட்டிக் கடைக்கணியா
யாதுமறை யாமே நாணு வருத்திறைஞ்சி
மாதரசி நிற்க மற்றவளு மீதுரைப்பாள். 71

கண்ணே கரும்பே கற்கண்டே கானமிழ்தே
யுண்ணேய மென்பா லுள்ளதெனி லுனியுடன்
பண்ணுது கள்ளம் பகர்வாயிவ் குண்மையினைத்
தண்ணூர் பொழிலரங்கன் றன்விழைவு கொண்டனையேல். 72

வாய்மை வழங்குதியேல் வானவருங் காணரிய
தூய்மை நதியிடையிற் றுஞ்சுந் திருவரங்க
னும்மயிலே யின்னுழையே யென்று மமர்ந்தருள
நோய்மை சிறிதின்றி கொய்துறுத் தோணூர்குவல்லரண். 73

பாங்கிமொழி யமுதிற் பைங்கிளியா ளுள்ளநிறைந்
தாங்குறையு நாண மகலவவள் பொங்கி
மாங்குயிலின் வாய்திறவா வெண்ணகையின் மின்றாள
மாங்கிளரு மாலையனுக் கிரைக்கிட் டுரைப்பாள். 74

காரா ரரங்கன் கலவியமு தம்பருக
நீரா யுருகுமெனை நீயதனின் மூட்டுவையேற்
சீராருஞ் செந்திருவே செய்தா யவதார
மோராருங் காரணமா யெனையளிக்க வுண்மையினே. 75

கண்ணார வென்றன் கழிவிரகங் கண்டனையா
லெண்ணாலு மெய்தலுறா வெழிலரங்க னின்புணர்ப்பை
நண்ணா நனிமகிழ நங்கா யருளுதியேற்
பெண்ணாய்ப் பிறந்திடுமென் பேறளித்தாய் நீயலையே. 76

கைம்மா றிதற்கெளியேன் கருதி நினைக்களிக்க
விம்மா வுயிருளதொன் றீது நினதருளி
னம்மாவிங் குய்ந்த தெனிலன்றோ நினதிதுவு
மெம்மா பரிசுதவு மிவ்வுலகம் பெய்ம்முகிற்கே. 77

சேடியெனப் பலவுஞ் செப்பிவிடுக் கவவள்
வாடியிடேன் மாதவனார் வந்தா ரென மதியோன்
றூடியினி துரைகளங் கைகுவித் திறைஞ்சி
நாடித்திரு வரங்க நன்னிமித்தங் கண்டடைந்தாள். 78

9-வது சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 9-க்குச் செய்யுள் - 553.

---

ஸ்ரீ

## ஆண்டாள் வைபவம்

### 10-வது சருக்கம்

பொன்னன் புதல்வன் பலதுன்புழந் தெய்த்தபோது
நின்னங் கழற்கா ணினைவோடு நிகழ்ந்தவண்ணந்
தன்னங் கரியமுகில் வண்ணவென் கண்ணனின்றுண்
முன்னு நினைவை யொருவாதருண் மன்னவற்கே. 1



கோதைச் சிலதி குறுகும்பொழு தங்கரங்கன்
மேதக்க வேனிற் சிறப்பெய்துற மிக்கவாசப்
போதுற்ற பூங்கா விடையோங்கிப் பொலியுமோரின்
சீதத் தணிந்து திகழ்மண்டபஞ் சென்றுசேர்ந்தான். 2

அங்கினை ஞெலிய பலபல்லிய மார்த்திசைப்பப்
பொங்கும் மறையின் புகழ்வைணவர் போற்றிசைப்ப
வங்கண் குளிரு மபிடேக மடைவினொடி
யெங்கும் புகழுமணி யாவையு மேய்ந்துமன்னோ. 3

தொண்டைக் கனியின்றுவர் வாய்மயிலார் தடத்தில்
கொண்டிக் குரலு மணியாழு முவந்துபாடக்
கண்டுற் றறுசுவையி னுண்டியுங் கண்டுவந்து
பண்டைச் சடங்கு பலவும்முறை முற்றிமற்றும். 4

பக்கம் படர்ந்த மலர்வல்லியின் பாதபங்க
டொக்கங் கணிந்த நிழலிற்சில தொண்டர்சூழப்
புக்கங் குலாவு பொழுதின்னிளந் தென்றல்வீச
நிற்கும் வசந்தத் தொடுகானை நேரறிந்தான். 5

அங்கே யனேக சுமனத்திர ளார்ந்துவாசந்
தங்கே ரரிய வன்மாலை யணிந்துசால
அங்கா மசனக மெனும்படி யார்ந்துதன்கட்
பங்கே ருகமுன் னுறைமாதவப் பண்புகண்டான். 6

பரபுட்ட மாகுமெழிற் காகளம் பண்பினோங்க
விரைவுற்ற மந்த பவனத்திரு தேரின்மேவி
யருகிற் பொருந்த வசந்தம்மெனு மவ்வமைச்சன்
விரவிக் கணின்முன் விளையாடினன் காமனங்கே. 7

பைங்கிள் ளையின்றே ரனங்கன்மலர்ப் பாணமேறச்
செங்கண் ணரங்கன் றிருவுள்ளஞ் சிறிதுனைந்து
இங்கந் தருப்பன் கணைக்கெம்முள முங்கெடற்கென்
றங்கெண் ணுசிந்தை யுடனோர்ந்தன னாதிதேவன். 8

அக்கா லணைந்த வெழிற்கோதையின் றாதியங்குப்
புக்கா வருகிலொரு பூங்கொடி போர்த்தவில்லுண்
மிக்கா வலோடு மறைந்தேயிருந் ததயன்மேனி
யொக்கா தசெவ்வி முழுதுங்களித் துற்றறிந்தாள். 9

வேறு

அப்பன்மத னற்கும்மிவ ளவன்பூங்கணை பாய
வெப்பும்விர கனல்சுட விரைமாமலர் விரவுஞ்
செப்பந்திகழ் சயனத்திடை செறியும்மிடை யிடையே
தப்பொன்றில தொருபேரறந் தன்சிந்தையி லுறுமே. 10

அறியாதரங் கொண்டேயது நிகழும்மறை யலரை
மதியாதொளி ரிருகண்களு மலர்ந்தேயுறு மிமையா
மதியார்வத ளமுமெங்கணு மலியும்புள கங்க
ளதியாததி வியர்வும்முழு தெழின்மேனியு மெழுமே. 11

பரசிந்தையி னுழலுந்திரு வுள்ளம்படு பாடிம்
முரசெந்துவை முனம்வென்றவன் முகமிங்குரை செயலால்
அரசுந்தெரி வையாகட்கெது வோவொன்றில ணணைவான்
பிரசந்தரு மலரம்பினிற் பெரிதும்படு மன்றே. 12

எம்மானுள மிலகுந்திரு வெஞ்செல்வியோ வென்றோ
நம்மாலொலு மளவும்மது நணுகிப் பெருமான்முன்
செம்மாமன முணர்ந்தேசெலுஞ் செயல்செப்புது மென்றே
யம்மாமயி லரங்கன்றிரு முன்மெல்லென வடைந்தாள். 13

பலவின்சுளை விரியப்பெரு குறுமின் பிழிபாயக்
குலவுஞ்செநெல் வளருந்தட வயல்சூழ் வில்லிபுத்தூ
ரிலகும்விண்டு சித்தன்மகட் கியைதூதியிவ் வடியாண்
மலருன்பதம் வணங்கும்மென மகிழாநனி தொழுதாள். 14

செவியின்னமிழ் தனையின்களி யுடனெம்பரன் செலவுண்
டவிழ்மென்மல ரமளித்தலை யெழுந்தார்ந்தெழில் வலஞ்சேர்
சவியின்சுடர் நயனந்துடி தருமெம்பய னிதுவென்
றவிருங்குழை மணியாளவ ளழகார்முக நோக்கா. 15

பட்டர்க்கிறை மகடன்னரு ளுடனிங்கெழும் பாவாய்
கட்டப்படு மென்சிந்தையுங் களிகூர்ந்திடு நின்றால்
வட்டக்கலை நிதிசேர்திரு வதனத்தவ ளுடனவ்
வெட்டக்கரை விதயத்தனு நன்றேயில குவரே. 16

என்கட்கரு மணியன்னவ ளென்னுண்ணசைந் துளேயிங்
கன்பிற்செல விடுத்தாளதை யறியப்புகல் கெனலும்



மின்கட்டழ கியனுக்கிர கையுமாமுத மேவிப்
பின்பப்பெரு மாளின்புறந் திருவாய்மொழி பேசும். 17

மாயாவிண்டு சித்தன்மகண் மருவும்முன தருளின்
னேயாவரு சுகமேயுள ரெழிலாருநின் மேனி
தோயாமினுங் குழலன்னவ டோயுந்தொடை யுலுப்பை
யீயாநினக் கிருகைகுவித் திவைவாஞ்சையி னியம்பும். 18

வரையாதன வரதந்திரு வைகும்வரை மார்பா
வொரிராவுள முருகப்புலி மதுநீயெனை யுலந்தே
கரையாமன மடியாள்படுங் கட்டம்பல கங்குல்
விரையாய்மதன் பகழிக்கெனை யிடுகிற்பது மழகோ. 19

சேடிக்குல நின்காதலிற் சிதையும்மெனை மலரின்
மாடித்திகழ் சயனத்திடை மனனைந்துகி டத்தப்
பாடற்றடி யார்செண்பக வனமூடதிற் படுப்பேன்
வாடிக்கரிந் திடுமெப்பனி வாசப்பல மலரும். 20

அன்றைவரி னடிமைக்குறு மானம்பறி யாமே
நன்றின்னரு ளாங்கேயிழைத் தனையின்றிவ ணலியக்
கன்றும்மலர்க் கணையானழி மானந்தனைக் காப்பா
யென்றின்னன விசையாவவ ளீங்கென்றனை விடுத்தாள். 21

ஐயாவவ ளையனந்தனக் கம்போருக மஞ்சும்
மெய்யாமுறு வற்பந்தியின் மௌவன்முகம் வாடுஞ்
செய்யாமுலை களுக்கிந்திரன் கரிமத்தகஞ் சிதையுந்
தய்யாவல்ல கியிரேனைசையுந் துவளுங்குர லிசையின். 22

வேறு

காதள வோடிக் கடைசிவந் தகன்ற
கண்மலர்ப் பார்வைமுன் னனங்க
னாதரம் பெருகுங் கன்னலுங் கையு
மாயன வாதமா டிமோற்
பேதையி னிளமைப் பருவமா மதிபாற்
பெருகுறுஞ் சவிக்கட லிடையே
மேதக வெழுந்த வலம்புரி யென்ன
மிளிர்தருங் கமுகுகந் தரமே. 23

பூங்கழைக் குமரன் பகடெனும் பரவை
பொங்குறுந் திங்களின் கரமாய்
மாங்குயின் மழலை மாதரார் காணு
மாந்தரின் கண்களுக் கொளியி
னேங்குமா மணியி னுருசுட ராகி
மும்மையா முலகினு முறையும்
பூங்குழ லரிவை மாரெனும் பாவை
பலபடப் புதுமையின் வளையா 24

நெடும்பகல் பயின்ற விரணிய கருப்ப
னிலவுறு மோவியத் துறையிற்
படும்பயன் பெரிது மிவளெனத் துலங்கும்
பங்கய தளவிழி யிணையுள்
ளிடும்பையிற் பெருகு மம்பினிற் கரந்தே
ரின்முறு வலித்தலுந் தணந்து
தடம்பெருங் குயத்துட் டயங்கெழில் வடத்துத்
தாளமும் பொரிந்திடத் தளரும். 25

பிரிவெனு மழலிற் பேதுறு மனத்தின்
குரலெனத் தழுகழு ரைக்கு
மரிதினிற் புறம்போ நெட்டுயிர்ப் பனல்பாயந்
தானனங் கரிகறுத் திலகு
முருகவிழ் முல்லை யாய்ச்சியர் முன்ன
நினைதெழில் படிந்திடும் படியே
மருவியிம் மாதுன் மரைமல ரடியே
மணந்தன ளிடைவிடா துறையும். 26

காவதங் கமழுங் கடிமலர்ப் பராகங்
கயர்வுறத் தொகுத்ததிற் செறியு
மாவலின் வண்ட லயர்தரு சிற்றி
லிழைத்ததை யாயர்பா டியினின்
றேவுறு தரிய கோவியர் குரவை
யுவப்புற விழைத்தமா மாயன்
மேவிய சகடு படுத்திடு மடியின்
மிதிப்பதென் றேவென மிழற்றும். 27

படர்தரு குந்தத் தருதுனி யிவர்ந்து
கன்விலை யரியபூம் பட்டை



யடலுறு முன்றன் மலர்க்கரத் தேந்தி
யாங்கமர்ந் தனையென மருளா
மிடைதரு வனத்து ளெம்மயி லொருபூந்
தருவினை மிசையுற விழியாப்
புடவை யருள்வாய் பூமகள் கணவா
வென்றுரைத் தஞ்சலி புரியும். 28

தேன்றுளித் திடுசெந் தாமரை மலரைச்
சிவணிடுங் கண்கணீர்த் ததும்ப
வான்றுதித் திடுகின் வரைநிகர் மார்பின்
வனமுலை புதைதரப் புல்ல
வேன்றுகுத் திடுமுன் னல்வினை யுளதே
லிதுசெயிந் திடுகெனத் தாளந்
தான்றொகுத் தனணேக் குறுமிடை சகுனந்
தரைமிசை மண்டல முறவே. 29

மாந்தளி ரருந்தி மாதவிப் புதருண்
மறைதருங் காலகண் டத்தைக்
காந்தளங் குலியாற் கருத்தசைந் தழைத்துக்
காதல னிவணுறும் வண்ணந்
தேர்ந்திசைக் குதியே நீங்கனி தினமுந்
தருகுதுந் தீங்குற வனங்கன்
போந்திட விசைக்கிற் பூம்பொழிற் புறத்தே
போம்படி துரத்துத மெனுமால். 30

உறங்குழி யுனதங் கரங்களிற் றனதின்
கந்தரத் திடையொளிர் மாழை
நிறங்கிளர் தாலி நிலவுற முடிந்து
நெருப்பிடை பூம்பொரி சொரிந்து
மிறங்கியின் பதநின் னெழிற்கரத் தெடுத்தாங்
கம்மியின் மேலுற வியைத்தே
யறங்கெழு வதுவைவத் திருவிழா வாற்றக்
கண்டவ டுயிலுணர்ந் தயர்வாள். 31

காவுழி யகன்ற வாவியா ரன்னங்
கண்டது கடல்வணன் வளையென்
றுவவின் மருளா வதைவிளித் தைய
வாரண நாயகன் வதனம்

மேவிய மணமம் புயத்ததோ வன்றி
மிகுமரி சந்தனத் ததுவோ
கோவியர் விழையு மிதமுறு சுவையு
மியாவதோ வெனுமகங் குளிரா 32

அம்பரங் குழுமுங் கார்முகிற் படல
மையலின் படிவமென் றயிர்த்து
நம்புமின் னசையி னருகுறு மாயங்
தனைவிளித் தரங்கமா நகரா
னெம்பிரா னீதோ வெழுந்தன னிடும்பைக்
கிலக்கமா யினையுமென் றிறத்தைச்
சம்பரா ரியினு லவனுழை யேகிச்
சாற்றுமி னெனவறை தருமால் 33

மற்றுவெங் கதிரின் வெயின்மறைத் தகல்வான்
மலிபல துகிலரங் கேசற்
குற்றவா ரரம மெனுங்கரி கிரிவேங்
கடமுத லுயர்தலம் பலவு
முற்றுறு முலையி ரெழுந்தவ னொளிரு
மூலகா ரணமதற் கிவனே
யெற்றுறு திருந்தா ரினியுயிர்த் துறையா
ளெனவிரங் கிடுகென விசைக்கும். 34

பையுறு வரவப் பாயலான் கையி
னொருவனே பற்றுறு தென்றென்
கையுறு திலகு மதனையும் பையக்
கழன்றிட விழைத்திதைக் கவர்வான்
பொய்யுறு விரகொன் றிழைத்தனன் போலும்
பொருந்தியென் கண்முகப் பிரந்தான்
மையுறு மணியி னிறத்தினுற் களிக்க
மற்றெனக் கருத்தியே னிலதோ. 35

வேறு

அடியிரண்டி னுலகுமூன்று மபகரித்த நாற்கரன்
கொடியின்வாடும் கொழுக்கொம்பற்ற கொள்கையாய வென்கரத்
திடுதரித்த கங்கணத்தி லின்னுமாசை யெய்திடன்
முடியின்மீது செல்வனாரு மிகுதியை விளக்குமால். 36

158955

# ஸ்ரீ
# வேதாந்த தீபிகை

**வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான**
**ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்ரிகை**
**வருஷச் சந்தா: ரூ. 3**
**தனிப் பிரதி: அணா 5**

## குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, ராமஸ்வாமிதெரு, மாம்பலம், சென்னை" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டும்.

(2) தபாலில் அனுப்பப்படும் ஸஞ்சிகைகள் சரிவர எல்லாச் சந்தாதாரர்களுக்கும் போய்ச்சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத்திலும் இரண்டாவது மூன்றாவது தேதிகளுக்குள்ளாகவே ஸஞ்சிகைகளெல்லாம் தபாலில் சேர்ப்பிவிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 5 அல்லது 6 தேதிகளுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேராவிட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதை உடனே மானேஜருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாமலிருக்கும் சந்தாதாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம், தியாகராய நகர் போஸ்ட்,
மதிராஸ்.

**Registered No. M. 916.**

# Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Iudian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has immediately taken on hand the publication of a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is abcut to be issued.

Shares in the Company of Rs. 50 each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

| | | |
|---|---|---|
| *Sriman* | V. V. Sreenivasa Iyengar, B.A., B.L. | *President* |
| " | K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate. | *Genl Secy.* |
| " | R. Kesava Iyengar., M.A., B.L. | *Exec: Secy.* |
| " | T.D. Sreenivasachari, M.A., B.L. | " |
| " | S. Aravamuda Iyengar, B.A., B.L. Advocate. | *Treasurer.* |
| " | N.T. Shamanna, Solicitor. | *Director* |
| " | M. Sudarsana Iyengar, Merchant. | " |
| " | C.V. Venktaramana Iyengar, B.A , B.L. Coimbatore. | " |
| " | T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore. | " |

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamanta Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.